ஸ்பர்ஜன் அறிவுரைகள்

பிரசங்கிமாருக்கு..

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

J. Mohan
Palai

ஸ்பர்ஜன் அறிவுரைகள்

பிரசங்கிமாருக்கு

சி. எச். ஸ்பர்ஜன்

(இறையியல் மாணவர்களுக்கு என் அறிவுரைகள்)

சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்
95-A, வேப்பேரி நெடுஞ்சாலை
சென்னை-600 007

Pub. No. 234A Tamil

Revised Tamil Edition — 1981
Reprint — July 1984
Copies — 2000
Reprint — June 1987
Copies — 2000

LECTURES TO MY STUDENTS

C. H. Spurgeon

© Evangelical Literature Service.

Cover design : S. Thanaraj

Printed by : Muthukumaraswamy Binding Works
Madras-600 021.

பொருளடக்கம்

அதிகாரம்			பக்கம்
1.	போதக ஊழியத்தின் தன்மையும் அதன் நோக்கமும்	....	1
2.	பிரசங்க ஊழியத்திற்கு ஆயத்தம்	....	7
3.	போதக ஊழியம் பலன்தரத் தேவையான பரிசுத்த ஆவியின் அநுக்கிரகம்	....	14
4.	போதகனது சொந்தப் பக்தி	...	32
5.	பிரசங்கியின் அந்தரங்க ஜெபம்	....	41
6.	பகிரங்க ஜெபம்	....	43
7.	தேவாராதனை வேத வாசிப்பு	....	58
8.	பிரசங்க வாக்கியம் தெரிந்து கொள்ளுதல்	....	65
9.	பிரசங்கக் குறிப்புகள்	....	74
10.	பிரசங்கப் பொருள்	....	84
11.	சுவிசேஷப் பிரசங்கம்	....	94
12.	பிரசங்க வகைகள்	....	109
13.	திருஷ்டாந்தப் பிரசங்கம்	....	123
14.	அபிநயம்	....	134
15.	கவனத்தைக் கவர்ந்து கொள்ளல்	....	149
16.	பிரசங்கத் தொனி	...	167
17.	பிரசங்கிக்கு நேரிடும் சோர்வு	...	177
18.	போதகன் கவனிக்க அவசியமில்லாத விஷயங்கள்	....	190
19.	சங்கப் பிரசங்கங்கள்	....	207
20.	சபை சந்திப்பு	....	211
21.	பிரசங்கியின் நடத்தை	....	220
22.	போதுமான உபகரணங்கள் இல்லாத போதகர்களுக்கு ஆலோசனை	....	230
23.	ஆண்டவராகிய இயேசுவும் அவருடைய அப்போஸ்தலரும் பிரசங்கிகளுக்கு வைத்திருக்கிற முன்மாதிரி	....	242

1

போதக ஊழியத்தின் தன்மையும் அதன் நோக்கமும்

போதக ஊழியத்தின் தன்மையும் நோக்கமும் யாதென்றறிய புதிய ஏற்பாட்டைத்தான் பார்க்க வேண்டும். புதிய ஏற்பாட்டைப் பார்க்கும்போது இது ஓர் ஊழியம் என்பது நமக்கு முக்கியமாகத் தென்படும். முதன் முதலில் இவ்வூழியம் செய்தவர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே. அவர் மத்தேயு 20 : 26-28 வரை சொல்லியிருக்கிறதாவது : ''உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்.'' மேலும் இராப்போஜனம் பந்தியில் இருக்கும்போது, ''உங்களில் பெரியவன் சிறுவனைப்போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப்போலவும், இருக்கக்கடவன், பந்தியிருக்கிறவனோ பணிவிடை செய்கிறவனோ எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவனல்லவா? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்'' என்று சொன்னார் (லூக்கா 22 : 26, 27). செபதேயுவின் குமாரர் தமது இராஜ்யத்தில் உயர்ந்த இடங்களை ஆசித்தபொழுது தாம் முன்னே கூறியவற்றிற்கிசைய, ''நான் குடிக்கும் பாத்தி

ரத்தில் நீங்கள் குடிக்கவும் நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்ருர்'' (மாற்கு 10 : 38).

மேலே எடுத்துக்காட்டிய வாக்கியங்களில் சில கிறிஸ்து வால் மாத்திரம் செய்யக்கூடிய காரியங்கள். இவைகளில் நாம் பூரணமாய் அவரைப்போல் ஆதல் ஆகாது. உதாரணமாக அவர் தமது ஜீவனை அநேகரை மீட்கும் பொருளாக கொடுத்தவண்ணமாக நாமும் நமது ஜீவனை தியாகம் பண்ணுதல் இயலாது. தன் சுகத்தைப் பிறர் சுகத்துக்காக தியாகம் செய்யும் சிறந்த தன்மையே கிறிஸ்துநாதருடைய ஊழியத்தின் மாட்சிமைக்கு அடிப்படையும் அவருடைய போதனையை ருசிப்படுத்தும் சத்துமாகும். நமது பிரசங்கப் பொருளை விளக்க நாம் உபயோகிக்கவேண்டிய எடுத்துகாட்டுகளுக்கு கிறிஸ்து நாதர் விளம்பிய உவமைகளை சிறந்த மாதிரிகளாக எண்ணுகிருேம். அவ்வண்ணமே பிறர் நலனுக்காகத் தம்மைத் தாமே முற்றும் பிரதிஷ்டை செய்த அவருடைய நன்மாதிரியை நாம் பின்பற்ற வேண்டும். அவர் யாக்கோபுக்கும் யோவானுக்கும் கொடுத்த மாறுத்தரத்தில் அவர் கருதிய பொருள் இதுவே.

அவர் குடிக்கும் பாத்திரத்தில் குடித்து, அவர் பெற்ற ஞானஸ்தானத்தைப் பெற்றுக்கொள்வதனலன்றி நாம் ஏற்றுக்கொண்ட ஊழியத்தில் மேன்மையடைய இயலாது.

தமது தாசர் ஊழியத்தில் உன்னத நிலைக்கு வரும்படி கிறிஸ்துநாதர் அவர்களைப் பக்குவப்படுத்த பிரயோகிக்கும் எத்தனங்கள் பலவிதமான சஞ்சலங்களும் உபத்திரவங்களுமேயாம். அவர்கள் செய்கிற பிரசங்கங்களிலெல்லாம், மிக மேன்மையானவைகள், துன்பம் என்னும் எழுத்தாணிக் கொண்டு தங்கள் இருதயங்களில் எழுதப்பட்டவைகளே. அவர்கள் தங்கள் அனுபவங்களைச் சபையாருக்கு எடுத்துக்

கூறும்பொழுதுதான் பிரசங்கம் சாதுரியமும் பெலமும் உள்ளதாகிறது. இயேசு தமது ஊழியத்திற்கு அழைத்தவர்களைத் தம்மோடுகூட கெத்செமனே தோட்டத்திற்குக் கூட்டிக்கொண்டு போனார். ஊழியத்தில் மிகச் சிறந்தவர்களாக்கவேண்டுமென்று தாம் விரும்புகிறவர்களை மற்றவர்களைவிட அதிக தூரம் கொண்டு போகிறார். மிகச் சிறந்த பிரசங்கிமாரின் சரித்திரங்களெல்லாம் இதற்கு எடுத்துக் காட்டாகும்.

பிறருடைய நன்மைக்காகத் தன்னைத்தான் மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுப்பது போதக மேன்மைக்கு சிறந்த ஓர் அடையாளம். சபையார் போதகருக்காக அல்ல, போதகரே சபையருக்காக ஊழியஞ்செய்ய ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். ஆதலால், அவர்களுடைய நன்மைக்காகவும், பிரயோஜனத்துக்காகவும் அவர் தம்மைத்தாமே செலவிட வேண்டும். பவுல் அப்போஸ்தலன் இந்தப் பாடத்தைக் கற்றிருந்தாரே. அவர் சொன்னதாவது ''நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், (அதாவது நாங்கள் எங்களையே கர்த்தரென்று பிரசங்கியாமல்) கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும் எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரனென்றும் பிரசங்கிக்கிறோம்'' என்பதே (2 கொரி. 4 : 5).

பிரசங்கியின் வேலை பிறருக்கு உதவி செய்வதேயாம். மனுமக்களின் சகாயரும், மீட்பருமாகிய இயேசுவினிடத்திற்கு அவர்களை வழிநடத்துவதும் அவருடைய வசனத்தின் பொருளையறிந்து அதை அன்றாட வாழ்க்கையில் அவர்கள் கைக்கொள்ள உதவி செய்வதுமே ஒரு போதகனது பிரதான கடமையாகும். ''நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்பு கூருகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்பு கூரப்பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவு பண்ணவும், செலவு பண்ணப்படவும் விரும்புகிறேன். அப்படியாகட்டும்; நான் உங்களுக்குப் பாரமாயிருக்கவில்லை''

(2 கொரி. 12 : 15,16) என்று பவுல் அப்போஸ்தலன் கிறிஸ்தவப் போதகனுக்குக் காட்டும் முன்மாதிரியைக் காட்டிலும் சிறந்த மாதிரியை நாம் கண்டுகொள்வது கூடாத காரியம். இங்கிலாந்திலுள்ள பிரபு வரிசைகளில் அதி உன்னதமான முத்திரைநாமம், ''இக்டீன்'' என்பது. ''நான் ஊழியம் செய்கிறேன்'' என்பதே அதன் கருத்து. போதக வரிசைக்கும் முத்திரை நாமம் இதுவே. இதற்கிசைய ஒருவன் நடந்துகொண்டால் அவன் மேன்மையடைவான் என்பதில் ஐயமில்லை.

போதக ஊழியத்தின் தன்மையைப் பூரணமாய் அறிய, பிரசங்கி தனக்கு முன்பாக வைத்துக்கொள்ள வேண்டிய நோக்கத்தைக் கவனிக்கவேண்டும். எபேசியர் 4 : 11-13-ல் பவுல் அப்போஸ்தலன் சொல்கிறார், ''அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாக வும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராக வும், போதகராகவும் ஏற்படுத்தினர். நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவி லும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறை வான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீர மாகிய சபையானது பக்தி விருத்தியடைவதற்காகவும் இவைகளைத் தந்தருளினர்.'' அவ்வண்ணமே அப்போஸ் தல நடபடிகளில் ஆதிப்பிரசங்கிகள் தங்கள் பிரசங்கங்களி லெல்லாம், மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும், அவருக்கேற்ற புதிய வாழ்க்கை நடத்தவுமே பிரயாசப் பட்டதாக காண்கிறோம். மனிதர் இயேசுவைத் தங்கள் இரட்சகராகவும், பாவங்களினின்று விடுவிக்கும் மீட்ப ராகவும் ஏற்றுக்கொள்ளச் செய்வதும், அவருடைய பிரமா ணங்களைத் தங்களுக்குச் சட்டமாகவும், அவருடைய நடக் கையைத் தங்களுக்கு மாதிரியாகவும் அங்கீகரிக்கப் பண்ணு வதுமே எப்பொழுதும் அவர்களுடைய நோக்கமா யிருந்தது.

இந்நோக்கத்தை நிறைவேற்றுவதில் அவர்கள் தங்களுக்கு நேரிடும் துன்பங்களை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. சுவிஷேத்தைக் கூறி மக்களுக்கு நன்மையை வருவிக்கவேண்டும் என்பதையல்லாமல் வேறொன்றைக் குறித்தும் அவர்கள் கவலைப்படவில்லை. அவர்களுக்குக் கொடிய துன்பம் நேரிட்டது. சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்கள்; மரித்துப்போனார்களென்று நினைக்கத்தக்கதாக அவர்களில் சிலர் கல்லெறியப்பட்டார்கள். ஆனாலும் இவைகள் ஒன்றும் அவர்களை அசைக்கவில்லை. அவர்களை தேவர்கள் என்று மனிதர் வணங்க முற்பட்டபோது மாத்திரம் அவர்கள் தடை செய்தார்கள். அவர்கள் தங்களுக்குக் கிடைத்த புகழ், சௌக்கியம் இவற்றால் தங்களை அளவிடாமல் கடவுளின் வல்லமை தங்கள் பிரயாசத்தோடு கூட கிரியை செய்ததினால் ஜனங்கள் மத்தியில் உண்டான நன்மாறுதலைக் கொண்டே அளவிட்டார்கள். தங்கள் பெயர் பிரஸ்தாபத்துக்காவது, சாதுரியப் பிரசங்கிகள் என்ற புகழ்ச்சிக்காவது அவர்கள் உழைக்கவில்லை. ''நான் உங்களுடையவனல்ல. உங்களையே தேடுகிறேன்'' (2 கொரி. 12:14) என்று பவுல் கொரிந்தியருக்குச் சொன்னது போல அவர்கள் எல்லாருமே தங்கள் சபையாரை நோக்கிச் சொல்லத்தக்கவர்களாயிருந்தார்கள். ஜனங்களுடைய பிரமிப்பை எழுப்பத்தக்கதான பிரசங்கங்களைப் பொழிவதல்ல, ஆத்துமாக்களைக் கிறிஸ்துவுக்காகச் சம்பாதிப்பதே அவர்கள் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருந்தது.

ஆதியில் போதக ஊழியஞ் செய்கிறவர்களுடைய இந்தச் சிறந்த நோக்கத்தையே ஒரு பிரசங்கி தன் மனதில் எப்பொழுதும் வைத்துக்கொள்வது மிகமிக அவசியம். பிரசங்கிமார் சாதுரியமாகப் பேச வேண்டுமென்று மிகவும் பிரயாசப்படுவதுண்டு. பிரசங்கி தன் பேச்சினால் ஆக வேண்டிய பலனை அதிகமாய்க் கருத வேண்டுமேயன்றித் தன் பிரயாசத்தின் சாதுரியத்தையும், அதன் அழகையும் கவனிக்க வேண்டியதில்லை. வார்த்தை அலங்

காரத்தையல்ல. மனிதர் தங்கள் இருதயத்தைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து, அவர் விரும்புகிற பரிசுத்தத்தை அடைந்து கொள்வதையே நாட வேண்டும்.

ஒரு திருஷ்டாந்தத்தினால் இக்காரியத்தை தெளிவு படுத்தலாம். அனுபவம் வாய்ந்த ஓர் ஆங்கில வைத்தியரும் ஒரு பிரஞ்சு வைத்தியரும் அறுவை சிகிச்சை முறையில் மிகவும் கடினமான ஒன்றைக் குறித்து ஆலோசனை பண்ணிக் கொண்டிருந்தார்கள். பிரஞ்சு வைத்தியர் அவ்வேலையை முந்நூறுக்கு அதிகமான தடவை செய்திருப்பதாகக் கூறினார். ஆனால் ஆங்கில வைத்தியரோ எட்டு தடவை மாத்திரம் செய்திருப்பதாகச் சொன்னார். ஆங்கில வைத்தியர் மற்றவரைப் பார்த்து, ''நீர் உமது பிரயாசத்தினால் எத்தனை பேரைச் சுகமாக்கியிருக்கிறீர்'' என்று கேட்டார். ''ஒருவரையும் குணமாக்கவில்லை. ஆனால் அறுவைச் சிகிச்சையை வெகு திருப்தியாய் திறமையாய் முடித்திருக்கிறேன்'' என்றார். அப்பொழுது அந்த ஆங்கில வைத்தியர், ''அப்படியா? நான் எட்டு பேரில் ஒருவனைத் தவிர மற்றெல்லாரும் சுகமானார்கள்'' என்றார். வியாதியஸ்தன் சுகமாவதுதான் முக்கியம். அறுவை சிகிச்சை செய்த சாமர்த்தியம் முக்கியமல்ல. அவ்வண்ணமே தன் பிரசங்கத்தால் ஏற்படும் ஆத்தும ஆதாயத்தையே முக்கியமாய் நாடவேண்டும். தற்புகழ்ச்சியையும் தன் சுகத்தையும் முற்றும் மறக்க வேண்டும்.

சுயவெறுப்பு, மேன்மையான போதக ஊழியத்தின் அடிப்படை. போதகன் தன்னைக் கிறிஸ்துவின் ஊழியத்திற்கென்று முற்றிலுமாகத் தத்தம்பண்ணிவிட வேண்டும். இவ்வூழியத்திலும் அனுகூலத்தையும், சிறப்பையும் வருவிக்ககூடியது தற்பிரதிஷ்டையே. ஒரு போதகனிலுள்ள ''நான்'', ''என் காரியம்'' என்னும் சிந்தை ஒழிந்தால் மாத்திரம் கிறிஸ்து அவனில் மகிமைப்படுவார். அப்பொழுதுதான் பரிசுத்த வாழ்க்கையிலும் பிறரை நன்மைக்கு எழுப்புவதிலும் சிறப்பான அனுகூலம் அடைய முடியும்.

2

பிரசங்க ஊழியத்திற்கு ஆயத்தம்

பிரசங்கியானவன் மெய்யாய்க் குணப்பட்ட கிறிஸ் தவனும் தன் கடமைகளில் எல்லாம் தேவ ஆவியின் உதவியைத் தேடுகிறவனும் இருக்க வேண்டும். வெளிச்ச மிருந்தால்தான் பிரகாசமாகும். நெருப்புத்தான் சுடரை பிறப்பிக்கும். அப்படியே நாம் மற்றவர்களைப், பிரகாசிக்க விரும்பினால் நாமே பிரகாசமுள்ளவர்களாக இருக்க வேண் டும். மற்றவர்களுடைய இருதயங்களில் தேவபக்தி அனல் மூளப்பண்ண நம்முடைய ஆத்துமாவாகிய பலிபீடத்தி லிருந்து எடுக்கப்பட்ட தழலைக் கொண்டு மாத்திரம் முடியும். கிறிஸ்து மார்க்கத்தை அறியாத ஒரு பூர்வீகக் கவிஞன் சொல்லுகிறபடி நமக்கே எழுப்புதல் இல்லை யானால் நாம் மற்றவர்களை எப்படி எழுப்பக்கூடும்? நாமே விசுவாசத்தில் உண்மையற்றவர்களானால் மற்றவர்களை எப்படி விசுவாசிக்கப்பண்ணக் கூடும்? நாம் ஆவியிலே குளிரும் மந்தமும் திமிரும் பிடித்துத் திவ்விய வைராக்கிய மற்றவர்களாய் இருப்போமானால் மற்றவர்களிலே திவ்விய அனலை மூட்டுவதெப்படி?

மேலும் பிரசங்கியின் சுயபக்தி எவ்வளவு உண்மையா யிருந்தாலும் பரிசுத்த ஆவியானவர் அவனோடு கிரியை செய்யவில்லையானால் அவனுடைய முயற்சியெல்லாம் வீணாயிருக்கும். ஆகையால் ஜெப அறைக்கும் பிரசங்கப் பீடத்துக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு உண்டு. மகா வேதனையோடு ஜெபிக்கிறவன்தான் மகா வல்லமையாய் பிரசங்கிப்பான். சுரமண்டலத்தில் வாசிப்பது தாவீதுக்கு

எப்படி இருந்ததோ அப்படியே ஜெபம் பிரசங்கிக்கு இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் வரப்பிரசாதங்கள் அவன்மேல் இறங்குவதற்கு ஜெபமானது அவன் ஆத்துமாவை ஆயத்தம்பண்ணுகிற பலத்த எத்தனம். பரிசுத்த ஆவி தங்கும் இடத்திலே வல்லமையுண்டு. ஆகையால் ஜெபம் பண்ணுவதில் உற்சாகமில்லாமல் இருக்கிறவனுடைய பிரசங்கமானது செத்த பிள்ளையின் முகத்தின் மேல் வைக்கப்பட்ட கேயாசியின் கோலைப்போல் அனலற்றதாயிருக்கும். ஆத்துமாக்கள் பேரிலுள்ள பூரண அன்போடும் தேவனைப்பற்றும் விசுவாசத் தைரியத்தோடும் அனல்கொண்ட நமது ஆவி, சபையாரின் ஆவியைப்பற்றிக்கொண்டு அவர்களுக்காகத் தேவனோடு போராடும் பொழுதுதான் நம்மிடத்திலிருந்து புத்துயிர் பரவும்.

பிரசங்கியானவன் தேவவாக்கியங்களை நன்றாய் அறிந்தவனாயிருக்க வேண்டும். பிரசங்க சாமர்த்தியத்திற்கு இது மிகவும் அவசியம். பிரசங்கி தேவ வசனத்தின் ஊழியக்காரனாயிருக்கிறான். ஆகையால் வேத அறிவு அவன் வேலைக்கு மிகப்பெரிய ஆயத்தமாகும். வேதாகமம்தான் அவனது பாட புத்தகம். அது பிரசங்க வாக்கியங்களைத் தேடிப்பிடிக்கும் இடமாய் மாத்திரம் அல்ல, பிரசங்கங்களுக்கெல்லாம் அடிப்படையுமாய் இருக்கிறது. பிரசங்கி போதிக்க வேண்டிய பொருள் தேவனுடைய வசனமே. அப்படியிருக்கப் போதகன் வேத அறிவில் தேறினவனாய் இருக்கவில்லையானால் அவன் எப்படி போதிக்கக்கூடும்?

மேலும் வேத புத்தகம் பிரசங்கியின் வல்லமைக்குப் பெரிய ஆயுதமாய் இருக்கிறது. ஆவியானவர் வார்த்தையோடு மாத்திரமல்ல, வார்த்தைகளுக்குள்ளும் இருக்கிறார். கிறிஸ்து மார்க்கமானது பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடுமாகிய வேதபுத்தகத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் அந்த மார்க்கத்தைச் சரியானபடி போதித்துப் பயன்படும்படி பிரசங்கிக்க விரும்பினால் இப்புத்தகங்களை நன்றாய் கற்றிருக்க வேண்டும். வைத்தியனாக விரும்பு

கிறவன் வைத்தியசாஸ்திர விதிகளையெல்லாம் கசடறக் கற்று, தான் உபயோகிக்கப்போகும் மருந்துகளின் தன்மைகளை நன்கு அறிந்தவனாய் இருப்பதும், வக்கீல், உத்தியோகத்தில் சிறக்க விரும்புகிறவன் நியாய சாஸ்திரத்தில் தேறின ஆசிரியருடைய நூல்களில் நிபுணத்துவம் அடைந்து கொள்வதும் அவசியமாய் இருப்பதுபோலவே சுவிசேஷப் பிரசங்கியும் அப்பொல்லோ என்பவனைப்போல் வேத வாக்கியங்களில் வல்லவனாய் இருக்க வேண்டும். ''வேத புத்தகம் நமது பட்சத்தில் இருக்கவேண்டும் என்னும் ஆசைக்கும் நாம் வேத புத்தகத்தின் பட்சத்தில் இருக்க வேண்டும் என்கிற ஆசைக்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு'', என்று உவேட்லி என்னும் சாஸ்திரியார் சொன்னதுபோல் நமக்கு இஷ்டமான சில கொள்கைகளுக்கும் ஆதாரம் கண்டு பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடல்ல, வேத புத்தகத்தில் போதிக்கப்பட்டிருக்கிற உபதேசம் என்னவென்று அறிய வேண்டும் என்ற நோக்கத்தோடே நாம் அதை வாசிக்க வேண்டும். தேவ ஆவியின் ஏவுதலால் காலத்துக்குக் காலம் எழுதப்பட்ட அதன் ஒவ்வொரு பாகத்தின் சாரமும், நோக்கமும் ஏதென்று அறியும் பொருட்டு அதன் ஒவ்வொரு புத்தகத்தையும் வாசிக்கவேண்டும். வேறெந்த புத்தகத்தை வாசித்தாலும் வாசியாவிட்டாலும் புத்தகங்களுக்கெல்லாம் தலையானதாகிய வேதபுத்தகத்தில் நிபுணத்துவம் அடையும்படி தீர்மானித்துக்கொள்வோமாக.

பிரசங்கத்தினால் பயன் ஏற்பட மனித இருதயத்தின் தன்மையை நன்றாய் அறிவது அவசியம். ஒரு வைத்தியன் தான் உபயோகிக்கும் மருந்துக்களை மாத்திரமல்ல, வியாதிகளின் தன்மைகளையும் அறியவேண்டும். அவன் மருந்துப் புத்தகத்தைப் படிப்பது மாத்திரம் போதாது, மருத்துவமனையெங்கும் உலாவிப் பிணியாளிகளைப் பார்த்துப் பற்பல நோய்களின் தன்மைகளை அறிவதும் அவசியம். சுவிசேஷமானது சீர்கெட்ட மனித சுபாவத்தைத் திருத்து

வதற்கு தேவனால் அருளப்பட்ட ஒரு கருவியாய் இருக்கிறது. ஆகையால் அந்தக் கருவியைக் கையாளுமுன் பிரசங்கியானவன் மனித சுபாவத்தை நன்ருய் அறிய வேண்டும். இந்தக் கல்வியைக் கற்க விரும்புகிறவன் முதலாவது தன்னிடத்தில் தானே தொடங்குவது முக்கியம். ஏனெனில், ''தண்ணீரில் முகத்துக்கு முகம் ஒத்திருக்குமாப்போல, மனுஷரில் இருதயத்திற்கு இருதயம் ஒத்திருக்கும்'' (நீதி. 27 :19). சிற்சில விஷயங்களில் ஒருவனுடைய சுபாவம் வேருெருவனுடைய சுபாவத்திற்கு வேறுபடுகிறதாய் இருந்தாலும் நம்முடைய இருதயத்தில் காணப்படுகிறவைகள் அநேகமாய் மற்றவர்களுடைய இருதயத்திலும் காணப்படும் என்பது திட்டம். நமது மனசாட்சியில் அழுத்துகிற பாரச்சுமையே மற்றவர்களையும் அழுத்தும்.

நமது அக்கிரமங்களற நம்மைச் சுத்திகரித்த கிறிஸ்துவின் இரத்தம் மற்றவர்களுடைய இருதயங்களில் தெளிக்கப்பட்டால் அவர்களுடைய பாவங்களையும் நீக்கிப்போட சத்துவம் உடையதாயிருக்கிறது. நமது இருதயத்தில் இருக்கிற தீய குணங்களோடு நாம் நாள்தோறும் செய்து வருகிற போராட்டத்தைப்போல் அவர்கள் இருதயங்களிலும் போராட்டம் நடந்தேற வேண்டும். ஆவிக்குரிய யுத்தத்தில் நமக்கு அனுகூலமாயிருக்கிற சகாயங்கள் அவர்களுக்கும் அனுகூலமாயிருக்கும். நம்மைச் சுற்றி நிற்கும் காரியங்களுக்கும் அவ்வளவு பேதமில்லை. நாம் நம்மிலே காண்கிறதும், சோதனை வரும்போது விழுதலுக்குக் காரணமாய் இருப்பதுமான பெலவீனங்கள் அவர்களுக்கும் உண்டு. நமது பெலவீனத்தில் நமக்குப் பரிகாரமாய் இருந்தவைகளே அவர்களுக்கும் உபயோகமாயிருக்கும். நமது சிறுமையில் நமக்குத் தேறுதலாய் இருந்தவைகள் அவர்களையும் தேற்றக்கூடும். நமக்கு இருக்கிறதுபோல அவர்களுக்கும் சஞ்சலங்களும், வியாதி துன்பங்களும் உண்டு அவைகளில் நம்மைத் தாங்கினவைகள் எவையென்று அவர்கள் கேட்டால், ''தேவனால் எங்களுக்கு

அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலா கிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய் கிறவர்'' என்று சொல்லுவோம் (2 கொரி. 1:4).

பேதுரு தன் எஜமானுடைய அன்பான பார்வையால் உள்ளம் உடைந்து, சஞ்சலத்திலும் அந்தகாரத்திலும் அகப்படுதலின்னதென்று தன் அனுபவத்தால் அறியா திருந்தால், பலவித சோதனைகளால் துன்பப்படுகிறவர் களுக்கு ஆறுதல் நிறைந்ததாகிய தன் முதலாம் நிருபத்தை எழுதியிருக்கமாட்டான். அப்படியே, தங்கள் இருதயங் களை நன்றாய் அறிந்த பிரசங்கிகள் மாத்திரம் மற்றவர் களுக்கு உபயோகமாய்ப் பேசக்கூடியவர்கள். ஒரு பிரசங்கி தன் விஸ்தரிப்பில் தன் சுபாவம் கேட்போரின் சுபாவத் தைத் தொடும்படி செய்யும்பொழுதே அவர்களுடைய இருதயத்தில் உணர்வு உண்டாகும். செம்மையாய் வரை யப்பட்ட ஒரு முகப்படத்தின் கண்ணில் ஒரு விசேஷம் உண்டு. அதென்னவென்றால் அதைப் பார்க்கிறவன் அதைச் சமீபத்தில் வைத்துப் பார்த்தாலும், தூரத்தில் வைத்துப் பார்த்தாலும் அது அவனுடைய முகத்தைப் பார்க்கிறது போல இருக்கும். அப்படியே பிரசங்கியும் தன் இருதயத்தி லிருந்து பேசும்பொழுது, கேட்பவர்கள் யாவரும் பிரசங்கி தங்களைக் குறித்தே பேசுகிறார் என்று நினைக்கத்தக்க தாயிருக்கும்.

மேலும் வேத வசனத்தில் எழுதப்பட்டிருக்கும் மனிதர் களின் சரித்திரங்களை வாசித்துப் பார்ப்பதும் மனித இயல்பை அறிவதற்கு மிகவும் அனுகூலமாயிருக்கும். நமது ஆதிப் பெற்றோருக்கு நேரிட்ட சோதனையைப் போன்ற சோதனையே பாவத்துக்கேதுவான மற்றெல்லாச் சோதனை களிலும் அதிகமாய் திரும்பத் திரும்ப சம்பவித்து வருகிற தைக் காண்கிறோம். ஆபிரகாம், மோசே, ஆரோன், எலியா, பேதுரு, தோமா முதலியவர்களிடத்தில் காணப் பட்ட பெலவீனங்களே நம்மிடத்திலும் எப்பொழுதும்

தோன்றுகிறதைப் பார்க்கிறோம். தேவனுடைய கற்ப னையை எழுத்தின்படி அனுசரிக்கும்போது அநியாயத்தின் கூலியை ஆசிக்கும் பிலேயாம்களையும் காணலாம். வேதப் பிரமாணத்துக்குச் சரியாய் நடக்க எச்சரிக்கப்பட்ட பொழுது, ''நான் இஸ்ரவேலின் சேனைக்குக் கொடுத்த நூறு தாலந்திற்காகச் செய்யவேண்டியது என்னவென்று'' (2 நாளா. 25 : 9) தேவனுடைய மனுஷனைக் கேட்ட யூதாவின் ராஜாவைப்போல் சொல்லுகிறவர்களையும் நாள்தோறும் சந்திக்கிறோம். ''மனுஷர்களே, இந்தத் தொழிலினால் நமக்கு நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிற தென்று அறிவீர்கள்'' (அப். 19 : 25) என்று சொன்ன தெமேத்திரியுவின் வகுப்பைச் சேர்ந்தவர்களும் இக்காலத் தில் ஒழிந்துபோகவில்லை. ஏரோதைப்போல தாங்கள் செய்யப்போகிறதைக் குறித்து துக்கப்பட்டும், தங்கள் பட்சத்தாருக்கு அல்லது தங்கள் மனச்சாட்சிக்கு விரோத மான பாவங்களைச் செய்கிறவர்களும் தற்காலத்தில் அநேகர் உண்டு. மேலும், சகோதரருக்குள் முதன்மையா யிருக்க விரும்புகிற தியோத்திரேப்புகளும் உண்டு (3 யோ வான் 9). அவர்கள் மாத்திரமல்ல, கிறிஸ்து இயேசுவுக்குள் உடன் வேலையாள்களாய் இருக்கிற ஆக்கில்லாவும், பிரிஸ் கில்லாளும் (ரோமர் 16 : 3) இக்காலத்திலும் இருக் கிறார்கள். இப்படி ஒவ்வொருவருடைய மேற்கோள் களையும் எடுத்துக் காட்டத் தேவையில்லை. வேதத்தில் எழுதப்பட்டிருக்கிற சரித்திரங்களில், தற்காலம் நமக்குள் காணப்படுகிற ஒவ்வொரு சுபாவத்திற்கும் எடுத்துக் காட்டான ஆள்களைக் கண்டுகொள்வோம்.

மனித சுபாவத்தையறிவதற்கு வாழ்க்கை வரலாறு களும், சரித்திரங்களும் உபயோகமாயிருக்கும். சரித்திரங் களை வாசிப்பதினால் மனிதர்கள் சாதாரணமாய் என் னென்ன நோக்கங்களினால் நடத்தப்படுகிறார்கள் என்று அறியலாம். இதோடுகூட மனிதரோடு ஊடாட்டமும் அவசியம். நாம் வீட்டிலோ, வெளியிலோ, தெருவிலோ, வழியிலோ, கடையிலோ, சந்தையிலோ எங்கேயிருந்

தாலும் நமது கண்களையும் காதுகளையும் திறந்து வைத்துக் கொண்டு பற்பல சுபாவங்களை விளக்கும் காரியங்களைக் கருத்தாய்க் கவனிக்கவேண்டும். ஒவ்வொரு தொழில் துறைகளிலும் ஈடுப்பட்டிருக்கிற ஆள்களோடு பழக்கமாகி அவர்களுடைய சாதாரண அலுவல்களில் அவர்களுக்கு நேரிடும் சோதனைகளையும் பெலவீனங்களையும் அறிந்து கொள்ளப் பார்ப்பது அவசியம். நாம் பிரயாசப்பட்டால் ஒவ்வொருவனுடைய இருதயத்திலும் பிரவேசிக்க ஒரு வழி யுண்டென்று காணலாம். அவ்வழியைக் கண்டுபிடிக்கு மட்டும் நாம் ஒருவனை ஆராய்ந்து பார்த்து அவ்வழியாய்ப் பிரவேசித்து அவனை நமது தேவனுக்கென்று ஆதாயப் படுத்திக் கொள்ளவேண்டும். நாம் நமது பிரசங்கத்தைக் கேட்போரின் தன்மையை நன்றாய் அறிந்து கொண்டால் அவர்களுக்குப் பிரசங்கிக்கும்போது ஆகாயத்தை அடித்துச் சிலம்பம் பண்ணுகிறவர்களாய் காணப் படாமல் அவர்களுக்கு உண்டாயிருக்கிற வருத்தங்களையும் அவர்களைச் சுற்றிலுமுள்ள மோசங்களையும் நன்றாய் அறிந்து பேசக்கூடியவர்களாயிருப்போம். இங்கிலாந்து தேசத்து ஒரு நதியின் முகத்துவாரத்தில் வாசம்பண்ணின கப்பல் தச்சன் ஒருவன் ஒரு நாள் ஒரு போதகரைப் பார்த்து, சில பிரசங்கிகளுக்கு நான் செவி கொடுத்துக் கொண்டிருக்கும்போது ஒரு கப்பல் முழுதும் கட்டி முடித்துப் போடக்கூடும். ஆனால் இன்று காலை பிரசங்க நேரத்தில் ஒரு வேலையும் செய்யமுடியவில்லை என்றான். போதகர் அதற்குக் காரணம் என்னவென்று வினவ, கப்பல் தச்சன், ‘‘நீர் எனக்கு வேண்டியது இன்னதென்று நன்றாய் அறிந்தவர்போல் பேசினீர். ஆகையால், ஒரு நிமிட நேரமாவது உமது பேச்சை விட்டு என் சிந்தையைப் பிரித்துக்கொள்ளக்கூடாதிருந்தது’’ என்றான். மனித சுபாவத்தையும் அவர்களுடைய அன்றாடக நடவடிக்கைகளையும் நாம் அறிந்து, அந்த அறிவைத் தகுதியானபடி பயன்படுத்துவோமானால் நமது பிரசங்கமும் இப்படியே பலனுள்ளதாயிருக்கும்.

3

போதக ஊழியம் பலன்தரத் தேவையான பரிசுத்த ஆவியின் அனுக்கிரகம்

போதக ஊழியத்தில் தலையிட்டிருக்கிற எல்லாருக்கும் பரிசுத்தாவியின் பெலன் மிகத் தேவை. அவருடைய துணை நமக்கில்லாவிட்டால் நம்முடைய ஊழியம் பெயரளவில் மாத்திரம் இருக்கும். தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் பொதுவாய் இருக்கிற ஆசாரியப் பட்டத்தைப் பார்க்கிலும் (1 பேதுரு 2 : 5, 9; வெளி. 1 : 6) அதிக விசேஷித்த பட்டம் இல்லை என்பது மெய்யாயினும், இக்காலத்தில் தேவனுடைய பணிவிடையில் ஏற்பட்டிருக்கிற நாம், ஆதி காலத்தில் தேவ வசனத்தை விளம்பிப் பாவத்துக்கு விரோதமாய் சாட்சிகூறி, தேவனுடைய வழக்கைப் பேசுகிறதற்கு அவரால் ஏவப்பட்ட தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர் முதலிய ஊழியக்காரரின் பின் அடியாராய் இருக்கிறோம் என்று நம்புகிறேன். ஆகையால் அவர்கள்மேல் தங்கின பரம ஆவியானவரின் வரப்பிரசாதம் நம்மிடத்திலும் தங்கவில்லையானால், நாம் தரித்திருக்கும் அங்கி வெறும் மாய்மாலப் போர்வையாக மாத்திரம் இருக்கும். நாம் பரிசுத்தாவியின் வரத்தைப் பெற்றிராவிட்டால் ஆண்டவரின் நாமத்தில் நாம் பேசின துணிகரத்தினால் நாம் உண்மையுள்ள மனிதரின் நடுவிலிருந்து துரத்தப்படுவதே நியாயம்.

1. என்னென்ன காரியங்களில் நாம் பரிசுத்தாவியின் உதவியைத் தேடலாமென்று பார்ப்போம்

முதலாவது, பரிசுத்தாவியானவர் அறிவின் ஆவியா யிருக்கிருர். யோவான் 16:13 ''சத்திய ஆவியாகிய அவர்,....சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்'' என்று சொல்லியிருக்கிறது. யோவான் 14 : 26—யும் பார்க்க. ஆகையால் நாம் அறிவடையும்படிக்கு அவரு டைய போதனையைத் தேடலாம். பிரசங்கியானவன் நன்ருய்ப் படிக்க வேண்டும். ஏனென்ருல் மற்றவர்களைப் படிப்பிக்கிறவன்தானே நன்ருய்ப் படித்திருக்கவேண்டுமே. ஆயத்தமில்லாமல் பிரசங்கப் பீடத்தில் வருகிற வழக்கம் மன்னிக்கக்கூடாத துணிகரம். இதைவிட நம்மையும் நமது ஊழியத்தையும் கண்ணியக் குறைச்சலாகத்தக்கது வேறென்றுமே இல்லை. தேவ வசனத்தை ஆவலோடு படிப்பது அவசியம் என்பதைக் குறித்து அத்தியட்சன் ஒருவன் பிரசங்கம் செய்தபின் ஒரு குருவானவர் அவரைப் பார்த்து, ''ஐயா, நான் உங்கள் போதனையை நம்புவ தில்லை;ஏனென்ருல் நான் அடிக்கடி ஆராதனைக்குப் போகும் சமயம் மட்டும் எதைக் குறித்துப் பிரசிங்கிக்கப் போகிறேன் என்று அறியமாட்டேன், ஆகிலும் பிரசங்க பீடத்தில் ஏறி அதிக தாராளமாய் பிரசங்கித்து விட்டு வருகிறேன். நான் அதை ஒரு காரியமாய் எண்ணுவ தில்லை'' என்ருர். அதற்கு அத்தியட்சன், ''நீர் அதை ஒரு காரியமாய் எண்ணமல் இருக்கிறது சரி; ஏனென்ருல் உமது உதவிக்காரர்களும், தாங்களும் உங்கள் பிரசங் கத்தை ஒரு காரியமாய் மதிக்கிறதில்லை என்பதாக அறிவித் திருக்கிருர்கள்'' என்ருர். நாம் படிக்கவில்லையானல் மற்ற வர்களைப் படிப்பிப்பது எப்படி? நாம் நமது வேத புத்த கத்தை நமக்குமுன் விரித்து வைத்துகொண்டிருக்கும்போது பரிசுத்தாவியின் சகாயம் நமக்கு வேண்டும். பரம பண்டக சாலையின் திறவுகோல் அவர் கையிலிருக்கிறது. அவர் நமது விருப்பத்திற்கு மேலாக நமக்குத் தந்து பரம பொக்

கிஷத்தால் நம்மை ஐசுரியவான்களாகவும், மகாகருகலான சத்தியத்தைத் தெரிவித்துச் சத்திய பாதையில் நம்மை வழி நடத்தவும் கூடியவராயிருக்கிருர். ஆகையால் அவர் நமக்கு மிகவும் அவசியமானவர். கிறிஸ்துவினுடைய தன்மையையும் வேலையையும் குறித்து நமக்கு அவர் விசேஷித்த போதனை அருளுகிருர். நமது பிரசங்கத்தின் முக்கிய பொருள் அதுவே. அவர் கிறிஸ்துவைப்பற்றிய இரகசியங்களை எடுத்து நமக்குக் காண்பிக்கிருர். ஆகையால் நாம் அவரை நோக்கி, பரிசுத்தாவியே, தேவகுமாரனை நீர் எங்களுக்கு வெளிப்படுத்தி அவர் மூலமாய் பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று கெஞ்சி அவரிடத்தில் காத்திருக்க வேண்டும்.

இரண்டாவது, பரிசுத்தாவியானவர் ஞானத்தின் ஆவி என்னப்படுகிருர் (எபே. 1 : 17). எனவே அவர் இந்த இலட்சணத்தையுடையவராகவும் நமக்குத் தேவை. ஞானம் என்பது அறிந்த அறிவை உபயோகிக்கும் திறமையேயாம். அறிவோடு ஞானமும் சேரவில்லையானல் அது மோசத்தை வருவிக்கும். தேவ வசனத்தை அறிதல் மாத்திரம் போதாது. அதை சரியானபடி பகுத்துப் போதிக்க ஞானமும் வேண்டும். ஏனென்ருல் சுவிசேஷத்தின் ஒரு பாகத்தை மாத்திரம் அறிந்து கொண்டவர்கள் அந்தப் பாகத்தை முக்கியமானதாகப் பாராட்டி கிறிஸ்துவின் போதனையை அலங்கோலப்படுத்துகிறதுண்டு. அதனல் மிகுந்த கேடு உண்டாகிறது. அவ்விதமான உபதேசத்தைக் கேட்கிற ஜனங்கள் அதை நம்பி கிறிஸ்து மார்க்கத்துக்கு ஒவ்வாத நடக்கையினல் கேவலமானவர்களாய்க் காணப்படுகிருர்கள். ஒருவனுடைய முகத்தில் மூக்கானது பிரதான ஓர் உறுப்பு. அதினிமித்தம் கண்ணையும், வாயையும் சிறிதாகவும், அதை மாத்திரம் பெரிதாகவும் வரைந்தால் படம் எவ்வளவு அவலட்சணமாயிருக்கும்! அப்படியே சுவிசேஷத்திலுள்ள முக்கியமான உபதேசங்களில் இரண்டொன்றை மாத்திரம் முக்கியபடுத்தி மற்றவைகளை அற்பமாகப் பிரசங்கித்தால், சுவிசேஷாமனது

தன் இயல்பான அலங்காரத்தோடு காணப்படாமல் அலங்கோலமாய்த் தோன்றும். தேவாலயத்தின் தராசு கொண்டு சுகந்தவர்க்கங்களை அளவுக்களவாய் நிறுத்தச் சேர்க்க பரிசுத்தாவியானவர் நமக்குப் புத்தி தருவார். சபையாரில் அநேகருக்குத் தேவனுடைய ஆலோசனை முழுவதையும் கேட்க மனமேயில்லை. அவர்களுக்குப் பிரியமான உபதேசங்களுண்டு. அவைகளையேயல்லாமல் மற்றவைகளைக் குறித்து நாம் பிரசங்கிக்க அவர்கள் விரும்புகிறதில்லை. பிரசங்கியானவனோ சுவிசேஷ சத்தியங்களில் ஒன்றையாவது மறைக்காமலும், ஒன்றையாவது கூட்டாமலும், ஒன்றையாவது குறைக்காமலும், எல்லாவற்றையும் சரிரவக் கூற கடமைப்பட்டவன். நாம் பிரசங்கிக்கும் பிரசங்கம் அங்கவீனப்பட்டதாயல்ல, பூரண வடிவமாய் தோன்ற வேண்டும். இதற்கு மிகுதியான ஞானம் அவசியம்.

அதுவுமல்லாமல் காலத்துக்கும், வசனத்தைக் கேட்போரின் நிலைமைக்கும் ஏற்ற போதனையை எடுத்துச் சொல்லவும், அந்தப் போதனையைச் சொல்ல வேண்டிய மாதிரியாய் சொல்லவும் நமக்கு விவேகம வேண்டும். அடிக்கடி ஒருவனை எழுப்புகிறதற்கென்ற போதனை அவனுடைய கேட்டுக்கு ஏதுவாகிறதுமுண்டு. வாய்க்கு மதுரமாய் ருசிக்கும் தேன் வயிற்றுக்கு துன்பமாய் முடியக்கூடும். ஆகையால் வசனத்தைக் கேட்கிறவனுடைய இயல்பை அறிந்துகொள்வது அவசியம். விவேகமுள்ள பிரசங்கியானவன் அந்தந்தச் சத்தியத்தை அதனதன் காலத்தில் அதற்குரிய சிறப்போடு எடுத்துக் காண்பிப்பான். இதற்கேற்ற ஞானத்தைத் தரப் பரிசுத்த ஆவியினாலேயன்றி வேறொருவராலும் முடியாது.

மூன்றுவது, பிரசங்கிக்கும்போது வசனத்தைத் தாராளமாய்க் கூறும்படி வாக்கு வல்லமை அருளுவதற்கும் பரிசுத்த ஆவியானவர் அவசியம். பரிசுத்த ஆவியானவர் பலி

பீடத்தின் தழலைக்கொண்டு (ஏசாயா 6 : 6) ஒருவனுடைய உதடுகளைத் தொடுவதினால் சத்தியமாகிய அக்கினியின் அனல் அவன் இருதயத்தின் அடியில் மாத்திரமல்ல, அவனுடைய உதடுகளிலும் பட்டுணரவைக்கும்போது, அவன் எவ்வளவோ மகத்துவமாய்ப் பேசத் திராணியடைகிறான். மேலும், நாம் பிரசங்கிக்கவேண்டிய நற்செய்தியை நினைக்காமல் பூமிக்குரிய அவலட்சணமான காரியங்களை யோசிக்கச் செய்யும் வார்த்தைகளையும் திருஷ்டாந்தங்களையும் உபயோகிக்காதபடிக்கு நமது நாவை வாரினாலும், கடிவாளத்தினாலும் கட்டுவதற்குப் பரிசுத்த ஆவியானவர் வேண்டும். சிலருக்கு பகடி பேசுவது லேசு. வேறுசிலர் குணப்படாததற்கு முந்திக் கேவலமான வாழ்க்கை செய்ததனால் அதிலிருந்து சொல்லக்கூடிய மேற்கோள்கள் அநேகமிருக்கும். அப்பகடியும், அந்த மேற்கோள்களும் சபையாரைச் சிரிக்கப் பண்ணுவதேயொழிய பக்திவிருத்திக்கேதுவாகிறதில்லை.

நான்காவது, பரிசுத்த ஆவியானவர் நமக்கு அபிஷேக தைலம் போலவும் இருக்கிறார். அதனால் நமது வாயின் சொற்கள் மாத்திரமல்ல, பிரசங்க முழுவதும் பரிமளமேற்றதாகிறது. நாம் நம்மை தரைமட்டும் தாழ்த்தத்தக்கதாகவும், கழுகு செட்டைகளை அடித்து எழும்பினாற்போல நமது சிந்தை பரவசப்பட்டு, பரத்தை அணுகத்தக்கதாகவும், பிரசங்கப் பொருளை உணரவும், நாம் மனுஷருடைய குணப்படுதலையும், ஆத்துமாக்களின் பக்திவிருத்தியையும் உள்ளத்தோடு வாஞ்சிக்கவும், பரிசுத்தாவியானவர் உதவி செய்கிறார். அதோடுகூட, நாம் பிரசங்கிக்கிற சத்தியத்தினால் தேவன் மகிமைப்பட வேண்டும் என்ற அயராத ஆர்வம் நம்மை நெருக்கி எவும்படி செய்கிறார். நமது பிரசங்கத்தைக் கேட்கிற ஜனங்களில் பலர் அறிவினராயிருக்கிறார்கள். வேறு சிலர் அறிவுள்ளவர்களாயிருந்தும் அறிவின்படி நடவாதவர்களாயிருக்கிறார்கள். நாம் பிரசங்கித்துக் கொண்டு நிற்கும்போது சிலருடைய முகத்

தைப் பார்த்தால் அவர்கள் உள்ளத்தில் நமது உபதேசம் பனிபோல் இறங்குகிறதைக் காணலாம். வேறு சிலரைப் பார்க்கும்போது, அவர்கள் இருதயம் பனிபெய்யாத கில் போவா மலைபோல் கடினமும் அவாந்தரமுமாய் இருக் கிறதையும் கவனிக்கலாம். அப்படிப்பட்டவர்களைக் குறித்து நாம் பரிதவிக்கும்படி பரிசுத்தாவியின் சகாயம் நமக்கு அவசியம்.

அதுவுமில்லாமல் பிரசங்கம் முழுவதிலும் நாம் பய பக்தியான சிந்தையைக் காத்துக் கொள்ளவும் பரிசுத்தாவி யானவர் ஒத்தாசை அருளுகிறார். நாம் பேசிக்கொண்டு நிற்கும்போதே, தேவனை நோக்கி ஜெபிக்கவும் கர்த்தரு டைய கற்பனைகளைக் கேட்டு நிறைவேற்றவும், நமது மனக்கண்களை தேவ ஆசனத்தில் ஊன்றி, நமது ஆவியின் செட்டைகளால் அசைவாடிக்கொண்டு நிற்கவும் அவர் உதவி செய்கிறார். இப்படி அவர் செய்கிறதை நாம் நமது இருதயத்தில் உணர்ந்துக் கொள்ளலாம். இதற்கு எதிராக பயபக்தியற்ற சிந்தையோடு பிரசங்கிக்கிறதினால் வரும் கேட்டையும் அறிவோம். பிரசங்கியானவன் மேட்டிமை யோடும் கடுவெறுப்போடும் பேசுவதைப் பார்க்கிலும் அதி கத்தீமையான காரியம் எது? அவிசுவாசமான இருதயத் தோடு பிரசங்கிப்பதைப் பார்க்கிலும் பலவீனப்படுத்தும் கிரியை எது? பிரசங்கிக்கும்போதெல்லாம் பக்தி வினயத் துடன் நிலவரமான ஆவியும் அவசியம். அதனால் முதல் வார்த்தையிலிருந்து கடைசி வார்த்தை மட்டும் பெலன் தரும் ஆண்டவர்மேல் பற்றுதலாயிருப்போம். பிரசங்கத் தின் இடையில் பரிசுத்த ஆவி நம்மை விட்டுவிட்டால், பிரசங்கம் முடியுமுன், ஆரம்பத்தில் பெற்ற ஆசீர்வாத மெல்லாம் அவமாகும். பிரசங்கம் நெடுகவே நமக்கு ஒத் தாசை வரும் பர்வதங்களை நோக்கிப் பார்த்துக்கொள் வோமானால் நாம் கலங்காமல் தைரியமாய் பேசக்கூடும்.

மேலும் நாம் பேசும்போது தேவன் தமது வசனத்தை பலிதமாக்க சித்தமாயிருக்கிறார் என்கிற நம்பிக்கையோடு

பிரசங்கிக்க வேண்டும். அப்படியே தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிருர். நாம் பிரசங்கித்து முடிந்தபின் அதனுல் ஆசீர்வாதம் அடைந்தவர்கள் யாரென்று பார்க்கவேண் டும். ஆகிலும் என்னுடைய அற்ப ஊழியத்திஞல் தேவன் ஆத்துமாக்களைக் குணப்படுத்துகிருர் என்று நினைக்க எனக்கு ஆச்சரியமாயிருக்கிறதென்று சொல்லுவோமா? சொல்ல வேண்டாம். அது மாயமான தாழ்மையாகும். நமது ஊழியம் மிகவும் அற்பமானதே. அது எல்லாருக்கும் தெரியும். எல்லாரையும்விட அது நமக்கே அதிகமாய் தெரிந்திருக்க வேண்டியது. ஆகிலும், ''என் வசனம் வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாது'' என்று சொன்ன தேவன் தமது வாக்கை, நிறைவேற்றுகிறது ஆச்சரியமா? பாத்திரம் கேவலமானதினிமித்தம் ஆகாரத்தின் ஊட்டச் சத்தும் அற்றுப்போகுமா? தேவகிருபையின் வல்லமை நமது பலவீனத்திஞல் மேற்கொள்ளப்படுமா? சுவிசேஷத்தின் பலன் நம்மாலல்ல, தேவஞல்தான் இருக்கிறதென்று விளங்கும்படிக்கு நாம் இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிரேம்.

ஐந்தாவது, சுவிசேஷப் பிரசங்கத்திஞல் பலனைப் பிறப்பிப்பதற்கு ஆவியானவர் வேண்டும். நாம் பிரசங்க பீடத்தில் நிற்பதன் நோக்கம், ஆவிக்குரிய வாள்வீச்சு வேடிக்கையில் நம்முடைய திறனைக் காண்பிக்கவா? அல்ல. ஆவிக்குரிய போர் செய்ய அங்கே நிற்கிரேம். ஆவியின் பட்டயமாகிய தேவவசனத்தை மனிதருடைய நெஞ்சுருவப் பாய்ச்சுவது நமது நோக்கம். பிரசங்க வேலையை ஒரு பகிரங்க காட்சிக்கு ஒப்பிடலாமானுல், சில தேசங்களில் வழக்கமாயிருக்கிற உழவு பரீட்சைக் காட்சிக்கு அதை ஒப்பிடலாம். அந்தக் காட்சிகளில் பரிசோதிக்கப்படும் கலப்பைகளின் வடிவத்திற்கு தக்கபடியல்ல, அவைகளிஞல் முடியும் உழவின் அளவுக்கும் தன்மைக்கும் தக்கதாகவே வெகுமதி கொடுக்கப்படும். அப்படியே சுவிசேஷக் கலப்பையைப் பிடித்து நடத்துவ

தானல் இருதயங்களில் உண்டாகும் உணர்வையும் பலனே யும் கொண்டே பிரசங்கத்தின் தன்மையையும் தீர் மானிக்க வேண்டும். கிருபையினுல் அற்புதமாய் குணப் படுகிறவர்கள் நமது பிரசங்கத்தின் தன்மைக்கு முத்திரை களாயிருப்பார்கள். அவ்விதமாய் குணப்படுத்துவது பரிசுத்த ஆவியினுலேயன்றி வேறே யாராலே கூடும்? பரிசுத்த ஆவியில்லாமல் ஓர் ஆத்துமாவையும் உணர்த்த வும், குணப்படுத்தவும், புது ஜீவியத்தில் நடத்தவும் முடியாது.

ஆருவது, விண்ணப்பங்களின் ஆவியாக தேவ ஆவி யானவர் நமக்கு அவசியம். ஏனென்ருல் அவர் தேவ சித் தத்துக்கு இசைவாய்ப் பரிசுத்தவான்களுக்காக மன்ருடு கிருர். நமது ஜீவியத்தில் ஒரு பிரதான பாகம் பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணுவதேயாம். அப்படி நினையாத போதகன், போதகத் தொழிலே விட்டு விலகிக் கொள்வது உத்தமம். பாரத்தோடு கூடிய பிரசங்கமும் ஏராளமான ஜெபமும் ஒருமித்து நடந்து வரவேண்டும். நமது சரீரம் எப்போதும் முழங்காலில் நிற்பது கூடியதல்ல. ஆகிலும் நமது ஆத்துமா ஜெபநிலைமையை விட்டு ஒருபோதும் பெயரக் கூடாது. ஜெபம் பண்ணும் பழக்கம் நல்லது; ஜெபத்தின் ஆவியோ அதிலும் நல்லது. குறித்த சமயங் களில் தனித்து ஜெபிக்கும் அப்பியாசத்தை விடக்கூடாது. அதொடுகூட தேவனேடு சம்பாஷணையும் சகவாசமும் நமது ஓயாத அப்பியாசமாய் இருக்க வேண்டும் பொதுப் படச் சொன்னல் சுவிசேஷப் பணிவிடையாள்கள் ஒவ் வொரு சில நிமிஷமாவது தங்கள் இருதயங்களைத் தேவ னுக்கு நேராய் ஏறெடுக்காமல் போகக்கூடாது ஆலய ஆராதனையில் நாம் பண்ணும் ஜெபங்கள் அனலும் ஊக்க மும் இல்லாமல் கடமைக்கென்று செய்யப்படவே கூடாது. ஆவியானவரில்லாமல் போனல் ஜெபங்கள் அப்படித் தானகும். பொதுவான ஜெப புத்தகத்தை உபயோகிக் கிறவர்களைப்பற்றி நாம் ஒன்றும் சொல்ல முடியாது.

ஆலயத்தில் பகிரங்கமாய் ஜெபம் செய்கிறவர்களுக்கோ நான் சொல்வது கடவுளுடைய ஆவியில்லாமல் வருடத்துக்கு வருடம் தக்கபடி ஜெபிப்பது முடியாத காரியம். உயிரற்ற ஜெபம் சீக்கிரத்தில் ஜனங்களுக்கு அருவருப்பாகும். நமது ஜெபத்தை உயிருள்ளதாக்குகிறவர் யார்? பரிசுத்த ஆவியானவர்தானே. நாம் அவருடைய உதவிக்காக ஓயாத வாஞ்சையோடு மன்றாடினால் அது கிடைக்கும். அடிக்கடி நான் செய்யும் மகா அந்தரங்கமான ஜெபம் திரள் கூட்டத்தினிடையிலேயே செய்யப்படுகிறது. நான் ஆயிரக்கணக்கான ஜனங்கள் மத்தியில் நின்று ஜெபிக்கும்போதுதான் தேவனிடத்தில் முற்றும் தனித்திருக்கிறேன் என்று உணர்ந்திருக்கிறேன். சில வேளையில் பிரசங்க பீடத்தில் ஜெபத்தை முடித்துவிட்டுக் கண்ணைத் திறந்து பார்க்கும்போது நான் பூமியிலே மனுஷர் நடுவிலேயே இருக்கிறதைக்கண்டு, ஒருவகையான அதிர்ச்சி அடைந்திருக்கிறேன். இவ்விதமான ஜெபம் போதகருக்கும், ஜனங்களுக்கும் ஆசீர்வாதம் நிறைந்ததாயிருக்கிறது.

ஏழாவது, தேவ ஆவியானவர் பரிசுத்தரின் ஆவியாய் இருக்கிறபடியால் நாம் அவர் உதவியைத் தேடவேண்டும். ஏனென்றால் போதக ஊழியத்தில் மிகுதியும் முக்கியமுமான பாகம் போதனைக்கேற்ற சாதனைதான். நாம் பிரசங்கபீடத்தில் சொல்லுகிறதை மாத்திரம் அல்ல, ஆலயத்துக்கு வெளியே செய்கிறதையும் ஜனங்கள் நன்றாய்க் கவனிக்கிறார்கள். பரிசுத்தவான்களாயிருக்கிறதும், மற்றவர்கள் முன்மாதிரியான பரிசுத்தவான்களாய் வாழ்கிறதும் எவ்வளவோ பிரயாசமான காரியம். சபையிலுள்ள புருஷரெல்லாம் நம்மைப்போல் ஆகத்தக்கதாய் நாம் உத்தம புருஷராய் இருக்கவேண்டும். சிறந்த தகப்பன்மாராகவும் வேண்டும். சில போதகருடைய பிள்ளைகள் தகுதியாய் வளர்க்கப்படாததினால் தேவ பயமற்றவர்களாய் வளர்ந்து வந்திருக்கிறார்கள்.

ஜீவ வசனத்தை உயர்த்துகிறவர்களாய் உலகத்தில் சுடர்களைப்போல காணப்படுகிற நீங்கள் கோணலும் மாறுபாடுமுள்ள சந்ததியின் நடுவில் குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும் கடவுளின் மாசற்ற பிள்ளைகளுமாயிருக்க வேண்டும். உவிட்பீல்ட் போதகர் தமது வஸ்திரத்தை எப்பொழுதும் சுத்தமாய் வைத்துக் கொள்வதைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருப்பார். யாராவது அதைப்பற்றி அவரிடத்தில் பேசினால் அவர், ''இவைகள் அற்ப காரியங்களல்ல, ஒரு போதகன் வஸ்திரத்திலும்கூட மாசு கறை இல்லாதவனாயிருக்கவேண்டும்,'' என்பாராம். ஆவிக்குரிய சுத்தம் ருரு போதகனுக்கு இன்றியமையாத இலட்சணம்.

எட்டாவது, பகுத்தறிவின் ஆவியாகவும் பரிசுத்தாவியானவர் இருப்பது நமக்கு அவசியம். ஏனென்றால் பரிசுத்தாவியானவர் தேவனுடைய மனதை அறிந்திருக்கிறதுபோல ஒவ்வொரு மனித உள்ளத்தையும் அறிந்திருக்கிறார். நாமும் பலவித குணங்களுடைய ஜனங்களைப்போதித்து உணர்த்தவேண்டியது வரும். சில வேளைகளில் ஒரே ஆளிடத்தில் ஒரு நாள் ஆறுதலாகவும் வேறு நாள் கண்டிப்பாகவும் பேசுவது அவசியமாய் நேரிடும். இன்றைக்கு மிகுந்த உருக்கத்தோடும் கண்ணீரோடும் நாம் பேசின ஒருவன், நம்முடைய ஆறுதலான வார்த்தைகளை அவமதித்ததின் நிமித்தம் நாளைக்கு நாம் அவனிடத்தில் கடிந்துகொண்டு பேசவேண்டியதாய் வரும். இதற்கேற்ற விவேகத்தை பரிசுத்தாவியானவர் மாத்திரமே நமக்குத் தரக்கூடும்.

2. நமக்கு மிக அவசியமாயிருக்கிற பரிசுத்தாவியின் சகாயத்தை என்னென்ன காரணங்களினால் இழந்து விடுவோம் என்பதை இப்பொழுது கவனிப்போம்.

போதகன்மாருக்குத் தேவ ஆவியின் சகாயம் கிடையாமல் போகக்கூடும், அது எப்படியென்றால் காற்றானது தனக்கு இஷ்டமான இடத்தில் வீசுகிறதுபோல பரிசுத்தாவியானவரும் தமக்கு இஷ்டமானதைச் செய்கிறார். ஆகிலும்

எப்பொழுதும் நீதியாயும் ஞானமாயும், தகுந்த காரணத்தோடும் அப்படிச் செய்கிறார். சில வேளைகளில் அவர் தமது ஆசிர்வாதத்தை நமக்குத் தருவதற்கும் சில வேளைகளில் அதைத் தராமலிருப்பதற்கும் காரணம் நம்மிடத்திலேதான் இருக்கிறது. எடுத்துக்காட்டாக, ஓர் ஆற்றின் போக்கை கவனித்துப் பார்ப்போம். அது எத்தனையோ இடத்தில் வளைந்து, வளைந்து போகிறது. ஆனால் அதன் ஒவ்வொரு வளைவுக்கும், சுழற்சிக்கும் காரணமுண்டு. அப்படியே பரிசுத்தாவியானவர் ஒரு பிரசங்கியை மற்றொரு பிரசங்கியை விட அதிகமாய் ஆசிர்வதிப்பது பிரசங்கியின் சுவிசேஷித்த புண்ணியத்தினாலும் தகுதியினாலும் ஆகிறதென்று சொல்லக் கூடாது. என்றாலும் தேவனுடைய ஆசிர்வாதம் இறங்குகிறதற்கேற்ற சில காரியங்களும், அதற்குத் தடையாயிருக்கும் சில காரியங்களும் சுவிசேஷப் பணிவிடையாள்களிடத்தில் உண்டு என்பது நிச்சயம். பூமியின்மேல் பனி எப்படி இறங்குகிறதோ அவ்வண்ணமே, தேவ ஆவியானவர் அந்தரங்கமாய் இறங்குகிறார். பனி பெய்யும்போது சில பொருள்கள் ஈரமாகிறது. வேறுசிலவோ முன்போலவே காய்ந்திருக்கிறது. அப்படியே ஆவியின் அருள் பொழியும்போது சில ஆத்துமாகள் அதை உட்கொள்கின்றன. சில ஆத்துமாக்களோ பழையபடி கடினமாகவே இருக்கின்றன. அதற்குக் காரணமில்லையா? காற்றானது தனக்கு இஷ்டமான இடத்தில் வீசுகிறது மெய்யாயினும், நமக்கு குளிர்காற்றுவேண்டுமானால் கடலுக்காவது மலைக்காவது போக வேண்டும். அதுபோல தேவ ஆவியானவர் தமது வல்லமையைக்காண்பிப்பதற்கு அதிகமாய் பிரியப்படுகிற இருதயங்கள் உண்டு. வேத புத்தகத்தில் அவர் புறாவுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறார். புறாவானது இஷ்டமாய்ச் சஞ்சரிக்கிற சில இடங்கள் உண்டு. நதிகளையும், சமாதானமும் அமைதியுமான இடங்களையும் அது தேடுகிறது. யுத்தகளத்திலும், பிணங்கள் கிடக்கும் இடுகாட்டிலும் அதைக் காணமாட்டோம். அப்படியே ஆவியானவருக்கும் விருப்பமான காரியங்களுமுண்டு. மேலும் ஆவியானவர் ஒளிக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறார்,

ஒளியானது தனக்கு இஷ்டமான இடத்தில் பிரகாசிக்கிறது. ஆகிலும் சில பொருள்கள் இருண்டவைகளாயும், வேறுசில உரு ஒளியுள்ளவைகளாயும் இருக்கின்றன அப்படியே ஆவியானவரும் எங்கும் பிரகாசிக்கும் ஜோதியாயிருந்தும் சில ஆத்துமாக்களில் அவருடைய ஒளி காணப்படுகிறது. சில ஆத்துமாக்களோ இருண்டிக்கின்றன. இப்படியாக பரிசுத்தாவியானவர் மனிதருக்கு தாராளமாய் அளிக்கப் படும் மகத்துவ ஈவாயிருந்தாலும், அவருக்கு வெறுப்பான சில காரியங்களின் நிமித்தம் அவர் விசனப்பட்டு தமது உதவியை அளியாமல் போகிறூர் என்பதற்குச் சந்தேக மில்லே. ஆகையால் பரிசுத்தாவியை விசனப்படுத்தும் காரியங்கள் எவையென்று பார்ப்போம்.

அ. பரிசுத்த ஆவியின் ஏவுதலுக்குத் தகுந்தபடி கீழ்ப் படியாமல் போவதினல் உண்டாகும் இருதய மந்தம்— அவர் நமது இருதயத்தில் உண்டாகும் அசைவும் ஏவுத லும் எவ்வளவு சிறியதாயிருத்தாலும், நாம் அதைக் கவனித்துக் கீழ்ப்படியவேண்டும்; அப்பொழுது அவர் நம் மில் தங்கியிருப்பார். நாம் புத்தியில்லாக் குதிரையைப் போலவும், கோவேறு கழுதையைப் போலவுமிருந்தால், நமக்குச் சவுக்கு கிடைக்குமேயன்றி தேற்றரவாளரின் ஆறுதல் கிடையாது.

ஆ. உண்மை தாழ்ச்சி — நிபுணனை இசை அறிஞன் ஒருவன் ஒரு வீணையை எடுத்து வாசிக்கும்போது சில தந்தி களில் இராகம் பிசகுகிறதென்று கண்டால் உடனே நிறுத்தி விடுவான். அப்படியே பரிசுத்த ஆவியானவரும் சிலருடைய ஆத்துமாக்கள் வஞ்சகமும், திருக்கும், இருநினேவும் உள்ள வைகளாய் இருக்கின்றனவென்று காணும்போது அவை களில் கிரியை செய்கிறதில்லே. கிறிஸ்துவின் ஆவியானவர் வஞ்சகத்திற்கு துணேவராயிருக்கமாட்டார். சில ஊழியக் காரர் சில உபதேசங்களேத் தாம் விசுவாசியாவிட்டாலும் சபையாரின் நிமித்தம் பிரசங்கிக்கிறதுண்டு. அப்படிச் செய்கிறவர்கள் மகா ஈனமான அடிமைகளேவிட இழிவான

வர்கள். நாம் வஞ்சக பிரசங்கிகளாய் இராதபடி தேவன் நம்மைக் காப்பாராக.

இ. ஆவிக்குரிய சிந்தையில்லாமை—ஒருவன் பொய்ய னல்ல, அசுத்தனல்ல, முற்கோபியல்ல, தன்னயமுள்ள வனல்ல, என்றாலும் குறைவொன்றிருக்கிறது. அவன் ஏதா கிலும் குற்றமுள்ளவனென்று சொல்ல முடியாமற் போனா லும், குறைவிருக்கிறதினால் எல்லாம் குறைவென்று சொல்ல வேண்டும். அவனில் ஆவிக்குரிய சிந்தையில்லை, பக்தி யில்லை. அவனில் கிறிஸ்துவின் வாசனை எவ்வளவும் கிடையாது. அவன் இருதயம் அனல் மூளுவதில்லை. அவன் உயிருள்ளவனென்று பெயர் பெற்றிருந்தும் செத்தவனாய் இருக்கிறான். அவன் அருளற்றவன். அப்படிப்பட்ட வனுடைய ஊழியத்தில் தேவ ஆவியினுடைய அனுக்கிரகம் இறங்காது.

ஈ. தேவ ஆவிக்கு வெறுப்பான இன்னொரு காரியம், அகந்தை — ஒருவன் பெரியவனாகிறதற்கு வழி அவன் தன் சிறுமையை உணருதலே. தன் பார்வைக்குப் பெரியவனா யிருக்கிறவன் தேவனால் மதிக்கப்படமாட்டான். பூமியின் உயர்ந்த ஸ்தலங்களில் வாசம் பண்ண விரும்புகிறவன் மலையின் உச்சி மிகவும் குளிர்ச்சியும் அவாந்தரமுமான தென்று அறியவேண்டும். கர்த்தர் தாழ்மையுள்ளவர் களிடத்தில் வாசம் பண்ணுகிறார். அகந்தைக்காரரையோ தூரத்தில் இருந்து அறிகிறார்.

உ. சோம்பலும் பரிசுத்தாவிக்குப் பிரியமில்லை — பரி சுத்தாவியானவர் சோம்பேரியின் வாசற்படியில் காத்து நின்று சோம்பலினால் உண்டாகும் குறைச்சலை நீக்குவார் என்று நினைக்கவேண்டாம். மீட்பரின் காரியத்தில் சோம் லாயிருப்பதற்கு சாக்குப்போக்கில்லை. சோம்பேரியைக் காண்பது நமக்கே அருவருப்பாயிருக்கிறது. அப்படி யானால் ஆச்சரியமான சுறுசுறுப்புள்ள தேவ ஆவியான வருக்கு அது எப்படியிருக்கும்.

ஊ. தனி ஜெபத்தில் ஒழுங்கின்மையும் ஆவியான வரை விசனப்படுத்துகிறது — யோசித்துப் பார்த்தால் இஸ்ரவேலரின் பரிசுத்தருக்கு வெறுப்பான இன்னும் அநேக காரியங்கள் தென்படும். அவரவர் அவைகளைக் கண்டுக் கொள்ளலாம்.

3. தேவ ஆவியானவர் மிகவும் விசனப்பட்டு நம்மைவிட்டுப் போய்விட்டால் என்ன சம்பவிக்கும்?

ஒருவேளை நாம் தேவனுடைய மெய்யான ஊழியக்கார ராயிராமல் பிலேயாமைப்போலும், அவன் ஏறிப்போன கழுதையைப்போலும், தற்காலத்திற்கென்று மாத்திரம் உபயோகிக்கப்படும் எத்தனங்களாயிருப்போம். பிரசங்க வேலையைச் சிறிதுகாலம் அமைதியாய் நடத்தினாலும் நம்மில் தேவ ஆவியின் அனுக்கிரகம் இல்லையென்பது சபை யாருக்கும் நமக்கும் தெரியாதிருக்கலாம். அப்படியானால் நமது வேலை திடீரென்று முடிவடையக்கூடும். ஒருவேளை நாதாப், அபியு என்பவர்களைப்போல் நடுவயதில் அல்லது ஓப்னி, பினேகாஸ் என்பவர்களைப்போல் நடுவயது கழிந்த பின் சடுதியில் வெட்டப்படுவோம்.

தேவ ஆவியினால் ஏவப்பட்டிருக்கிற சரித்திரக்காரன் ஒருவன் இருந்தால் பயங்கரமான காரியங்களை அவன் எழுத வேண்டியதாயிருக்குமோ! மிகுந்த பிரயோஜனமுள்ளவர் களாய்இருப்பார்களென்று திருச்சபையானது நம்பியிருக்க, இடையிலே வெட்டுண்டு போகிற சில வாலிப பிரசங்கி களின் விருத்தாந்தங்களை எழுதினால் சிலரைப்பற்றி அவர் கள் மதுபானத்தினால் உண்டான வைராக்கியமுள்ளவர் களாயும், அந்தரங்கத்தில் மகா அருவருப்பான அசுத்தமும் வெளிக்கு பரிசேய சுத்தமானவர்களாயும் இருந்தார்கள் என்று எழுதப்படும். வேறு சிலரைப்பற்றி: அவர்கள் வாயில் வேத சாஸ்திரிக்கு ஏற்ற உபதேசமும், உள்ளத் திலோ நாத்திகமுமாயிருந்தார்களென்றும், "கர்த்தர் தங் களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய

சன்னிதியில் கொண்டுவந்ததின் நிமித்தம் தேவகோபம் அந்தச் சடுதியான மரணங்களை நேரிடப்பண்ணிற்று என்றும் வாசிப்போம் என்பதற்குச் சந்தேகமில்லை. பயங்கரமான இப்பேர்ப்பட்ட ஆக்கினை நம்மில் யாருக்காவது சம்பவியாதபடி எச்சரிக்கையாயிருப்போமாக.

சவுலைப்போல் பரிசுத்தாவியினால் கைவிடப்பட்ட சில ஆத்துமாக்கள் உண்டு. தேவ ஆவியானவர் சவுலின்மேல் இறங்கினார். ஆயினும் அவன் அவருடைய ஏவுதலுக்கு அடங்காமல் துரோகம் பண்ணினபடியால் அவர் அவனை விட்டுப் போய் விட்டார்; உடனே ஒரு பொல்லாத ஆவி அவனுக்குள் புகுந்தது. தேவ ஆவியினால் கைவிடப்பட்ட சிலர் ஸ்கேவா என்னும் யூதனுடைய குமாரரைப்போலிருக்கிறார்கள். அந்த எத்தர்கள் பவுல் பிரசங்கித்த இயேசுவின் நாமத்தில் பிசாசுகளைத் துரத்த எத்தனித்தபோது பிசாசுகள் அவர்கள்மேல் பாய்ந்து அவர்களை மேற்கொண்டது. அப்படியே சில பிரசங்கிகள் தாங்கள் கண்டித்த பாவங்களுக்குத் தாங்களே அடிமைகளாயிருக்கிறார்கள். ஸ்கேவாவின் குமாரர் நமக்குள்ளும் உண்டு. குடிவெறிக்கு விரோதமாய் முறையிட்டவனை மதுபானப் பிசாசுகள் பிடித்ததையும் கற்புநெறியைப் புகழ்ந்து கொண்டாடினவனைக் காமப்பேய் ஆட்கொண்டதையும் கண்டிருக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் நம்மைக் கைவிட்டால் நமது நிலைமை மகா மோசமாகிவிடும். ஆகையால் நாம் எச்சரிக்கையாய் நடந்து கொள்வோமாக.

வேறு சில பிரசங்கிகள் பிலேயாமைப்போல் ஆகிப்போகிறார்கள். பிலேயாம் ஒரு தீர்க்கதரிசியல்லவா? அவன் கர்த்தருடைய நாமத்தில் பிரசங்கித்தானே. ''தேவன் அருளும் வார்த்தைகளைக் கேட்டு சர்வவல்லவரின் தரிசனத்தைக் கண்ட புருஷன்'' என்று அவனைக் குறித்து சொல்லியிருக்கிறதல்லவா? ஆகிலும் பிலேயாம் கர்த்தருக்கு விரோதமாய் எதிர்த்து நின்று. தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம் அழிந்து போகிதற்கு தந்திரமாய் ஓர் உபாயம் பண்ணி

னன். சுவிசேஷப் பிரசங்கிகள், போப்பு மார்க்கத்தாரும் அவிசுவாசிகளுமாகித் தாங்கள் ஒரு சமயம் மகத்துவமாய் மதித்ததாகப் பாராட்டின மார்க்கத்தை அழிக்கப் பிரயாச பட்டதை அறிந்திருக்கிறோம். நாம் அப்போஸ்தலர்களைப் போல சிரேஷ்டமானவர்களாயிருந்தாலும், யூதாசைப் போல் கேட்டின் மக்களாக மாறிப்போகக் கூடும், நாம் அப்படி ஆகாதிருப்போமாக! நாம் தேவனுடைய பிள்ளை களாயிருந்தாலும் பரிசுத்தாவியானவர் நம்மை விட்டு விட்டால் யெரெபெயாமின் காலத்தில் ஒரு கள்ளத்தீர்க்க தரிசியின் வஞ்சனையினால் கர்த்தருடைய கற்பனைக்குக் கீழ்ப் படியாமல் போனதினிமித்தம் சிங்கத்தினால் அடியுண்ட தீர்க்கதரிசிக்கு நேரிட்டதுபோல் நமக்கும் நேரிடும். ஒரு வேளை நமது ஆத்துமா நாசமடையாது. ஆகிலும் நமது ஊழியம் திடீரென்று முடிவடையும். அல்லது சிம்சோ னுக்கு நேரிட்டது நமக்கும் சம்பவிக்கும். தாணின் பாளயத் திலிருக்கும்போது கர்த்தருடைய ஆவியானவர் அவன்மேல் இறங்கினார். ஆகிலும் தெலீலாளின் மடியில் அவன்தன் பெலனையும், சிறைச்சாலையில் தன்கண்களையும் இழந் தான். அவன் குருடனான பின்பும் தனக்கு நியமிக்கப்பட்ட வேலையை வீரியமாய் முடித்தான். என்றாலும் நம்மில் யாருக்கு அவனுடைய நிலைமையில் அகப்பட விருப்ப மிருக்கும்.

கடைசியாக, மோசேயின் காரியத்தைப் பாருங்கள். இவனுடைய காரியம் மற்றெல்லா எடுத்துக்காட்டைப் பார்க்கிலும் என்னை அதிகமாய் துக்கப்படுத்தியிருக்கிறது. மோசேயைப்போல நாமும் நமது ஜீவியத்தின் வேலையை சீர்குலையப் பண்ணத்தக்கதாக பரிசுத்தாவியானவரால் விட்டு விடப்பட்டிருக்க முடியும். இதனால் நாம் நமது ஆத்துமாவையாவது, பரலோகத்தில் நமது கிரீடங்களை யாவது, பூமியிலே நமது புகழையாவது இழந்துவிடு வோம் என்று நினைக்கத் தேவையில்லை. ஆகிலும் ஒரே ஒரு சமயம் பதறிப் பேசுகிறதினிமித்தம் நமது கடைசி

காலம் மந்தாரத்துக்கு ஒப்பிடப்பட வேண்டிய தாயிருக்கும்.

ஓரேபின் மகாதீர்க்கதரிசியானவரின் அந்தியகால சரித்திரத்தை வாசிக்கும்போது என்மேல் விழுந்த மந்தாரம் எவ்வளவோ அந்தகாரமாயிருந்தது. மோசேயின் பாவமென்ன? அது தாவீதின் பாவத்தைப்போல் கொடியதல்ல; பேதுருவின் விழுதலைப்போல் பயங்கரமானதுமல்ல; ஆரோனுடைய குற்றத்தைபோல் கோழைத்தனமானதுமல்ல; சாமானிய நிதானிப்பாகிய தராசில் நிறுத்துப் பார்க்கும்போது அது எள்ளிலும் சிறியதாய்த் தோன்றுகிறது. ஆகிலும் மனிதருக்குள் விசேஷித்த கிருபை பெற்றவனும், ஜனத்தின் தலைவனும், தேவனுகிய இராஜாதிராஜாவின் பிரதிநிதியுமாகிய மோசேயினிடத்தில் காணப்பட்டப்படியால் கர்த்தர் அதைக் கண்சாடையாய் விடவில்லை. வெருெருவரிடத்தில் அந்தக்குற்றம் காணப்பட்டிருந்தால் லேசாய் மாத்திரம் தண்டித்திருப்பார். ஆகிலும் அது மோசேயினிடத்தில் காணப்பட்டதினிமித்தம் அவனுக்குத் தண்டனையாக வாக்குத்தத்த தேசத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதென்று தீர்ப்புச் செய்தார். அவன் பிஸ்காவின் சிகரத்திலிருந்து தேசத்தின் சிறந்த காட்சிக்காண இடம் பெற்ருன். தீர்ப்பின் பாரத்தை இலகுவாக்கத்தக்கதாக வேறு சகாயங்களும் கிடைத்தது. ஆயினும் இஸ்ரவேலருக்குக் காணியாட்சியாகக் கொடுக்கப்பட்ட தேசத்தில் அவன் பிரவேசிக்கக்கூடாமல் போனது மகா சஞ்சலமே.

ஒரே ஒரு கீழ்ப்படியாமையினிமித்தம் இது நேர்ந்தது என்று நினைக்கும்போது சஞ்சலம் எவ்வளவோ அதிகப்படுகிறது. இப்படி சிந்தித்து நாம் நமது எஜமானுடைய சேவகத்தை வெறுக்கலாமோ? அப்படி வெறுக்கவேகூடாது. அதைப்பயத்தோடும் நடுக்கத்தோடும் நிறைவேற்றியே வர வேண்டும். மோசே முதலாய்த் தவறியிருக்க தவருதிருக்கத் தக்கவன் யார்? தேவனுக்குப் பணிவிடை செய்கிறது பாக்கி

யமான காரியந்தான், என்ருலும் அது பயங்கரமான காரியமே. ''பட்சிக்கும் அக்னிக்கு முன்பாக நம்மில் தரித்திருப்பவன் யார்? நித்திய ஜுவாலைக்கு முன்பாக நம்மில் தாபரிப்பவன் யார்? நீதியாய் நடந்து செம்மையானவைகளைப் பேசுகிறவன்தானே'' (ஏசாயா 33:14, 15). அவன்தான் பாவத்தைப்பட்சிக்கும் ஜுவாலைக்கு முன்நிற்கக் கூடியவன். என் சகோதரரே, நாம் மோசேயின் ஸ்தானத்தை ஆசிப்பது குற்றமல்ல; ஆகிலும் அதில் பிரவேசிக்கும்போது நடுங்க வேண்டும். தேவன் நமக்கு முன்பாக கடந்து போகப் பண்ணும் சகலவித நன்மையினிமித்தமும் பயந்து நடுங்குவோமாக. நாம் ஆவியின் கனிகளால் நிறைந்திருக்கும்போது, தேவாசனத்துக்கு முன்பாக அதிகமாய் பணிந்து பயத்துடனே கர்த்தரைச் சேவிப்போமாக. ''நம்முடைய தேவனுகிய கர்த்தர் எரிச்சலுள்ள தேவன்.'' அவர் நம்மிடத்தில் வந்தனின் நோக்கம் நம்மைத்தாழ்த்தும்படிக்கல்ல, தம்மை உயர்த்தும்படிக்கே. ஆகையால் நாம் செய்யும் எல்லாக் கிரியைகளிலும் அவருடைய மகிமையை முதல் காரியமாய் நாடுவதே நமது மேல் விழுந்த கடமை, அவர் பெருகவும் நாம் சிறுகவும் வேண்டும். தேவன் இதை நமக்கு உணர்த்தி நாம் அவருக்கு முன்பாக மிகுந்த கரிசனையோடும் தாழ்மையோடும் நடக்கும்படி அனுக்கிரகிப்பாராக. தேவன் தமது பணிவிடையாளாகிய நம்மையே முதலாவது ஆராய்ந்து பார்க்கிருர். ஏனென்ருல் நியாயத்தீர்ப்பு அவருடைய வீட்டிலேயே ஆரம்பிக்கிறது. நம்மில் யாராவது சோதிக்கப்பட்டு குறைவுள்ளவராக காணப்படுவோமா? போதகமார் கூட்டத்திலிருந்து யாராவது நரக குழிக்குள் இறங்குவார்களோ? அப்படி இறங்குகிறவனின் முடிவு மிகவும் பயங்கரமானது. அவனுக்குண்டாகும் ஆக்கினை சாதாரண பாவிகளுக்கும் பிரமிப்பாயிருக்கும். ''கீழேயிருக்கிற பாதாளம் உன் நிமித்தம் அதிர்ந்து உன் வருகைக்கு எதிர்கொண்டு வரும்.'' நரகவாசிகள் அவனைப்பார்த்து, ''நீயும் எங்களைப் போல் பலட்சியமானுயோ? எங்களுக்கு சமமானுயோ என்று சொல்வார்கள்'' (ஏசாயா 14:9,10). இப்படிப்பட்ட பயங்கரமான முடிவு நமக்கு வராதபடிக்கு பரிசுத்தாவியானவர் நம்மைத் தேவன் முன்பாக உயிருள்ளவர்களும், நம்மைச் சூழ்ந்தோருக்குப்பிரயோஜனமுள்ளவர்களும்மனுஷருடைய இரத்தப்பழிக்கு நீங்கினவர்களுமாக்கி முடிவுபரியந்தம் நம்மைக் காத்துக் கொள்வாராக! ஆமென்.

4

போதகனது சொந்தப்பக்தி

உன்னைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கை யாயிரு. 1 தீமோ. 4.16.

பிரசங்க வேலையில் தலையிடுகிறவர்கள் முதன் முதல் தாங்களே குணப்பட்டவர்களாயிருக்கவேண்டும். ''முதலாவது நீ உன்னையே அலங்கரித்துக் கொண்டு, பிற்பாடு உன் சகோதரனை அலங்கரி,'' என்று ரபிமார் சொல்வார்கள். 'வேறொருவரைச் சுத்திகரிக்கப்போகிற கைதானே சுத்தமாயிருக்கவேண்டும்,' என்று கிரகரி என்பவர் சொல்கிறார். நம்முடைய உப்பே சாரமற்றதாயிருந்தால் நாம் மற்றவர்களுக்கு சாரமேற்றுவது எப்படி? ஆகையால், குணப்படுதல் ஒரு போதகனுக்கு இன்றியமையாத இலட்சணம்.

ஒருவன் சுவிசேஷப் பிரசங்கியாயிருந்தும் குணப்படாமலிருப்பது எத்தனையோ பயங்கரமான காரியம்! சுவிசேஷ பணிவிடைக்கு ஆயத்தம் பண்ணுகிற ஒவ்வொருவனும், தன் ஆத்துமாவை நோக்கி, ''நான் பிரசங்கிக்கப்போகிற சத்தியத்தின் வல்லமையை நானே உணரவில்லை. ஐயோ, அது எனக்கு எவ்வளவோ மோசம்'' என்று சொல்லக் கடவன். குணப்படாத பிரசங்கி என்னும் இருபதங்கள் ஒன்றுக்கொன்று முரண்படுபவை, தேவ அருளற்ற பிரசங்கி நேத்திர சாஸ்திரம் கற்பிக்கும் உத்தியோகத்திற்குத் தெரிந்து கொள்ளப்பட்டு, ஒளி, காட்சி, பொருள்களின் வருணங்கள், ரூபங்கள் ஆகிய இவைகளைக் குறித்து மற்றவர்களுக்கு விளக்கிக்கூறத் துணியும் குருடனைப் போலிருப்

பான். அவன் சங்கீத வரிசைக்கு உயர்த்தப்பட்ட ஊமையைப்போலும், இன்னிசைகளைப்பற்றி வியந்து பேசும் செவிடனைப் போலும், கழுகுக் குஞ்சுகளுக்குப் பறக்கப் படிப்பிக்கும்படி தலைப்படுகிற குள்ள வாத்துப்போலவும், தேவதூதர் கூட்டங்களுக்குத் தலைவனாய் வீற்றிருக்கத் தெரிந்துகொள்ளப்பட்ட முடவனைப்போலும், குணப்படாத போதகன் இருக்கிறான். அவனுடைய ஜனங்களின் அனுபவத்தில் அவனுக்கு ஆறுதலுண்டாக்கக்கூடியது எது? பாவத்தைப்பற்றிய மனஸ்தாப அழுகையைக் கேட்கும் போதும், அவர்கள் தங்கள் சந்தேகங்களையும் பயங்களையும் வெளியிடும்போதும் அவனுக்கு எப்படியிருக்கும்? தன் பிரசங்கத்தினால் இந்த நன்மாறுதல் அவர்களில் உண்டானது என்று எவ்வளவோ ஆச்சரியப்படுவான்? மேலும், அப்பேர்க்கொத்த மனுஷன் சபைக்கு உதவாத வேலையாள்; தான் நடந்திராத பாதையில் பிரயாணிகளை நடத்தும் வழிகாட்டி; திசை தெரியாத மாலுமி; மூடனாயிருந்தும் பாடம் போதிப்பவன்; மழையில்லாத மேகம்; இலையிருந்தும், கனியற்ற பாழ்மரம்.

குணப்படாத போதகனால் மிகுந்த தீமையும் விளையும். வேத விரோதக் கொள்கைகளும், நடக்கைகளும், திருச்சபையில் தோன்றுவதற்குக் குணப்படாத பிரசங்கியே காரணம். இவனது மரணம் மகா பயங்கரம். இவனது பின்னிலைமை எவ்விதமோ? பாபிலோன் இராஜா நரகத்திற்குப் போகும்போது அவன் பூமியில் பாழாக்கின இராஜாக்களும் பிரபுக்களும் பேய்க்கிடங்கிலிருந்து அவனுக்கு எதிர்கொண்டு வந்து, நீயும் எங்களைப்போல் ஆகிவிட்டாயா என்று பரிகாசஞ்செய்ததாகத் தீர்க்கதரிசி பாவித்திருக்கிறான். குணப்படாமல் ஜீவகாலத்தை வீணாய்க் கழித்த ஒரு பிரசங்கி நரகத்திற்குப் போகும்போது, அங்கே அடையுண்டிருக்கிற அவனது குணப்படாத சபையார் ஏகோபித்து அவனை நோக்கி, நீயும் எங்களைப் போலானாயா? வைத்தியனே, நீ உன்னைத்தானேகுணமாக்க

வில்லேயா? பிரகாசிக்கிற தீபமென்று பாவித்துக் கொண்ட நீ இப்பொழுது நித்திய அந்தகாரத்திற்குள் தள்ளுண்டதென்ன என்று கூப்பிடமாட்டார்களா? ஒருவன் எவ்விதம் கெட்டுப்போனாலும் இவ்விதம் கெட்டுப் போகலாகாது.

பிரசங்கத்தைக் கேட்கிறவர்களின் அழிவே பயங்கரமானால் பிரசங்கிக்கிறவர்களின் அழிவு அதிலும் அதிக பயங்கரமல்லவா?

போதகனுக்கு மெய்யான பக்தியிருப்பதன்றி அவனுக்குப் பலமான பக்தியும் வேண்டும். தேவ பக்தியாகிய அவன் ஜீவநாடி பலமாயும் ஒழுங்காயும் அடித்தல் வேண்டும். அவனது விசுவாசக் கண் தெளிவாயிருத்தல் வேண்டும். தீர்மானம் என்ற அவன் பாதம் உறுதியாய் நிற்றல் வேண்டும். ஜாக்கிரதை என்னும் அவன் கை சுறுசுறுப்பாயிருத்தல் வேண்டும். அவனது முழு உள்ளமும் தூய அறிவுடையதாயிருக்கவேண்டும். எகிப்தியர் தங்கள் தத்துவ சாஸ்திரிகளே ஆசாரியராகத் தெரிந்தெடுப்பார்களென்றும் ஆசாரியர்களே அவர்கள் அதிகமாய் மதித்து வந்தபடியால் அவர்களேத்தான் தங்கள் ராஜாக்களாகத் தெரிந்தெடுப்பார்களென்றும் சொல்வதுண்டு. தேவனுடைய ஊழியர் கிறிஸ்தவ சேனையின் முதன்மையான சேவகராயிருக்க வேண்டும். தேசத்துக்குத் தலைவர் தேவையானால் அவர்களையே நியமிக்கத்தக்கதாக அவர்கள் மேன்மையானவர்களாக நடந்து கொள்ளல் வேண்டும். போதகன்மார் மிகத்திறனுள்ள குணசீலராயிருக்கவேண்டும். அநேகர், சாதாரண அங்கத்தினராயிருக்கத் தகுதியுள்ளவர்கள் எனினும் திருச்சபை உத்தியோகத்தை வகிக்கக் கூடியர்களல்லவே; அவர்கள் ஜீவியம் அதற்கேற்றதல்ல. இதற்கிசைய ஜாண் ஏஞ்சல் ஜேம்ஸ் என்னும் போதகர் சொன்னதாவது: "நீதியின் பிரசங்கி ஒருவன் பாவிகளின் வழியில் நடந்த பிறகு தன்

பகிரங்க பாவத்தைப்போலவே தான் பகிரங்கமாய் மனஸ்தாபப்படும்வரைக்கும் ஆலயத்தில் அவன் மறுபடியும் தனது வாயைத் திறக்கலாகாது,'' என்பதே. அநேகமாய், ஒருவனிடத்தில் துணிகரமான பாவம் காணப்பட்டால், பிற்பாடு அவன் எப்படி மனஸ்தாபப்பட்டாலும் சரி, போதகராயிருக்கவேண்டிய குணலட்சணங்கள் அவனிடத்தில் உண்டானதேயில்லை என்பது வெளிப்படை. இராயனுடைய பத்தினி பதிவிரதையாய் இருத்தல் வேண்டும். அவ்வாறே போதகனும் குற்றஞ்சாட்டப்படாதவனுக இருத்தல் வேண்டும். போதகனது அந்தரங்க வாழ்க்கை, வெளிப்படை வாழ்க்கை, ஊழியம் யாவும் அவனது பக்திக் கேற்றதாயிருக்கும். பக்தி குளிர்ந்து போனுல் பகிரங்க ஜெபம் குளிர்ந்து போகும். குடும்ப ஜெபம் அதிலும் குளிரும், தனி ஜெபமோ எல்லாவற்றிலும் கேவலமாகும். பிரசங்கியின் ஆவி குறைய குறைய அவன் ஜெபத்தின் ருசி குறையும். சபையார், காரணமறியாமல், போதகருடைய ஜெபம் முன்போல் சுவைக்கிறதில்லை; அதில் எவ்வித சாரமுமில்லை என்பார்கள். ஒரு வேளை, போதகர் அதை உணருமுன்னே சபையார் அவருடைய ஆவிக்குரிய தாழ்ச்சியைக் கண்டு கொள்வார்கள். அதற்கப்பால் பிரசங்கமானது போதகருடைய வழுவுதலைக் காட்டிக் கொடுக்கும். நாம் முன்போலவே பொறுக்கிச் சேர்த்த வார்த்தைகளையும், இசைவாய்க் கோர்த்த வாசகங்களையும் மொழியலாம். ஆகிலும், அதில் ஆவிக்குரிய வல்லமை குறைந்து போயிற்று என்று ஜனங்கள் இலேசாய் அறிவார்கள். நாம் சிம்சோனைப்போல் எழுந்து எப்பொழுதும்போல உதறிப் போடப் பார்த்தாலும் நமது மகா பெலன் போய்விட்டது என்று காண்போம். நாம் நமது சபையாரோடு உறவாடும்போது நமது வரப்பிரசாதம் குறைவாகிறது என்பதை சீக்கிரம் கண்டு கொள்வார்கள். நாம் நமது தலையில் தோன்றுகிற நரைத்த மயிர்களைக் காணுமுன் நமது சபையாரின் கூர்மையான கண்கள் அவைகளைக் கண்டு கொள்ளும். ஒருவனுக்கு இருதயநோய் இருந்தால், அது

இருதயத்தோடு இரப்பை, குடல், ஈரல், நரம்பு ஆகிய இவைகளை எல்லாமே தாக்கும். அப்படியே ஒருவனுடைய இருதயம் ஆவிக்குரிய விஷயமாய் பெலவீனப்பட்டுப் போனால், அவனது ஆவிக்குரிய வாழ்க்கையே குன்றிப் போக ஆரம்பமாயிற்று என்று அறியலாம். போதகன்மார் மற்றவர்களைவிட அதிக மோசமும் ஆபத்துமான ஸ்தானத்தில் இருக்கிறபடியால், அவர்களது பக்தி வெகு வலிமையுள்ளதாயிருப்பது மிகத்தேவை. பொதுபடச் சொன்னால் பிரசங்க ஊழியத்தைப்போல் அதிக சோதனைக்கிடமான வேலை வேறில்லை. போதக அந்தஸ்து மிகுதி. அதற்குரிய சோதனையும் மிகுதி. போதகருக்கு நேரிடுகிற சோதனைகள் இன்னின்னதென்று சொல்லி முடியாது. அவைகளெல்லாம் பிசாசு, மாயம், உலகம் ஆகிய மூன்று பிரதான சத்துருக்களால் உண்டாகிவருகின்றனவென தொகுத்துச் சொல்லலாம். மகாகேவலமான சோதனைகளைத் தவிர அதிக இரகசியமான சோதனைகளுமுண்டு. அவைகளுக்குள் அகப்படாமல் தப்பித்துக்கொள்வது எளிதல்ல. இவற்றில் மகாகேடானது சடங்காசார பக்தியும், சடங்கசார வேலையுமே. கடமைக்கென்றே வேத புத்தகத்தை வாசிக்கவும், கடமைக்கென்றே தியானிக்கவும், கடமைக்கென்றே ஜெபிக்கவும், மற்ற பக்திக்குரிய விஷயங்களைத் தங்கள் சொந்த ஆத்துமாக்களுக்குப் பிரயோஜனமாக ஒருக்காலும் அனுசரியாமல் கடமைக்கென்றும் மற்றவர்களுக்கென்றும் கையாடவும் போதகர்கள் பலத்த சோதனைக்குட்படுகிறார்கள். "முதலாவது தன் சொந்த இருதயத்திற்கே பிரசங்கியாதவன், மற்றவர்களுக்குச் சரியாய் பிரசங்கிப்பதேயில்லை" என்று ஜாண் ஒவன் போதகர் சொல்லியிருக்கிறார். தனக்குப் போதனை செய்வது மிகக்கடினம். நமது உத்தியோகம் சிலர் சொல்லுகிறதுபோல நமது தேவபக்திக்கு அனுகூலமாயிராமல். நமது தீமையான இயல்பினாலே அதற்கு பிரதிகூலமாகிவிடுகிறது. மீண்டும் நமது வேலை பலிக்க வேண்டுமானால் நாம் பக்தி விருத்தியடைய வேண்டும். பக்தி சிறக்க வேண்டும்.

பக்தியில் பழக வேண்டும். போதகருடைய தேவபக்தியாகிய புத்துயிர் எவ்வளவாக செழிக்கிறதோ, அவ்வளவாகத்தான் அவர் வேலை செம்மையாக நடக்கும். வேலைக்காரன் எப்படியோ, அவன் வேலையும் அப்படியே. நாம் நன்றாயிருந்தால்தான் நமது ஊழியத்தை நன்றாய் செய்யக்கூடும்.

போதகனுடைய போதனையும் சாதனையும் ஒன்றுக்கொன்று ஒத்திருக்க வேண்டும். நல்ல போதனையும் கெட்ட சாதனையுமுடைய போக்கன் ஒருவன் இருந்தான். அவன் சாதுரியமான பிசங்கியானபடியால், அவன் பீடத்தண்டை பிரசங்கம் செய்யும்போது, அந்த இடத்தை விட வேண்டாமென்றும், பீடத்தை விட்டபிற்பாடு இனி அதினண்டை சேரவே சேரலாகாது என்றும் அவனது ஜனங்கள் சொல்வார்களாம். நாம் பலிப்பீடத்தண்டை தேவனுடைய ஆசாரியராகவும், ஆசரிப்புக்கூடாரத்து வாசலுக்கு வெளியே பேலியாளின் மக்களாயுமிருக்கலாகாது. நசியான்சன் போதகர் பாசல் என்பவரைப்பற்றி சொன்னபடியே நாமும், ''போதனையில் இடிமுழங்குகிறவர்களாகவும் சாதனையில் மின்னுகிறவர்களாகவும்'' இருப்போமாக. இருமுகத்தாரை ஒருவரும் நம்புகிறதில்லை. சொல் வேறு செயல் வேறுபட்டாரைப் பின்பற்றலாகாது. வார்த்தைகளைவிட கிரியைகளே அதிக ஓசையுடயன என்பதுபோல, நெறிகெட்ட வாழ்க்கையின் சத்தம் மகா சாதுர்யப் பிரசங்கத்தின் சத்தத்தை மேற்கொள்ளும். தேவ ஊழியர் சிலர், தங்கள் சம்பளத்திற்குத் தக்கபடி பிரசங்கம் செய்கிறார்கள் ஊழியத்திற்கான முயற்சி சம்பளத்துக்கு மேற்பட்டுப்போனால், அவர்கள் சும்மாயிருக்கிறார்கள். பணமில்லை, ஜெபமுமில்லை, சம்பளமுமில்லை, சேவகமுமில்லை.

பிரசங்கியின் போதனைக்கும், சாதனைக்கும் வேறுபாடு இருந்தால் அது மிகவும் பயங்கரமான காரியம். இயேசுநாதரைக் குறித்து, ''அவர் வாக்கிலும் செய்கையிலும்

வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார்'' என்று சொல்லி யிருக்கிறது. இதில் தேவனுடைய மனிதன் தன் பரம எஜமானைப் பின்பற்றவேண்டும். அவனது போதனையாகிய வார்த்தையும், சாதனையாகிய செய்கையும் வல்லமையுடை யவையாக இருக்க வேண்டும். கூடுமானால் செய்கை யினாலேயே அதிக வல்லவனாயிருப்பது உத்தமம். வேதா கமத்தில் திருச்சபை சரித்திர நூல் ஒன்றுதான் இருக்கிறது. அதற்கு ''அப்போஸ்தலர் நடபடிகள்'' என்று பெயர். அது கவனிக்கத்தக்க விஷயம். பரிசுத்தாவியானவர் அப் போஸ்தலருடைய பிரசங்கங்களை எழுதுவிக்கவில்லை. அவை வெகு நல்லவைகளும் நமது பிரசங்கங்கள் எல்லா வற்றையும்விட அதிக மேன்மையானவையாயினும், பரிசுத் தாவியானவர் அவர்களது நடபடிகளை—கிரியைகளை—மாத் திரம் எழுதுவித்தார். அப்போஸ்தலருடைய ஆலோசனை சங்கத் தீர்மானங்கள் அடங்கிய புத்தகம் நம்மிடத்தில் இல்லை. நமது சபை ஆலோசனை சங்கங்களின் தீர்மானங் களைப் புத்தகங்களில் பதித்து வைக்கிறோம் பரி சுத்தாவியானவரோ, கிரியைகளை மாத்திரம் குறிப்பிடு கிறார். நமது கிரியைகள் எழுதப்படுவது நிச்சயமாகை யால் அது பதிவு செய்வதற்கு ஏற்றதாயிருப்பதாக. தேவ னுடைய பார்வையிலும் சகலத்தையும் வெளிப்படுத்தும் கடைசி நாளின் வெட்ட வெளிச்சத்திலும் நடந்து கொள் கிறவர்களாக ஜீவிக்கக்கடவோம்.

தேவ பக்தியானது போதகன்மாருக்கு இன்றியமை யாத இலட்சணமாய் மாத்திரமல்ல. அவர்களுக்கு மிகவும் அலங்காரமான ஆபரணமாயுமிருக்கிறது. அவர்களுக்கு சாதாரண சன்மார்க்க ஒழுக்கம் போதாது. உத்தம சற் குணமும் தேவை. குற்றமற்ற நடக்கையோடு திவ்விய அபிஷேக தைலமாகிய உள்ளான பரிசுத்தமும் அவசியம். மற்றபடி நாம் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக சுகந்த வாசனையாய் பரிமளிக்க இயலாது.

சிமிர்னா பட்டணத்தில் கோமாளியான ஒரு நாடகக் காரன் இருந்தான். அவன் ஒரு நாள் நாடகமாடி வரும்

போது ''வானமே! வானமே!'' என்று சொல்லிக்கொண்டு தன் விரலினுல் தரையைச் சுட்டிக்காட்டினுன். அப் பொழுது அவ்வூர் பிரதானியாகிய போலிமோ என்பவன் அவன் வாயின் வார்த்தையையும் அதற்கிசையாத அவன் கையின் கிரியையும் பார்த்து பொறுக்கமாட்டாதவனுக எழுந்து, ''இந்த மூடன் ஏன் இப்படிச் செய்கிருன்? வாய் வானமே என்கிறது. கையோ பூமியைச் சுட்டிக்காட்டு கிறது; இதென்ன மூடசேஷ்டை! பாஷை புரட்டு!'' என்று சொல்லி மிகுந்த கோபத்தோடு போய்விட்டான். மொழி யினுல் நன்ருய்ப் பிரசங்கித்து, மெய்யினுல் தீதாய் நடக்கிற வர்கள் இந்த மதிக்கெட்டவனைப்போலவே இருக்கிருர்கள். அவர்கள் நாவின் நுனியில் வானமும், விரலின் நுனியில் பூமியும் இருக்கிறது! பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் அவர்களைப் பார்த்து நகைப்பார்; அவர்கள் தங்கள் கிரியை களைத் திருத்தாவிடில் அவர்களை அவர்களிடத்தினின்று அகற்றிவிடுவார்.

மற்றவர்கள் நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிருர்கள் என்பதை நாம் நினைத்துக்கொள்ள வேண்டும். ஆயிரக் கணக்கான கண்கள் கருடப்பார்வையாய் நம்மை உற்று பார்க்கிறது. பரலோகம், பூலோகம், பாதாளம் மூன்றும் கூடி, நம்மைப்பார்த்தாலும் பயமில்லை என்று சொல்லத் தக்கதாக நடந்துகொள்வோமாக. நாம் நமது வாழ்க்கை யில் ஆவியின் கனிகளைக் காண்பிக்கக்கூடுமானுல், நமது வெளிப்படை ஊழியம் மிகப்பயனுடையதாக இருக்கும். இந்தச்சிலாக்கியத்தை வீணுய் இழந்துவிடாதபடி எச்சரிக் கையாயிருக்கக் கடவோம்.

நாம் நமது நடத்தையில் எச்சரிக்கையாயிருத்தல் வேண் டும் என்று சொல்லுகையில் அற்பமாய்த் தோன்றுகிற விஷயங்களிலும் கவனமாயிருக்க வேண்டும் என்பது கருத்து, கடன்படுதல், சமயத்தப்பு, உண்மைக்குறைவு, வம்பளப்பு, பரிகாசம், வாக்குவாதம் முதலியவை சிறிய தாய்த் தோன்றினுலும், அவை நமது நற்கீர்த்தியாகிய

தைலத்தை நாறிப் போகச்செய்யும். மாம்ச இச்சைகளுக்கு இடங்கொடுத்தல் சந்தேகத்திற்கு இடமாகிய பழக்கம், வெடுவெடுப்பு, உடை, நடை பாவனைகளில் தோன்றும் ஆடம்பரமாகிய இவைகள் நற்கீர்த்திக்கு பங்கமானவை. நாம் இளைப்பாறும்போது நமது உத்தியோகத்தை மறக்கலாகாது. நாம் சேனையின் அணி வகுப்பில் இல்லாத வேலைகளிலும்கூட, கிறிஸ்துவின் பட்டாளத்துச் சேவகன் என்று நினைத்துக் கொண்டு தாளத்திற்கேற்ற வண்ணமாக நடந்துக் கொள்ள வேண்டும். இப்படி, அற்பச் சொற்ப காரியங்களில் விழிப்பாயிருப்பது அவசியமாயிருக்க, பெரிதான விஷயங்களாகிய கற்பிலும், நேர்மையிலும், உண்மையிலும் எவ்வளவோ கருத்தாயிருக்க வேண்டும். இவைகளிலும் போதகன் தவறக் கூடாது. அவனது அந்தரங்க ஜீவியம் அவனது போதகத்திற்கு எப்பொழுதும் இசைந்திருக்க வேண்டும். இசையவில்லை என்றால், அவனுடைய ஊழியத்தின் நாள் முடிந்து விடும். அப்படிப்பட்டவன் எவ்வளவு சீக்கிரம் நீக்கப்படுகிறானோ அவ்வளவு நல்லது. ஏனெனில் அவன் ஊழியத்தில் இருக்கும்வரைக்கும் தேவனுடைய ஊழியத்திற்கு அவமானமும் அழிவும் உண்டாகும்.

5

பிரசங்கியின் அந்தரங்க ஜெபம்

பிரசங்கி மற்றெல்லா மனிதரைப்பார்க்கிலும் அதிகமாய் ஜெபம் பண்ணுகிறவனுக விளங்க வேண்டும். அவன் சாதாரணமாக மற்றக் கிறிஸ்தவர்களைப்போல ஜெபஞ் செய்யவேண்டும். மற்றப்படி மாயக்காரனுயிருப்பான். மேலும், அவன் மற்ற கிறிஸ்தவர்களைப் பார்க்கிலும் அதிகமாய் ஜெபஞ்செய்ய வேண்டும், இல்லாவிடில் தான் செய்கிற வேலைக்கு, தகுதியுள்ளவன் என்று சொல்ல முடியாது. தேவஊழியன் எப்பொழுதும் ஜெபம் பண்ணுகிருன். அவன் தன் வேலையை நினைக்கும்போதெல்லாம் குறிபார்த்து எய்யப்பட்ட அம்புகளைப்போல தனது பரிசுத்த ஆசைகளை வானத்துக்கு நேராக்கி சிறுசிறுவிண்ணப்பங்களை ஏறெடுக்கிருன். அவன் எப்பொழுதும் ஜெபஞ்செய்து கொண்டேயிராவிட்டாலும், ஜெபச் சிந்தையுள்ளவனுகவே வாழ்கிருன். வானத்தின் கீழுள்ள யாவரிலும் கிறிஸ்தவப் போதகனே, ''இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்'' என்னும் போதனையைக் கைக்கொள்ள வேண்டியது முக்கியமல்லவா? அவனுக்குப் பலத்த சோதனைகளும், விசேஷித்த துன்பங்களும், மற்றவர்களுக்கு இல்லாத வருத்தங்களும், முக்கியமான கடமைகளுமுண்டு. ஆகையால் சாதாரண மனிதருக்குத் தேவையானதைப் பார்க்கிலும் அதிக கிருபை அவனுக்கு அவசியம். இதையறிந்து போதகன்மார், பலனடையும்படி சர்வ வல்லவரை நோக்கி கூப்பிடவும், 'எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்' என்று

சொல்லவும் ஏவப்படுகிருன். தேவனேடிருக்கும் ஐக்கியத்திஞல் சிறந்த ஆவிக்குரிய அனுபவம் ஏற்படும். இதைவிடக் கல்விச்சாலேயில் பெறும் அறிவு கீழ்த்தரமானது. போதகன் என்னும் பாத்திரம் ஆயத்தம் பண்ணுதல் என்ற சக்கரத்தில் சுற்றப்படும்போது மகா சிருஷ்டிகர் அவனேப் பூரண சற்பாத்திரமாக்குவதற்கு கையாடும் கருவி அவனது தனி ஜெபமே. நமது ஜெப அறையுடன் வாசிப்பறையையும் புத்தகச்சாலேயையும் ஒத்துப்பார்த்தால் அவை பயனற்றவை. தனி ஜெபத்திஞல் வளர்ந்து பலத்து ஜெயமடைகிருேம். நமது பிரசங்கங்களே ஆயத்தம் பண்ணுகையில் நமக்கு விசேஷித்த உதவிபுரிவது ஜெபமே. மற்றவர்கள் 'பிரசங்கப் பொருளுக்காக ஏசாவைப்போல் வேட்டையாடிக் கொண்டு திரிகையில் நாம் மன்ருட்டின் மூலமாய் எல்லாருக்கும் ஏற்ற ருசியுள்ள போஜனத்தை யாக்கோபைப்போல வீட்டிற்குச் சமீபத்தில் கண்டடைந்து ''கர்த்தர் அதை எனக்கு நேரிடப்பண்ணிஞர்'' என்று அவனேப்போல் பொய்யாய் அல்ல, மெய்யாய்ச் சொல்லக் கூடியவர்களாயிருப்போம். கர்த்தரிடத்தில் வாஞ்சையோடு வேண்டிக்கொண்டு நமது எழுதுகோலே நமது இருதயமாகிய மைக்கூட்டில் தொட்டு எழுதிஞல் பிரசங்கம் நன்ருயிருக்கும். நாம் முழந்தாளிட்டு நமது பிரசங்கப்பொருளே மோட்சத்திலிருந்து பெற்றுக்கொண்டால் நன்ருய் பிராங்கிப்போம். ஜெபமாகிய திறவுகோலால் திறந்த பிறகுதான் வேத வாக்கியங்கள் அநேகமாய் தங்கள் பொக்கிஷத்தை வெளியே காண்பிக்கின்றன. தானியேல் விண்ணப்பம் செய்யவே புத்தகச் சுருள்கள் எவ்வளவோ ஆச்சரியமாய்த் திறக்கப்பட்டன. மேல் வீட்டில் பேதுரு விசேஷித்த அறிவடைந்துகொண்டான். பிரசங்கிக்கு ஜெப அறையே சிறந்த படிப்பறை. வேத வியாக்கியானிகள் நல்ல போதகர்கள் என்பதற்குச் சந்தேகமில்லே. வேத நூலாசிரியராகிய பரிசுத்தாவியானவரும், அவர்களேவிடச் சிறந்த போதகர். ஜெபத்தின் மூலமாய் அவருடைய வியாக்கியானம் நமக்குக் கிடைக்கிறது.

ஜெபமானது பிரசங்கிக்கிற சமயத்திலும் நமக்கு உதவியாயிருக்கும். பிரசங்கம் செய்வதற்கு மற்றெல்லா வற்றைப் பார்க்கிலும் ஜெபத்தின் மூலமாய்த் தேவனோடு பேசி நேரே ஜனங்களிடஞ்சென்று பிரசங்கிப்பதே சிறந்த ஆயத்தம். மனிதருக்காக தேவனிடத்தில் வல்லமையாய் வேண்டிக் கொள்பவர்கள்போல தேவ காரியத்திற் காக மனிதரிடத்தில் வல்லமையாய்ப் பேசக்கூடியவர்கள் யாருளர்? ஜெபம் லௌகீகச் சாதுரியமுண்டாக்குகிறதில்லை என்றாலும் அது வைதீகச் சாதுரியமுண்டாக்குகிறது. எப்படியெனில், ஜெபம் நம்மை உள்ளத்திலிருந்து பேசப் பண்ணும்; இருதயத்திலிருந்து எழும்பும் சாதுரியமான வார்த்தைகளைப் போன்றவை வேறு எவை? ஜெபம் பண்ணுவது தேவ அக்கினியை நமது பலியின்மேல் வருஷிக்கப் பண்ணும். அதனால் தேவன் அதை அங்கீகரித் தார் என்பது விளங்குகிறது.

பிரசங்கத்தை ஆயத்தம் செய்யும்போது ஜெபத்தின் பலனாக பல யோசனைகள் மனதில் தோன்றுகிறதுபோலவே, பிரசங்கம் பண்ணும்போதும் பல புதிய யோசனைகள் மனதில் உதிப்பது நிச்சயம். பரிசுத்த ஆவியானவர்மேல் சார்ந்து கொள்ளும் போதகன்மார் அநேகமாய்த் தங்கள் முதன்மையும் உத்தமுமான எண்ணங்கள் முன்னமே ஆயத்தம் பண்ணப்பட்டவைகளல்ல, அதை நினையாத வண்ணம் பிரசங்கம் செய்யும்போதே தேவதூதரைப் போல செட்டையடித்துக்கொண்டு திடீரென தென்படு கின்றவை என்றும், அவைகள் வானவர் கைகளில் பெற்றுக் கொண்ட அருள் பொக்கிஷங்களென்றும், வெள் ளைப்போல மலைகளிலிருந்து நிரப்பிக் கொண்டு வரப்பட்ட பரதீசின் பூஞ்செடி விதைகளென்றும் சொல்வார்கள். அநேகந்தரம், நான் பிரசங்கிக்கும்பொழுது பேசுவதற்கு யோசனைகளும் வார்த்தைகளும் இல்லாமல் தவிக்கையில் ஆண்டவர் என் பெருமூச்சாகிய மன்றாட்டைக் கேட்டு அதிசயமான வாக்குவரம் அருளினதை அனுபவித்திருக் கிறேன். ஆயினும் போர் புரிய இடைக்கட்டும்போது

ஜெபஞ்செய்யாதவன் போர் புரியும் போது ஜெபிக்கத் துணிவானே? பிரசங்கம் செய்கையில் தடுமாறுகிற போதகன் தான் வீட்டில் செய்த விண்ணப்பங்களை நினைத்துக் கொண்டு திடன் கொள்ளுகிறன். தம்மை நோக்கி வேண்டுதல் செய்ய மறவாதவனுக்குக் கர்த்தர் துணை செய்ய மறவார். கர்த்தருக்குக் காத்திருந்து ஜெபித்துக் கொண்டிருந்த அப்போஸ்தலர்மேல் அக்கினி நாவுகள் இறங்கின வண்ணம் ஜெபத்தில் தரித்துக் கொண்டிருக்கிற தேவதாசர் யாவர் பேரிலும் ஆவியின் அருள் இறங்குவது நிச்சயம்.

உண்மையுள்ள பிரசங்கி பிரசங்கம் முடித்தபின் கிருபாசனத்தண்டையல்லாமல் வேறெங்கே ஓடுவான்? அவன் வேறெங்கே தன் உணர்வுகளை வெளிப்படுத்தி தன் ஆத்துமாவைத் தேற்றிக்கொள்வான்? மிகுந்த எழுப்புதலால் பொங்குகிற உள்ளம் மன்றாட்டினுலன்றி எப்படி ஆறித் தணியும்? அல்லது, நமது பிரசங்கம் வீணும் பொருளற்றது. மாய்ப்போகும் என்ற சந்தேகத்தினல் மனம் தளரும்போது ஆண்டவரிடத்தில் புலம்பினுலன்றி வேறெவ்விதமாய் ஆறுதலடைவோம். பிரசங்கத்தை வைராக்கியமாயும் காரசாரமாயும் பண்ணவில்லையென்று உணரும்போது அக்குற்றத்தைத் தேவனிடத்தில் அறிக்கையிட்டு தேவ ஆவியின் அருள் தடைபடாதபடி விண்ணப்பம் செய்யாவிடில் நமது ஆத்துமாவுக்கு ஆறுதல் ஏது? மேலும், தனி ஜெபத்தில் போதகர் தங்கள் சபையார் மேலுள்ள வாஞ்சையைத் தேவனுக்கு முன்பாக ஊற்றிவிடலாம். அல்லது கடினப்பட்ட பாவிகளைக் குணப்படுத்துவதற்குத் தாங்கள் செய்த பிரயாசமெல்லாம் வீணும்விருதாவுமாய்ப் போனது என்று காண்கையில் எரேமியாவைப்போல அழலாம். அவன், "நீங்கள் இதைக் கேளாமற்போனீர்களானல் என் ஆத்துமா மறைவிடங்களில் உங்கள் பெருமையினிமித்தம் துக்கித்துக் கர்த்தரின் மந்தை சிறைப்பட்டுப் போனது என்று என் கண் மிகவும் அழுது கண்ணீர் சொரியும்" என்று புலம்பினன். இப்படிப்பட்ட உருக்கமான மன்

ருட்டுகளுக்கு தேவன் செவி கொடாமற்போகார். கண்ணீரோடு ஜெபிக்கும் தேவ ஊழியன் ஏற்ற காலத்தில் அநேகருடைய குணப்படுதலைக் கண்டு கெம்பீரிப்பான். பிரசவ வேதனைக்குப் பிறகு ஜனனம்; கண்ணீருடன் விதைத்ததற்குப் பிறகு கெம்பீரத்தோடு அறுப்பு; இதைப் போலவே கண்ணீருடன் ஜெபித்ததற்குப் பிறகு களிப்புடன் சித்தியடைவது திண்ணம். ஓர் உழவன் வேறொரு உழவனைப் பார்த்து, ''நீர் விதைத்த விதை இவ்வளவு சீக்கிரமாய் முளைக்கக் காரணமென்ன?'' என்று கேட்க, மற்றவன், ''நான் அதைத் தண்ணீரில் ஊறவைத்ததே காரணம்'' என்றான். அதுபோல நாமும் நமது போதனைகளைத் தேவசந்நிதிக்கு முன்பாகக் கண்ணீரில் நனைப்போமேயாகில் அவைகளின் விளைவு நமக்கு அதிசயமும் அதிக சந்தோஷமுமாயிருக்கும். பிரேனார்ட் போதகர் தமது தினக்குறிப்புப் புத்தகத்தில் எழுதியதாவது: ''ஓய்வு நாள் காலை இரண்டு மணிநேரம் பரிசுத்த அலுவல்களில் கழிக்கவும் அழியாத ஆத்துமாக்களுக்காக பாடுபட்டு ஜெபிக்கவும் பலப்பட்டேன். அது விடியற்காலமாயினும் என்தேகம் முழுவதும் வியர்வையால் நனைந்து போயிற்று'' என்பதே. அந்தப் பக்தன் தன் ஊழியத்தில் அதிகச் சித்திப் பெற்றது அதிசயமா?

நாம் தேவனுடைய உண்மையான ஊழியராயிருந்தால், பிரசங்கம் முடிந்ததும் கடமை தீர்ந்தது என சும்மா யிருக்க மாட்டோம். ஏனெனில் நமது சபையார் மக்கதோனியன் அழைப்பைப்போல, ''நீர் வந்து ஜெபத்தின் மூலமாய் எங்களுக்கு உதவி செய்யும்'' என்று நம்மைக் கூப்பிடுகிறார்கள். நாம் ஜெபத்தில் வல்லவர்களாகும் பொழுது, அநேகர் நம்மிடத்தில் வந்து, தங்களுக்காகத் தேவனை மன்றாடும்படிக் கேட்டுக்கொள்வார்கள். அப்படியே நாம் நமது சிநேகிதருக்காகவும், நமது பிரசங்கத்தைக் கேட்பவருக்காகவும், அநேக மனுக்களை கிருபாசனத்திற்கு முன்பாகக் கொண்டுபோய் சமர்ப்பிக்கும்படி அதி

காரம் பெறுவோம். அப்படியாகாவிட்டாலும், மன்றுட வேண்டிய விஷயங்களுக்குக் குறைவிராது. நமது சபையைப் பார்த்தால் அதில் அநேக வியாதியஸ்தரைக் காண்போம். அவர்களைவிட ஆத்தும நோயாளிகளின் தொகை அதிகமாயிருக்கும். எப்படியெனில் சிலர் இன்னும் இரட்சிப்படையாமலும், வேறு சிலர் இரட்சிப்பைத் தேடியும் கண்டடையாமலும், அநேகர் அவிசுவாச உளையில் அகப்பட்டும், வேறு அநேகர் பின்வாங்கியும் சிலர் துயரப்பட்டும் இருப்பார்கள். நாம் சேர்த்து கர்த்தருக்கு முன் ஊற்றுவதற்கு விதவைகளின் கண்ணீரும், அனாதைப்பிள்ளைகளின் பெருமூச்சும் மிகுதியாயுண்டு. நாம் கர்த்தருக்கு உண்மையான ஊழியரானால் ஏபோத்தையும், இஸ்ரவேல் புத்திரரின் நாமங்கள் பதியப்பட்ட மார்பதக்கத்தையும் ஆவிக்குரிய பிரகாரம் தரித்து, திரைச்சீலைக்குள் சென்று, அவர்களுக்காக மன்றாடும் ஆசாரியராக கிருபாசனத்துக்கு முன் எப்பொழுதும் நிற்போம்.

தன் வேலையை தேவன் ஆசீர்வதிக்க வேண்டும் என்று ஆவலாய் விண்ணப்பம் பண்ணாத போதகன் மிகவும் அகந்தையுள்ள வீணான மனுஷனே. அவனது நடவடிக்கையைப் பார்க்குங்கால் தன்னிலே தான் சம்பூரணன் என்றும் தேவனிடத்தில் கெஞ்சுவதற்குத் தனக்கு அவசியம் இல்லையென்றும் நினைப்பதுபோல் காணப்படும். நமது பிரசங்கம் தேவ ஆவியின் கிரியையின்றி மனுஷரைப் பாவத்தினின்றி திருப்பித் தேவனிடத்திற்குக் கொண்டு வர வல்லமையுடையது என்ற எண்ணம் எவ்வளவேனும் ஆதாரமற்ற அகங்காரம். நாம் உண்மையாகவே தாழ்மையுடையவரானால், ஆண்டவர் நம்மை தமது சம்பூரண வல்லமையினால் இடைக்கட்டி, ''உனக்கு இருக்கிற பெலத்தோடு போ'' என்று உத்தரவு பண்ணுமட்டும் நமது சேவைக்கு செல்லத்துணியோம். வெகுவாய் விண்ணப்பியாத பிரசங்கிக்கு ஊழியத்தைப்பற்றி கரிசனையிராது. தன் உத்தியோகத்தின் தன்மையை அறியான். ஆமத்து

வின் அருமையையும் நித்தியத்தின் கருத்தையும் அவன் சிந்தித்ததில்லை. அப்படிப்பட்டவன், ஆசாரியருக்குரிய அப்பத்துண்டு தனக்கு அவசியமாதலால் வெறும் சம்பளக் காரனாய் அல்லது தேவனால் வருகிற மகிமையைத் தேடாமல் மனுஷரால் வருகிற மகிமையை நாடுகிற மாயக்காரனாயிருக்கிறான். அவன் பிரசங்கமெல்லாம் வெறும் மேற்பூச்சு, தேவ பக்தியை எண்ணாமல் வெளிவேஷத்தைக் கண்டு மருளுவோர் மாத்திரம் அதை ஏற்றுக்கொள்வார்கள். அவன் ஆழமாய் உழுது பிரயாசப்பட்டு பரிபூரண விளைச்சலைப் பெற்றுக்கொள்ளும் நல்ல உழவனல்ல. அவன் வேலை செய்ய மனமற்ற சோம்பேறி. அவன் பிரசங்கி என்னும் பெயர் பெற்றிருந்தும் உயிரோடு செத்தவன். அவன் கால்கள் சமமாயிராததினால் நொண்டி நடக்கும் முடவன்; ஏனெனில் அவனுக்கு ஜெபம் அவன் பிரசங்கத்தைவிட குறுகினது.

ஜெபத்தியானத்திற்கென்று தனியான காலங்களை மேற்கொள்வது உத்தமம். நமது ஆவிக்குரிய வைராக்கியத்தைத் காத்துக்கொள்வதற்கு நமது வழக்கமான ஜெபவேளைகள் போதாதென்றும் நமது ஆவியின் பெலன் வரவரக் குறைந்து கொண்டே வருகிறதென்றும் காண்போமாகில் ஒரு வாரம் அல்லது ஒரு மாதம் தனித்திருந்து ஜெபஞ்செய்வது நலமாயிருக்கும். ஆவிக்குரிய சிந்தையுடைய சகோதரர் சிலர் திரண்டு ஒருநாள் கூடியிருந்து, திவ்விய சம்பாஷணை செய்து, உருக்கமும் தாபந்தமுமாய் ஜெபம் செய்தால் அவர்களது ஆத்துமாவுக்குப் புதிய உற்சாகமும் ஞான உயிரும் உண்டாகும் என்பது நிச்சயம்.

6

பகிரங்க ஜெபம்

கூட்டத்தில் தகுதியாய் ஜெபம் பண்ணுவதற்கு நமக்கு பரமசிந்தை அவசியம். கிருபாசனத்திற்கு முன் நாம் பயபக்தியோடும். தாழ்மையோடும் விண்ணப்பம் பண்ணவேண்டும். அவைகள் வீண் முழக்கமும், வழக்கமும், கலக்கமுமாயிருக்கக் கூடாது. கர்த்தரிடம் ஜெபம் பண்ணுகையில் சாதாரண சம்பாஷணை நடை தகுதியல்ல. பயத்துடனும் வணக்கத்துடனும் குனிந்து பணியவேண்டும். நாம் தேவனிடத்தில் தைரியமாகப் பேசலாம் எனினும் அவர் பரலோகத்திலிருக்க நாமோ பூமியிலுள், ளோம் என்பதை மறத்தல் கூடாது. விண்ணப்பிக்கையில் நாம் விசேஷித்த விதமாய் தேவ சமுகத்தில் நிற்கிறோம். ஆகையால், அரண்மனை வேலையாள்கள் ராஜமுன்னிலையில் வரும்போது தகுந்த மரியாதையுடன் காணப்படும் வண்ணமாய் நாமும் தோன்ற வேண்டும். நாம் தேவனையே நோக்கி ஜெபம் செய்தல் வேண்டும். சபையாருடைய காதுக்கின்பமும், சாதுரியமுமான வசனங்களை மொழிய வேண்டுமென்ற துர் எண்ணம் கொள்ளாதபடி எச்சரிக்கையாயிருப்போமாக. மேலும், ஜெபம் ஒருவித பிரசங்கம் போலிருக்க கூடாது. ஜெபத்தில் வார்த்தையலங்காரம் காட்டுவது தேவ தூஷணமாகும். அலங்கார ஜெபங்கள் உண்மையில் மிகுதியும் அலங்கோல ஜெபங்கள். சேனைகளின் கர்த்தருடைய சந்நிதியில் ஒரு பாவி தன் உடன் பாவிகளது புகழ்ச்சியைப் பெறுவதற்கு சாதுரியமாய் பேச்சை காட்டத் துணிவது அவனைக் கேவலப்படுத்துகிறது.

இப்படிச் செய்ய துணிகிற மாயக்காரருக்குத் தகுந்த பலன் கிடைக்கும். அப்பலனே மகா பயங்கரம். ஒருவன் ஒரு போதகரைப் பார்த்து, ''நீர் செய்த சாதுரியமான ஜெபத்தைப்போன்று முன் எவரும் செய்ததில்லை'' என்று முகஸ்துதி சொன்னபோது அப்போதகர் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டார். சபைக்குத் தகுதியற்ற பதங்களை ஜெபத்தில் சொல்லலாகாது. கல்வியற்ற ஜனங்கள் ஜெபம் பண்ணும்போது கொச்சை சொற்கள் வந்தே தீரும். அவர்கள் வார்த்தைகள் கற்றோர் காதுக்கு வருத்தத்தைக் கொடுக்கினும் அவர்கள் இருதயம் உண்மையுள்ளதானால் அதைக் குறித்து குற்றஞ் சொல்ல நியாயமில்லை. ஆகிலும், பிரசங்கிகள் அப்படிப்பட்ட கொச்சைப் பதங்களை மொழியலாகாது.

தவிர, தேவனிடத்தில் மிதமிஞ்சி பெரிய வார்த்தைகளை வழங்காதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ''ஆ கர்த்தாவே'', ''எங்கள் ஆண்டவரே'', ''எங்கள் கர்த்தாவே'', ''எங்கள் நல்ல தேவனே'' என்றும் பதங்களைத் திரும்பத்திரும்ப அடுக்குவதும் தகாது. ''உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக'' என்பது தேவ கற்பனை. நாம் அதையறியாமல் மீறினாலும் பாவமே. நமக்கு வார்த்தை வராமல் திகைப்பு நேரிடும்போது இடை நிரப்புவது சர்வ வல்லவருடைய பேரைக் கொண்டோ? மகத்தத்துவமுள்ள யெகோவாவின் நாமத்தை பயபக்திக் குறைச்சலாய் வழங்காதிருப்போமாக.

அதிகாரத்தோரணையோடு தீர்க்கமாய் ஜெபிக்கும் வழக்கமும் தவிர்க்கப்பட வேண்டும். ''நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிட மாட்டேன்'' என்று போராடியவனைப்போல் தாபந்தமாய் ஒருவன் ஜெபிப்பது சந்தோஷமான காரியம். ஆகிலும் அவன் பேச்சு, சேவகம்பண்ணி பணம் வாங்குகிறவனுக்கு ஏற்ற பேச்சாயிராமல் சாந்தமும், வணக்கமுமாயிருக்க வேண்டும்.

நித்தியமும் சுயம்புமான மகத்துவ தேவனோடு வழக்காடவும் போராடவும் நமக்கு இடங்கிடைத்திருந்தாலும் போராடுகிற நாம் வெறும் மனுஷர் என்பதை மறக்கலாகாது. தான் தேவனோடு போராடி மேற்கொண்டது தன்னுடைய சுய பெலத்தினால் அல்லவென்றும், கர்த்தர் பயப்படத்தக்கவர் என்றும் யாக்கோபு உணரும்படியாக அவர் அனது சந்துநரம்பைத் தொட்டு நொண்டியாகினார். நாம் தேவனை நோக்கி 'எங்கள் பிதாவே' என்று மாத்திரமல்ல, 'பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே' என்றும் ஜெபிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் தேவனோடு தாராளமாய்ப் பேசலாம்; ஆனாலும், அவரோடு பயபக்தியோடும், பரிசுத்தத்தோடும் பேசவேண்டும். நாம் அவரோடு தைரியமாய்ப் பேசலாம்; ஆயினும் துரோகியின் துணிகரம்போல் தைரியம் கொள்ளாமல், அருளினாலும் ஆவியினாலும் உண்டாகும் தைரியத்தோடுதான் ஜெபஞ்செய்ய வேண்டும்.

ஜெபிக்கும்போது ஜெபம் மாத்திரம் செய்யவேண்டும். அந்தந்த காரியம் அதினதின் இடம் என்று அனுபவசாலிகள் சொல்லுவார்கள். அதுபோல, பிரசங்கிக்கும்போது பிரசங்கம் மாத்திரம் செய்யவேண்டும். ஜெபிக்கும்போது ஜெபிக்கவேண்டும். சிலர் ஜெபம்பண்ணும்போது தேவ உதவி மனுஷனுக்கு இன்றியமையாதது என்பதைப்பற்றி நீளமான முகவுரை சொல்ல தொடங்குவார்கள். சிலர் தாங்கள் செய்ய வேண்டியதையும், செய்யத் தீர்மானிக்கிறதையும்பற்றி நெடுநேரம் பேசுவார்கள். சிலர், சிருஷ்டிப்புத் தொடங்கி, பழைய ஏற்பாட்டு சரித்திரம் முழுவதும் தொடர்பாய் சொல்லிக்கொண்டு வருவார்கள். வேறு சிலர், தேவனது சாதாரண ஈவுகளை அடுக்கடுக்காய் சொல்லிக் கொண்டு நிற்பார்கள். சபையாரைத் தூங்க வைப்பதற்கு இவைகளைப் போன்றவை வேறில்லை. நாம் இப்படிச் செய்யாமல், நமது முகத்தை தேவனுக்கு நேராகத் திருப்பி நமக்கும் சபையாருக்கும் இருக்கிற குறைவு

களை நிறைவாக்கும்படி மன்றுடுவோமாக. புதியதாய் நேரிட்டிருக்கிற சஞ்சலங்களைக் குறித்து அதிகத் தாபந்தமாய் கெஞ்சக்கடவோம். நாம் ஜெபிக்கும்போது வியாதியஸ்தர், வறியர், மரண அவஸ்தைப்படுவோர், அஞ்ஞானிகள், யூதர்கள் முதலிய பல வகுப்பாரையும் தேவசந்நிதியில் கொண்டு வந்து வைப்போமாக. நமது சபையாரெல்லாரும் இரட்சிப் படைந்தவர்களென்று ஜெபியாமல், அவர்கள் குணப்படாதவர்களும், குணப்பட்டவர்களும் என்று நினைத்து அவர்களுக்காக விண்ணப்பிக்கவேண்டும். இளைஞர், முதியோர், உணர்வுள்ளோர், உணர்வில்லாதவர், உறுதியான விசுவாசிகள். பின் வாங்கினவர்கள் ஆகிய இவர்களுக்காக மன்றாடவேண்டும். மெய்யான ஜெபமாகிய பாதையை விட்டு வலது இடதுபுறம் விலகாதபடி ஜாக்கிரதையாக இருப்போமாக. உண்மையாயும், திட்டவட்டமாயும் பாவ அறிக்கை செய்தும், ஸ்தோத்திரஞ்செலுத்தியும் வருவோமாக. தேவன் இருக்கிறார் என்பதையும், அவர் ஜெபத்தைக் கேட்கிறார் என்பதையும் ஒருக்காலும் ஜெபத்தில் மறுக்கலாகாது. கடமைக்கென்று செய்யும்ஜெபம் கேட்கிறவர்களுக்கு ஒரு மரியாதையான வழக்காகத் தோன்றுமேயொழிய அதனால் ஏதாவது பலனுண்டாகும் என்று அவர்கள் நினைக்கமாட்டார்கள். நாம் அப்படி ஜெபம்பண்ணாமல், தேவன் ஜெபத்தைக் கேட்டு பதில் அளிக்கிறவர் என்னும் சத்தியத்தை அனுபவித்து திரும்பவும் அவரிடம் மன்றாட ஏவப்பட்டவர்களாக ஜெபிக்க வேண்டும். அதுவுமல்லாமல் ஜெபத்தில் அலப்பவும் பிரசங்கிக்கவும் துணியாமலும், அதைவிட கேடான அதட்டுதலுக்கும் முறுமுறுப்புக்கும் இடங்கொடாமலும், உணர்வோடு வேண்டிக்கொள்ளகடவோம்.

நமது பகிரங்க ஜெபம், நமது இருதயத்திலிருந்து புறப்பட்டாலொழிய தகுதியாயிருக்காது. இது மகா முக்கியமான காரியம். ஜெபிக்கிறவன் மெய்யான வாஞ்சையுள்ளவனாயிருந்தால் அவன் ஜெபம் சரியாயிருக்கும்.

உள்ளத்திலிருந்து எழுப்பும் ஜெபத்தில் குறைவுகள் காணப்பட்டாலும் அவற்றை மன்னிக்கலாம். அன்பு திரளான பாவங்களை மூடுகிறதுபோல ஜெபம் அநேக குற்றங்களை மூடிக்கொள்ளும். ஒருவன் ஜெபிக்கையில் தன் முழு உள்ளத்தோடும் தன் சிருஷ்டிகரை நோக்கி பேசுகிறான் என்று காண்கிறவர்கள், அவன் பேச்சில் அலங்கோலச் சாடைகளும், கொச்சை சொற்களும் இருந்தும், அவை கல்வி குறைவுதான் என்று மன்னித்துவிடுவார்கள்.

பகிரங்க ஜெபத்திற்கு இன்றியமையாத இலட்சணம் தாபந்தமே. வாஞ்சையில்லாத ஜெபத்தைப்போல வேறு எது பிரசங்கத்தைக் கெடுக்கும்? தூக்கத்திற்கேதுவான ஜெபத்தைக் கேட்ட பின்னர் ஒருவனும் பிரசங்கத்தைக் கேட்க ஆசைபடான். ஜனங்கள் ஆலயத்திற்கு வராதபடி சலிப்புற்று நிற்பதற்கு வாஞ்சையில்லாத ஜெபமே போதுமான காரணம். பிரார்த்தனை செய்கையில் நமது ஆத்துமா முழுவதையும் கர்த்தருக்கு முன்பாக ஊற்றிவிடுவதே சரி. நமது மனவலிமை முழுவதையும் நமது பிரசங்கஜெபத்தில் செலுத்துவோமாக. போதகருடைய ஜெபம் சபையார் எல்லாருடைய இருதயங்களையும் தேவ சந்நிதியில் கொண்டுபோய் சேர்க்கக்கூடிய வல்லமையுடையதாயிருக்க வேண்டும். நான் என் மேலுள்ள தேவ ஆவியின் வல்லமையைக் கொண்டு செய்கிற ஜெபம் கூடிவந்திருக்கிற நூற்றுக்கணக்கான இருதயங்களின் வாஞ்சையையும் யோசனைகளையும் விண்ணப்பங்களையும் தேவ சிங்காசனத்திற்கு முன் உச்சரிக்கிற ஒரே சப்தமாக இருக்கவேண்டும்.

மீண்டும் போதகன்மார் தங்கள் சபைகளின் நிலைமைக்கேற்றதாய் பிரார்த்தனை செய்யவேண்டும். நமது சபையாருக்கு நடந்த பெரிதும் சிறிதுமான சகல சம்பவங்களையும் வரிசையாய் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆயினும், அவர்களது சுகதுக்கங்களையும் வாழ்வுத் தாழ்வுகளையும் கவனித்துக் கொண்டவர்களாக பிரார்த்திக்க வேண்டும். நமது ஜனங்கள் செய்து வருகிற காரியங்

களேயும், அவர்களது பரிசுத்த முயச்சிகளேயும் தேவன் ஆசீர்வதிக்கவும் அவர்கள் மீறுதல்களேயும் கணக்கிறந்த பாவங்களேயும் மன்னிக்கவும் வேண்டுமாய் கெஞ்சுவோமாக·

விலக்குப்பிரமாணமாகப் பின் வருபவைகளேக் கவனிக்கவும். சபை ஆராதனே ஜெபங்கள் அதிக நீளமாய் இருக்கலாகாது; நமக்கு ஜெபத்தின் ஆவியிருந்தாலும் நீளமாய் ஜெபிப்பது தகுதியல்ல. ஏனெனில் சபையார் நமக்கு இருக்கிற விசேஷித்த எழுப்புதலோடு நம்மோடுகூட வெகு நேரம் ஜெபிக்க முடியாது. ஜெபத்தின் ஆவி நமக்கு இல்லாவிடில் ஜெபத்தை நீட்டுவது முற்றிலும் தவறு. ஏனென்ருல் அப்பேர்பட்ட ஜெபம் ஜனங்களுக்கு அதிக சோர்வையுண்டாக்கும். ஆலய ஆராதனே ஜெபம் பத்து நிமிஷத்துக்கு அதிகப்படலாகாது என்று அனுபவமுள்ள பிரசங்கி ஒருவர் சொல்லியிருக்கிருர். ஜெபம் சுருக்கத்தில் முடிந்தது என்று குறை சொல்வோர் ஆயிரம் பேரில் ஒருவர்தான்; போதகர் நீண்ட ஜெபம் பண்ணுகிருர் என்று முறுமுறுப்பவர்களோ ஏராளமாயிருப்பார்கள். ஜார்ஜ் உபிட்பீல்ட் என்பவர் ஒரு பிரசங்கியைப்பற்றி, ''அவர் தமது ஜெபத்திஞல் என்னே அதிகமாய் எழுப்பிவிட்டு ஜெபசிந்தையுள்ளவனுக்கிஞர்; அதோடு முடித்திருப்பாராஞல் நன்ருயிருக்கும். ஆஞல் அப்படிச் செய்யாமல் பின்னும் அதிக நேரம் ஜெபம்பண்ணி என் உற்சாகத்தைத் தணித்து விட்டார்'' என்று சொன்ஞராம். ஆராதனேயில் இருபத்தைந்து நிமிஷம் ஜெபித்த பின்னர், கர்த்தர் தங்கள் ஜெபத்தின் குறைவுகளே மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டு ஜெபத்தை முடிக்கிற போதகன்மார் இருக்கிருர்களே, இப்போதகர்களின் தப்பிதத்திஞல் வருந்துகிற சபையாருக்கு ஐயோ! பரிதாபம்! நீளமான பிரார்த்தனே செய்யாதிருக்கப் பல முகாந்திரங்களுமுண்டு. உதாரணமாக, நீண்ட ஜெபத்திஞல் போதகரும் சபையாரும் சோர்வுற்றுப் போகிருர்கள். அதஞல் ஜனங்கள் பிரசங்கத்தைச் சந்தோஷமாய்க் கேட்க மனமற்றுப் போகிருர்கள்.

தவிர, ஜெபத்தைமுடிப்பதாகப் பாவனை காட்டிய பின் ஒருபோதும் புதிதாய் ஆரம்பித்து ஐந்து நிமிஷம் கூடுதலாய் ஜெபிக்காதபடி எச்சரிக்கையாயிருப்போமாக. ஜெபத்தில் சாரமற்ற உயர்ந்த வாசகங்களை மொழிவது சரியல்ல. இது சிலருக்கு வழக்கமாயிருந்தபோதிலும். உணர்வற்ற சிந்தைக்கும் பயபக்திக்குறைச்சலுக்கும் அடையாளந்தான் என்று அறிந்து கொள்க. ஜெபம் செய்யும் போது அபிநயஞ் செய்யலாகாது. பிரசங்கிக்கும்போது நாம் செய்வதுபோல கையை உயர்த்தித் தாழ்த்தி வீசுவது நன்றன்று; ஆகிலும் இருதயங்களில் திவ்விய அனல் மூளும்போது கைகளை உயர்த்துவது அல்லது நீட்டுவது தகுதிதான். சத்தம் பொருளுக்கு இசைவாய் இருக்க வேண்டும். இடித்து முழங்குவதும் அகங்காரத் தொனியோடு பேசுவதும் பெரிய குற்றங்களே. மனுஷன் தேவனோடு பேசும்போது அவன் சத்தம் தாழ்மையையும் வணக்கமுமாயிருத்தல் வேண்டும்.

ஓய்வுநாள் ஆராதனையில் செய்யப்படும் ஜெபத்தைக் குறித்துச் சிலவற்றைச் சொல்வோம். எல்லாம் வழக்கமும் சடங்குமாய்ப் போகாதபடிக்கு ஆராதனை ஒழுங்கை சமயோசிதமாய் மாற்றலாம். நாம் தவருமல் முதலாவது பாடி அதன் பின்புதான் ஜெபஞ்செய்ய வேண்டும் என்பது கட்டாயமல்ல. எப்பொழுதும் ஒரே ஒழுங்காய் ஆராதனை நடத்துவது அசதிக்கு ஏதுவாயிருக்கிறதென்று காணப்பட்டால் சிறிது ஆராதனை ஒழுங்கை மாற்றிக்கொள்ளலாம். ஹின்டன் என்னும் பிரசங்கி பிந்தி வந்தவர்களும் ஜெபம் பண்ணத்தக்கதாக ஒருநாள் ஆராதனையின் துவக்கத்தில் பிரசங்கித்து அதன்பின் பிரார்த்தனை செய்தாராம். நாமும் சில வேலைகளில் அப்படிச் செய்யலாம். ஏனெனில் சாதாரண ஒழுங்கை வேளாவேளைக்கு மாற்றுவது உற்சாகத்தைப் பிறப்பிக்கும். மாருத ஒழுங்கோ சோம்பலையும் சோர்வையும் உண்டாக்கும். சில சமயங்கவில் ஆராதனை மத்தியில் இரண்டு மூன்று நிமிடம் ஜனங்களை பூரண

அமைதலாயிருக்க விடுவது மிகவும் பிரயோஜனமாயிருக்கும். ஆழ்ந்த சிந்தையோடு கூடிய அமைதி உசிதமான ஆராதனையாகும். ஆகையால், ஜனங்களின் கவனத்தைக் கவர்ந்து கொள்ளவும் அவர்கள் ஓர் இயந்திரம்போல அர்த்தமின்றி தொழுது கொள்ளாதபடிக்கும் பிரார்த்தனை ஒழுங்கை அப்போதைக்கப்போது மாற்றலாம்.

கடைசியாக, நமது ஜெபங்களை முன்கூட்டியே ஆயத்தஞ்செய்து கொள்ள வேண்டும். இந்த ஆலோசனை ஒரு வேளை உங்களுக்குச் சற்று ஆச்சரியமாயிருக்கும். பிரசங்கி தமது ஜெபத்தை முன்னதாக ஆயத்தஞ்செய்வது சரியா என்னும் விஷயத்தைப்பற்றிப் போதகன்மார் சங்கமொன்றில் தர்க்கம் நடந்தது. சிலர் அது தப்பிதமென்றும் சிலர் அது சரியென்றும் வாதாடினார்கள். ஒரு கட்சியார் ''ஜெபத்தை ஆயத்தம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்றால் அதற்கேற்ற வார்த்தைகளையும் யோசனைகளையும் நன்றாய் யோசித்து மனப்பாடம் செய்து கொள்ள வேண்டும். என்ற கருத்தாகிறது. இப்படிச் செய்வது ஆவிக்குரிய ஆராதனைக்கு அடாது. பரிசுத்தாவியானவர் எந்தெந்த காரியங்களைக் குறித்து எந்தெந்த வார்த்தைகளால் ஜெபிக்க நம்மை ஏவுகிறாரோ அப்படியே ஜெபிக்க வேண்டும்'' என்று சாதித்தார்கள். அது மெய்தான். ஜெபத்தை மனப்பாடம் செய்து ஆயத்தப்படுத்த விரும்புகிறவன் ஜெப புத்தகத்தை கையாடலாமே. மறு கட்சியாரோ' ''ஜெபத்தை ஆயத்தப்படுத்துவது நலம்'' என்று சாதித்த போதிலும் மூளையின் ஆயுதத்தையல்ல. நெஞ்சத்தின் ஆயுதத்தையே கருதினார்கள். ஜெபிக்கும் முன்னரே ஜெபத்தின் முக்கியத்தையும் மனுஷருக்கு இருக்கிற பலவித குறைச்சல்களையும் தேவ வாக்குத்தத்தங்களையும் தியானித்து இருதயத்தில் பதிய வைத்து விண்ணப்பத்தோடு தேவ சந்நிதியில் வரவேண்டும். இன்ன விஷயங்களைப்பற்றி ஜெபிக்க வேண்டுமென்று குறிப்பிடாமலும் சிந்திக்காமலும் கிருபாசனத்தண்டை வருவதைப் பார்க்கி

லும் தகுந்த ஆயுதத்தோடு வருவது மிகவும் நல்லது. ஒருநாள் ஒரு கிறிஸ்தவன் ''நான் ஜெபம் பண்ண ஒரு போதும் சலிக்கிறதில்லே. ஏனென்ருல் ஜெபிக்க வேண்டிய சங்கதி எனக்கு எப்போதும் ஆயத்தமாயிருக்கிறது'' என்ருன். நாம் அப்படி சொல்லக்கூடுமா? நமது ஜனங்களே ஜெபத்தில் நடத்துவதற்கு நமது இருதயத்தைத் தகுதியாக்கப் பிரயாசப்படுகிருேமா? தேவனிடத்தில் மன்ருட வரும்போது நமது காரியத்தைச் சரியாய் ஒழுங்கு படுத்துகிருேமா? நாம் அந்தரங்க ஜெபத்திஞல் நம்மைப் பகிரங்க ஜெபத்திற்கு ஆயத்தம் செய்தல் வேண்டும். நாம் ஆண்டவரை அடுத்து சஞ்சரித்து ஜெபத்தின் ஆவியைக் காத்துக்கொள்வோமாகில். நமது வாயின் மன்ருட்டு தாராளமாய் வந்து கொண்டிருக்கும்.

மீண்டும் இன்ஞெரு ஆயத்தம் செய்யலாம். அதாவது வாக்குத்தத்தமும், மன்ருட்டும். ஸ்தோத்திரமும், பாவ அறிக்கையும் அடங்கிய சங்கீதங்களேயும் மற்ற வேதபாகங்களேயும் மனனஞ் செய்வதேயாம். பிரார்த்தனே செய்வதற்கு இது மெத்த அனுகூலமாயிருக்கும். கிறிசொஸ்தம் என்னும் வேத சாஸ்திரியார் வேதபுத்தகத்தைப் பாராமல் சொல்லத் தக்கதாக மனப் பாடம்பண்ணியிருந்தாராம். ஆதலால் அவருக்கு அமுதநாதன் அல்லது சுவர்னவாயன் என்னும் பெயர் கிடைத்தது ஆச்சரியமல்ல. நாம் கர்த்தரோடு சம்பாஷணே செய்வதற்கு பரிசுத்தாவியின் வார்த்தைகளேப்போல் உதவத்தக்கது வேருென்றுமில்லே. நீர் சொன்னபடி செய்தருளும் என்ற நியாயம் சர்வவல்லவரோடு போராடி மேற்கொள்வதற்குத் தகுந்த ஆயுதம். இவ்வண்ணம் நாம் வேத ஜெபங்களேயும், தியானங்களேயும் மனப்பாடம்பண்ணி அதோடுகூட வேத புத்தகத்தையும் தினமும் வாசித்து வருவோமாஞல் நமது நாவில் எப்பொழுதும் புதுப்புது விண்ணப்பங்கள் வந்துகொண்டிருப்பதுமல்லாமல் அந்த விண்ண்ப்பங்களே ஆலய ஆராதனேயில் ஏறெடுக்கும்போது அவை ஊற்றுண்ட தைலம்போல

தேவவீடு முழுவதையும் பரிமளிக்க செய்யும். சுருங்கச் சொன்னல், பிரசங்கம் அவ்வளவு எழுப்புதலாயில்லா விட்டாலும் ஜெபம் சகல குறைகளையும் நிவர்த்தி செய்தது என்று சபையார் ஒத்துக் கொள்ளத்தக்கதாக நமது ஜெபங்கள் வாஞ்சையோடும் தாபந்தத்தோடும் இருதயத்திலிருந்து எழும்பி, அனலும் வைராக்கியமும், தெளிவும் வல்லமையுமாய் விளங்குவதாக.

7

தேவாராதனை வேதவாசிப்பு

தேவாராதனையை நடத்துகிறவர் ஆராதனையின் ஒவ்வொருபாகமும் தேவனுக்குப் பிரீதிகரமாயும் தனக்கும் சபையாருக்கும் மிகுந்த எழுப்புதலாயிருக்கும்படியான உத்தம வழியைக் குறித்து ஆலோசிக்க வேண்டும். அதுவுமல்லாமல் அவருடைய இருதயம் பிள்ளைக்குரிய இருதயத்தைப்போல் இருக்கவேண்டும். ஏனெனில் பிதாவைத் தொழுது கொள்ளுகிறவனே உண்மையாய்த் தொழுது கொள்கிறவனுயிருக்கிருன். இயேசு கிறிஸ்துவில் தேவன் நமக்குப் பிதாவாகவும் அவருக்குப் பிள்ளைகளுமாயிருக்கிறோம். இச்சம்பவத்தை நாம் முற்றிலும் உணர்ந்தால் மாத்திரம் நமது விண்ணப்பங்கள் இயல்பாயும் உண்மையாயும் இருக்கும்.

இதுபோலவே ஸ்தோத்திர சம்பந்தமான காரியமும் இருக்கிறது. ஒரு மகள் தன் தகப்பனுக்கு முன் நின்று பாடும்பொழுது அளவில்லாத சந்தோஷமும் உற்சாகமுமுள்ளவளாயும், யாதொரு கவலையும் ஆயாசமுமில்லாதவளாயும் பாடுகிருள்; தகப்பனைப் பிரியப்படுத்துவதே அவள் வாஞ்சை. அப்படியே தேவன் நமது பிதாவாய் இருக்கிறரென்றும் அவர் நமது பாட்டுக்களைக் கேட்கிருர் என்றும் நாம் மெய்யாய் விசுவாசிக்கும்பொழுது, நமது ஞானப் பாட்டுகளும் கீர்த்தனைகளும், தூக்கமும் உயிரற்றதுமாயிராமல் இருதயத்தைப் பரவசப்படுத்தத் தக்கதாயிருக்கும். அப்பொழுது நாம் தாவீதைப்போல், ‘‘என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது; நான் பாடி கீர்த்தனம் பண்ணுவேன். என் மகிமையே விழி; வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள்; அதிகாலையிலே விழித்துக் கொள்ளுவேன்’’

(சங். 57:7,8) என்று சொல்லக்கூடியவர்களாய் இருப்போம். எழுப்புதலற்ற ஆராதனேக்கும் உயிரற்ற ஜெபத்திற்கும் நிவர்த்தி இதுவே. வர்ணிப்பான ஜெபங்களும் வேடிக்கையான ஆராதனேகளும் நமக்கு வேண்டாம். ஜெபம் தொடங்குமுன் புத்திரசுவிகார ஆவியில் நாம் புதிதாய் முழுகினவர்களாய் இருப்பதே மேலானது. தேவன் பேரிலுள்ள அன்பிஞல் நமது இருதயங்கள் கொழுந்துவிட்டு எரியும்பொழுது, பிள்ளேக்குரிய சந்தோஷம் அவைகளே நிரப்புகிறது. அப்பொழுது நமது ஓசன்ன கீதங்கள் தூங்குவதில்லே, நமது ஜெபங்கள் திக்குவதில்லே. ஆதியிலே, விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடினபொழுது தேவ புத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்கள். அதுபோல தற்காலத்தில் தேவனே வணங்கும் அடிமைகளும் தங்களுக்கு உண்டாயிருக்கிற தேவ புத்திர சிலாக்கியத்தை உணரும் போது, அவர்களுடைய ஸ்தோத்திரங்கள் பரமசேனேகளின் இன்னிசையில் ஒரு பாகமாயிருக்கும்.

இவ்வித ஆயத்தமானது ஜெபஸ்தோத்திரங்களுக்கு மாத்திரமல்ல, தேவாராதனேயின் ஒரு பாகமாகிய வேத வாசிப்புக்கும் மிகவும் அவசியம். ஆராதனேயில் வேதபுத்தகத்தை வாசிப்பது அனுவசியமென்றும், பிரசங்கம் சரியானபடி ஆயத்தம் செய்யாமல் நேரத்தைப் போக்குவதற்காக பிரசங்கியார் செய்கிற தந்திரமென்றும் சிலர் நினேக்கலாம். ஸ்காட்லாந்தில் பிரபலமான ஒரு போதகர் ஆராதனேயில் வேதாகமம் வாசிப்பதை முக்கியமானதாக நடத்தி வந்தார். சபையாரில் சிலர் அதை விரும்பாமல் ஆட்சேபித்தார்கள். அப்பொழுது போதகர் வேதபுத்தகத்தின் முதல் பக்கத்தில் ''இராஜாவின் விசேஷித்த கட்டளேயினுல் சபைகளில் வாசிக்கும்படி நியமிக்கப்பட்டது'' என்று அச்சிட்டிருப்பதை அவர்களுக்குக் காண்பித்து அவர்கள் வாயை அடைத்தார். நமக்கோ இயேசுராஜாவே முன்மாதிரி. ''அவர் ஓய்வுநாளில் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து வாசிக்க எழுந்து நின்ருர்'' என்று சுவிசேஷத்தில் நாம்

வாசிக்கிறபடியால் ஜீவனுள்ள தேவனுடைய வசனங்களை ஆராதனையில் ஒரு பாகமாகப் பகிரங்கமாய் வாசிக்கிறது முக்கியமானது. போப்புவின் அதிகாரம் மேலிட்டிருந்த காலத்தில் சிற்சில கோயில்களில் மாத்திரம் வித்துவான்களான கோயில் சம்பிரதிகள் வாசிக்கும்படியாக ஒரு வேதாகமம் தூணில் சங்கிலி மாட்டப்பெற்று பத்திரப்படுத்தப்பட்டிருதந்து. ஆனால் இக்காலத்திலோ தேவனுடைய கிருபையால் நமக்கு ஏராளமான வேத புத்தகங்கள் கிடைக்கின்றன. அப்படியிருந்தாலும் வேதபுத்தகம் பகிரங்கமாய் வாசிக்கப்படவேண்டியது அவசியம். அப்படிச் செய்வதினால் மரபுக்கோட்பாட்டு விஷயங்களில் போதகருக்கும் சபையாருக்கும் நேரிடக்கூடிய தர்க்கங்களிலும் ஐயங்களிலும் வேத புத்தகமே சத்திய நிறை கோலாகவும் தொழுபவர்களின் இருதயங்களையும் சிந்தனைகளையும் சரியானபடி ஆயத்தப்படுத்துகிறதாகவும் இருக்கிறது.

வேத வாசிப்பைப்பற்றி அறியவேண்டிய சில முக்கிய குறிப்புகளுண்டு. என்னவெனில் ஆராதனையில் வாசிக்க வேண்டிய வேத பாகம் பகிரங்க வாசிப்புக்கு ஏற்றதாவென்று பார்க்கவேண்டும். ''வேத வாக்கியங்களெல்லாம் தேவாவியினால் அருளப்பட்டு, அவைகள் உபதேசத்துக்கும் கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பித்தலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாய்'', இருந்தாலும் எல்லாம் கூட்டத்தில் வாசிப்பது தகுதியல்ல. ஒரு தடவை ஒரு போதகர் லூக்கா சுவிசேஷம் மூன்றும் அதிகாரத்தில் இயேசுவின் தகப்பனாகிய யோசேப்பின் வம்ச அட்டவணையில் யோசேப்பு ஏலியின் குமாரன், ஏலி மாத்தாத்தின் குமாரன், மாத்தாத் லேவியின் குமாரன், என்றிப்படி வாசிக்கவே எல்லாரும் நகைத்தார்கள். அவர் அந்த அதிகாரத்தை தெரிந்து கொண்டதின் நோக்கம் யாதெனில் பிரசங்க வாக்கியமாகிய ''ஆதாம் தேவனால் உண்டானவன்'' என்பது அதிலிருக்கிறது. என்றாலும் அவ்வட்டவணை முழுவதையும் வாசிக்க வேண்டியது அவசியமல்ல.

ஏனெனில் அது வாசித்து முடிந்தபின் செய்யப்படும் ஜெபத்திற்கு ஜனங்களின் மனதைச் சரியானபடி ஆயத்தம் பண்ணுமல் கவனத்தைச் சிதறடித்தது. ஆகையால் வாசிக்க வேண்டிய வேத பாகம் ஜனங்களின் நிலேமைக்கும் பிரசங்கிக்கப் படப் போகிற விஷயத்திற்கும் ஏற்றதாயிருக்க வேண்டும். போதகர் சபையார் வீடுகளேச் சந்திக்கும்போது அவரவர்களின் நிலேமைக்கு தக்கபடி வேதபாகத்தை தெரிந்து கொள்ளவும், அவர்கள் மனக்கவலேகளே ஆறுதல் செய்யும் படியான ஜெபங்களேச் செய்யவும் வேண்டும். நம்முடைய தனித்தியானத்திற்குரிய பாகங்கள் நமது ஆத்மாவுக்கு அதிக எழுப்புதலாயிருக்குமாளுல் அவைகள் பகிரங்க வாசிப்புக்கும் ஏற்றவை. மேலும் அவைகள் கடமைகளும் உபதேசங்களும் அடங்கியதாய் இருக்கவேண்டும். ஏனெனில் தேவபக்தியானது உணர்ச்சியாய் மாத்திரமல்ல, விசுவாசமும் நடக்கையும் பொருந்தியதாயிருக்கிறது. தேவ பக்திக்குரிய உணர்ச்சியும் நடக்கையும் மாத்திரம் போதாது. அதற்கு அடுத்த விசுவாசமும் அவசியம். சில சபைகளில் வழங்கிவரும் ஜெப புத்தகத்தை நாம் பார்த்தால் விண்ணப்பங்களும் ஸ்தோத்திரங்களும் மாத்திரமல்ல விசுவாச பிரமாணமும் பத்துக் கற்பனேகளும் வாசிக்கப்படுவதற்கு நியமித்திருக்கிறதைக் காண்போம். இந்த ஜெபங்களேயே வழங்க வேண்டுமென்று எல்லாரும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள்; என்றுலும், இந்த ஒழுங்கு நல்லது என்பதற்குச் சந்தேகமில்லே. அப்படியே கிறிஸ்துவின் மனுஷாவதாரத்தை விசேஷித்துக் காட்டும்படிக்கு யோவான் சுவிசேஷம் முதலாம் அதிகாரத்தின் முதல் பாகத்தையும், வேருெரு தரம் பாவ நிவிர்த்தியைக் குறித்த உபதேசத்தைக் தெளிவாய் காட்ட ரோமர் நிருபம் மூன்ரும் அதிகாரத்தையும், பாவமன்னிப்படைவதின் பாக்கியத்தைத் தெரிவிக்க 32-ஆம் சங்கீதத்தையும் வாசிக்கலாம். மேலும் ஒரு சமயம் நியாயப்பிரமாணத்திலிருந்தும், வேருெரு சமயம் மலேப்பிரசங்கத்திலிருந்தும் இன்னெரு சமயம் யாக்கோபு நிருபத்திலிருந்தும்,

பின்னொரு சமயம் ரோமர் நிருபம் கடைசி பாகத்திலிருந்தும் தெரிந்து வாசிக்கலாம். எந்தப் பாகத்தையும் கைக்கெட்டினபடி வாசியாமல் உபதேசம், கடிந்து கொள்ளுதல், நீதியைப், சீர்திருத்தல் படிப்பித்தல் ஆகிய பல நோக்கங்களும் நிறைவேறதக்கதாக வேதாகமத்தின் பல பகுதிகளிலுமிருந்து தெரிந்தெடுத்து வாசிக்க வேண்டும். அப்படிச் செய்யும்பொழுது கிறிஸ்து மார்க்க சத்தியம் பூரண வடிவாய் சபையாருக்கு முன் வைக்கப்படுகிறது.

ஆராதனையில் வாசிக்கப்படும் பகுதிகள் எவ்வளவு நீளமாய் இருக்க வேண்டுமென்பதைச் சமயத்திற்கேற்றவாறு தீர்மானித்துக் கொள்ளலாம். தற்காலத்திலுள்ள வேதாகமத்தின் அதிகாரப்பிரிவுகள் மிகவும் உபயோகமாயிருந்தாலும், அவைகள் சில இடங்களில் அதிகமாய் பிரிக்கப்பட்டிருக்கிறபடியால், அப்பிரிவுகளை நாம் கைக்கொள்ளாமல் வாசிப்பு அதிகமாய் சுருங்கி போகாதபடி ஓர் அதிகாரத்தின் பாகத்தை விட்டும், வேறோர் அதிகாரத்தின் பாகத்தைக் கூட்டியும் வாசிக்கலாம். நாம் எல்லாவற்றையும்விட தேவ வசனத்தையே அதிகமாய் மதிக்கிறோம் என்பதை சபையார் அறியும் பொருட்டு, சில சமயங்களில் மலைப்பிரசங்கம் அல்லது ரோமர் நிருபத்தில் அப்போஸ்தலன் சொல்லிப்போகிற ஒரு விஷயத்தைப் பற்றிய விவகாரம் முதலிய நீளமான பாகங்களையும் வாசிக்க வேண்டும். இப்பாகங்கள் தகுதியாய் வாசிக்கப்படும்பொழுது அவைகள் கேட்போரின் புத்திக்கு வெளிச்சத்தையும், இருதயத்திற்கு உணர்வையும் மெய்யாகவே கொடுக்கும்.

வேதாகமத்தை வாசிக்கும்பொழுது நாம் செய்யப்போகிற ஜெபம், பிரசங்கம் முதலியவைகளைப்பற்றிய நினைவுகள் முதலாய் அகற்றிவிட்டு நமது சிந்தனை முழுவதையும் அதன் மேலேயே செலுத்த வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் வாசிப்பு பலனுள்ளதாயிராது. சாமர்த்

தியமுள்ள ஒரு போதகர், வாசிக்கும் சமயத்தில் தமது முழு மனதையும் பிரசங்கத்தின்மேல் செலுத்தினதினால், அவ்வாசிப்பின்மேல் கொஞ்சமும் கவனம் செலுத்தவில்லையென்றும், வாசித்த பாகத்தின் பொருள் இன்னதென்று தமக்குத் தெரியாதென்றும் சொல்லியிருக்கிறார். இப்படிப்பட்ட வாசிப்பு யாருக்கு எழுப்புதல் உண்டாக்கும்? ஆகையால் நாம் வாசிக்கிறது தேவனுடைய வசனமென்றும், அத்தேவ வசனத்தினாலே மனுஷருடைய எந்தப் பிரசங்கத்தினாலும் உண்டாகும் நன்மையைப் பார்க்கிலும் அதிக நன்மை உண்டாகுமென்றும் எண்ணி பிரகங்கத்தைப் பார்க்கிலும் அதிக நன்மை உண்டாகுமென்று எண்ணி பிரசங்கத்தைப் பார்க்கிலும் வேத வாசிப்பையே முக்கியமானதாய் நடத்தவேண்டும். வாசிக்கிறதின் பொருள் கேட்போரின் மனதில் படத்தக்கதாக அதை முதலாவது தனியே வாசித்து, அதன் கருத்தை வியாக்கியான புத்தகங்களின் உதவியால் உணர்ந்தறிய வேண்டும். அதிகப் பிரயாசம் எடுத்தாலொழிய இப்படி வாசிக்கவே முடியாது. ஆகையால் பொருள்பட வாசிப்பது இலேசென்றாவது, வேதத்தின் எந்தப் பாகத்தையும் திறந்தவுடனே சரியானபடி வாசித்துவிடலாம் என்றாவது நினைக்கக்கூடாது. இப்படி நினைத்த பிரசங்கிகள் அதிக வருத்தத்தை அடைந்திருக்கிறார்கள். ஆயத்தமில்லாமல் சிலர் பிரசங்கிக்கக்கூடும். என்றாலும் வாசிக்க ஒருவராலும் முடியாது; ஏனெனில் புத்தகத்தைப் பார்த்து வார்த்தைகளைத் திருத்தமாய் சொல்வது எழுத்துக்கூட்டலேயல்லாமல் வாசிப்பதல்ல. தகுதியான ஆயத்தத்துடன் நமது சத்தத்தின் மூலமாய் தேவன் தமது வார்த்தைகளினால் காண்பிக்கக் கருதிய பொருளை வெளிப்படுத்துவதே சரியான வாசிப்பு. அப்படிச் செய்தால் வேதவாசிப்பும் பிரசங்கத்தைப்போலவே பாவிகளின் குணப்படுதலுக்கும் சபையாரின் ஞான வளர்ச்சிக்கும் ஏதுவாயிருக்கும்.

வாசிக்கும்போது இடையிடையே விஸ்தரிப்பாக்கத் தக்க வார்த்தைகளைச் சொல்லும் திறமை சிலருக்கு மாத்

திரம் இருக்கிறபடியால் அவைகளைச் சொல்லுவது சரியா வென்பதை வாசிக்கிறவரின் தகைமையைக் கொண்டும், சபையாரின் தன்மையைக் கொண்டும் தீர்மானிக்கலாம். திறமையுள்ளவர்களின் விஸ்தரிப்புகளைக்கேட்க மிகுந்த ஆச்சரியமும் எழுப்புதலுமாயிருக்கும். சாமர்த்தியமில்லாத வர்களின் செய்கையோ கேவலமாயிருக்கும். ஆகையால் சாமர்த்தியமில்லாதவர்கள் இடையில் விஸ்தரிப்பு செய் வதைவிட சும்மாயிருப்பதே மேலானது. சமர்த்துள்ள வர்கள் தங்கள் சுயவிஸ்தரிப்புகளைத் தேவனுடைய வசனத் தோடு தாறுமாருக்கிப் போடாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும். விஸ்தரிப்பை வேத வாக்கியம் விளங்கத்தக்க தாக அதைத் தெளிவாயும் ஸ்திரமாயும் வாசித்த பிற்பாடு சொல்லலாம். இவ்விஷயத்திலும் இதுபோன்ற மற்ற விஷயங்களிலும் சொல்லப்பட்டிருக்கிற யுக்திகளை மேதிய பெர்சிய பிரமாணங்கள்போல் மாற்றக்கூடாதவைகளென்று எண்ணுமல் விஸ்தரிப்பு சொல்வது அவசியமென்று தோன் றும் சமயங்களில் அதைச் சொல்லிவிட்டு அப்புறம் வாசிக் கலாம். மற்றபடி மௌனமாயிருப்பது நலம்.

மேலும் வாசிக்கப்படுவதை ஜனங்கள் நன்ருய்க் கவனித்து வாசிக்கிறவரோடுகூட தொடர்ந்து வரும்படி ஒவ்வொருவர் கையிலும் வேதபுத்தகம் இருக்கவேண்டும். இதுவே பிரசங்கபீடத்திலிருக்கிற வேதாகமத்தின் பூரண பலனுகும். ஆகையால் ஆலயத்துக்கு வரும்பொழுது தங்கள் வேதபுத்தகங்களைக் கொண்டு வரவும், கொண்டு வந்தபின் அவைகளைச் சரியாய் உபயோகிக்கவும் பார்க்க வேண்டும். வேதத்தை அருளிச் செய்தவராகிய தேவன், ''வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும்'' (ஏசாயா 8 : 20) என்றும், ''கர்த்தருடைய புத்தகத்திலே தேடி வாசியுங்கள்'' (ஏசாயா 34 : 16) என்றும், ''வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்'' (யோவான் 5 : 39) என்றும் ''வாசிக்கிறதில் ஜாக்கிரதை யாயிரு'' (1 தீமோ. 4 : 13) என்றும் கற்பனை சகலராலும் கைக்கொள்ளப்படும்படி நாம் எழுப்புதல் செய்வது நம்மேல் விழுந்த கடன்.

Bro. S. Mohan

8

பிரசங்க வாக்கியம் தெரிந்து கொள்ளுதல்

தேவாராதனையை நடத்துகிறவர் ஆராதனையின் ஒவ்வொரு பாகமும் மிகுந்த பிரயோஜனத்தைக் கொடுக்கும்படியாக கரிசனையோடு நடத்தவேண்டும். அதில் முக்கியமாய் பிரசங்க பாகத்திற்கு அதிக கவனம் செலுத்த வேண்டும்; ஏனெனில் புத்தகத்தைத் திறந்தவுடனே திடீரென்று தென்படுகிற வாக்கியம் எல்லா சமயத்திற்கும் ஏற்றதென்று நினைக்கும் பிரசங்கிகளும், அடுத்த ஓய்வு நாளில் சபையாருக்கு எந்த விஷயத்தின் பேரில் தாற்பரியத்தோடும் பயபக்தியோடும் பிரசங்கிக்கலாம் என்று சிந்திக்கும் பிரசங்கிகளும் சொற்பபேரே. வேத வாக்கியங்களெல்லாம் நன்மையும் பிரயோஜனமும் உள்ளதாயிருந்தும் அவைகள் ஒவ்வொன்றையும் அதனதில் காலத்தில் செய்தால் அதிக பலனுண்டாகும். ஆகையால், வாக்கியங்களைத் தெரிந்து கொள்ளுவதில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். நமது பிரசங்கமானது அற்பர்களின் விருந்தில் எல்லாம் ஒழுங்கீனமாய் பரிமாறப்படுகிறது போலில்லாமல், விவேகமுள்ள ஒரு வீட்டெஜமான் அல்லது எஜமாட்டி கைக்கெட்டுவதைக் கைக்கெட்டும்பொழுது கொடுத்தால்போதும் என்றிராமல் வீட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் ஏற்ற வேளையில் போஜனம் கொடுப்பது போலிருக்கும்படி நாம் தேவனை நோக்கி: ஆண்டவரே, இன்று எந்தப்

போஜனம் உமது மேசையில் வைக்கப்படச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்க வேண்டும்.

சில தருணங்களில் பிரசங்க வாக்கியத்தைக் கண்டு பிடிப்பது இலேசல்ல. என் பிரசங்க ஊழியத்தின் ஆரம்ப காலத்தில் நான் பிரசங்க இலக்கணம் ஒன்றில் வாசித்த ஒரு வாசகம் என்னவெனில், ''ஒருவன் பிரசங்கத்திற்கு இன்ன வாக்கியத்தைத் தெரிந்து கொள்ளலாமென்று அறியாமல் திகைக்கிறவனாய் இருந்தால், அப்படிப்பட்டவன் உடனே வியாபாரத் துறைக்காவது உழவு வேலைக்காவது போய் விட்டால் உத்தமம்,'' என்பதே. இது எனக்கு மிகுந்த திகிலைக் கொடுத்தது. வாக்கியத்தைத் தெரிந்து கொள்வதே எனக்குச் சிலுவையும் பாரமுமாயிருந்ததினால், நான் போதக ஊழியத்தை விட்டுவிட்டு ஏதாவது ஒரு லௌகீக அலுவலுக்குப் போகலாமா என்று எனக்குள்ளே ஆலோசித்தேன். மேற்சொல்லிய வாசகத்தினால் நான் இந்த வேலைக்கு ஆகாதவன் என்றாலும், தேவன் என்னை இதற்கு அழைத்தாரென்று நினைக்கத் தகுந்த அத்தாட்சி இருந்தபடியால், நான் அப்படிச் செய்யவில்லை. நான் இவ்விஷயத்தைக் குறித்துச் சலிப்படைந்திருக்கும்போது, ஒருநாள் போதக ஊழியத்தில் 50 வருடம் அனுபவமுள்ள என் பாட்டனாரை நோக்கி: பிரசங்க வாக்கியம் தெரித்து கொள்ளுவதைப்பற்றி நீர் எப்பொழுதாகிலும் திகைப்படைந்ததுண்டோ என்று விசாரிக்க, அவர், ''இதுதான் எனக்குப் பெரிய வருத்தம். பிரசங்கத்திற்கேற்ற வாக்கியங்கள் சொற்பமானதினாலல்ல, அவைகள் ஏராளமாய் இருப்பதினால் பிரசங்கம் பண்ணுதலைவிடத் தெரிந்து கொள்ளுவதில் பெரிய கஷ்டப்படுகிறேன்'' என்றார். பிரசங்க வாக்கியம் தெரிந்து கொள்ளுகிற ஒருவர் ஆயிரக்கணக்கான அழகிய புஷ்பங்கள் நிறைந்த ஒரு பூந்தோட்டத்தில் ஒரே ஒரு புஷ்பத்தை மாத்திரம் பறித்துக் கொள்ளும் உத்தரவு பெற்ற புஷ்பப்பிரியன் ரோஜாவையோ, தாமரையையோ, மல்லிகையையோ,

லிலியையோ, எதைப் பறிக்கலாமென்று வெகுநேரம் திகைக்கிறதுபோல் இருக்கிருர். வாக்கியம் தெரிந்து கொள்ளுதல் எனக்கு ஏதுமில்லா வறியனின் திகைப்பா யிராமல், பிரான்சியர் சொல்லுகிறபடி ஐசுவரியத்தின் திகைப்பாயிருக்கிறது. செவி கொடுப்பதற்கேற்ற முக்கிய மான சத்தியங்களிலும் வற்புறுத்த வேண்டிய அநேக கடைமைகளிலும் அவசியமாய் அடைய வேண்டிய ஆவிக் குரிய நிறைவுகளிலும் நான் எதைக் கவனிக்க வேண்டு மென்று அறியாமல் அடையும் திகைப்பு மிகுதி. அடிக்கடி ஏதாவது ஒரு விஷயத்திற்காக வெகுநேரம் ஜெபித்து காத்துக்கொண்டிருப்பது என் வழக்கம். சில சனிக்கிழமை களில் நான் யோசித்துக் குறிப்பெழுதும் வாக்கியங்கள் எனக்கு ஒரு மாதம் முழுவதும் பிரசங்கத்திற்குப் போதும் என்ருலும், உண்மையுள்ள ஒரு கப்பல் வியாபாரி கள்ளச் சரக்குகளை கரையில் இறக்கப் பயப்படுகிறதைப்போல நான் அந்த வாக்கியங்களையெல்லாம் உபயோகிக்கத் துணி கிறதில்லை. ஒளிச்சித்திரக் கண்ணுடிக்கு முன் உருவங்கள் கடந்து போகிற வண்ணம் என் முகத்துக்கு முன்பாக அநேக விஷயங்கள் தோன்றும். ஆகிலும் சித்திரம் பதியத் தக்க கண்ணுடியைப்போல் நமது மனம் சங்கதியை ஏற்றுக்கொள்ளுமட்டும் அவைகளால் நமக்குப் பிரயோ ஜனமில்லை.

தகுதியான வாக்கியம் எதுவென்பதை, ஒருவனைச் சிநேகிதன் என்று எதனுலே அறிகிருேமோ அதினுலேயே அறியலாம். ஒரு வசனம் நமது மனதைப்பற்றிக் கொண் டால் வேறே வாக்கியம் தேடவேண்டாம். மீன் தூண்டி லில் அகப்படுமுன் அங்குமிங்கும் இரையைக் கடித்துக் கொண்டு திரிகிறது. அகப்பட்ட பின்போ அதன் ஓட்டம் நிற்கிறது. அதுபோல ஒரு வாக்கியம் நமது மனதில் பதிந்தவுடன் அங்குமிங்கும் தேடாமல் அதிலேயே நமது தியானம் முழுவதையும் செலுத்தலாம். இன்னெரு திருஷ் டாந்தம் உண்டு. நாம் சில வாக்கியங்களைத் தெரிந்து

கொண்டு அவைகளின் கருத்தை ஒவ்வொன்ருய் அறியப் பிரயாசப்படும்போது அவைகள் பெலமெல்லாம் கூட்டி அநேக அடிகள் அடித்தாலும் உடையாத கற்கள் போலிருக்கிறது. ஆனாலும் ஒரே அடியில் துண்டுகளாய் உடையத்தக்கதான ஒரு வசனம் கிடைக்கிறது. இப்படி உடைந்த துண்டுகளில் பிரகாசமான இரத்தினங்களைக் காணலாம். அவை, ஒரே நிமிடத்தில் முளைத்து விருட்சமான விதைபோல் நமது கண்ணுக்குப் புலப்படுகின்றன. நமது சிந்தை, தியானம் முழுவதையும் ஆட்கொள்கின்றன; சில வேளையில் நம்மைக் கர்த்தருடைய சந்நிதானத்தில் முழங்காற்படியிடச் செய்கின்றன. அப்படிச் செய்யும்போது நாம் சொல்லவேண்டும் என்று கர்த்தர் சித்தங்கொண்டிருக்கிற செய்தி அதுவே. ஒரு வாக்கியத்தைப்பற்றி இப்படிப்பட்ட எண்ணம் நமக்கு உண்டாகுமானல் நமது முழுமனதையும் அதிலேயே செலுத்தவேண்டும். அப்பொழுது கர்த்தர் நமக்கு வசனம் அருளிச்செய்கிறதுபோல பிரசங்கித்து முடியும்வரை பெலனும் அருளுவார்; ஆராதனை தொடங்க ஒரு மணி நேரம் இருக்கும்வரை பிரசங்க வசனம் பெற்றுக்கொள்ளும்படி காத்திருக்க வேண்டியதாயிருந்தாலும் நல்லதே. தங்களுடைய சுயபுத்தியினலே சிந்தனை செய்கிறவர்களுடைய இந்த யோசனை சரிப்படாமலிருக்கலாம். ஆனாலும் தேவ ஆவியின் ஏவுதலுக்குக் காத்திருக்கிறவர்களுடைய உள்ளத்திலோ இது பதிப்பிக்கப்பட்ட பிரமாணம்போல் இருக்கிறது. அவர்கள் உன்னதத்திலிருந்து பெலனைப் பெற்றுக்கொள்ளுமட்டும் ஜெபத்தில் தரித்திருக்கிருர்கள்.

அநேக பிரசங்கிமார் தங்களுடைய சொந்தப் பிரயாசத்தினலே வாக்கியத்தைத் தெரிந்துகொண்டு அதன் பேரில் பிரசங்கிக்கவேண்டும் என்று நினைக்கிறவர்கள் போல் காணப்படுகிருர்கள். நாம் நமது சுய புத்தியைப் பிரயோகிப்பதுடன் பரிசுத்த ஆவியின் சகாயத்திற்காகக் காத்திருப்பது மிகவும் அவசியம். இதைக் குறித்து கர்னல்

என்பவர் சொல்லுகிறதாவது:— ''பிரசங்கிமார் தங்கள் வேலைக்குத் தங்களில் பெலனற்றவர்களாயிருக்கிறார்கள். தேவனுடைய ஒத்தாசை கிடைக்குமட்டும் தங்களுடைய சுயபிரயாசத்தினாலே ஒரு வாக்கியமும் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் தேவனுடைய ஒத்தாசை கிடைக்கும் பொழுதோ பிரசங்கம் தெளிவாய் வருகிறது. தேவனுடைய சகாயம் கிடைக்காதவர்கள் மை இல்லாத பேனாவினால் எழுதுகிறவர்களாய் இருக்கிறார்கள். மற்றவர்களைப்பார்க்கிலும் பிரசங்கிமார்களே தேவன்மேல் அதிகமாய்ச் சார்ந்து பிழைக்கவேண்டியவர்கள். ''பிரசங்கந்திற்கு ஏற்ற வாக்கியம் எதுவென்று கண்டுபிடிப்பதற்குத் தேவனுடைய ஒத்தாசை வேண்டியது மிகவும் அவசியம். ஏற்ற வாக்கியம் கொடுக்கும்படி தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டும். நாம் விரும்புகிற இலக்குக்கு நேராய் நம்மை நடத்துவதற்கு ஜெபம் மாத்திரம் போதாதென்றாலும் நாம் அப்படிச் செய்வது மிகவும் உபயோகமான பயிற்சியே. ஏதாவது ஒரு பொருளின் பேரில் மனதைச் செலுத்துவதற்காக அதிகமாய் ஜெபிக்க எழுப்பப்பட்டோமாகில் அது நமக்குப் பெரிய ஆசிர்வாதமாகும். ''உத்தம ஜெபம் உத்தம வாசகம்'' என்று லுத்தர் சொன்னார். ஜெபம் செய்தபின் நமது யோசனைகளை ஒருமனப்படுத்தினால் அவைகள் தகுதியான கருத்துக்கொள்ளும்.

சபையாரின் ஆத்துமப் பிரகாரமான நிலைமையைப் பொதுவாகவும் தனித்தனியாகவும் கவனித்து அவைகளுக்கேற்ற பிரசங்கத்தை மருந்தாகவும் ஞான ஆதாரமாகவும் ஆயுத்தஞ்செய்து கொடுக்கவேண்டும், விகடப்பிரியமான சொற்களும், ஐசுவரியமும், செல்வாக்கு உள்ளவர்களின் பிரியத்திற்கிசைந்த வார்த்தைகளும் பிரசங்கத்தில் வரக்கூடாது. நமது பிரசங்கத்தில் ஐசுவரியவான்களுக்கு கண்ணியம் செலுத்துவதும், அதிகமாய் காணிக்கை கொடுக்கிறவனை மேலாய் மதிப்பதும், அவர்களுடைய ஆவிக்குரிய பெலவீனங்களைத் தாக்காமல் விலக்கிக்கொள்ளுவதுமா

யிருந்தால், நாம் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகிறவர்களாயிருப்போம். ஐசுவரியவான்கள் பேரில் எவ்வளவு கரிசனை இருக்கிறதோ அதே பிரகாரமாய்த் தரித்திரம் பேரிலும் கரிசனை கொண்டு அவர்களும் அறிந்து கொள்ளத் தக்கதும், அவர்கள் துயரங்களில் ஆறுதல் கொடுக்கத்தக்கதுமான பிரசங்கங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

சபையாருக்குள் உலக சிந்தை, பொருளாசை, ஜெபமின்மை, கோபம், இறுமாப்பு, அன்புத்தாழ்ச்சி, அவதூறு முதலிய பாவங்களில் எவை அதிக சாதாரணமாய் இருக்குமோ அவைகளைக் கவனித்து ஏற்ற போதனை கொடுப்பது அவசியம். மேலும் நமது சபைகளில் நேரிடும் சோதனைகளிலும் துன்பங்களிலும் நாம் பரிதாபப்பட்டு, அவர்களுடைய மன ஆறுதலுக்கேற்ற வாக்கியங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆவிக்குரிய நிலைமையில் அவர்கள் பின்வாங்கிப்போகிறார்கள் என்றாவது, தீமைக்கு ஏதுவான தப்பு உபதேசங்களுக்கோ அல்லது மாறுபாடான யோசனைகளுக்கோ இடங்கொடுக்கிறார்கள் என்றாவது கண்டால், உடனே தேவ ஒத்தாசையை முன்னிட்டு அவர்கள்மேல் வரக்கூடிய வாதையை நிறுத்தத்தக்கதாக ஒரு பிரசங்கத்தை நாம் ஆயத்தம் பண்ணவேண்டும். கருத்தும் கவனமும் உள்ள ஒரு போதகர் செய்ய வேண்டியவைகளைக் குறித்து ஆவியானவர் காண்பிக்கும் குறிப்புகள் இவைகளே. கவலையுள்ள மேய்ப்பன் அடிக்கடி தன் மந்தையைக் கவனித்து அவசியத்திற்குத் தக்கதாக ஒருவகை மேய்ச்சலைக் கூட்டியும், இன்னொன்றைக் குறைத்தும் கொடுப்பதுமல்லாமல் நோயுற்றவைகளுக்கு மருந்தும் புகட்டுவது நாமும் சபையாகிய ஆடுகளின் பரம மேய்ப்பரோடுகூட நின்று அவருக்குச் செவி கொடுத்தால் செய்யவேண்டியது இன்னதென்று அறிவோம்.

சபையாரின் உண்மையான குற்றங் குறைகளைக் கண்டிக்க வேண்டும் என்று கருதுகிற நமது பிரசங்கமானது எப்பொழுதும் அத்தன்மையுள்ளதாய் இருந்து

கேவலப்பட்டுப் போகாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

விசனமூட்டத்தக்கதும் கேலிக்கிடமுமான விதமாய் பாவங்களைச் சுட்டிக்காட்டாமல் ஞானமும் உணர்ச்சி உண்டாக்கத் தக்கதுமான விதமாய்க் காட்ட வேண்டும். இப்படிச் செய்கிறதே மேலானது, தேவனுடைய வசனம் இருபுறமும் கருக்குள்ள பட்டமாய் இருப்பதால் அதைக் கொண்டே பாவங்களைக் கண்டிக்க வேண்டுமேயல்லாமல், நமது சொந்த வார்த்தைகளைப் பிரயோகிக்கக்கூடாது. தேவனுடைய சத்தியம் ஆராய்ந்தறியும் தன்மையுள்ளதானதால் மனிதர்களுடைய இருதயங்களில் கிரியை செய்யும் படிக்கு அதையே எடுத்துக் காட்டவேண்டும். ஒரு சித்திரக்காரன் ஓர் ஆளின் ரூபத்தை வரைந்து அதன் அடியில் அந்த ஆளின் பெயரை எழுதுவானானால் அவன் திறமையில்லாதவன். தங்களையே குறித்துச் சொல்லுகிறார் என்று அவரவர் நினைக்கத்தக்கதாக ஒருவனையும் சுட்டிக்காட்டாமல் பொதுவில் பிரசங்கிக்கிறவரே திறமையான பிரசங்கியார்.

போதகர் வாக்கியம் தெரிந்து கொள்ளும்போது முன் செய்த பிரசங்கத்தை கவனிக்க வேண்டும். அதோடு எப்பொழுதும் ஒரே காரியத்தைக் குறித்துப் பிரசங்கியாமல் வேதாகமத்தின் பல பாகங்களிலுமுள்ள உபதேசம், போதனை, சரித்திரம், அடையாளம், சங்கீதம், பழமொழி, அனுபவம், எச்சரிப்பு, வாக்குத்தத்தம், அழைப்பு ஆகிய தெய்வீக சத்தியம் முழுவதும் வரத்தக்கதாக ஆயத்தம் செய்ய வேண்டும்.

ஒரு போர்வீரன் தன் சொந்த செலவில் யுத்தத்திற்குப் போய் யுத்த சமயத்தில் தன் கையில் வெடிமருந்தில்லையே என்று கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் அவனுடைய சேனாபதியே மருந்தெல்லாம் பார்த்துக் கொள்வார்; அதுபோல ஒரு பிரசங்கியார் சபையாரின் குறைவுகளைச் சிந்தித்தும், நெடுநேரமாக ஜெபத்தில் போராடிக் கெஞ்சியும் யாதொரு வாக்கியமும் தென்படவில்லையானால்

அதற்காக விசனப்பட அவசியமில்லை. ஏனெனில் எல்லாம் வல்ல தேவன் நம்மை ஒருபோதும் தளரவிடமாட்டார்; அவரிடத்தில் மன்றாடிக் காத்திருப்பது நமது கடமை. தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை! ஜாக்கிரதையுள்ள மாணாக்கனுக்குத் தேவன் உதவி செய்வது நிச்சயம். வாரம் முழுவதும் நாம் சோம்பலாய் அங்கும் இங்கும் அலைந்துவிட்டுத் தகுதியானபடி பிரசங்கத்தை ஆயத்தம் செய்யாமல் தேவனுடைய ஒத்தாசை கிடைக்குமென்று நினைப்பது வீண். ஆனால் நம்மால் இயன்றதைச் செய்து விட்டுக் கர்த்தருடைய செய்திக்காகக் காத்திருந்தால் நாம் ஒருபோதும் கைவிடப்படுவதில்லை.

பிரசங்கியார் எதைக் குறித்துச் சொல்லலாமென்று திகையாமல் தேவ வசனத்தையே திரும்பத்திரும்ப வாசித்து வாக்கியம் வாக்கியமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்; அல்லது ஏதாவது ஒரு வாக்கியத்தைத் தெரிந்து கொண்டு அதிலேயே முழுமனதையும் செலுத்தவேண்டும். பிரசங்கிக்கவேண்டிய வாக்கியம் அந்த வசனத்தில் அல்லது அந்த அதிகாரத்தில் கிடையாவிட்டாலும் பரிசுத்த விஷயங்களில் மனதைச் செலுத்தும்பொழுது சரியான வார்த்தை எப்படியும் அகப்படும்.

மேலும், நல்ல புத்தகங்களை வாசித்து மனதை உற்சாகப்படுத்திக்கொள்ளுவதும் அவசியம். சில நாளாய் உபயோகத்தில் இல்லாத தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தை, வேலை ஆரம்பிக்கும்பொழுது முழுவதும் முதலாவது அதில் தண்ணீர் ஊற்றினபின்பு தொடங்குவது வழக்கம். போதகர் ஒவ்வொருவரும் இப்படியில்லாமல் எப்போதும் வாக்கியம் தெரிந்து கொள்ளவும் பிரசங்கம் உண்டு பண்ணவும் முயற்சித்துக் கொண்டிருக்க வேண்டும். பரிசுத்த மனதுடனும் இருக்க வேண்டும். ஒரு மணி நேரத்தையாகிலும் வீண்போக்கக்கூடாது. அப்படிப் போக்கிறவனுக்கு ஐயோ! திங்கள் கிழமை காலை முதல் சனிக்கிழமை இரவு மட்டும் ஏனோ தானோவென்று

நேரத்தைக் கழித்துவிட்டு வாரத்தின் முடிவுக்கு இரண்டொரு மணி நேரத்துக்குமுன் ஒரு தூதன் வந்து தனது வாக்கியத்தைக் கொடுப்பான் என்று நினைக்கிற பிரசங்கியார் தேவனைப் பரீட்சை பார்க்கிறுர். அப்படிப்பட்டவர் ஓய்வு நாளில் பேசக்கூடாத ஊமையனுய் நிற்கப் பாத்திரன். போதகர்கள் இரவும் பகலும் அலங்கத்தில் நிற்கிற ஜாமக்காரரைப்போல் இருக்கவேண்டியிருப்பதால் கடமை முடிந்தது, இனிச்சும்மாயிருக்கலாம் என்று சொல்ல ஏதுவில்லை; அவர்களுக்கு விடுதலையுமில்லை. பிரசங்கம் ஆயத்தம் செய்வதே ஒரு போதகரின் முதலாம் வேலையாயிருப்பதால் அவர் இதைப்பற்றி அலட்சியம் செய்தால் தனக்கும் தன் ஊழியத்திற்கும் கேடு வருவித்துக் கொள்வார். தேனீக்கள் காலைதொடங்கி மாலைமட்டும் தேன் சேர்க்கிறதுபோல நாம் நமது ஜனங்களுக்காக ஓயாமல் ஞான ஆகாரத்தைச் சேர்க்க வேண்டும். வாக்கியங்கள் பலமாய் நமது மனதில் படும்பொழுது அவைகளைக் குறித்துக்கொள்ள ஒரு கைப்புத்தகம் வைத்துக் கொள்வது நலம். நாம் ஊரிலும் வெளியிலும் நடைபெறும் விஷயங்களில் விழிப்புடன் நமது கண்களாலும் காதுகளாலும் கவனம் செலுத்தும்பொழுது தேவ தூதர்களைக் காணவும் அவர்கள் பேச்சைக் கேட்கவும் கூடும். உலகம் பிரசங்கப் பொருள்கள் நிரம்பியிருக்கிறது: அவைகளைத் தக்க சமயத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பிரசங்கப் பொருளுக்காக நாம் கர்த்தரிடத்தில் காத்திருந்து அவரை வேண்டுவோமாகில் சரியான பாதையில் நடத்தப்படுவோம் என்பதற்குச் சந்தேகமில்லை. அப்படியில்லாமல் ஒரு பிரசங்க வாக்கியத்தைத் தெரிந்து கொள்ள எனக்குச் சாமர்த்தியமில்லையா என்று இறுமாப்பாய் இருப்போமாஞல், கிறிஸ்துவின் அருளில்லாமல் நாம் எவ்வளவோ பெலவீனர் என்று சீக்கிரம் கண்டு கொள்வோம். ஆகையால் கர்த்தருக்குக் காத்திருந்து, அவர் சொல்வதற்குச் செவிகொடுத்து, வார்த்தையை நேரே அவருடைய வாயிலிருந்து பெற்றுக்கொண்டு, பரம அரண்மனையிலிருந்து இப்பொழுதே புறப்பட்டு வருகிற ஸ்தானுபதிபோல பிரசங்கம் செய்ய புறப்படுவோமாக.

9

பிரசங்கக் குறிப்புகள்

முகவுரை, தாஷ்டாந்தம், திருஷ்டாந்தம், முடிவுரை என்பவைகள் பிரசங்கத்தின் உறுப்புகள். இவைகளில் தாஷ்டாந்தமும் திருஷ்டாந்தமுமே முக்கிய பாகங்கள்.

முகவுரையானது ஜனங்கள் பிரசங்கப் பொருளைச் கவனித்துக் கேட்க அவர்களை ஆயத்தப்படுத்துவதற்கு அவசியம். யாதாமொரு சத்தியத்தை ஸ்தாபிப்பதல்ல; கேட்போரின் கவனத்தை வசப்படுத்துவதே அதன் நோக்கம். பிரசங்கப் பொருள் மிகவும் கண்டிப்பாயிருக்கு மாகில் ஜனங்கள் அதைக் கேட்கப் பிரியப்படமாட்டார்கள். அப்படிப்பட்ட சமயங்களில் நாம் பிரசங்கப் பொருளைத் தெரிந்து கொண்டதின் நோக்கம் ஜனங்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதேயன்றி வேறல்ல என்றும், சொல்லப் படுகிற சத்தியம் தேவனால் வெளிப்படுத்தப்பட்டதென்றும், அது கடினமாய்த் தோன்றினாலும் அது தேவனுடைய அன்புக்கும் ஞானத்திற்கும் இசைவானது என்றும் முகவுரையாகச் சொல்லலாம். வேறு சமயங்களில் பிரசங்க வாக்கியத்தின் சம்பந்தத்தையும், கருத்தையும் முகவுரை யில் காட்டலாம்.

முகவுரை சுருக்கமாயிருக்கவேண்டும். சில பிரசங்கிகள் கேட்போருக்குப் பிரீதியாயும் அவர்கள் சிந்தையை முக்கிய மான ஒரு பொருளுக்கு ஆயத்தப்படுத்தத்தக்கதாயும் முகவுரையைத் தொடங்குவார்கள். ஆகிலும் அம்மட்டில் நிறுத்திவிட்டு காரியத்தை விளக்கத் தலைப்படாமல் சொன் னதையே மாறி மாறிச் சொல்லிக்கொண்டு நிற்பார்கள்.

இது நல்லதல்ல, இவ்விதமாய் காலதாமதம் பண்ணுமல், பிரசங்க பொருளில் சீக்கிரத்தில் இறங்கவேண்டும். பிரசங்கப் பொருள் விரிவாய்ப் பேசக்கூடியதும் மிகவும் முக்கியமானதாகவும் இருக்குமாகில், முகவுரையில் சிறிது நேரமும் செலவிடாமல் வாக்கியத்தை வாசித்து தீர்ந்தவுடன் சங்கதியை விளக்கத் தொடங்கலாம்.

2-ஆவது பிரசங்கத்தில் விளக்கிக்காட்டப்போகிற சத்தியமே தாஷ்டாந்தம். இதை மிகச்சுருக்கமாகச் சொல்ல வேண்டும். மேலும் இதை மிகுந்த தைரியத்தோடு சொல்ல வேண்டும். வேதத்தில் அடங்கிய போதனைகளை நாம் எடுத்துக் கூறும்போது அவைகள் சத்தியமென்று நாம் விசுவாசிக்கிறதைக் காண்பிக்கும் பொருட்டு தைரியமாய்ப் பேசுவது அவசியம். நமது இரட்சகர் மலைப் பிரசங்கம் செய்தபோது அவர் வேதபாரகரைப்போல் போதியாமல் அதிகாரமுடையவராய் அவர்களுக்கு போதித்துவந்தபடியால் ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஆகையால் பிரசங்கத்திற்கு நியமித்தப் பொருளைப் போதிக்க, அதை யாதொரு சந்தேகமும், அச்சமுமில்லாமல் தெளிவும் தைரியமுமாய்ப் பேசவேண்டும். பிரசங்கிக்கும் போதெல்லாம் பிரசங்கிக்கும் பொருள் இன்னதென்று ஒரே விதமாய்ச் சொன்னால் காதுக்குப் பிரீதியாயிராது. ஆகையால் எப்பொழுதும் தாஷ்டாநதத்தைச் சொல்லிவிட்டே பிரசங்கத்தைத் தொடங்கக்கூடாது. ஆகிலும் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறவன் பிரசங்கம் இன்ன காரியத்தைப்பற்றியது என்று திட்டமாய் அறியத்தக்கதாக அதன் ஜாடையும் இருக்க வேண்டும்.

3-வது, திருஷ்டாந்தம். இதுவே பிரசங்கத்தின் மகா முக்கியமான பாகம். தெரிந்துகொண்ட வேத வாக்கியத்தில் கூறப்பட்டிருக்கிற பொருளைத் தெளிவாய் எடுத்துக்கூறுவதல்ல. அதைத் தகுந்த நியாயங்களால் திருஷ்டாந்தப்படுத்தி மனதில் அழுத்துவதே அதிக பிரயாசமும் அவசியமுமான காரியம்.

திருஷ்டாந்தத்தைப் பலவகுப்பாகப் பிரித்துக்கொள்ள லாம். பிரிவுகளுக்கு வேண்டிய இலட்சணங்களாவன (அ) பிரிவுகள் பிரசங்கப்பொருளைப் ஸ்தாபிப்பதற்குப் போதுமான நியாயமுள்ளவைகளாகவேண்டும். அவைகள் அப்பொருளுக்கு இனமானவைகளாய் மாத்திரமிருந் தால் போதாது; சொல்லப்படும் போதனைச் சத்திய மென்றும், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் பிரசங்கப் பொருளுக்குப் புதுப்புதுப்பெலன் கிடைக்கிறதென்றும், கேட்போர் உணர்ந்துகொள்ளத்தக்கதாய் இருக்க வேண் டும். (ஆ)திருஷ்டாந்தத்தின் ஒவ்வொரு பிரிவும் ஒன்றுக் கொன்று வேருனதாய் தோன்றவேண்டும். அதாவது ஒவ்வொரு பிரிவிலும் வெவ்வேறு நியாயங்கள் இருக்க வேண்டும். முன்சொன்ன நியாயத்தை சற்றே மாறிச் சொன்னுல் போதாது. அது புதிய நியாயமாயிருக்க வேண் டும். ஆகையால் பிரசங்கப் பொருளை உறுதிப்படுத்துகிற தற்கு முக்கியமான சங்கதிகளையே திருஷ்டாந்தங்களாகச் சொல்லவேண்டும். ஓர் உபதேசத்தை ஸ்தாபிக்கச் சிறிதும் பெரிதுமான சகல திருஷ்டாந்தங்களையும் ஒரே பிரசங்கத் தில் எடுத்துக்காட்டுவதற்குச் சமயமிராது. ஆகையால் முக்கியமான சில நியாயங்களைத் தெரிந்தெடுத்துச்சொல்ல வேண்டும். இந்த இரண்டு சூத்திரங்களையும் அனுசரிக்கும் பொழுது பிரிவுகளின் தொகை அதிகப்பட்டுப் போகாது. நியாயபெலன் குறைந்தவைகளையும் ஒவ்வொரு நியாய மாகக் கோர்த்துக் கொண்டு வந்தால். பிரிவுகள் எப்படியும் அதிகப்பட்டுப்போம். சில பிரசங்கிகள் தங்கள் பிரசங்கங் களை ஏராளமான பிரிவுகளும், கீழ்ப்பிரிவுகளுமாய்த் துண்டு படுத்துவது வழக்கம். இது கேட்போருக்கு அத்தனை எழுப்புதலாயிராது. ஆகையால் பிரசங்கத்தை ஆயத்தஞ் செய்யும்பொழுது ஒவ்வொரு பிரிவைக்குறித்தும் இது பிரசங்கப் பொருளை நிலைப்படுத்துகிறதற்கு மெய் யாய் உதவுமா, முந்தின பிரிவுகளில் வராத ஒரு புதிய நியாயம் இதிலிருக்கிறதா என்று விசாரிக்க வேண்டும். இந்தச் சூத்திரத்தை நாம் திட்டமாய் கைக்கொண்டு

வந்தால் இரண்டாந்தரமான முகாந்திரங்கள் அகற்றப் பட்டுபோம். பிரசங்கம் சுருக்கமாயும், மிகவும் தெளிவும், ஸ்திரமும், சாரமுமான நியாயங்கள் அமைந்ததாயு மிருக்கும்.

திருஷ்டாந்தத்தில் எத்தனே வகுப்புகள் இருக்க வேண்டும் என்பதைக் குறித்துத்திட்டமான ஒரு பிரமாணம் ஏற்படுத்த ஏதுவில்லே. பிரிவிகள் மூன்றுக்குக் குறையா மலும் ஐந்துக்கு அதிகப்படாமலும் இருக்க வேண்டும் என்று ஒருவிதி உண்டு. தற்காலத்துப் பிரசங்கங்களில் மிகுதியானவைகள் ஐந்து பிரிவுக்கு குறைந்திருக்கும். முற் காலத்துப் பிரசங்கங்களில் மிகுதியானவைகள் அதிகமான பிரிவுகள் அடங்கியதாய் இருந்தன. இரண்டாந்தரமான இரண்டு நியாயங்களேச் சொல்லி நேரம் கடத்தி வைப் பதைப்பார்க்கிலும் முதல் தரமான ஒரே நியாயத்தை விஸ் தரித்து வற்புறுத்துவதே அதிக நன்மையாயிருக்கும். இப் படிச் செய்வதற்கு அதிக நுட்பமும் தொடர்புமான சிந்திப்பும் ஆராய்ச்சியும் அவசியம். ஆகிலும் இந்தக் கஷ்டத்தை எடுத்துக்கொண்டால் பிரசங்கம் சிறப்பா யிருக்கும்.

இந்தச்சூத்திரங்கள் கீழ்ப்பிரிவுகள் விஷயத்திலும் அனு சரிக்கத்தக்கவை. நியாயத்தை வலிமையாய்க் காட்டும் தன்மை இவைகளுக்கும் இருக்கவேண்டும். பிரசங்கத்தின் பிரதான வகுப்புகள் ஒவ்வொன்றும் பிரசங்கப்பொருளே நிலேநிறுத்தத்தக்க பலமுள்ளதாயும் புதுப்புது நியாயங்கள் அடங்கியதாயும் இருக்கவேண்டும். கீழ்ப்பிரிவுகளே முதலா வது, இரண்டாவது என்று வெளிப்படையாய்ச் சொல்வது எப்பொழுதும் அவசியமில்லே. சொல்லப்படும் சங்கதிகளேக் கொண்டு அவைகள் பிரத்தியோகமான பிரிவுகள் என்று இலகுவில் அறிந்து கொள்ளத்தக்கதாய் இருந்தால் போதும்.

பிரிவுகளேயும் கீழ்ப்பிரிவுகளேயும் சொல்லுகிற வார்த்தைகளேயும் குறித்து விசேஷித்த கவனம் செலுத்து

வது அவசியம். அவைகளைச் சொல்லும் சொற்கள் கொஞ்சமாயும், தெளிவுள்ளவையாயும் இருக்கவேண்டும். கூடுமாகில், ஒவ்வொரு பிரிவையும் ஒவ்வொருத் தனிச் சொல்லால் குறிப்பிடுவது நல்லது. பிரிவுகளையும் விஸ்தரிப்பையும் கூட்டிக் குழப்பக்கூடாது. முக்கியமான ஒரு பொருளை அல்லது பிரிவைச் சொல்லும்பொழுது அதைக் கூடிய மட்டும் சுருக்கமாய்ச் சொல்லவேண்டும்; பின்பு விஸ்தரிப்பைத் தொடங்கவேண்டும். விஸ்தரிப்புத்தொடங்கினல் காரியத்தைப் பூரணமாய் விளக்கப் பார்க்கவேண்டும். தர்க்கச் சாஸ்திரத்தின் கை இறுக்கமாயும் சாதுரியப் பிரசங்கத்தின் கையோ விரிவாயும் இருக்கிறது என்று மில்டன் புலவர் சொல்லியிருக்கிறார். அப்படியே பொருளை அல்லது பிரிவைக் கூறும்பொழுது இறுக்கமாய்ப் பொருத்தப்பட்ட கைபோல் சுருக்கமாயும், அவைகளை விஸ்தரிக்கும்பொழுதோ விரிக்கப்பட்ட கைபோல் விவரமாயும் பேசவேண்டும்.

பிரிவுகளையும் கீழ்ப்பிரிவுகளையும் பிரசங்க ஆரம்பத்திலேயே சொல்லவேண்டுமோ என்று கேட்டால், அதைக் குறித்துந் திட்டமான ஒருவிதி கூறவேண்டியதில்லை. என்றாலும், பிரிவுகளை முன்கூட்டிச் சொல்வதைவிட முடிவில் சொல்வது அதிகப் பிரயோஜனமாயிருக்கும். ஏனெனில் திருஷ்டாந்தங்களைப் பிரசங்கத்தின் துவக்கத்தில் சொல்லாமல் அதன் முடிவில் சொல்லும்பொழுது அவைகள் நன்றாய் புலப்படத்தக்கதாயும் எளிதில் மனதில் பதியத்தக்கதாயும் இருக்கும். மேலும் திருஷ்டாந்தங்களை முடிவில் சொல்லுவது ஞாபகத்திற்கு உதவியாயிருக்கும். நாம் நன்றாய் அறிந்துகொண்ட சங்கதிகளை இலேசாய் ஞாபகம் பண்ணலாமே. பிரசங்கியின் முக்கியவேலை ஜனங்களுக்கு அவர்களுடைய கடைமைகளை ஞாபகப்படுத்தி மனதில் பதிப்பிப்பதே. அதன்பொருட்டு பிரசங்கத்தின் பிரதான பகுதிகளையும் சாரத்தையும் சுருக்கிச் சொல்வது அவசியம். ஜனங்களுக்குத் தெரிந்திராத புதிய சங்கதிகளை அவர்களுக்குப் போதிக்க மாத்திரமல்ல, நன்றாய் அறிந்தும் மறந்து

போனவைகளை ஞாபகப்படுத்தவும் கரிசனையாய் இருக்க வேண்டும்.

4-வது. பிரசங்கத்தில் திருஷ்டாந்தப்படுத்தி ஸ்தாபிக்கப்பட்ட சத்தியத்தை சபையாருடைய நிலைமைக்குப் பிரயோகித்துக் காட்டும் பாகம் முடிவுரை. ஜனங்களின் கவனத்தை வசப்படுத்துவதும், வாக்கியத்தின் கருத்தை விஸ்தரிப்பதும் முகவுரையின் காரியம். பிரசங்கப்பொருளை அவர்களுடைய நிலைமைக்கு ஒப்பிட்டுப் பரிசோதிப்பதும் நற்கிரியைக்கு எழுப்பிவிடுவதும் முடிவுரையின் காரியம். ஆகையால் அது மிகுந்த ஊக்கத்தோடும் வாஞ்சையோடும் கூறப்படவேண்டும். பிரசங்கத்தின் உரையெல்லாம் முடிவுரையில் ஒன்றுய்க் கூட்டிக் காண்பிக்கவேண்டும். கேட்போரின் இருதயத்தை அசைக்கும் தருணம் இதுவே. பிரசங்கத்தினுல் ஒருவனுடைய சித்தத்தை வசப்படுத்தி அவனில் நற்பலனைப் பிறப்பிக்கும் சமயம் ஒன்று உண்டு என்பது உண்மையானுல் அது முடிவுரையிலேதான். முடிவுரை பிரசங்கத்தின் முந்திய பாகத்திலிருந்து இயல்பாய்ப் புறப்பட்டு வைராக்கிய வாஞ்சையும், அனலும் பொருந்தியதாயிருக்கவேண்டும். ஆதலால் பூர்வகாலத்துப் பிரசங்க வல்லுநர்கள் முடிவுரையில் அதிக கவனம் செலுத்தினுர்கள். ஜீவன் தப்ப ஓடுகிறவன் தன் கடைசிக் குதிப்பில் பெலனையெல்லாம் கூட்டிக் குதிக்கிறதுபோல் முடிவுரையில் தங்கள் பெலனையெல்லாம் கூட்டிப் பேசினுர்கள்.

இரண்டு வகையான முடிவுரையுண்டு. ஒன்று பிரசங்கத்திலிருந்து இயல்பாய் வருகிற அனுமானம், மற்றது புத்திமதி சொல்லுதல். அனுமானங்கள் பிரசங்கத்தில் அடங்கிய உபதேசத்தினின்று இயல்பாய்ப் புறப்படவேண்டும். மேலும், அவைகள் பிரசங்கத்தின் இடையில் விஸ்தரிப்புக்காகக் கொண்டுவரப்போகிற காரியங்களிலிருந்தல்ல, பிரசங்கத்தின் பிரதான பாகத்திலிருந்தே எடுக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் அவைகள் தகுந்த ஆதாரமும், கூட்டுதல் குறைத்தல் இன்றிப் பூரண

அங்கீகரிப்புக்குப் பாத்திரமுமாயிருக்கும். 2-வது, அனுமானங்கள் ஒன்றுக்கொன்று இசைவாயிருக்கவேண்டும். ஒரே சத்தியத்திலிருந்து நாம் எடுக்கும் அனுமானங்கள் ஒன்றுக்கொன்று விபரீதமாயிருக்குமானல், அவைகளால், ஒரு நற்பயனும் உண்டாகாது. ஆகையால் நாம் ஒரு போதனைக்கொண்டு சொல்லும் புத்திமதிகள் இசைவும் இணக்கமுமாய் இருக்கப் பார்க்கவேண்டும். 3-வது, அனுமானங்கள் படிப்படியாய் எழும்புவதோடுப் பின்வருகிறது. முன்னதைவிட அதிகசாரமாயும், கடைசியில் வருவது எல்லாவற்றிலும் பலத்ததாயும் இருக்கவேண்டும். அதுவுமன்றி முடிவுரை தாபந்தம் பொருந்தியதாயும் இருக்க வேண்டும்.

முடிவுரையானது புத்திமதியாக இருக்கலாம். அனுமானங்களான முடிவுரையைப் பார்க்கிலும் இவ்வித முடிவுரை சுருக்கமாயிருக்கும். புத்திமதி நீண்டுவிடுமாகில் கேட்போருக்கு அலுப்பும், வெறுப்புமாய்ப்போகும். புத்திமதி சொல்லுகிறேம் என்று நீட்டிக்கொண்டு நிற்கும் பிரசங்கிகளைப்போல் ஜனங்களைச் சலிக்கப்பண்ணுகிற பிரசங்கிகள் வேறில்லை.

புத்திமதியானது பிரசங்கத்தின் முக்கியப் பொருளையல்ல, பாடத்தை மனதில் பதிக்கிறதற்கு ஏற்றதாகவும் இருக்கவேண்டும். சில பிரசங்க இலக்கணங்களில் எப்பொழுதும் சுவிசேஷத்தைத்கூறி கிறிஸ்தவ நம்பிக்கைகளையும் திவ்விய வாக்குத்தத்தங்களையும் கொண்டு முடிக்க வேண்டும் என்கிற சூத்திரத்தைக் காணலாம். இது சரியான சூத்திரமல்ல. நியாயப்பிரமாணத்தைப் பிரசங்கித்தால் முடிவுரை ஆக்கினைத் தீர்ப்பைக் கூறுகிறதாகவும் பயங்கரமாகவும் இருக்கட்டும். சுவிஷேத்தைப் பிரசங்கித்தால் முடிவுரை இருதயத்தை வசப்படுத்தத்தக்கதும் தைரியத்தையும் நம்பிக்கையையும் பிறப்பிக்கத்தக்கதுமாய் இருப்பதாக. சபையாரின் நிலைமைக்கு அவசியமானது இன்னதென்று பிரசங்கி நன்ருய் ஆராய்ந்து மனதில் நிர்ணயம்

பண்ணிக்கொண்டபின் அதற்கு வலம் இடம் சாயாமல் அவர்களுக்கு நல்லுணர்வு உண்டாக்கத்தக்க விதமாய்ப் பேசவேண்டும். தேவனுடைய இரக்கமும் அன்பும் தற் சமயம் பேசவேண்டிய காரியங்கள் என்று தோன்றுமாகில் அவைகளைக் குறித்துப் பிரசங்கித்து, அவ்வுபதேசம் ஜனங் களின் நெஞ்சில் அழுந்தும் பொருட்டு தாராளமாய்ப் பேச வேண்டும். தேவ நீதியைப்பற்றிப் பேசுவது அவசிய மென்று கண்டால், அதையே பிரசங்கித்து மெத்தனவும் குளிர்ச்சியுமாயல்ல, வைராக்கியமும் காரமுமாய் பேசி முடிக்கவேண்டும்.

எல்லாவற்றிலும் முக்கியமாக நாம் கிறிஸ்துவுக்குரிய சற்குணத்தோடு பிரசங்கிக்கிறோமா என்று எச்சரிக்கை யாய்க் கவனிப்பது அவசியம். நமது மின்னல்களும், இடி முழக்கங்களும், ஆழ்ந்த பக்தி, இன்றியமையாத தேவபயம் உண்மையான மனுஷ நேசம் இவைகள் பொருந்தியவை களாய் இருப்பதுமன்றி பெருமை, வஞ்சகம் முதலிய தீய நோக்கங்கள் முற்றும் நீங்கினதாயுமிருக்கவேண்டும். பயங் கரமான ஓர் உபதேசத்தை வற்புறுத்திக் காட்டும்பொழுது, தன் காரியம் என்னும் யோசனையை அகற்றிவிடவேண்டும். கர்த்தருடைய வார்த்தையைச் சொல்ல கற்பனை பெற்ற பொழுது பயப்பட்டு கீழ்ப்படிந்த எரேமியா தீர்க்கதரிசி பிரசங்கிகளுக்கு முன்மாதிரியாவார். கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டானபோது அவன், "ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ நான் பேச அறியேன்; சிறு பிள்ளையாயிருக்கிறேன்" என்றான். ஆனாலும் கர்த்தர்; "நான் சிறு பிள்ளை என்று நீ சொல்லாதே; நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளை எல்லாம் நீ பேசுவாயாக" என்றார் (எரேமியா 1:6,7).

முடிவுரை குணப்பட்டவர்களும் குணப்படாதவர்களு மான இருவகுப்பாரையும் சுட்டுகிறதாய் இருக்கவேண்டு

மோவென்று கேட்டால், அதுவும் பிரசங்கப் பொருளைக் கொண்டே தீர்மானிக்க வேண்டியது. பிரசங்கப்பொருள் குணப்பட்டவர்களுக்கு மாத்திரம் ஏற்றதாய் இருக்குமானால், முடிவுரையில் குணப்பட்டவர்களை மாத்திரம் சுட்டிப் பேசலாம். அது சபை முழுவதற்கும் அடுத்ததானால் சபையார் அனைவருக்கும் பேசலாம். பொருள் ஒற்றுமையே இதிலும் அனுசரிக்கப்படவேண்டிய முக்கியமான விதி. பிரசங்கம் துவக்கம்முதல் முடிவுமட்டும் ஏகப் பொருளும் ஏகநோக்கமுமாயிருக்கவேண்டும். பிரசங்க வாக்கியத்தைக் கொண்டு வேறே பாடங்களைக் கற்பிக்க மனதானால் அவைகளைத் தனி உபதேசங்களில் கற்பிக்கலாம். கர்த்தருக்குச் சித்தமானால் நாமும் உயிரோடிருந்தால், அதற்கு வேறே சமயங்களும், சாவகாசங்களும் கிடைக்க நல்உபதேசங்கள் அனைத்தையும் ஒரே பிரசங்கத்திலேயே பேசித்தீர்க்க வேண்டுமென்று ஆத்திரப்படவேண்டாம். ஒவ்வொரு பிரசங்கமும் பூரணமான ஒரே பொருளுடையதாயிருக்கட்டும். மற்றபடி ஒரே தொடர்ச்சியாய்ச் செய்து வரும்பொழுது கிறிஸ்து மார்க்கத்தின் போதனைகளைப் படிப்படியாய் ஜனங்களின் மனதில் புகட்டவும் பற்பல சுபாவங்களுள்ளவர்களுக்கு அவைகளை உபயோகப்படுத்தவும் கூடியதாக இருக்கும்.

பிரசங்க விஸ்தரிப்பை ஆயத்தப்படுத்துவதற்குமுன் மேற்சொல்லிய ஒழுங்கின்படி அதை வகுத்துக்கொள்ள வேண்டும். தகுந்த வகுப்பில்லாமல் பொருளை விஸ்தரிக்கத் தொடங்கக்கூடாது. விஸ்தரிக்கத் தொடங்கினபின் வகுப்பை மாற்றிக்கொள்ளலாம். ஆயினும் யாதொரு வகுப்பும், இலக்கும் இல்லாமல் விஸ்தரிக்கத் தொடங்கினல் எல்லாம் குழம்பிப்போகும். பிரசங்கி இந்த அப்பியாசத்தை கைவிட்டால் ஒழுங்கும் ஸ்திரமுமாய்ப் பேசும் திராணியை விரைவில் பறிகொடுப்பான். அதனுல் பிரசங்கம் ஒன்றிலிருந்து ஒன்றிற்குத் தாவுகிற வசனிப்பாய் மாறிப்போகும். கடைசியாக அவன் எந்த வாக்கியத்தை

யும் புகட்டாமல் சில காரியங்களைப் புத்திமதியாக மாத்திரம் சொல்லக்கூடிய வாயாடி ஆவான். இவ்விதப் பேச்சைப்போல் சாரமற்றதாய்ப்போவது வேறொன்றுமில்லை. ஆகையால் பிரசங்கி வீண் வசனிப்புக்காரனும் அலப்பனும், புத்திமதி சொல்லி பொழுதுபோக்குகிறவனும் ஆகாதபடிக்குப் பிரசங்கத்தைத் தகுதியாய் வகுத்து, விஸ்தரித்து பிரசங்கத்தைப்பற்றி ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

10

பிரசங்கப் பொருள்

1. பிரசங்கங்கள், நிறைந்த கருத்தாழம் உடையனவாய் இருக்க வேண்டும். நாம் பிரசங்கப் பீடத்தில் நிற்பது பொழுது போக்குவதற்கு அல்ல, முக்கியமான சத்தியங்களை அறிவிப்பதற்கே. செவிக்கு இன்பமான பயனற்ற சில சத்தியங்களைச் சொல்லிவிட்டு இறங்குவது போதாது. நாம் பிரசங்கப் பீடத்தினின்று சுவிசேஷம் முழுவதையும் எடுத்துக் காட்டவேண்டும். பரிசுத்தவான்களுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட பூரண விசுவாச சத்தியம் கூறப்பட வேண்டும். பிரசங்கத்திற்கு பொருட்சிறப்பு இல்லையானால் வேறெது சிறப்புக்கள் இருந்தாலும் அவை உபயோகமற்றவை. எல்லாரிலும் நான் சொற்சாதுரியமுள்ளவனானாலும் இரட்சிப்பின் சுவிசேஷத்தை நான் தெளிவாய்ச் சொல்லாவிட்டால், நான் சொல்வதெல்லாம் பதர்போல் இருக்கும். விதைக்கிறவனுடைய கூடை எவ்வளவு அழகாய் இருந்தாலும், அதில் விதை இல்லையானால் விதைப்பதெப்படி? தேவ கிருபையைப்பற்றிய உபதேசம் இல்லாத சாதுரியப்பிரசங்கம், வறண்ட நிலத்துக்கு மழை வருஷியாமல் கடந்து போகிற மேகத்துக்குச்சமம். வசனிப்பில் ஊதாரியும், உபதேசத்தில் உலோபியுமாய் இருப்பதைப்போலொத்த மதிகேடு இல்லை. ''கிறேஷியானோ என்பவன் வெனிஸ் நகரத்திலுள்ள எல்லோரையும்விட வீண் பேச்சில் கடந்தவன். அவன் பேச்சில் சாரமோ இரண்டு கோட்டைப்பதரில் மறைந்திருக்கிற இரண்டு கோதுமைமணி அளவுமாத்திரமே. அதைக் கண்டுபிடிக்க நாள் முழுவதும் செல்லும். கண்டுபிடித்தாலும் அது பட்ட பாட்டிற்கு ஈடாகாது'' என்று கவிஞர் சிரோமணியான

ஒருவன் சொன்னதுபோல், நமது பிரசங்கத்தைக் குறித்தும் சொல்லத்தக்கதாய் இருந்தால் அது எவ்வளவோ பெரிய நிந்தை! வேதசத்தியங்கள் தகுதியானபடி போதிக்கப்படா விட்டால், சபைகளில் வேளாவேளைகளில் தோன்றுகிற நல் எழுப்புதல்கள் விறகில்லாத நெருப்புப்போல் சீக்கிரம் அணைந்துபோம். திவ்விய சத்தியங்கள் ஜனங்களின் உள் ளத்தில் படாமலிருப்பதே அநேகர் வழி தவறிப்போவதின் காரணம். என் பிரமாணங்களை அவர்கள் மனதில் வைத்து, அவர்கள் இருதயத்தில் அவைகளை எழுதுவேன் என்று கடவுள் எபிரெயர் 8:10 இல் சொல்வதுபோலப் பிரசங்கி மார் செய்வார்களானால் தற்போது நடமாடுகிற தீமையான பழக்க வழக்கங்கள் ஏற்படாது. கிறிஸ்தவர்களுக்குள் உண்டாகும் மதபேதங்களைத் தடுக்கத் தக்க ஒரு பெரிய கருவி சத்ய போதனையே. எனவே பிரசங்கங்கள் போதனை நிறைந்தனவாயிருக்க வேண்டும்.

2. பிரசங்கத்தில் அடங்கிய போதனை வேதவசனத் திற்கு இசைவாயிருக்கவேண்டும். அது பிரசங்க வாக்கியத் தினின்று இயற்கையாய் எழும்பவேண்டும். பிரசங்கத்திற் கும் வாக்கியத்திற்குமுள்ள சம்பந்தம் வெளிப்படையாய்த் தோன்றுவதே நல்லது. சில சகோதரர்கள் பிரசங்க வாக்கி யத்தை வாசித்தபின் அதை மறுபடியும் தொடுவதில்லை. அதற்குச் செய்யவேண்டிய மரியாதையெல்லாம் அதை வாசித்ததோடு முடிந்தது என்றாற்போல் அதைவிட்டு வெவ் வேறு வயல்களுக்கும் புதிய புதிய மேய்ச்சல்களுக்கும் புறப் படுகிறார்கள். பிரசங்கத்திற்கென்று தெரிந்துகொண்ட வாக்கியத்தில் பரிசுத்த ஆவியானவர் கருதிய பொருள் இன்னதென்று கண்டுபிடித்து அதில் நமது சிந்தையைச் செலுத்துவோமானால் நமது பிரசங்கம் எப்பொழுதும் ஒன்றுபோலிராமல் விதவிதமாய்த் தோன்றும். ஒன்றுக் கொன்று சிறிதளவேனும் வித்தியாசமில்லாத இரண்டு வாக்கியங்கள் வேதபுத்தகத்தில் இல்லை. சிலவாக்கியங்கள் பார்வைக்கு ஒன்றுபோல் தோன்றினாலும் சந்தர்ப்பத்திலும்

நோக்கத்திலும் அவை எப்படியும் வெவ்வேருயிருக்கும். ஆவியானவர் காட்டும் பாதைக்கு அப்புறம் இப்புறம் அடி பெயராமல் சென்ருல் நாம் சொன்னதையே சொல்லவோ சொல்வதற்குப் பொருளில்லாமல் முட்டுப்படவோ நேரி டாது. ஏனெனில் அவருடைய பாதைகளில் கொழுமை பொழிகிறது. மேலும், பிரசங்கமானது வேத வசனத்தின் விளக்கமாகவும், வற்புறுத்தலாகவும், யாதொரு மாற்றமு மில்லாமல் எடுத்துக்கூறப்படும். தேவவார்த்தையாகவும் இருந்தால், அது கேட்போரின் உள்ளத்தில் அதிக வல்லமை யோடு செல்லும். நாம் வேதவாக்கியத்தின் கருத்துச் சிதை யாதபடியும் தேவ ஆவியானவர் உபயோகித்த வார்த்தை கள் பிறழாதபடியும் பார்க்க வேண்டும். எப்படியெனில் வேளாவேளைகளில் ஒவ்வொரு பொருளேயும் குறித்துப் பிர சங்கிப்பது சரி என்ருலும், பரிசுத்த ஆவியின் வார்த்தை களையே எடுத்து வியாக்கியானிக்கும் பிரசங்கங்கள் சபை யாருக்கு அதிக பிரயோஜனமும் ஏற்றதுமாயிருக்கும். வியாக்கியானம் பண்ணுகிற பிரசங்கத்தின் போதனை ஆத்துமாவுக்கு ஜீவாகாரமும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனுமாகக் கேட்போரின் விசுவாசத்தைப் பலப் படுத்துவதற்கேதுவாயிருக்கும்.

3. நமது பிரசங்கங்கள் சிறந்தபோதனையும் முக்கிய சத்தியங்களும் நிறைந்திருக்கவேண்டும். மரம், புல், வைக் கோல் இவைகளைக்கொண்டல்ல; பொன், வெள்ளி, விலை யேறப்பெற்ற கல் இவைகளைக்கொண்டே கட்டுவோமாக. சுவிசேஷமும் அதற்குச் சம்பந்தமான உபதேசங்களுமே நமது பிரசங்கத்தின் நோக்கமாக இருக்கவேண்டும். சிலர் எல்லாருக்கும் தெரிந்த காரியங்களைப் பெரிய பெரிய வார்த் தைகளால் சொல்லிப் பொழுதைப் போக்குவார்கள், அவர் கள் தங்கள் சொல் வன்மையைக் காட்டுவதேயன்றி யாதொரு சத்தியத்தையும் போதிக்கமுடியாது. உயர்கல்வி பயின்றவர் செய்யும் போதனையில்லாப் பிரசங்கம், அதிகக் கல்வியில்லாதவன் தன் இருதயத்தில் உணர்ந்த உண்

மையை, நான் படித்த சிறு கல்விக்கேற்ப நேர்மையாய்க் கூறுவதிலும் இழிந்தது.

4. சத்தியம் ஒன்றையும் நாம் ஒளித்துவைக்கவேண்டாம். சில போதனைகளை மறைத்துப்போதிப்பது தகுதியென்று சொல்லும் ரோமன் மார்க்கத்து குருக்களின் அருவருப்பான கொள்கையை நாம் கைகொள்ளவேண்டாம். சில உபதேசங்களைப் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றோருக்குத்தான் போதிக்கலாம் என்கிற கோட்பாடு சத்தியமல்ல. வெளிப்படுத்தக்கூடாத போதனை ஒன்றும் வேதபுத்தகத்தில் இல்லை. ஒவ்வோரு உபதேசமும் அதனதன் உண்மையுடன் காட்டப்படவேண்டும். ஏனெனில் வேதபுத்தகத்தின் ஒவ்வொரு பாகமும் பிரயோஜனமுள்ளது. நாம் சத்தியத்தைப் பிரசங்கித்தால் போதாது; முழுசத்தியத்தையும் பிரசங்கிக்க வேண்டும். எப்பொழுதும் ஒரு சத்தியத்தை மாத்திரம் கூறுவதும் தகுதியல்ல; சித்திரம் எழுதுகிறவன் தான் வரையும் படத்தில் ஓர் உறுப்பை மிகவும் பெரிதாகவும் மற்றவைகளை அளவுக்குக் குறைந்தும் வரைந்தால் அது மிக அருவருப்பாயிருக்கும்.

5. அதிக முக்கியமில்லாத உபதேசங்களை மிகவும் முக்கியமானவைகள்போல் பிரசங்கிப்பது பெரிய குற்றம். நமது பிரசங்கங்களுக்கெல்லாம் நடுநாயகமாய் இருக்க வேண்டிய போதனை பரத்திலிருந்துவந்த இரட்சண்ய நற்செய்தியே. பாவ நிவாரணபலியாக ஜீவனைவிட்ட இயேசு கிறிஸ்துவின்பேரில் விசுவாசம் வைக்கிற பாவிகளுக்கும், பிரதான பாவிகளுக்கும்கூட, அவருடைய மரணத்தின் புண்ணியத்தினுல் கிடைக்கும் கிருபையைக்குறித்தே நாம் முக்கியமாய்ப் பிரசங்கிக்கவேண்டும். சிலுவைப் பிரசங்கத்திற்கு சிந்தனைவேண்டுமோ என்று நினைத்தாற்போல் நாம் அதைக் குறித்துச் சொற்பமாய் மாத்திரம் தியானித்து மற்ற காரியங்களில் ஆழ்ந்தகவனம் செலுத்துவதாகாது. நமது புத்தி, ஞாபக சிந்தனை, சொற்சாதுரியம் முதலிய சகல தத்துவங்களையும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் உப

யோகிக்கப்பட வேண்டும். ஆண்டவராகிய இயேசுவில் நம்பிக்கையாயிரு என்னும் வசனத்தின் பேரில் பிரசங்கிப்பதற்கு ஞானிகளின் ஞானம் எல்லாம் இருந்தாலும் அது போதாதென்று காண்போம்.

சகோதரரே, நாம் முதன்மையும் முக்கியமுமாக சுவிசேஷத்தின் தெளிவான உபதேசங்களைப் பிரசங்கிப்போமாக, நாம் எதைப் பிரசங்கித்தாலும் பிரசங்கியாவிட்டாலும். ஆத்துமாவை இரட்சிக்கத்தக்கதாகிய கிறிஸ்து இயேசுவை சிலுவையில் அறையப்பட்டவராக காட்டும் சத்தியத்தைப் பிரசங்கிப்பதில் ஓயாதிருப்போமாக. மிகத் திறமைசாலியான ஒரு போதகர் இருக்கிறூர்; அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்க்கப் பாத்திரமானவர்கள் அநேகர் இல்லை; அவருடைய பிரசங்கத்தையோ, சிறு சித்திரம் அல்லது திருவிளையாட்டு என்று சொல்லவேண்டும். அவர் மிருகத்தின் பத்து விரல்களையும்; கேருபீன்களின் நான்கு முகங்களையும், தச்சுக்தோல்களின் ஞான கருத்தையும், கற்பனைப் பெட்டியின் தடிகளால் உவமிக்கப்பட்ட பொருளையும், சாலொமோன் தேவாலயத்தின் ஜன்னல்களையும் குறித்து சமர்த்தாய்ப் பிரசங்கிப்பார். உலக வேளைகளில் தலையிட்டிருக்கிற மனிதரின் பாவங்களையும் கற்காலத்தோரின் சோதனைகளையும் குறைகளையுமே மிக அபூர்வமாய் தொடுவார். அப்படிப்பட்ட பிரசங்கம் எதுபோல் இருக்கிறது என்றுல், சிங்கம் எலிவேட்டைக்கு இறங்கினுற் போலும், கப்பல் களைந்துபோன தண்ணீர்த் தொட்டியைத்தேடிப் புறப்பட்டாற்போலும் இருக்கிறது. பெர்சிய தேசத்தையாண்ட அரசர்களில் ஒருவன் மூஞ்சுறு பிடிப்பதில் தேர்ந்தவனுய் இருந்தானும். லீதியா நாட்டு அரசன் ஒருவன் ஊசிகளை உராவி முனைகூட்டுவதில் மகா சமர்த்தனும். ஆகிலும் இந்த அற்ப சமர்த்துக்களின் நிமித்தம் அவர்களை மகத்தான இராஜாக்கள் என்று ஒருவரும் சொல்லத் துணியார்களே. அப்படியே பிரசங்க ஊழியத்திலும் பரம ஸ்தானுபதியின் அந்தஸ்துக்கு ஏற்காத

சொற்பப் பொருள்களில் மனதைச் செலுத்தும் அற்பத்தனத்திற்கு உட்படாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

6. பிரசங்கத்தை அநேக விஷயங்களில் நிரப்புவது நல்லதல்ல. எல்லா சத்தியங்களேயும் ஒரே பிரசங்கத்தில் அமைக்கக் கருதவேண்டாம். பிரசங்கங்கள் வேதசாஸ்திரச் சுவடிகளல்ல. சில பிரசங்கிகள் மட்டுக்கு மிஞ்சிப் பேசும் வழக்கமுடையவர்கள். அவர்களுடைய பிரசங்கத்தைக் கேட்டவர்கள் இன்னும் கேட்க வேண்டும் என்கிற வாஞ்சையோடல்ல, இந்தப் பிரசங்கம் கேட்டது போதும் என்கிற வெறுப்போடே வீட்டுக்குத் திரும்புவார்கள். வயோதிபரான ஒரு போதகர் தம்மோடு உலாவப்போன ஒரு வாலிபப் பிரசங்கிக்கு ஒரு வயல் நிலத்தைச் சுட்டிக் காட்டி, ''நீர் அன்று பண்ணின பிரசங்கம் அநேக விஷயங்கள் அமைந்ததாய் இருந்தது; அது அத்தனை தெளிவும் ஒழுங்கும் உடையதல்ல. விளைந்து கிடக்கிற இந்தக் கோதுமை நிலத்தைப்போல் அது இருந்தது; இதில் மிகுந்த போஜனம் இருக்கிறது; ஆகிலும் தற்சமயம் சாப்பிடத் தக்கது ஒன்றும் இல்லையே. உமது பிரசங்கம் சாப்பிடுகிறதற்கு ஏற்றதும், கையில் கொண்டுபோகிறதற்கு வசதியுமான ரொட்டிபோல் நன்ருகச் சமைக்கப்பட்டதாயிருக்க வேண்டும்'' என்ருர். கேட்போரின் மனதில் பதிப்பிக்கப்பட்ட ஒரே சத்தியம், காதில் விழுந்து தெறித்துப் போகிற ஐம்பது சத்தியங்களைப் பார்க்கிலும் அதிக நன்மையைப் பிறப்பிக்கும். பலகையில் இறங்கத்தக்கதாகச் செம்மையாய் அறையப்பட்ட ஒரு பெரிய இரும்பாணி மேலிட்டாற்போல் அடிக்கப்பட்ட இருபது சிறு ஆணிகளைவிட அதிக உபயோகமாய் இருக்கும்.

7. பிரசங்கத்துக்கு ஒழுங்கு ஒரு முக்கியமான இலக்கணம். நன்ருய் ஒழுங்குசெய்யப்பட்ட பிரசங்கத்தை ஒரு கோபுர மாளிகைக்கு ஒப்பிடலாம். அப்படியானல் படிப்பினைகள் அடியிலும் உபதேசம் உச்சியிலும் அல்ல, திருஷ்டாந்தங்கள் அஸ்திபாரத்திலும் தாஷ்டாந்தங்கள் தலைப்

பிலும் அல்ல. முக்கியமான உபதேசங்கள் பிரசங்கத்தின் துவக்கத்திலும் முக்கியமல்லாத போதனைகள் முடிவிலு மல்ல. பிரசங்கத்தின் பொருளும் சாரமும் கிரமம் கிரமமாய் உயர்ந்து எழும்பவேண்டும். கேட்போரின் மனதை ஒரு சத்தியத்திலிருந்து இன்னொரு சத்தியத்திற்கு வழி நடத்தி, ஒரு மச்சிலிருந்து மற்ற மச்சிற்குச் செல்லும்படி கதவைத் திறந்து, இவ்விதமாய்த் திவ்விய சத்தியமானது ஜெக ஜோதியாய்ப் பிரகாசிக்கும் மேல்வீட்டில் சேருமட்டும் நடத்திக் கொண்டுபோகவேண்டும். அதனதன் பொருள் அதனதன் இடத்தில் என்கிற சூத்திரம் பிரசங்கத்திலும் அனுசரிக்கப்படவேண்டியது. சத்தியங்கள் நமது வாயி லிருந்து கூட்டக் குழப்பமாய் விழவிடலாகாது. யோசனைகள் குழப்பமான சேனைபோல் சாடுகிறதற்கு இடங்கொடாமல், அணிவகுத்த சேவகர்போல் புறப்படப் பண்ணவேண்டும். பரத்தின் முதலாம் பிரமாணமாகிய ஒழுங்கைப் பரத்தின் ஸ்தானாபதிகள் அசட்டைப்பண்ணக்கூடாது.

8. வேத உபதேசங்களைப்பற்றிய போதனை தெளிவும் கருத்து மாறுபடாததுமாய் இருக்கவேண்டும். ஆகையால் அவைகளைக் குறித்துப் போதகன்தானே தெளிவான அறிவு அடைந்துகொள்வது அவசியம். சில பிரசங்கிகள் புகையாய் யோசித்து மேகமாய்ப் பிரசங்கிக்கிறார்கள். நமது ஜனங்களுக்குப் பிரகாசமான மேகம் போன்ற மனோ பாவனைகள் அல்ல, பாதம் உறுதியாய் நிற்கத்தக்க தரை போன்ற சத்தியமே வேண்டும். சாஸ்திரத் தர்க்கங் களுக்கு அடுத்த பிரசங்கங்கள் சில ஆத்துமாக்களை அரைவெறி ஆக்குகின்றன. அப்பொழுது அவர்களுக்கு எல்லாம் இரண்டுபட்டுத் தோன்றுகின்றன; அல்லது ஒன்றும் தோன்றுகிறதில்லை. நாம் நமது ஜனங்களுக்குக் களங்கமில்லாத சத்தியத்தை — சுத்தாங்க வேத உப தேசத்தை — மலைப்புக்கு ஏதுவில்லாத வார்த்தைகளால் பிரசங்கிப்போமானால் ஆடுகளின் உண்மையான மேய்ப்பர்களாய் இருப்போம். அதனால் அவர்கள் எளிதில் பயனடைவார்கள்.

9. பிரசங்கங்களின் பொருள் கூடியமட்டும் புதிதாய் இருத்தல் வேண்டும். ஐந்து ஆறு உபதேசங்களே எப்பொழுதும் ஒன்றுபோல் எடுத்துக் கூறுவது போதாது. வேத புத்தகத்தில் அடங்கியுள்ள சத்தியங்களும் போதனே களும் ஏராளம். நாம் அவைகளேக் கருத்தாய் ஆராய்ந்து பார்த்து தகுந்த எடுத்துக்காட்டுகளோடு விளக்கித் தேவ னுடைய ஆலோசனேகள் அனேத்தையும் வெளிப்படுத்த வேண்டும்.

10. நமது போதனேகள் நாளுக்குநாள் தேறிவருவ தாக. நமது அனுபவம் முதிரவே நமது போதனேகளும் முதிர்ந்து நமது ஆத்தும வளர்ச்சியோடு கூட வளர வேண்டும். இதனுல் நூதன உபதேசங்களேக் கண்டு பிடித்துப் போதிக்க வேண்டும் என்பது கருத்தல்ல. ஏனெனில் ஒருவன் ஐம்பது வருடமாய் போதக ஊழியம் செய்தாலும் தன் உபதேசக் கொள்கைகளில் ஒன்றை மாற்ற வாவாது, முக்கிய உபதேசத்தைப் போதியாமல் விட்டு விட்டேனே என்று புலம்பவாவது நேரிடாதபடிக்கு, ஆரம்ப முதல் வேத உபதேசங்களே எல்லாம் பிழையறக் கற்றிருந் தால், அவனேப்பாக்கியவான் என்று நிச்சயமாய்ச் சொல்ல லாம். போதனேயில் வளர வேண்டும் என்ருல், திவ்விய சத்தியங்களேப்பற்றி நமக்கு உண்டாயிருக்கிற அறிவு, காலம் செல்லச்செல்ல அதிக ஆழமும் உறுதியும் பெற வேண்டும். ஞானவளர்ச்சி எங்கே உண்டோ அங்கே இந்தத் தேர்ச்சியும் உண்டு. தீமோத்தேயுவைப் பார்க்கி லும் பவுல் அதிக சாரமாய்ப் பிரசங்கிக்கக்கூடும். அது போல நமது வாலிபகாலத்துப் பிரசங்கங்களேவிட நமது முதிர்வயதின பிரசங்கங்கள் அதிகத்திண்மையுள்ளனவாய் இருக்கவேண்டும். பிரசங்கம் என்னும் பதத்துக்கு ஆங்கில பதமாகிய சர்மன் என்பது புகட்டுதல் அல்லது உருவாக்குத்தல் என்று பொருள்படும். இந்தக் கருத்தின் படி நாம் எடுத்த பொருளேப் பலத்தோடும் பயன்படத்தக்க விதமாயும் மனதில் அழுத்துவது நமது நோக்கமாய் இருக்க

வேண்டும்; அதற்கு ஒப்பப் பொருளும் தகுந்ததாய் இருக்கவேண்டும்.

11. வெறும் சன்மார்க்க விஷயங்களை எடுத்துப் பிரசங்கிப்பது மர ஈட்டிக்கொண்டு குத்தினாற்போல் இருக்கும். வேதத்தின் முக்கிய சத்தியங்களோ கருக்கான பட்டயங்களுக்குச்சமானம். ஆகையால் மனசாட்சியையும் இருதயத்தையும் அசைக்கத்தக்க உபதேசங்களைப் பிரதான மாய் எடுத்தும் பிரசங்கிப்போமாக. ஆத்துமாவைக் கவர நாம் சுவிசேஷ போதனைகளுக்கு உறுதியான சாட்சிகளாய் இருப்போமாக. தேவ சத்தியம் மனிதனுக்கு ஏற்றது; தேவ கிருபை அவனை அதற்கு ஏற்றவன் ஆக்குகிறது. மேற் சொல்லியவைகளின் ரத்தினச் சுருக்கம் என்னவென்றால்: நாம் கிறிஸ்துவையே எப்பொழுதும் பிரசங்கிக்க வேண்டும் என்பதே; முழுச்சுவிசேஷம் அவரே. அவருடைய குணங் களும், ஊழியமும், கிரியைகளுமே நாம் நமது தத்துவங்கள் அனைத்தையும் செலுத்திப் போதிக்க வேண்டிய முக்கிய செய்திகள். உலகத்திற்கு அதன் இரட்சகரைக் குறித்தும் அவரிடத்திற்குப் போகும் வழியைக் குறித்தும் சொல்வது அவசியமாய் இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் பேரி லுள்ள விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதியைப்பற்றிய உபதேசம் இப்பொழுதும் நமது ஆலயங்களில் பிரசங்கிக்கப் படுகிறதைப் பார்க்கிலும் அதிகச் சம்பூரணமாய்ப் பிரசங்கிக் கப்பட வேண்டும். சபையின் ஆணிவேராகிய இச்சத்தியத் தோடுகூட அதற்கு சம்பந்தமான மற்றச் சத்தியங்களையும் நாம் கருத்தாய் உபதேசித்து வருவோமாகில் அதனால் நமது சபைகளுக்கும் நமது சந்ததியாருக்கும் அதிக நலம் பிறக்கும். மனிதன் பாவத்தில் விழுந்தது, மறுஜென்மத் தின் அவசியம். கிறிஸ்துநாதர் செலுத்தின பிராயச்சித்த பலியால் உண்டாகிய பாவமன்னிப்பு, விசுவாசத்தின் பல னாகிய ஆத்தும இரட்சிப்பு, ஆகிய இவைகள் நாம் போதிக்க வேண்டிய முக்கியமான சத்தியங்கள். இந்தச் சத்தியங்களை நாம் மெய்யான வைராக்கியத்தோடும்

ஊக்கத்தோடும் பிரசங்கித்தால் நாம் அஞ்ஞானமும் வீணு மாகிய காட்டைக் கொளுத்திப் பாவக்குளிர்ச்சியால் செத்திருக்கிற இந்த உலகத்தை அனலாக்கக்கூடும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால் இவைகளைக் கற்றுப்போதிக்க நமக்கு போதுமான முயற்சி வேண்டும். தீர்க்கதரிசன வியாக்கியானங்களோ, சபையாளுகை முறைமைகளோ, வேதசாஸ்திர தோரணைகளோ, கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மை பாராட்டும் மகத்துவ வேலையை விட்டு நம்மை இழுத்து விடாதிருப்பதாக. நரகம் குணப்படாதவர்களின் ஆத்துமாக்களால் நிரம்பிக் கொண்டிருக்கையில், மேற்சொல்லியவைகளில் நேரம் போக்குவது மதிக்கேடேயன்றி வேறல்ல.

ஆகையால் பரிசுத்த நாவு ஒவ்வொன்றும் இரட்சிப்பைக் கூறுவதற்குப் பேர் எழுதப்படுவதாக. நித்தியானந்த தேவனின் மகிமையான சுவிசேஷத்தைச் சொல்லும் சாட்சிகளின் வாய்மொழி எவ்வளவோ இனிமையாய் இருக்கிறது. சிலுவையில் அறையப்பட்ட இயேசு என்பது, தேவ ஊழியக்காரர் சகலருடைய பிரசங்கங்களின் சாரமுமாயிருக்க வேண்டும். வேதாகமத்தில் அடங்கியுள்ள தீர்க்கதரிசன வார்த்தைகளை வாசிப்போரும் கேட்போரும் பாக்கியவான்கள் என்றாலும், அதற்கு வியாக்கியானம் எழுதத் துணிந்தும் தங்கள் அபிப்பிராயங்கள் நிறைவேறாமல் வெட்கத்தோடு குழியில் இறங்கினவர்களுக்கு என்ன பாக்கியம் கிடைக்கும்! வேதப்புத்தகத்தில் அடங்கிய சகல இரகசியங்களையும் வெளிப்படுத்துகிறதைப் பார்க்கிலும் நெருப்பிலிருந்து ஒரு கொள்ளியைப் பிடுங்கிக் கொள்வது பெரிய காரியம். வேத சாஸ்திர தர்க்கக் களத்தில் சாஸ்திர சிகாமணியென்று முடிசூட்டப்படுவதிலும், இயேசு கிறிஸ்துவின் முகத்தில் விளங்கிய தேவ வெளிச்சத்தை திறந்து காட்டி, ஓர் ஆத்துமாவை நரகக் குழியினின்று தப்புவிப்பதே அதிக மகிமையான வேலை. ஆகையால் கிறிஸ்து நிறைந்த பிரசங்க ஊழியம் பாக்கியமானது.

11

சுவிசேஷப் பிரசங்கம்

போதகர்கள் செய்ய வேண்டிய முக்கியமான வேலை சுவிசேஷத்தை பிரசங்கித்தலேயாம். கடவுள் சுவிசேஷத்தையும் ஒப்புரவாக்குதலின் ஊழியத்தையும் நம்மிடத்தில் ஒப்புவித்திருக்கிருர். ''அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களைக் எண்ணுமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்'' (2 கொரி. 5:19) என்று எழுதியிருக்கிறதே. ஆகையால் நாம் உபதேசிக்க வேண்டியது ஏதென்று சரியானபடி அறிந்து கொள்வது மிகத்தேவை.

சுவிசேஷமானது சந்தோஷச்செய்தியைக் கூறும் திருவாக்கே. பாவம் செய்து ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளானவர்களும், தீமையை நாடி நன்மையை வெறுக்கிற சுபாவமுடைய மனுஷர், இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தின் மூலமாய் மன்னிப்புப் பெற்றுப் புதிய சுபாவம் அடைவதற்கு ஒரு வழியுண்டு. அது நமக்கு விளங்குகிறது. ''சர்ப்பமானது மோசேயினுல் வனந்திரத்தில் உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனே அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்படவேண்டும். தேவன் தம்முடைய ஒரே பேருன் குமாரனை விசுவாசிக்கிறவன் எவனே அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத்தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்'' (யோவான்: 3:14-16) என்பது. ''கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினுலே

பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினதே'' சுவிசேஷம் என்று ரோமர் 3:26இல் காணலாம். பவுல் அப்போஸ்தலன் கொரிந்தியருக்குத் தான் பிரசங்கித்தவைகளில் ''நான் அடைந்ததும் உங்களுக்கு பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றுல், கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றும் நாளில் உயிர்த்தெழுந்தார்'' என்கிறுன் (1 கொரி. 15:3,4) கிறிஸ்துநாதர் நமது பாவங்களுக்காக மரித்தார் என்னும் சத்தியத்தை இந்த மகா அப்போஸ்தலன் மிகவும் முக்கியமானதாக மதித்தான். அதைக் குறித்து அவன் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில் ''நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்'' (1 கொரி. 2:23) என்றும், தான் அவர்களிடம் போன முதலாம் தரம் ''இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரேயேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கக் தீர்மானித்திருந்தேன்'' (1 கொரி. 2:2) என்றும் சொல்லியிருக்கிறுன். கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் ''நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனுக; அவராலே உலகம் எனக்கு சிலுவையில் அறையுண்டிருக்கிறது; நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்'' என்று சொல்லியிருக்கிறுன். (கலா. 6:14). இந்த வாக்கியங்களும், இன்னும் அநேக வாக்கியங்களும் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவரே சுவிசேஷத்தின் முக்கியமான பொருள் என்றும், மனுஷரின் பாவங்களுக்காக அவர் சிலுவையில் அறையப்பட்டார் என்பதே அவரைக் குறித்து முக்கிய சத்தியம் என்றும், பாவியாகிய மனுஷனுக்குப் பாவமன்னிப்பையும், புதிய இருதயத்தையும் அளிக்கிறதற்குக் கிறிஸ்துவின் மரணம் பூரணபுண்ணியமுடையது என்றும் காட்டுகின்றன. ஆகையால் நாம் பிரசங்கித்து விஸ்தரிக்க வேண்டிய உபதேசம்

இதுவே! நமது இரட்சகர் மனித அவதாரஞ் செய்த சரிதையை எடுத்து விஸ்தரிப்பது போதாது. மேலே எடுத்துக் கூறிய வாக்கியத்தில் பவுல் அப்போஸ்தலன் இயேசு கிறிஸ்துவையே அன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்க தீர்மானித்தேன் என்று மாத்திரம் சொல்லாமல். ''சிலுவையில் அறையுண்ட அவரையே'' என்கிற விசேஷத்தையும் கூட்டிச் சொல்லுகிறான். ஏனெனில் சுவிசேஷமாவது இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையுண்ட செய்தியும் அந்த புண்ணியத்தால் உண்டாகும் ஆசீர்வாதமுமே என்பது அவனது விசுவாசம். இயேசுநாதர் மனிதனாயிருந்தது சத்தியம் என்று நாம் விசுவாசித்தாலும், அவர் நமக்காக மரிக்கவில்லையானால், அவரால் நமக்கு இரட்சிப்புக் கிடையாது. மேலும் அவர் மனுஷவதாரம் எடுத்த கடவுள் அல்ல என்றால், அவருடைய மரணத்தினால் பாவ மன்னிப்பு உண்டாக மாட்டாது. ஆகையால் ஒருவர் நமக்காக மரித்தார் என்பதல்ல, மரித்தவர் தேவகுமாரன் என்பதே காரியம். விசுவாசிக்கிற பாவியின் பாவத்தை மன்னிக்கிறதிலும், தேவன் தமது நீதியை வெளிப்படுத்துகிற காரணம் இதுவே. குற்றவாளியான பாவிக்குக் கடவுள் இரக்கம் காட்டுகிற நியாயத்தை விளக்கும் முகாந்தரமும் இதுவே. நாம் வானத்தையோ, பூமியையோ, சமுத்திரத்தையோ எங்கே பார்த்தாலும் ஒழுங்கையும் பிரமாணத்தையும் காண்கிறோம். அந்தப் பிரமாணம் மாற்றப்படாத உறுதியுள்ளது. பிரமாணத்திற்கு நாம் அமைந்து நடக்குமட்டும் அது நமக்கு அனுகூலமாயும், அதற்கு விரோதமாய் நடக்கும் பொழுது மகாபிரதிகூலமாகவும் இருக்கக் காண்கிறோம். தீயில் கையை இட்டால், ''ஐயோ! ஏழை கையைச் சுட கூடாது'' என்று அது இரங்குமோ? ஒருவன் ஒரு குன்றில் ஏறித் தலைக்குப்புற விழுந்தால், ''ஐயோ! நொறுங்கிப் போவானே, இவன் கீழே விழாமல் அந்தரத்தில் தொங்கும்படியாக நமது பிரமாண வல்லமையைச் சற்று நிறுத்தி வைப்போம்'' என்று புவி ஈர்ப்பு விதி இரங்குமோ? ''சமுத்

ரத்தில் விழுகிறவனை அமிழ்த்தக் கூடாது'' என்று கடல் தயவாய் இருக்குமோ? உலகத்தில் நாம் எங்கே பார்த்தாலும் இயற்கை பிரமாணங்களை மீறுகிறவனுக்கு இரக்கம் காட்டப்படுகிறதில்லை: பயங்கர முடிவே அவன் பங்கு என்று காண்கிறோம்.

கிறிஸ்துவின் சிலுவையிலோ பாவியானவன் மீறின பிரமாணம் கண்ணியம் பெற்று நிலைநிறுத்தப்படுவதுமல்லாமல் பாவிக்கு இரக்கம் காண்பிக்கும் வழியும் அமைக்கப்பட்டிருக்கிறது. நமது அறிவுக்கெட்டாத அன்பு அதில் விளங்குகிறது. மனிதர் தங்கள் பாவத்தினால் வருவித்துக் கொண்ட கேட்டினின்று அவர்களை விடுவிக்கும்படியாகக் கடவுளது உருக்கமான வாஞ்சையினால், அந்த அன்பின் வெள்ளம் அவர் நெஞ்சத்தினின்று பாய்ந்ததென்று அவர்கள் உணரத்தக்க விதமாய், நாம் அதைப்பற்றி பிரசங்கிக்க வேண்டும். கிறிஸ்துவின் மரணம் கடவுளுடைய அன்பை உலகத்திற்கு வாங்கிக் கொடுத்த கிரயமாயிராமல் அது பாவ மன்னிப்பில் தேவ நீதியின் நேர்மையைக் காண்பிக்கும் எத்தனமாய் இருக்கிறது. ஆகையால் தேவ அன்பையும் நீதியையும் குறித்த உபதேசங்கள் சிலுவையின் உபதேசம் பலிதமாவதற்கு முக்கியமான இரண்டு சாதனங்களாய் இருக்கின்றன. அன்பு பாவியின் இருதயத்தை நிரப்பி அதை உருகச் செய்கிறது. நீதி, குற்றஞ்சாட்டுகிறவன் மனசாட்சியைக் சாந்தி பண்ணுகிறது. ஆகையால் அவன் சிலுவையில் அறையுண்ட இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சத்தியத்தை விசுவாசித்தவுடன் சொல்லி முடியாத சந்தோஷத்தினாலும் நிலைவரமான சமாதானத்தினாலும் நிரப்பப்படுகிறான். அவனுடைய குற்றத்தைச் சுட்டிக் காண்பித்து அவனைத் வேதனைபடுத்திக் கொண்டிருந்த மனசாட்சியானது, பாவமன்னிப்பு நீதியாய்க் கிடைத்திருக்கிறது என்ற நிச்சயத்தினால் திருப்தியாகிறது. மற்றப்படி அவனுக்கு நிலையான ஆறுதல் உண்டாகாது. கடவுளது பிர

மாணத்தை கண்ணியப்படுத்துவதற்குப் பாவ நிவாரண பலி அவசியமில்லாவிட்டாலும், பாவியின் மனச்சாட்சியை சாந்தப்படுத்துவதற்கு அது அவசியமாயிருக்கிறது. நேர்மையற்ற பாவமன்னிப்பினுல் நிலையான சமாதானம் உண்டாகாது. சிலுவையின் மூலமாய்க் கடவுளது அன்பும் நீதியும் கூடி அவனுக்குப் பாவ மன்னிப்பைச் சம்பாதித்தன என்று காணும்பொழுதோ அவன் சமாதானத்தினுல் நிரப்பப்படுகிருன். கடவுளுடைய சுவிசேஷம் இத்தனை பூரணமாய் இசைந்த இவ்விரண்டு காரியங்களையும் நாம் நமது பிரசங்கங்களில் பிரித்துப்போடாதபடி எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். நீதியை விட்டுவிட்டு அன்பை மாத்திரம் உயர்த்திக்காட்டுவது சரியல்ல; ஏனெனில் மனிதர்களின் மீட்புக்காக இரட்சகர் மரிப்பதை அவசியமாக்குகிற நீதி இல்லாதிருக்குமானுல்,இரட்சகர் மரித்ததில் அன்பு விளங்குவதெப்படி? மறுபக்கத்திலோ, அன்பு மறைந்திருக்கத்தக்கதாக நீதியை உயர்த்திவிடவும் கூடாது. அன்பையே அதிகமாய் விசேஷித்துக்காட்டுவோமாகில் மனிதர் தீமைசெய்ய அஞ்சாமல், எவ்வளவு அகககமாய்ப் பாவஞ்செய்கிருேமா அவ்வளவுக்கதிகமாய் தேவ கிருபையும் காண்பிக்கப்படும் என்று தவருக ஏற்றுக்கொள்ளத் தலைப்படுவார்கள். தேவநீதியையே அதிகமாகப் பிரசங்கிப்போமாகில் இஸ்ரவேலர் சீனுய்மலையில் மிகவும் பயந்து நடுங்கினதுபோல, ஜனங்கள் நமது பிரசங்கத்தினுல் நடுக்கமடைவார்கள். ஆகவே அன்பையும் நீதியையும் குறித்து நாம் சரியானபடி போதிப்போமானுல், அன்பு கடவுளிடத்திற்கு நம்மை இழுக்கும்போது நாம் துணிந்து பாவத்தில் விழாதபடி நீதி நம்மைத் தடுக்கும். கிறிஸ்துவின் சிலுவையில் விளங்கும் தேவ அன்பையும், நீதியையும் பாவியானவன் விசுவாசித்துத் தியானிக்கும்பொழுது,அவனுடைய இருதயத்திலிருந்து சஞ்சலமாகிய இருள் நீங்கிப் பரம சந்தோஷமாகிய ஒளி பிரகாசிக்கும்.

''இரட்சிப்புக்கு ஏதுவான தெய்வ வல்லமை'' என்று

பவுல் அப்போஸ்தலன் பிரசங்கித்துத் தெளிவுபடுத்தின சுவிசேஷம் இதுவே. இதுவே லூத்தர் பிரசங்கித்து ஐரோப்பா கண்டத்தை அநேக நூற்றாண்டுகளின் அயர்ந்த நித்திரையினின்று எழுப்பிப் போப்பு மதத்தை நிலைகுலையப் பண்ணின சுவிசேஷம். இக்காலத்திலும் இந்தச் சுவிசேஷம் தன் ஆதிவல்லமையோடு விளங்க வேண்டும் என்று நாம் விரும்பினால் நாம் இதைப் பவுல் அப்போஸ்தலன் பிரசங்கித்தபடியே பிரசங்கிக்கவேண்டும். ஞானஸ்நானம், இராபோஜனம் முதலிய ஞானதிரவியங்களின் வல்லமையினால், அல்லது சடங்குகளை ஒழுங்காய் அனுசரிப்பதினால், அல்லது நமது சன்மார்க்க யோக்கியதையினால் இரட்சிப்பு வராமல், நம்மில் அன்புகூர்ந்து நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தவர் பேரில் வைத்த விசுவாசத்தினாலேயே அது வருகிறது என்பது நமது களங்கமற்ற போதனையாய் இருப்பதாக பவுல் அப்போஸ்தலன் கொரிந்து பட்டணத்திற்குப் போனபோது அவன் நடந்து கொண்ட மாதிரியினாலே இவ்விஷயமாய் நாம் செய்ய வேண்டியதைக் கற்றுக்கொள்ளலாம். அவன் அங்கே ஒன்றுக்கொன்று எதிரிடையான இரண்டு வகுப்பாரைக் கண்டான். ஒரு வகுப்பார் உலக ஞானத்தைத் தேடினார்கள். மற்றவர்கள் அடையாளத்தைத் தேடினார்கள். ஆயினும் இருவகையாருக்கும் அவன் ''இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறையுண்டவராகப்'' பிரசங்கித்தான், அவர்கள் அதை விரும்பாதபோதிலும், அதுவே அவர்களுக்கு மிகவும் அவசியமாய் இருந்தது. அப்படியே இக்காலத்திலும் சுவிசேஷப் பிரசங்கத்திற்கு அனுகூலம் உண்டாக்க சாஸ்திரிகளோடு மூர்க்கமாய்த் தர்க்கமாடுவதோ அல்லது யாவரோடும் தாழ்மையாய்ப் பேசி ஒப்புரவாகிக் கொள்வதோ அவசியமாக இராமல், ''கிறிஸ்து வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்'' (1 கொரி. 15;3,4) என்னும் பழமையான சத்தியத்தைத் தெளிவாய் பிரசங்கித்து, மனதில் நிலைக்கப்பண்ணுவது தான் அவசியம்.

மேலும் பணிவிடைக்காரன் பிரசங்கியாய் மாத்திரமல்ல, போதகனுயும் இருக்கிறபடியால், அவன் அறியாதவர்களை யும் நெறிதப்பிப் போனவர்களையும் விசாரிப்பதோடுகூட ஏற்கெனவே கிறிஸ்தவர்களானவர்களையும் கவனித்து உழைக்க வேண்டியவனுய் இருக்கிருன். அவன் திட்டி வாசலில் நின்று மோட்ச பட்டணத்திற்குச் செல்லும் பிர யாணிகளை அதன் வழியாய் கடத்தி விடுதல் மாத்திரம் தனது வேலை என்றிராமல், வழி நெடுக அவர்கள் தங்கும் இடமெல்லாம் அவர்களைச் சந்தித்து, அவர் களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும், ஒத்தாசைகளையும் புரிவதும் தன் கடமை என்று அறிய வேண்டும். இடத் துக்கு இடம் திரிந்து பிரசங்கிக்கும் சுவிசேஷகன், பாவிகளை இயேசுவினிடத்திற்கு போக வழி திருப்பி விட்ட வுடன் யோவான் ஸ்நானகன்போல் தன் வேலை முடிந் தாயிற்றென்று திருப்தியாயிருக்கலாம். கிறிஸ்தவப் போத கனே தன் ஆடுகளுக்கு முன்பாக நடந்துபோய், அவைகள் உள்ளும் புறமும் சென்று தகுந்த மேய்ச்சலைக் கண்டு பிடிக் கும்படிக்கு அவைகளை நடத்திக் கொண்டு போகவேண்டும். அவன் பாவிகளை மனந்திரும்ப அழைப்பதோடுகூட, தன் சபையாரிடத்தில் கிறிஸ்துவுக்கேற்ற நற்குணங்கள் உற் பத்தியாகி விருத்தியடைந்து வருகிறதோ இல்லையோ என்றும் கருத்தாய்ப் பிரயாசப்பட வேண்டும். பாவி களின் குணப்படுதல் மாத்திரமல்ல, முன்னமே கிறிஸ்துவுக்குட்பட்டிருக்கிறவர்களின் திவ்விய வளர்ச்சி யும் அவனுக்கு சந்தோஷமுண்டாக்க வேண்டியது. ஆகையால் இந்த இரு வகுப்பாருக்கும் அவன் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்தால் மாத்திரம் அவனது போதக ஊழியம் அழகும் பூரணமும் உடையதாகும்.

ஆகிலும், தற்காலத்தில் இந்த இரண்டு வகுப்பாரைக் குறித்தும் சரியான கவனம் செலுத்தப்படுகிறதாகத் தோன்றுவதில்லை. ஒரு போதகனின் பிரயாசம் அனுகூலப் பட்டதோ இல்லையோ என்பதை அறிய அவனுடைய

ஊழியக்காலத்தில் புதிதாய்ச் சபையைச் சேர்ந்தவர்களின் தொகையை அளவிடுவது வழக்கம், ஆகவே, சபையின் பணிவிடையாள்களுடைய முயற்சியெல்லாம் இவ்விஷயத் திலேயே செலுத்தப்படுகிறது. அதன் பின்பு அவர் களுடைய பக்திவிருத்தியைக் குறித்துப் போதுமான பிர யாசம் எடுக்கப்படாதபடியால் அவர்களிலுள்ள திவ்விய அனல் நாளடைவில் குன்றி ஆத்தும மரணமும் அவர் களுக்குச் சம்பவிக்கிறது. ஜனங்கள் குணப்பட்டு சபையில் சேருவதற்காகப் பிரயாசப்படுவது போதகனின் முக்கிய மான வேலைதான். ஆயினும் இதுமாத்திரம் அவன் வேலை யென்று சொல்லல் ஆகாது. உழுகிறவன் விதைக்கிறதற் காக நாள்தோறும் உழுகிறதுண்டோ? தன் நிலத்தை கொத்தி நாள்தோறும் பரம்படிக்கிறதுண்டோ? அவன் அதை மேலாக நிரவினபின்பு அதற்கேற்ற இடத்தில் உளுந்து தெளித்து, சீரகம் தூவி முதல்தரமான கோதுமையும், வாற்கோதுமையும், கம்பும் விதைக்கிறான் அல்லவோ? அவனுடைய கடவுள் அவனுக்கு நன்றாய்ப் போதித்து உணர்த்துகிறார். விவசாயத்திற்கு உழவு மாத் திரம் போதாது. அதுபோல, சபையாரின் ஞான வளர்ச்சிக்கு, ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி யுங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்'' என்று பிரசங்கித்து விடுவது மாத்திரம் போதாது. அதைப் பார்க் கிலும் அதிக முயற்சிக்க வேண்டும். விசுவாசம் அவசியமே. ஆயினும் அது பரம ஏணியின் முதற்படி மாத்திரமாகும். ஆகையால் நமது போதனையைக் கேட்கும் ஜனங்கள் தங்கள் விசுவாசத்தில் நற்குணத்தையும், நற்குணத்தில் அறிவையும், அறிவில் தன்னடக்கத்தையும், அடக்கத்தில் பொறுமையையும், பொறுமையில் தெய்வ பக்தியையும், தெய்வபக்தியில் சகோதர சிநேகத்தையும், சகோதர சிநே கத்தையும், சகோதர சிநேகத்தில் அன்பையும் கூட்டி வழங்குமட்டும் நாம் மெத்தனவாய் இருக்கக்கூடாது (2 பேதுரு 1:5-7). ஏனெனில், அவர்கள் தாங்கள் அழைக் கப்பட்டதையும் தெரிந்தெடுக்கப்பட்டதையும் நிச்சயப் படுத்துகிறதற்கு வேறே வழியில்லை.

இவ்வாறு பேதுரு அப்போஸ்தலன் பெந்தெகொஸ்தே நாளிலும் கொர்நேலியுவின் வீட்டிலும், பவுல் அப்போஸ்தலன் சிறைச்சாலைக்காரனுக்கும், தெசலோனிக்கே, பெரோயா ஊர்களிலும் இரட்சண்ய வழியைக் கூறினது போல் மாத்திரம் நாம் கூறுவது போதாது. அப்போஸ்தலர்கள் பிற்பாடு நிருபங்களை எழுதியனுப்பிச் சபைகளை ஸ்திரப்படுத்திச் செய்த வேலையையும் நாமும் செய்யவேண்டும்.

பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினதுபோல் நாம் எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் குற்றத்தை எடுத்துக்காட்டி கடிந்து கொண்டு புத்தி சொல்ல வேண்டும் (2தீமோ. 4:2). அன்றியும் ஜனங்களுக்குள்ளே அதிக சாதாரணமாய் நடக்கிற பாவங்களை எடுத்துக் காட்டி கண்டிப்பதும், பாவத்துக்கேதுவான சோதனைகளைக் குறித்து எச்சரிப்பதும், அதிக நிறைவான பரிசுத்தத்தை நாட எழுப்பிவிடுவதும், விசுவாசத்தின் கிரியைகளுக்கும், அதன்பின் பிரயாசங்களுக்கும் உற்சாகப்படுத்துவதும் நமது கடமை.

இப்படி நாம் ஜனங்களுக்குள் நடக்கிற தீயவழக்கம் ஒன்றை கண்டிக்கும்பொழுது, சிலர் நம்மைப் பார்த்து போதகர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும்; மற்ற காரியங்களைக் குறித்து அவர்களுக்கு அக்கறை என்ன? என்றும், ''இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையுண்ட அவரையே அன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருத்தேன்'' என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறார் அல்லவா? என்றும் குறை சொல்வார்கள். அப்படிச் சொல்கிறவர்கள் மேற்படி வாக்கியத்தின் கருத்தையாவது சுவிசேஷ போதனையின் தன்மையையாவது நன்றாய் உணர்ந்தவர்கள் அல்ல. சுவிசேஷமானது மனிதருடைய பரிசுத்தத்துக்கும் பாக்கியத்துக்கும் ஏதுவான விஷயங்கள் அனைத்தோடும் சம்பந்தப்பட்டது. போதகன் தன் பிரசங்கங்களின் இந்தக்

சம்பந்தத்தை சுட்டிக்காட்டி உணர்த்துவது மெத்தவும் அவசியமும் அவன்மேல் விழுந்த கடமையாய் இருக்கிறது. இப்படி அவன் நன்மையான சகல விஷயங்களிலும் தன் சபையாரைத் தேற்றி உயர்த்துவதற்குச் சிலுவையையே பலத்த கருவியாக கையாள வேண்டும். அதனுல் அவனுடைய போதனைகள் விசுவாசிகளுக்கு உதவியாக இருப்பதுமன்றி பாவிகள் குணப்படுவதற்கும் ஏதுவாயிருக்கும். மெய்க்கிறிஸ்தவனுக்கு ஆலோசனையும் எழுப்புதலுமான வார்த்தைகளைப் பேசும்பொழுதே குணப்படாதவர்களின் இருதயங்களையும் மனசாட்சியையும் அசைப்பதும், பாவிகளை உணர்த்தத்தக்கதாய்ப் பேசும் தருணத்திலே பரிசுத்தவான்களை உற்சாகப்படுத்தி எழுப்புவதும் கூடிய காரியம் என்பதை அறியவேண்டும். இவ்விஷயத்தில் நாம் ஞானமாய் நடந்தால், நமது பிரசங்கம் ஒவ்வொன்றிலும ஒவ்வொருவருக்கும் பிரயோஜனமான வார்த்தைகள் இருக்கும்படி தீர்மானித்துக் கொள்வோம்.

அந்த நோக்கம் கைகூடுவதெப்படி என்று விசாரித்தால், அதற்கு வழி மேற்சொல்லிய நிருபங்களைக் கருத்தாய்ப்படிப்பதனுல் தெரியவரும். கொரிந்து சபையாருக்குள் என்னென்ன நற்பயன் உண்டாக்க வேண்டும் என்று அப்போஸ்தலன் கருதினுனே, அக்கருத்தை கிறிஸ்துவின் சிலுவையைக் கொண்டே நிறைவேற்ற முயற்சித்திருக்கிறதாகக் காண்கிறோம்.

எடுத்துக்காட்டாக மேற்படி சபையில் தோன்றின சில பிரிவினைகளைக் கண்டிக்கும் இடத்தில், அவன் ''கிறிஸ்து பிரிந்திருக்கிருரா? பவுலா உங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டான்? பவுலின் நாமத்தினுலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்'' என்கிருன். (1 கொரி. 1:12). இவ்விதமாய் ஐக்கியத்திற்கும் சகோதர சிநேகத்திற்கும் பலத்த நியாயம் காட்டும்பொழுதே, ஓர் ஏழைப்பாவி ஆவலோடும் சந்தோஷத்தோடும் பற்றிக்கொள்வதற்கேதுவாகச் சுவிசேஷத்தைத் தெளிவாயும் பூரணமாயும் கூறுகிருன்.

மேலும், குற்றவாளிகளைச் சிட்சித்துச் சபையைப் பரிசுத்தமாய்க் காத்துக் கொள்ளக் கற்பிக்கும்போது, ''நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப் போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிருரே'' என்று சொல்லுகிருன் (1 கொரி. 5:7). அப்படியே விபசார பாவத்தைக் கண்டிக்கையில், ''உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே! ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்திஞலும் உங்கள் ஆவியிஞலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்'' என்கிருன் (1 கொரி. 9:19,20). இந்த வாக்கியத்திஞலும், பாவத்தினிமித்தமும் அவர்களைக் கடிந்து கொள்ளுகிறதோடுகூட, சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவையும் அவர்களுக்குப் பிரசங்கித்திருக்கிருன் என்று பார்க்கிரேம்.

ரோமப்பட்டணத்தில் பாழாய்க்கிடந்த ஒரு முக்கியமான கட்டடத்தைப்பற்றிய ஒரு கதை உண்டு; அதாவது, அக்கட்டடத்திலிருந்து ஜனங்கள் கற்களை ஒவ்வொன்ருய் எடுத்துக் கொண்டு போய் அவைகளைத் தங்கள் சொந்த காரியங்களுக்கு உபயோகித்து வந்தார்கள். இவ்வாறு கட்டடம் முழுவதும் அழிந்து போகிறதை அக்காலத்துப் போப்பானவன் கவனித்து, அதைத் தடுக்கும்படி மீதியான கட்டடத்தைப் பிரதிஷ்டைப்பண்ணி அதில் சிலுவை ஒன்றை நாட்டிஞன். அது முதல் ஜனங்கள் அந்தக் கட்டடத்திலிருந்து கற்களைப்பெயர்ப்பது கோவிற்கொள்ளை என்று எண்ணித் தங்கள் வழக்கத்தை விட்டு விட்டார்களாம். அப்படியே, பவுல் அப்போஸ்தலனும் கிறிஸ்துவின் சிலுவையை மனிதருக்கு முன்பாக நிறுத்தி, விசுவாசியானவன் தன் ஆசைகளையும் சக்தியையும் காலத்தையும் தன்

ஆண்டவருக்கே சமூலமாய்த் தத்தஞ் செய்யவேண்டியதே யொழிய, அவன் அவற்றில் எதையாவது வேறுவகை யாய்ச் செலுத்தினுல் அது கோவிற் கொள்ளைப் போன்ற மகாபாவம் என்று உணர்த்துகிருன்.

இன்னும் ஒரு திருஷ்டாந்தத்தைக் கவனிப்போம். எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குத் தர்மப்பொருள் சேகரிக்கும்படி பவுல் கொரிந்தியரை ஏவினபொழுது, அவன் எடுத்துக்காட்டின நியாயத்தில் மிகத்தெளிவும் சாரமுமான சுவிசேஷப்பிரசங்கம் ஒன்று அடங்கியிருக் கிறது. எப்படியென்ருல், ''நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினுலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரராளுரே'' என்று சொல்லுகிருன் (2 கொரி. 8:9). எருசலேமிலுள்ள ஏழைகளுக்குப் போது மான பொருள் சேகரிக்கக் கொரிந்தியரை எழுப்புவது அவனுடைய நோக்கம். ஆகிலும் அதைக் குறித்து எழுதிவரும் மத்தியில் மகா சிறப்பும் வல்லமையும் பொருந்திய வார்த்தைகளினுல் சுவிசேஷத்தைப் பிரசங் கித்திருக்கிருன். ஆ! இது எவ்வளவோ ஆச்சரியமாய் இருக்கிறது. இந்த திருஷ்டாந்தங்களைப் பார்க்கும் பொழுது, கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டவராகப் பிரசங்கிக்க வேண்டும் என்று அப்போஸ்தலன் சொன்ன தின் கருத்து இன்னதென்றும், பரிசுத்தவான்களாயிருக்க அழைக்கப்பட்டவர்களுக்குப் பிரசங்கிக்கும் பொழுதோ பாவிகளுக்கும் ஏற்ற வார்த்தைகளைக் கூறுவது எப்படி யென்றும் அறிந்து கொள்ளலாம். இத்தன்மை கொரிந் தியருக்கு எழுதிய நிருபத்திற்கு மாத்திரம் உரியதல்ல; பவுல் அப்போஸ்தலனின் மற்ற நிருபங்களிலும், யோவான், பேதுரு, யாக்கோபு என்னும் அப்போஸ்தலர் களின் நிருபங்களிலும் இது விளங்குகிறது. அவைகளை நாம் கருத்தாய் படித்தால் சுவிசேஷப் பிரசங்கமானது கிறிஸ்துவினிடத்திற்கு வாருங்கள் என்னும் அழைப்பைத்

திரும்பத்திரும்பக் கூறுவதாய் மாத்திரம் இராமல், இன்னும் அநேக அருமையான சத்தியங்களைப் போதிப்பதாயும் இருக்கிறது என்று கண்டு கொள்வோம். பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த வண்ணம் நாமும் பிரசங்கிப்போமானல், அது மனுஷர்களுடைய நடக்கைகள் உணர்வுகள் ஒவ்வொன்றையும் தொடக்கூடியதென்றும் சிலுவையை அவர் உபயோகித்த வண்ணம் நாமும் உபயோகித்தால், அது இருதயத்தை ஊடுருவத்தக்க பலமுள்ள ஆயுதம் என்றும் அறிவோம். இப்படிச் செய்யும் பொழுது நமது பிரசங்கப்பீடம் எதிரே இருக்கிற பொருளை மாத்திரம் தாக்கதக்க பீரங்கி ஏற்றிய ஒரு கொத்தளம் போல் இராமல், எப்பக்கத்திற்கும் திருப்பக்கூடிய பீரங்கி ஏற்றிய கோபுரம்போல் இருப்போம். அதன் மூலமாய் நாம் சகலவீத அவபக்திகளையும், தற்பொழிவையும் பாவத்தையும் தாக்கக்கூடியவர்களாய் இருப்போம். இவ்விதமாய் நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தால் ''பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்'' என்னும் ஒரே சத்தியத்தைக் கிளிப் பிள்ளைப்போல் மாறி மாறிச் சொல்லிக் கொண்டு நிற்கிறவர்களாயிராமல், கிறிஸ்துவின் சிலுவையில் விளங்கும் மகத்தான சத்தியங்கள் அனைத்தையும் மனித ஜீவியத்தின் பற்பல நிலைமைகளுக்கும் சம்பவங்களுக்கும் ஏற்றவிதமாயும், மெய்க்கிறிஸ்தவனுக்குக் கைகொடுத்துதவத்தக்கதாயும், பாவியை வழிமறித்துத் திருப்பத்தக்கதாயும் பிரசங்கிக்க வல்லவர்களாய் இருப்போம். இதனல். கல்வி சாஸ்திரங்தளிலிருந்து நாம் எடுக்கக்கூடிய உபமானங்களையும், பெற்றுக் கொள்ளக் கூடிய சகாயங்களையும் உபயோகித்தலாகாது என்பது கருத்தல்ல, அவைகளையும் உபயோகிக்கலாம் ஆகிலும் அவைகளை முக்கியப்படுத்துவதற்கல்ல, நமது பிரசங்கத்தின் நடுநாயகமாகிய கிறிஸ்துவைப்பற்றிய உபதேசத்தை அதிக தெளிவாய் விளக்குவதற்கே அவைகளை உபயோகிக்கலாம். சத்தியமாகிய சமுத்திரத்தில் நாமும் நம் சபையாரும் யாத்திரை செய்கையில் சிலுவையின் உபதேச

மாகிய திசையைவிட்டு அலேயாதபடி மாத்திரம் கரிசனே யாய் இருக்கவேண்டும். கிறிஸ்துவின் சிலுவையை நாம் இந்த விதமாய் உபயோகிப்போமாகில், அதைப்போல் அதிக பலமான, நலமான கருவி ஒன்றுமில்லே. ஆகையால் பவுல் அப்போஸ்தலன் வைத்த முன் மாதிரிப்படி சிலுவை யின் உபதேசத்தை நாம் கையாடத் தீர்மானித்துக் கொள்வோமாக. இப்படிச் செய்வோருடைய போதக ஊழியத்தினுல் ஒருவேளே மார்க்க சம்பந்தமான பெரிய அதிர்ச்சிகள் உண்டாகாதிருக்கலாம். ஆகிலும் பாவிகள் குணப்படுகிறதினுல் சந்தோஷமும், நமது 'பிள்ளேகள் சத்தியத்திலே நடக்கிருர்கள்'' என்கிற மகிழ்ச்சியும் உண்டாகும். ஆண்டவர் தமது போதக வேலேயை ஆரம் பித்தபொழுது எவ்வித ஆவியோடு அதைத் தொடங் கினுரோ அந்த ஆவியோடு பிரசங்க வேலேயில் பிரவேசித்து, ''கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிருர்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னே அபிஷேகம் பண்ணினுர்; இரு தயம் நொருங்குண்டவர்களுக்குக் காயம் கட்டுதலேயும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலேயையும், கட்டுண்டவர் களுக்கு கட்டவிழ்த்தலேக்கூறவும், கர்த்தருடைய அனுக் கிரக வருடத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிகட் டும் நாளேயும் கூறவும், துயரப்பட்ட அனேவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனிலே துயரப்பட்டவர்களேச் சீர்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாக சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்தத் தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாக துதியின் உடையையும் கொடுக்கவும் அவர் என்னே அனுப்பினுர்'' (ஏசாயா 61:1-3) என்று தன்னேக் குறித்துச் சொல்லக் கூடியவன் பெரும் பிரயோஜனம் உள்ளவனுய் இருப்பான். நாமும் போய் இவ்வித ஆவியோடு இந்த வேலேயைச் செய் வோமாக. கிறிஸ்துவின் சிலுவையே அதற்குப் பலத்த ஆயுதமாய் உபயோகிப்போமாக. இந்த வேலே நாம் நமது

சத்துவங்களையும் திராணிகளையுமெல்லாம் கூட்டிச் செய்ய வேண்டிய வேலை. நாம் இவ்வேலையை இப்படிச் செய்யும்போது, நமக்குக் கிடைக்கும் சித்தியானது நமது இருதயத்தைப் பூரண மகிழ்ச்சியினாலும் உற்சாகத்தினாலும் நிரப்பும்.

12

பிரசங்க வகைகள்

இன்ன பிரசங்கம் இன்ன வகை என்று பிரசங்கங்களை விதவிதமாய் வகுப்பது மிகவும் பிரயோஜனமான காரியம். எப்படியென்ருல்: 1. இப்படி வகுப்பதினுல், பிரசங்கி தான் அறிந்திருக்கிற விஷயங்களை அதிக நேரத்தைக் கழிக்காமல் பிரசங்கத்திற்கு உபயோகமாய் ஒழுங்குபடுத்தக்கூடும். 2. பிரசங்கங்களைப் பற்பலவகையாய் வகுத்துக்கொள்வதினுல் வேளைக்குவேளை வெவ்வேறு விதமான விஷயங்களைக் குறித்து பிரசங்கிக்க ஏதுவுண்டாகும். 3. பிரசங்கம் இன்ன வகையென்று தீர்மானிப்பதினுல் வேறே வகையான பிரசங்கத்திற்குரிய பொருளையும், நடையையும் அதோடு குழப்பாதபடி உதவியாய் இருக்கும். பிரசங்கங்களை 1. வியாக்கியானப் பிரசங்கம், 2. போதனைப் பிரசங்கம், 3. உபதேசப் பிரசங்கம்; 4. கடமைப் பிரசங்கம், 5. பல்வகைபட்ட பிரசங்கம் என ஐந்து வகுப்பாய்க் கொள்ளலாம்.

1. வியாக்கியானப் பிரசங்கம் — வேத புத்தகத்தில் ஒரு வாக்கியத்தை அல்லது ஒரு பகுதியைத் தெரிந்து கொண்டு அதன் சாரத்தை விஸ்தரிப்பது வியாக்கியானப் பிரசங்கமாகும். தேவ வசனத்தின் பொருளை ஜனங்கள் சரியாய் அறியவேண்டுமென்று விரும்புகிற சகல பிரசங்கிகளும், வேளைக்குவேளை இவ்வித பிரசங்கமும் செய்யத்தக்கது என்று ஒத்துக்கொள்வார்கள். வியாக்கியானம் பிரசங்கத்தில் கடவுள் அதிகமாயும் மனிதன் கொஞ்சமாயும் பேசு

கிறூர்களென்றும் கிறிசொஸ்தம் என்னும் குருவானவர் சொல்லியிருக்கிறூர். ஆதிச்சபையில் வியாக்கியானப் பிரசங்கம் சாதாரணமும், தனித்த வாக்கியங்களை அல்லது விஷயங்களைக் குறித்துப் பிரசங்கம் அபூர்வமாயும் இருந்தன. வியாக்கியானப் பிரசங்கத்தின் பிரயோஜனம் மிகுதி. அது பிரசங்கிக்கு நன்மை. அவன் ஒரு புதுமாதிரியான பிரசங்கம் செய்ய ஏதுவுண்டாகிறது. தேவ வசனத்தின் அநேக பாகங்களைத் துல்லியமாயும் தொகுப்பாயும் ஆராய்ந்து கற்றுக்கொள்ள இதனுல் அவன் ஏவப்படுகிறுன். பிரசங்க வாக்கியத்தைத் தெரிந்துகொள்வதில் நேரிடக்கூடிய சந்தேகத்தையும் கால தாமதத்தையும் நிவிர்த்தியாக்க இது மெத்தவும் உதவுகிறது. மேலும், இவ்விதப் பிரசங்கத்தினுல் நாம் தேவ வசனத்தில் அடங்கியிருக்கிற போதனைகள் முழுவதையும் பார்க்க நேரிடுகிறபடியால் மனித உபதேசமான ஒரு கொள்கைக்கு அடிமைப்படாதபடி அது நம்மைக் காக்கிறது. மக்களுக்கு இது மிகவும் உபயோகமானது. எப்படியெனில் இதனுல் அவர்கள் வேத சத்தியங்களில் அநேகத்தை ஒருமிக்கக் கவனிக்கவும், அவைகளை வேத புத்தகத்தில் சொல்லியிருக்கிற ஒழுங்கின்படியும் சம்பந்தத்தின்படியும் படிக்கவும் ஏவப்படுவார்கள். விளக்கப்படுகிற விஷயத்தோடு சம்பந்தப்பட்டிருந்தும், பிரத்தியேகமான ஒரு பிரசங்கத்தில் விசேஷித்துச் சொல்லக்கூடாத முக்கிய விஷயங்களை அவர்களுக்கு முன்பாகக் கொண்டுவரவும், அதிக விசேஷமான வாக்கியங்களை ஞாபகத்தில் பதிக்கவும் தேவ வசனத்தை ஜனங்களின் பக்திவிருத்திக்கு அனுகூலமாய் வாசிக்கப் பழகவும் வியாக்கியானப் பிரசங்கம் ஏதுவாயிருக்கும்.

மேற்சொல்லிய முகாந்தரங்களினுல், ஒவ்வொரு பிரசங்கியும் வேதாகமத்தில் ஒரு தொடர்பான பாகத்தை எடுத்து ஜனங்களுக்கு அறிவும் எழுப்புதலும் உண்டாக்கத்தக்க விதமாய் விளக்கத் திராணியும் விருப்பமுமுள்ளவனுய்

இருக்க வேண்டுமென்பது எளிதில் புலப்படும். இதில் திராணியுள்ளவனுகிறதற்குக் கருத்தான படிப்பும், விடா முயற்சியான பழக்கமும் அவசியம். வியாக்கியானப் பிரசங்கத்திற்கு அனுகூலமாக வியாக்கியானப் புத்தகங் களை நன்ருய்க் கற்க வேண்டும். மேற்படி பிரசங்கத்தைத் தொடர்பாய் செய்ய பிரயத்தனிக்கிறவர்கள் அது ஜனங் களுக்கு அலுப்பாயிராதபடிக்குச் சாரமான காரியங் களையே சொல்லப் பிரயாசப்படவேண்டும். வேத புத்தகத்தி லுள்ள அதிகாரங்களிலும் மற்ற பகுதிகளிலும் மாத்திர மல்ல; பத்து கற்பனைகள், மோசே, பேதுரு, பவுல் முதலிய மகாத்துமாக்களின் சரித்திரம், தீர்க்க தரிசனங்கள், மலைப் பிரசங்கம், அற்புதங்கள், தேவ சர்வாயுதவர்க்கம், மாம் சததின் கிரியைகள், ஆவியின்கனி முதலிய விஷயங்கள் பேரிலும் வியாக்கியானப் பிரசங்கம் செய்யலாம்.

2. **போதனைப் பிரசங்கம்**—சாதாரணமாய் போதனை வியாக்கியானப் பிரசங்கத்தின் கடைசியில் அல்லது உப தேசப் பிரசங்கத்தின் கடைசியில் செய்யப்படும் உபதேசங் களையும் கடமைகளையும் குறித்து நல்ல அறிவுள்ள சபை களில் இவ்விதப் பிரசங்கம் செய்வது அதிக தகுதியாயிருக் கும். சபைகளில் திவ்விய எழுப்புதல் உண்டாகும் காலங் களிலும் இது மெத்த அவசியம். ஆகிலும், வேத வாக்கியங் களையும் உபதேசங்களையும் பீடிகையாய் வைத்துக் கொண் டாலொழிய இவ்வகைப் பிரசங்கத்தினுல் அதிக பலன் உண்டாகமாட்டாது. புத்திமதி சொல்லுதலே போதுமான தல்ல, என்ருலும் இவ்வரம் நாம் மிகவும் விருப்பிப் பழகத் தக்கது. அதன் முக்கியத்தைக் குறித்து அனுபவசாலியான ஒரு பிரசங்கி எழுதினதைத் தெரிவிக்கிறேன். உணர்வும் சாதுரியமும் தெளிவுமாய் புத்திமதி சொல்லிச் சபையாரை எழுப்பி விடாமை மிகவும் பெரிய குறைச்சல். இருண்ட புத்திக்கு அறிவு புகட்டுவது மாத்திரமல்ல, கடின இருதயத்தை உணர்த்தி, மந்தமான மனசாட்சியை எழுப்பப்பிரயாசப்படுவதும் போதகனின் கடமை. பயிர்களின்

வளர்ச்சிக்கு ஒளி வேண்டும். அதுபோல தேவபக்தியின் வளர்ச்சிக்கு அறிவு வேண்டும். பயிர்களின் வளர்ச்சிக்கு ஒளி மாத்திரம் போதாது; கடின உழைப்பும் அறிவும் தேவை. அப்படியே பக்தி வளர்ச்சிக்கும் அறிவு புகட்டத் தக்க வியாக்கியானப் பிரசங்கத்தோடுகூட ஆத்துமாவை எச்சரித்து எழுப்பத்தக்க புத்திமதியுள்ள பிரசங்கமும் அவசியம். இவ்வகையில் பவுல் அப்போஸ்தலன் காட்டிய மாதிரி நமக்கும் ஏற்றது. நம்மிடம் பிரசங்கம் கேட்கிறவர்களின் வேத அறிவு அதிகமும், நடக்கையோ சொற்பமுமாய் இருக்கிறதென்று யாவரும் ஒத்துக்கொள்வார்கள். ஆகையால், ஜனங்கள் தாங்கள் அறிந்த அறிவுக்கு இசைவாய் நடக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொல்லி மன்றுடி எச்சரிப்பது நமது மேல் விழுந்த பெரிய கடமை. நமது இருதயங்கள் நன்மைக்கு மந்தமாயிருக்கிறதுமன்றி, நன்மையை விரோதிக்கிறவைகளாயும் இருக்கின்றன. நாம் பிரசங்கிக்கிற சத்தியங்கள் மனிதருடைய விருப்பத்திற்கு இசைவாய் இருக்குமானல் நாம் கலைக்கியானிகள் போல் உபநியாசம் செய்துவிட்டுச் சும்மாயிருக்கலாம். அந்தச் சத்தியங்களோ அவர்களுக்கு வெறுப்பாயிருக்கிறது. மனிதர்கள் தேவ வசனத்தின் சாட்சியையும், மனசாட்சியின் எச்சரிப்பையும் மீறி தங்கள் பொல்லாத இருதயம் இச்சிக்கிற உலக இன்பத்தை நாடி, நித்திய நாசத்துக்குள் விழ விரைந்தோடுகிருர்கள். அப்படி இருக்க, நாம் அவர்களுக்கு வேத சத்தியத்தைத் தெளிவாய் விஸ்தரித்துப் பலமாய் ரூபகாரப் படுத்தினலே போதுமென்று திருப்தியாயிருக்கலாமா? இதோஒரு மனிதன் தன்னைக் கொல்லும்படியாக விஷம் நிறைந்த பாத்திரத்தைத் தன் கையில் எடுத்து வாயில் ஊற்றப்போகிருன் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது நாம் அவனிடத்தில் தற்கொலையின் தோஷத்தைக் காட்டுகிற ஒரு நல்ல பிரசங்கம் செய்து, இனி அவன் பாஷாணத்தைக் கீழே ஊற்றினல் ஊத்துவான், குடித்தால்

குடிப்பான். எப்படியும் நமது கடமை தீர்ந்ததென்று சொல்லித் திரும்புவோமா? உயிரை மாய்த்துக்கொள்ளுகிறதற்கு உயர்த்தப்பட்ட கையைப் பிடித்து பாத்திரத்தைப் பறித்து, அவன் ஒரு பயங்கரமான காரியத்தைச் செய்யாதபடி அவனேடு வாதாடிக் கெஞ்சுவோம் அல்லவா? பாவிகளும் இப்படியே தற்கொலே செய்யத் துணிந்து நிற்கிற பாதகனைப்போல் தங்கள் ஆத்துமாக்களைக் கொல்லுகிறவர்களாய் இருக்கிருர்கள். அவர்கள் தங்கள் பாவங்களோடும் குணப்படாத இருதயத்தோடும் படுகுழியில் விழுகிறதற்கு ஓடுகிருர்கள். இதைக் காண்கிற நாம் சுவிசேஷ சத்தியம் அடங்கியதும், தெளிவு, நியாயப்பெலன் முதலிய சிறப்புகள் அமைந்ததுமான இரண்டொரு பிரசங்கம் செய்துவிட்டு, அது போதுமென்று நம்மைத் தேற்றிக்கொள்ளலாமா? பாவியின் நெஞ்சத்தில் உணர்வையும், அனலேயும், ஆசையையும் பிறப்பிக்கவும், கேட்டுக்குப் போகிற பாதையினின்று அவனைத் திருப்பவும் தக்க பலத்த புத்திமதிகளினுலும், போராட்டமான ஏவுதல்களினுலும் காரமான எச்சரிப்புகளினுலும், உருக்கமான கெஞ்சுதல்களினுலும் அவனேடு மல்லுக்கட்ட வேண்டியதல்லவா? நாம் அப்படிச் செய்யாவிட்டால் அது பெரிய குற்றமாம்.

3. **உபதேசப் பிரசங்கம்** — கிறிஸ்து மார்க்கத்துக்குரிய சத்தியங்களை விஸ்தரித்துக் காட்டும் பிரசங்கம் உபதேசப் பிரசங்கமாம். இந்தச் சத்தியங்களை மனுஷருக்குப் போதிப்பது பிரசங்கியின் வேலேயில் முக்கியமான ஒரு பாகமாதலால் ஒவ்வொரு போதகனும் உபதேசங்களை மிகுந்த பிரயாசத்தோடும் யோசனையோடும் கற்று அறிந்து சபைக்குப் பிரசங்கிப்பது அத்தியந்த அவசியம். கிறிஸ்துமார்க்க சத்தியங்கள் சரியான விதமாய் போதிக்கப்படாத சபைகளில் அம்மார்க்கம் ஒருக்காலும் விருத்தியடைந்து ஓங்காது. ஆகையால் ஒவ்வொரு போதகனும் தன் ஜனங்கள் உபதேசங்களைக் குறித்து அறிவு அடைகிறதற்கு நன்ருய்ப் பிரயாசப்

பட வேண்டும். உபதேசங்களைப் போதியாமல் சபையை எழுப்பிக்கட்டப் பிரயத்தனிப்பது அஸ்திபாரமும் ஆதாரமும் இல்லாமல் வீடு கட்டத்துணிவது போலாம். உபதேசங் களைச் சிலர் வெறும் எலும்பென்று பகடியாய்ச் சொல்லுவார் கள். ஆனாலும் எலும்பில்லாமல் வெறும் தசையும் இரத்தமு முள்ள தேகம் எப்படிப்பட்டதாயிருக்கும்? உபதேசப் பிர சங்கம் செய்யும்பொழுது உபதேசத்திற்கும் நடக்கைக்கு முள்ள சம்பந்தம் விளக்கத்தக்கதாகப் பேசாவிட்டால், அப்பிரசங்கம் எலும்புக்கூடு போலிருக்கும். அந்தக் குற்றம் பிரசங்கத்தினுடையதல்ல, பிரசங்கியில் தானிருக் கிறது. அப்படிப்பட்ட பிரசங்கத்தினுல் அதிகப்பிரயோ ஜனம் உண்டாகாது. ஆகையால் உபதேசமும் கடமையும் விரவி வரவேண்டும். பிரசங்க பீடமானது வெறும் சத் தியங்களையாவது தத்துவ ஞானங்களுக்கடுத்த பொருளை யாவது எடுத்துக் கூறிக்கொண்டு நிற்கத்தக்க இடமல்ல; அது வேத சத்தியங்களை எடுத்து விளம்பி விஸ்தரித்து உதாரணங்காட்டி பொய்யுரையாத தெய்வ வசனத்தின் சாட்சியை எடுத்துக்கூறி திருஷ்டாந்தப்படுத்தி மனதில் பதியவும் இருதயத்தில் உரைக்கவும் செய்ய வேண்டிய இடமே.

4. கடமைப் பிரசங்கம் — கிறிஸ்தவர்கள் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றைத் தெரிந்துகொண்டு அதை விவரித்து வற்புறுத்துவது கடமைப் பிரசங்கமாம். ஒருவிதமாய் எல்லாப் பிரசங்கங்களும் கிறிஸ்தவர்களின் கடமைகளை வற்புறுத்திக் காண்பிக்க வேண்டியவையே. ஆயினும், இக்கடமைகள் அநேகமாயும் முக்கியமாயும் ஆள் ஆளாகவும் குடும்பம் குடும்பமாகவும், சபை யாகவும் கைக்கொள்ளப்பட வேண்டியவைகளாயும் இருக் கின்றன. அவைகளைத் தனித்தனியாகவும் நுட்பமாயும் விஸ்தரிப்பதற்கு வெவ்வேறு பிரசங்கங்கள் அவசியம். கிறிஸ்தவ சபையைச் சேர்ந்த ஒவ்வொரு வகுப்பாரும் தமக்குரிய கடமைகளைக் குறித்து உணர்த்தப்படுவது

அவசியம். ஆகையால் ''கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமுமாய்'' என்று சொன்னாற் போல் இவைகளைக் குறித்துத் திரும்பத் திரும்ப பிரசங்கிக்க வேண்டும்.

நமது போதனை பலப்படுகிறதோ இல்லையோ என்பதை ஜனங்களின் நடக்கையால் அறியலாம். ஆகையால் உத்தம போதகர்கள் எல்லாரும் ஜனங்கள் கடவுளின் கட்டளைகளையும் நியமங்களையும் கைக்கொள்ளும்படிக்கு, அவர்களுக்குத் தாபந்தத்தோடும், கண்ணீரோடும் புத்தி சொல்லி எழுப்புவது தங்கள் முக்கியமான கடமை என்று அறிவார்கள்.

கீழ்ப்படிதலுக்கும் கீழ்ப்படியாமைக்கும் ஊற்று இருதயமே. இருதயத்தில் ஞான ஜீவன் இருக்குமானால் தேவ பக்தியும் அதில் இருக்கும். ஆகையால் உண்மையுள்ள போதகன் ஒவ்வொருவனும் மனந்திரும்புதல், விசுவாசம், நம்பிக்கை, அன்பு, ஜெபம், தருமம், தேவாராதனை, பரிசுத்த நியம ஆசரிப்பு முதலிய கடமைகளைக் குறித்து திரும்பத் திரும்ப அனலாய் பிரசங்கித்து எச்சரிப்பதுமல்லாமல், தன் பிரசங்கமும் நன்மாதிரியும் சபையாருக்குப் பயன்படுகிறதா என்றும், ஒவ்வொரு பிரசங்கத்தினாலும் ஆத்துமாக்கள் சத்திய வசனத்தினால் பிறக்கிறார்களா என்றும், சத்தியத்தினால் அவர்கள் பரிசுத்தராகி வருகிறார்களா என்றும், கருத்தாய்ப் பார்ப்பான். தேவ வசனத்தினால் இருதயங்களை உருவக்குத்தவும், இரட்சிக்கப்பட நான் என்ன செய்வேன் என்ற கேள்வி சபையாருக்குள் அதிகம் அதிகமாய்ப் பிறக்கவும் போராட்டமாய்ப் பிரயாசப் படுவான். ஜனங்கள் தன்னை மெச்சிப் பேசவேண்டும் என்று விரும்பி, அவன் ஒருபோதும் பிரயாசப்பட மாட்டான்.

முன் விவரிக்கப்பட்ட விதமான பிரசங்கங்கள் எல்லாப் பிரசங்கிகளுக்கும் லேசானதல்ல. ஜனங்களின் நடக்கையைக் குறித்த இவ்விதப் பிரசங்கமோ ஒருவருடைய

திராணிக்கும் மிஞ்சினதல்ல. இவ்விதப் பிரசங்கம் பயன்பட வேண்டுமானால் பிரசங்கி தான் சொல்லுகிற புத்திமதிகளைத் தன் அனுபவத்திலிருந்து எடுத்துச் சொல்லுகிறான் என்று சபையாருக்குத் தெளிவாய்த் தோன்றவேண்டும். மற்றபடி இதெல்லாம் பள்ளிப்பாடம், அல்லது பிரசங்க சாதுரியம் என்று சொல்லத் தக்கதாய் இருந்தால், அதனால் ஜனங்களுக்கு யாதொரு பலனும் இல்லை. பிரசங்கியின் வார்த்தைகள் அவன் அனுபவத்தில் உற்பத்தியாயின என்று சபையார் காணும்போது அவனுக்குக் கருத்தாய்ச் செவி கொடுத்து எழுப்புதல் அடைகிறார்கள். அவனுக்கு அந்தப் பிரசங்கம் மகா இன்பமாய் இருக்கிறது. ஏனெனில் இருதயத்தின் நிறைவினால் அவன் வாய் பேசுகிறது. அவன் தான் பேசுகிற வார்த்தைகளை உணர்ந்து பேசுகிறபடியால், அவன் தன் சபையாரில் பயபக்தியுள்ள எல்லாரையும் நோக்கி, ''என்னோடேகூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்; நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக'' (சங். 34:3) என்று சொல்லக் கூடியவனாக இருக்கிறான். நியாய தோரணைகளும் தத்துவ ஞானங்களும் ஆழ்ந்த யோசனைகளும் அடங்கிய பிரசங்கங்கள் அல்ல, நடக்கையைச் சீர்திருத்தத்தக்க இவ்விதப் பிரசங்கமே போதக ஊழியத்தின் நோக்கத்தை நிறைவேற்றுகிறதற்கு மிகவும் அனுகூலமானது.

5. **நானா விஷயங்களைப்பற்றிய பிரசங்கங்கள்** — முந்தின பிரிவுகளில் அமையாத பிரசங்கங்கள் எல்லாம் இப்பிரிவில் அடங்கும். அவைகளில் முக்கியமான சிலவற்றை இவ்விடத்தில் சொல்லுவோம்.

மரணகாலப் பிரசங்கம்: மரணமானது உயிரோடிருக்கிறவர்களை நோக்கிக் கடவுள் பேசுகிற பேச்சின் சத்தம். போதகன்மார் அந்தச் சத்தத்திற்குச் செவி கொடுத்து அது மனிதருடைய இருதயங்களில் விழத்தக்கதாகப் பிரசங்கிக்க வேண்டும். சாதாரணமாய்ச் சந்திக்க முடியாதவர்களையும் துக்க வீடுகளில் காணலாம்.

ஏனெனில் மரணம் நேரிடாத குடும்பங்கள் மிகச்சில. மேலும், துக்கவீட்டாரும் அவர்கள் சுற்றத்தாரும் நல்ல ஆலோசனைக்குச் செவி கொடுக்க ஆயத்தமாய் இருப்பார் கள். நாம் சொல்லும் நற்புத்திமதிகள் அவர்கள் உள்ளத் தில் ஆழமாய்ப் பதிந்து, மெய்யான ஆறுதலின் ஊற்ருகிய கடவுளிடத்திற்கு அவர்களை வழி நடத்தும். ஆகையால் அத்தருணங்களை ஆதாயப்படுத்திக் கொள்ள ஜாக்கிரதை யாய் இருக்க வேண்டும். துக்க வீடுகளில் நாம் செய்யும் பிரசங்கமாவது சம்பாஷணையாவது மிகுந்த உருக்கமும் கிறிஸ்தவ அனுதாபமும் பொருந்தியதாய் இருக்க வேண்டும். கடவுளது சத்திய வசனத்தை மறைக்காமல் சொல்ல நாம் தைரியமாய் இருக்கவேண்டும். அப்படி யானுல் மாத்திரம் நம்முடைய வார்த்தைகள் பலன்தரும். போதகர்கள் அல்லது முக்கியஸ்தரான சபையார் இறந்து போகும்பொழுது அவர்களைக் குறித்து ஆலயத்தில் பிரசங் கிப்பது வழக்கம்; அத்தருணகங்ளில் வீண் புகழ்ச்சியான வார்த்தைகளைச் சொல்லாதபடி எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

விசேஷித்த தெய்வச் செயல்களுக்கடுத்த பிரசங்கம்: பஞ்சம், கொள்ளைநோய், பூமியதிர்ச்சி, புயல்காற்று, அக்கினிவாதை முதலிய பெரும் ஆபத்துக்காலங்களிலும் போதகர்கள் விழிப்பாயிருந்து காலத்துக்குத்தக்க புத்தி போதனைகள் அடங்கிய பிரசங்கம் செய்ய வேண்டும். அதனுல் நிலையான பயன் உண்டாகும். அப்படிப்பட்ட காலங்களில் நாம் அசதியாய் இருந்தால் மேற்சொல்லிய சம்பவங்களை வரவிட்டதினுல் கடவுளது நோக்கம் இன்ன தென்று ஜனங்கள் உணராமலும் பிரயோஜனம் அடை யாமலும் நிர்விசாரமாயிருப்பார்கள்.

மிஷன் சங்கங்கள் முதலிய தர்ம ஸ்தாபனங்களுக் கடுத்த பிரசங்கம் : சபைகள் ஒழுங்குப்பட்டுப் பெலன் கொள்ள இவ்வித தர்மக் கிரியைகளில் போதகன்மார் முன்னுக்கு நின்று ஜனங்களை உற்சாகப்படுத்துவது அவ

சியம். போதகன்மாருடைய ஆலோசனையும் அனுதாபமும் பிரயாசமும் இன்றி இந்நல் முயற்சிகள் தழைக்கமாட்டா. ஆகையால் நற்கிரியைகளைச் செய்வதும் தான தருமம் பண்ணுவதும் கிறிஸ்தவர்களுடைய சிலாக்கியமாய் இருக்கின்றனவென்று நாம் அடிக்கடி பிரசங்கித்து உணர்த்துவதும் அல்லாமல், சமயம் வாய்க்கும் போதெல்லாம் ஜனங்கள் தங்களால் இயன்ற மட்டும் பலவிதத் தர்ம விஷயங்களுக்கு உதவி செய்ய அவர்களை எழுப்பி விடவும் வேண்டும்.

மதுவிலக்கைப்பற்றின பிரசங்கம் : எந்தச் சபையிலாவது குடிவெறியும் அதற்குச் சம்பந்தமான தீமைகளும் தலையெடுக்கும்பொழுது போதகன் மௌனமாய் இராமல் அதை விளக்குவதற்குக் கண்டிப்பாய்ப் பிரசங்கிக்க வேண்டும். வெறிகொள்ளுதலுக்கும் அதற்கு அனுகூலம் பண்ணுவதற்கும் விரோதமாய் வேத வாக்கியம் எல்லாம் முறையிடுகிறது. ஆகையால் பிரசங்கிகள் ஒவ்வொருவரும் சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் இந்தப் பாவத்துக்கு எல்லாரும் விலகும்படி புத்தி சொல்லி எச்சரிக்க வேண்டியது அவசியம்.

ஓய்வுநாள் பள்ளிக்கூடம் முதலிய பாடசாலைகளுக் கடுத்த பிரசங்கம் : போதகன்மார் தங்கள் சபைகளிலுள்ள சிறுவருக்குக் கிறிஸ்து மார்க்கத்துக்குரிய கல்வி கிடைக்கப் பண்ணும் விஷயத்தில் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். ஓய்வுநாள் பள்ளிகூடங்களிலும் மற்ற பாடசாலைகளிலும் கிறிஸ்தவக்கல்வி கற்பிக்கப்படுகிறதோ இல்லையோ என்று கருத்தாய் விசாரிப்பதுமல்லாமல் பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் படிப்பைக்குறித்துக் கரிசனையாயிருக்கவும் பிள்ளைகள் ஊக்கமாய்க் கற்கவும் உபாத்திமார் தங்கள் கடமையை உண்மையாய் நிறைவேற்றவும் அவர்களை ஏவி எழுப்ப வேண்டும்.

பாலர் பிரசங்கம்: ஓய்வுநாள் பள்ளிக்கூடங்கள் நடந்தேறும்பொருட்டு உபாத்திமாரை எழுப்புவதும், புத்தகங்கள்

முதலிய தளவாடங்களைச் சம்பாதிப்பதும் ஆண்களும், பெண்களும் பிள்ளைகளும் கூடிவந்து கடவுளது வசனத்தைப் படிக்கும்படி பிரசங்கத்தின் மூலமாயும் மற்றும் அவர்களை வருந்தி அழைப்பதும் அல்லாமல், நேரே பிள்ளைகளுக்குப் பிரசங்கிக்கிறதும் போதகரைப் பொறுத்ததாய் இருக்கிறது. விசேஷமாய் ஓய்வுநாள்களில் அதற்கு நல்ல சமயம் உண்டு. போதகன்மார் பிள்ளைகளுக்கும் பிரசங்கிக்க வேண்டும். ''என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக'' என்று இரட்சகர் கொடுத்த கட்டளை இன்னும் மாற்றப்படவில்லை. போதகர்கள் அவர்களுக்கு ஜீவ அப்பத்தைப் பகிர்ந்துக் கொடுத்து அவர்கள் வளருகிறதற்கு ஏதுவாய் தேவவசனமாகிய களங்கமில்லாத பாலைக் கொடுக்காவிட்டால் இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறார்கள் என்று சொல்வது நியாயமல்ல, ஆயினும், கிறிஸ்துவின் தாசர்கள் பலர் பிள்ளைகளுக்குப் பிரசங்கித்தலை அற்பகாரியமாய் நினைக்கிறதுண்டு. பலர் அவ்வேலைக்கு ஏற்ற வரம் தங்களுக்கு இல்லை என்று போக்குச் சொல்லுகிறார்கள். அது கடமையானால் அந்தக் கடமையை நிறைவேற்றத் தகுந்த வரத்தை ஆவலாய்த் தேடவேண்டியதே.

பிள்ளைகளுக்குப் பிரத்தியேகமான பிரசங்கம் செய்வது அவசியம். ஏனெனில், முதலாவது: ''நீங்கள் புறப்பட்டுப் போய்ச் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்'' என்னும் கட்டளைக்குள் பிள்ளைகளும் அடங்கியிருக்கிறார்கள். இரண்டாவது: அவர்கள் இருதயங்கள் மிருதுவாயும் அவர்கள் மனம் தப்பு உபதேசங்களால் கெடுக்கப்படாததாயும், அவர்கள் பாவத்தினால் கடினப்படாதவர்களாயும், சத்தியத்திற்கும் நற்குணத்திற்கும் ஏற்ற திருஷ்டாந்தங்களை அவர்கள்இலகுவாய்ப் பின்பற்றக் கூடியவர்களாயும் இருப்பதினால், அவர்களுக்குச் செய்கிற பிரசங்கம் அதிகப் பயன்படத்தக்கதாய் இருக்கிறது. மூன்றாவது: கடவுள் அவர்களைக்குறித்து விசேஷித்த வாக்குத்தத்தங்களை அருளிச் செய்திருக்கிறார். நீதி. 8.32: ஏசாயா 54'13; அப்.2:39 முதலியவை காண்க.

இரண்டுவிதமாய்ப் பாலருக்குப் பிரசங்கிக்கலாம். ஒன்று சாதாரணப் பிரசங்கங்களின் இடையில் அவர்களுக்கும் பயன்படத்தக்க சில வார்த்தைகளைச் சொல்லல். பிள்ளைகளும் ஆலய ஆராதனைக்கு வருகிறபடியினாலே, அவர்களுக்கும் பிரயோஜனமான ஒரு போதனை சொல்லாமல் விடுகிறது நியாயமல்ல. அநேக போதகன்மாரோ, தங்கள் பிரசங்கங்கள் பிள்ளைகளுக்கும் பிரயோஜனப்பட வேண்டுமென்று சிறிதும் விரும்புகிறதில்லை. பிள்ளைகள் ஆராதனையில் பிரியமற்றுப் போவதற்கும் அதை அலுப்பும் வெறுப்புமாய் நினைப்பதற்கும் இது ஏதுவாகும். பிரதான மேய்ப்பரின் ஆட்டுக்குட்டிகளை நாம் இப்படி விட்டு விட்டால் அது அவருக்கு மிகவும் விசனத்தை உண்டாக்குமல்லவா? ஆகையால் பிரசங்கங்களில் பிள்ளைகளுக்குப் பிரயோஜனமான காரியங்களைச் சொல்லும்படிக்குக் கவனமாய் இருக்க வேண்டும்.

வேறொருவிதம், பிள்ளைகளுக்கு விசேஷித்த பிரசங்கஞ் செய்தல். மேலே காட்டியபடி சாதாரணப் பிரசங்கத்தில் இடையிடையே சில வார்த்தைகளை சொருகுதல் போதாது. பிள்ளைகளுக்கென்று பிரத்தியேகமானபிரசங்கமும் ஆயத்தஞ் செய்து பிரசங்கிக்க வேண்டும். அந்தச் சமயங்களில் அவர்கள் எல்லாரையும் ஒருமிக்கக்கூட்டிச் சமீபத்தில் இருத்தி வைக்க வேண்டும். வளர்ந்தவர்களும்கூட இருந்தால் அவர்களுக்கும் பிரயோஜனமாகச் சில வார்த்தைகளை சொல்ல வேண்டுமே என்று ஆலோசிக்க வேண்டாம். ஆராதனை முழுவதையும் பிள்ளைகளுக்கு எழுப்புதலும் பிரயோஜனமும் உண்டாக்கத்தக்க விதமாய் ஒழுங்குப்படுத்தி நடத்த வேண்டும். பாலர் பிரசங்கத்தில் அனுசரிக்க வேண்டிய சில முறைகளாவன:

1. பாலகருக்குச் செய்யும் பிரசங்கம் நீண்டுபோகக் கூடாது.

2. பிரசங்கப் பொருள் லேசாய் அறிந்து கொள்ளக் கூடியதாய் இருக்க வேண்டும்.

3. பேச்சு தெளிவும், சத்தம் சாதாரணப் பேச்சுத் தொனியாயும் இருக்கவேண்டும். தகுந்த உவமானங்களைச் சொல்வது அவசியமாயினும் அவை நீளமாய் இருக்கத் தேவையில்லை.

4. கவனத்தைக் கவர்ந்துகொள்வது முக்கியமான காரியம். பிள்ளைகள் பிரசங்கத்தைக் கவனிக்கவில்லையானால் அவர்களுக்கு அதனால் பிரயோஜனமில்லை. ஆகையால், அவர்களைக் கவனிக்கப்பண்ணும் பொருட்டு அடிக்கடி கேள்வி கேட்டு அதற்கு விடை சொல்லும்படி செய்ய வேண்டும். பேச்சுத்தொனியைத் திடீரென்று மாற்றுவது மன்றி, பேசப்படும் பொருளின் சாடையையும் வேறு படுத்தலாம்.

பாலர் பிரசங்கத்திற்குக் கதை சொன்னாற்போதும் என்று சிலர் நினைக்கிறார்கள். பொருளுக்கிசைவாய்ச் சரித் திரங்களையும் கதைகளையும் தெரிந்துகொண்டு, சரியான விதமாய்ச் சொல்வது கவனத்திற்கு அனுகூலம்தான். ஆயினும் ஒவ்வொரு விசேஷித்த திவ்விய பாடத்தை வற் புறுத்தத் தக்கதாய் இருக்கவேண்டும்.

புறமதத்தவருக்கு பிரசங்கித்தல் : தேவ ஊழியக்கார ரான ஒவ்வொருவனும் தன் தன் சபைக்குரிய அலுவல்களை நிறைவேற்றுவதுமின்றி, சுற்றிலுமுள்ள புறமதத்தவருக்குச் சுவிசேஷத்தைக் கூறவும் கடமைப்பட்டிருக்கிறான். புற மதத்தவருக்கு பிரசங்கிக்கிறவர்கள் எல்லா மனிதருக்கும் அவசியமான போதனைகள் அடங்கியதாகிய வேதாகமத்தை நன்றாய்க் கற்றிருப்பதோடுகூட மற்ற மார்க்கங்களையும் அறிந்திருத்தல் வேண்டும். ஆகையால் மேற்படி விஷயங் களைக் குறித்து எழுதப்பட்டிருக்கிற சிறிதும் பெரிதுமான புத்தகங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டியதோடு, புறமதத் தவருக்குப் பிரசங்கிக்க வேண்டியவனுக்கு அறிவு மாத்திர மல்ல, மிகுந்த விவேகமும் அவசியம். அவர்களோடு பேச வாய் திறந்தவுடனே அவர்கள் வணங்கும் தெய்வங்களைத் தூஷித்து, அவர்களுடைய தப்பறைகளையும் அஞ்ஞானத்

தையும் பழிப்பது அனுபவத்தில் குறைந்த சிலருக்கு வழக்கம். இது விசனத்திற்கும், விரோதத்திற்கும் ஏதுவாயிருக்கும். நாம் இவ்விதமாய்ப் பேசாமல் நாம் சிந்திக்கிற ஜனங்களின் தொழில்களுக்கடுத்த விசேஷங்களை அல்லது நாட்டு வர்த்தமானங்களை அல்லது அவர்கள் வெறுப்பில்லாமல் செவி கொடுக்கத்தக்க வேறு காரியங்களைத் தொட்டு அன்புடன் சம்பாஷிக்கத் தொடங்கி, அவர்கள் அன்பைக் கவர்ந்துகொண்டு பிற்பாடு கிரமம் கிரமமாய்ப் பாவப் புண்ணியங்கள், உலகவாழ்வின் நிலையாமை, மரண நிச்சயம், மோட்ச நாகம், மெய்யான தேவ இலக்கணம் முதலிய மேலான விஷயங்களைக் குறித்துப் பேசி, அப்பால் இயேசு கிறிஸ்துவினால் உண்டாகிய இரட்சண்ய வழியை உபதேசித்து அழிந்துபோகிற தேக இன்பம் அல்ல, அழியாத ஆத்தும வாழ்வே நாம் தேட வேண்டிய பெரிய பாக்கியம் என்று உணர்வாயும் தாபந்தமாயும் போதித்துப் புத்தி சொல்ல வேண்டும். நாம் பிரசங்கிக்கும்பொழுது சிலர் கேள்வி கேட்டு ஆட்சேபிக்கத் தொடங்கினால், அவர்களுக்குத் தகுத்த மாறுத்தரம் சொல்ல வேண்டும். ஆகிலும் சத்தியத்தை அறியும் பொருட்டல்ல, பிரசங்கத்தைக் கெடுக்க வாதாடி விரோதிக்கிறவர்களிடம் அதிகப் பேச்சுக்கு இடங்கொடுக்கலாகாது. நாம் எவ்வளவு அன்பும் மரியாதையுமாகப் பேசினாலும், சிலர் நம்மை விசனப்படுத்தவும் அவமானப்படுத்தவும் தங்களால் ஆனமட்டும் பிரயத்தனிப்பார்கள். நாம் அதைக்குறித்து வருத்தமடையாமல் அவர்களுடைய வம்பான வார்த்தைகளையும் பொறுமையாய்ச் சகிக்க வேண்டும். தேவ ஊழியத்தில் நாம் செய்ய வேண்டிய சகல வேலைகளிலும் இதுவே நமக்கு அதிகச் சோர்வை உண்டாக்கக் கூடிய வேலை. ஆகிலும், கிறிஸ்துவை மகிமைப்படுத்த வேண்டும் என்கிற திவ்வியவைராக்கியத்தினாலும் ஆத்துமாக்களின் ஈடேற்றத்தைக் குறித்த வாஞ்சையினாலும் நாம் ஏவப்பட்டு அதற்கு வேண்டிய ஞானத்தையும் தைரியத்தையும் ஜெபத்தின் மூலமாய்த் தேடுவோமானால், இது நமக்குப் பாரமும் வெறுப்புமாய் இராமல் எளிதும் இன்பமுமாய் இருக்கும்.

13

திருஷ்டாந்தப் பிரயோகம்

சத்தியம் தெளிவாயும் மனோகரமாயும் பலமாயும் மனதில் பதிவதற்கு ஏதுவாய் உபயோகிக்கப்படுவது திருஷ்டாந்தம் அல்லது உவமானம்.

திருஷ்டாந்தங்களையே பிரசங்கத்தின் மிகுதியான பாகம் ஆக்கலாகாது. திருஷ்டாந்தப்படுத்துவதற்கு ஒரு பொருள் இல்லாவிடில் திருஷ்டாந்தம் என்னத்திற்கு? ஒரு திருஷ்டாந்தத்தைச் சொல்வதினால் பிரசங்கப்பொருள் அதிகத்தெளிவாய் விளங்க வேண்டுமானால் அதை விவேகமாய் உபயோகிக்க வேண்டும். திருஷ்டாந்தம் என்று சொல்லி, கதைகள் முதலிய விகடங்களைக்கொண்டு பிரசங்கத்தின் சாரமின்மையை மறைக்கக் கருதுவோமாகில், அவைகள் பிரசங்கத்திற்குக் கண்ணியும் கேட்போருக்குக் கெடுதியுமாய் முடியும்.

தேவ வசனத்தில் அடங்கியுள்ள உபதேசத்தைப் பிரதானமாய் நிறுத்தி அது அதிகத்தெளிவாய் விளங்கும்படி திருஷ்டாந்தமாகிய விளக்கொளி அதன்மேல் படும்படி செய்யவேண்டும்; அப்பொழுது எல்லாம் செம்மையாய் இருக்கும். சிலர் யாதொரு சம்பந்தமும் இல்லாமல் நல்ல கதைகளைச் சொல்லி நேரத்தைப் போக்கிக்கொண்டு நிற்பார்கள். இது பிரசங்கப்பொருளை விட்டு மனதைத் திருப்பி விடுமாதலால், இதனால் விளையும் நன்மையிலும் தீமையே அதிகம். பேச்சு சுவைக்கிறதற்கு பேச ஒரு

விஷயம் கிடைப்பதும் அதைத் தகுந்தவண்ணம் பேசுவதும் அவசியமாய் இருப்பதுபோல, உவமானம் தகுதியாய் உபயோகிக்கப்பட வேண்டுமானல் உவமானிக்கப்படுவதற்கு ஒரு சிறந்த பொருளைத்தேடி கண்டடைவதும், அந்தப் பொருளின் மாட்சிமை பிரத்தியட்சமாய்த் தோன்றத்தக்கதாக அந்த உவமானத்தைச் சொல்லுவதும் அவசியம். ஒரு படத்தை வரைதல் நல்லதுதான். ஆகிலும் அந்தப் படம் குறித்த ஆளின் சாயலை உள்ளபடி காட்டத் தக்கதாய் அல்லது சிறப்பாய் இருக்கிறது என்று யாவரும் சொல்லத்தக்கதாகவே வரைவது மகா கடினம்.

ஒரு நாள் டெய்லர் என்னும் போதகன், பெட்டி முதலிய மரச்சாமான்களைச் செய்து விற்கும் ஒரு தொழிற் சாலைக்குப் போய் அங்குள்ள சமமான்களைப் பார்க்கையில், அவ்விடத்திலுள்ள தனவான் ஒருவனுக்காகச் சிறப்பான புத்தக அலமாரி ஒன்று பணிதீர்த்து நிறுத்தியிருக்கிறதைக் கண்டான். அவன் அதை உள்ளும் புறமும் நன்ருய்ப் பார்த்தபின் தச்சனை நோக்கி, அதில் குற்றமாகத் தனக்குத் தோன்றினவைகளைச் சுட்டிக்காட்டி அவைகளை இன்னின்ன விதமாய்த் திருத்தக் கூடாதா என்று கேட்டான். தச்சு வேலையில் கெட்டிக்காரனுன அந்த தொழிளாளி அவனைப் பார்த்து, ''ஐயா! அப்படிச் செய்யக்கூடாது. அது சிற்பசாஸ்திரத்தில் முக்கியமான ஒரு சூத்திரத்திற்குக் விரோதம்'' என்ருன், அதற்குப் போதகன் ''எந்தச் சூத்திரத் திற்கு?'' என்று கேட்டான். அப்பொழுது அவன், ''அலங்காரத்தைச் செய்யாதே, செய்ததை அலங்கரி என்னும் சூத் திரத்துக்குதான்'' என்ருன். தொழிலாளி அதைச் சற்றே கண்டிப்பாய்ச் சொன்னுலும், அது சமயத்திற்கேற்ற உசித மான வார்த்தையாய் இருந்தது. இந்தச் சூத்திரம் சிற்ப வேலையில் மாத்திரமல்ல, பிரசங்கம் உண்டாக்குவதிலும் அனுசரிக்கவேண்டிய பிரமாணம் என்று போதகன் உணர்ந்து கொண்டான். அதுமுதல் அவன் எப்பொழுதாவது தனது பிரசங்கத்தில் ஒரு விஷயத்தை அதன் அலங்கா

ரத்தின் நிமித்தம் எழுத நேரிட்டால், அந்தத் தச்சனுடைய சூத்திரம் நினைவில் வந்துவிடுவதனால் தான் எழுதினதைக் கிழித்தெறிந்து விட்டு மறுபடியும் எழுதுவான். அப்படியே, பிரசங்கத்தை அலங்கரிக்கத் தொடங்குமுன் அலங்கரிப்புக் கேற்றதாயிருக்கிறதா இல்லையா என்று பார்த்துக் கொள்வது விவேகம்.

நமது பிரசங்கத்தில் மிகவும் கருகலான சத்தியங்கள் ஒன்றுக்கொன்று இசைவாய் இணைக்கப்பட்டிருக்கிறதென்று வைத்து கொள்வோமாக. அப்படியானால், திருஷ்டாந்தத்தின் பிரயோஜனம் என்ன? இந்தக் கேள்விக்கு முக்கியமும் சத்தியமுமான அநேக மாறுத்தரங்கள் சொல்லலாம்.

முதலாவது, திருஷ்டாந்தமானது நாம் போதிக்க வேண்டிய சத்தியத்தை தெளிவாய்க் காட்ட உதவுகிறது. ஒரு ஜன்னலைத் திறக்கும்பொழுது அதன் வழியாய் வெளிச்சம் வந்து அறை முழுவதையும் பிரகாசமாக்கி அதிலுள்ள வஸ்துக்களைக் கண்ணுக்குப் புலப்படச் செய்கிறதுபோல, திருஷ்டாந்தமும் நாம் வற்புறுத்தக் கருதுகிற திருஷ்டாந்தத்தை அல்லது உபதேசத்தை மனதிற்கு லேசாய் விளங்கப்பண்ணுகிறது. உவமானமானது கேட்போருக்குத் தெரிந்ததும் அவர்கள் சத்தியம் என்று அங்கீகரிக்கக்கூடியதுமான ஒரு விஷயத்தைக் கொண்டு அவர்கள் சந்தேகிக்கிற அல்லது தெளிவாய் அறியாத ஒரு காரியத்தைத் துலாம்பாரமாய் விஸ்தரிக்க அதை மனதில் பற்றச் செய்கிறது. திருஷ்டாந்தப் பிரயோகத்தினால் புரிதல் நிதானிப்புக்குத் துணையாகிறது. அது மாத்திரமல்ல, அது நமது புலன்களால் நாம் அறியக்கூடிய சரீரத்துக்குரியவைகளைக் கொண்டு ஆவிக்குரிய காரியங்களையும், கண்ணுக்குத் தென்படும் விஷயங்களைக் கொண்டு அதரிசனமான காரியங்களையும் நமது ஆத்துமாவுக்கு வெளிப்படுத்துகிறது. உதாரணமாக: ‘‘ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றி

லும் குற்றவாளியாயிருப்பான்'' (யாக். 2 : 10) என்னும் சத்தியத்தைக் குறித்து மலைப்படைகிற ஒருவனுக்கு ஒரே வாசகத்தினுலும் உவமானத்தினுலும் தெளிவாக்கலாம். எப்படியெனில், பிரமாணத்தைப் பெற்றவன் அதை விதித்த கடவுளுக்குக் கீழ்படிதல் அவனது கடமை என்னும் சத்தியம் நியாயப்பிரமாணம் முழுவதற்கும் ஆதாரமாய் நிற்கிறது. ஆகையால் அதிலுள்ள ஒரு கற்பனையை மீறுகிறவன், மற்ற கற்பனைகளையும் கொடுத்தவருடைய அதிகாரத்தையும் விரோதிக்கிருன். எப்படியென்ருல், நியாயப்பிராமணத்தின் விதிகள் ஒரு முத்துக் கழுத்துமாலை போல் இருக்கிறது. அம்மாலையை அவிழ்த்தால் அல்லது கயிற்றை அறுத்தால் மணிகள் எல்லாம் சிதறிப்போகும் என்று விளக்கலாம்.

நல்ல உவமானமானது தெளிவிக்கும் சத்துவம் மாத்திரமல்ல - ரூபாகாரப்படுத்தும் வல்லமையும் உடையதாயிருக்கிறது. நமது இரட்சகர் சொல்லிய உவமைகள் இதற்கு எடுத்துகாட்டு. அவைகள் மகா இன்பமான ஒப்பனைகளாய் மாத்திரமல்ல, மறைவான சத்தியங்களுக்கு வெளிப்படையான அடையாளங்களாகவும் இருக்கின்றன. அந்த உவமைகளைக் கேட்டவர்கள் இப்பிரபஞ்சத்திற்குரிய காரியங்கள் ஆவிக்குரிய காரியங்களுக்குப் பெரும்பாலும் ஒற்றுமையானவைகள் என்பதை உணர்ந்து கொண்டார்கள். நமது இரட்சகர் தமது உவமைகளை மனித விஷயங்களிலிருந்து எடுத்தாலும், அவைகளைத் தாம் உபதேசிக்கக் கருதின சத்தியங்களுக்கு விளக்கமாக மாத்திரமல்ல, ரூபாகாரமாகவும் கையாடினுர், அவைகளால் பரம சத்தியங்கள் தெளிவாய் விவரிக்கப்பட்டதும் அன்றி, அவை உண்மை என்றும் தெளிவிக்கப்பட்டன. நாம் எடுத்து உபயோகிக்கும் உவமானங்கள் அனைத்திலும் இவ்வித நியாய வல்லமை இருக்கும் என்று நினைக்கத் தேவையில்லை. ஆயினும் அவை வாய்க்கும்பொழுது அந்த

ஒப்பனைகள் சந்தேகப்படுவோரின் சந்தேகத்தைத் தீர்த்து, விசுவாசத்தில் பெலவீனரை உறுதிபடுத்தும் விஷயத்தில் நியாயத் தோரணைகள் அமைந்த ஒரு நீண்ட பிரசங்கத்தைப் பார்க்கிலும் அதிகமாய்ப் பயன்படும்.

உவமானமானது சபையாரின் கவனத்தைக் கவர்ந்து கொண்டு அதைச் சிதையவிடாமல் காத்துக்கொள்ள மிகவும் அனுகூலமானது. காரியத்திற்கு இசைவாய் கண் கண்டாற்போல் சொல்லப்படும் உவமானத்தைக் கேட்பது எல்லாருக்கும் ஆனந்தம். பிள்ளைகளின் பாடப்புத்தகங்களில் இருக்கிற படங்கள், பாடம் மனதில்படும்படி உதவுகிறதுபோல், உவமானங்களும் பிரசங்கிக்கப்படுகிற சத்தியத்தை விளங்கச் செய்கிறது. படமானது அத்தனை நேர்த்தியில்லாதிருந்தாலும் அது என்னத்தைக் குறிக்கிறதென்று அறியும்படிக்குச் சிறுவன் பாடத்தை வாசித்துப் பார்ப்பான். அப்படியே, பிரசங்கத்தைக் கேட்போனும் உவமானம் என்னத்திற்குச் சொல்லப்படுகிறதென்று கண்டு பிடிக்கும்படி நமது வார்த்தைகளுக்குச் செவி கொடுப்பான். உவமானத்தைச் சொல்லும்பொழுது அவன் விழித்த கண்ணும் திறந்த காதுமாய்க் கேட்டுக் கொண்டிருப்பான். ஆகையால், அவன் கவனம் தளருமுன் தொடுபிடியாய் அதில் அடங்கியுள்ள போதனையையும் புகட்ட ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

உவமான பிரயோகத்தினுல் ஜனங்களின் வெறுப்பு நீங்கும். ஆராதனைக்கு வருகிறவர்களில் அநேகர் சத்தியத்தின் பேரில் இயல்பாகவே பொறுப்புள்ளவர்களாய் இருக்கிருர்கள். பிரசங்கத்தில் இடையிடையே இசைவு கண்டு, உணர்வும் உருக்கமுமான ஒப்பனைகள் சொல்லி, அவர்கள் வெறுப்பை நீங்கச்செய்து, அவர்கள் திரும்ப வெறுப்படையுமுன் நாம் தேவ ஆவியின் சகாயத்தோடு கூட அவர்களுடைய இருதயத்தில் சத்தியத்தைப் புகட்ட வழி பண்ணலாம். அவர்கள் சத்தியத்தில் கவனம் செலுத்திக்கொண்டிருக்கும் சமயம் பார்த்து நாம் கருதிய

நல் உபதேசத்தை அவர்கள் நெஞ்சுருவப் பாய்ச்சிவிட வேண்டும். நாத்தான் தீர்க்கதரிசி தாவீதினிடத்தில் போனபொழுது அவன் குற்றத்தை நேரே சொல்லி கண் டித்திருப்பானுனல், இராஜன் வெகுண்டு அவனைத் தன் சமுகத்தினின்று துரத்தியிருப்பான். தீர்க்கதரிசியோ ஓர் உவமையைக்கொண்டு அரசனை வசப்படுத்திக் கொண்ட தினுல், பின்பு கண்டிப்பாய்ப் பேச ஏதுவாயிற்று.

உவமானங்களினுல் மனதில் அழுத்தப்பட்ட சங்கதிகள் எளிதில் மறந்துபோகா. முறையாய்க் கோர்க்கப்பட்ட ஒரு வாக்குவாதத்தை ஞாபகத்தில் வைப்பது கடினம். ஒரு ஒப்பனையின் மூலமாய் மனதில் பதிப்பிக்கப்பட்ட விஷ யத்தை நினைப்பதோ மிகவும் எளிது. ஆகையால் நமது பிரசங்கங்களை ஜனங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நாம் விரும்பினுல், தகுதியான உவமானங் களைக் கொண்டு அவைகளை விளக்க வேண்டும். இன்பம் உவமானங்கள் சிந்தனையைத் தூண்டவும் மனதுக்கு தரவும் தக்கவைகளாய் இருப்பதால், அவைகள் மூலமாய்ச் சத்தியமானது நேரே இருதயத்திற்குள் சென்று ஞாபகத் தில் அதிக ஆழமாய்ப்பதிகிறது. நாம் சொல்லும் திருஷ் டாந்தமானது தெப்பம்போல் நமது உபதேசத்தை மிதத்திக் கொண்டுபோய் இருதயத்தில் சேர்த்து, ஆணிபோல் அதை மனதில் தைத்து அம்புபோல் நெஞ்சில் பாய்ச்சி அங்கே தைத்துக்கொள்ளும்படி செய்கிறது.

உவமானங்களைச் சம்பாதிப்பதெப்படி என்னும் கேள்வி வரும். நாம் வாசிக்கும் புத்தகங்களும், காணும் சாஸ்திர விஷயமான நூதனங்களும், வைதீக காரியங் களை விஸ்தரிக்கிறதற்கு ஏற்ற உவமானங்கள் நிறைந்தவை களாய் இருக்கின்றன. குழந்தைகளின் மழலைச் சொற் களிலும், பிள்ளைகளின் விளையாட்டுகளிலும், தெரு வீதி யிலும், கடைவீதியிலும் உட்கார்ந்திருக்கும் இடத்திலும், நடந்து போகும்பாதையிலும், வயல் வெளிகளிலும், கல்வி

நூல்களிலும் தேச சரித்திரத்திலும், ஜீவிய விருத்தாந்தங்களிலும், சாஸ்திரத்திலும், தொழில்துறைகளிலும், சுருக்கி சொன்னல் எப்பக்கத்திலுமே நாம் உவமானங்களைக் காணலாம்.

சித்திரம் எழுதப்படித்தல் பார்க்கப் படித்தலேயாம் என்று ஒருவன் சொன்னதுபோல், உவமானம் சொல்லப் படிப்பது பார்க்கப் படிப்பதே என்று சொல்லலாம். கடவுளுடைய சத்தியத்தை என் உடன் பிறவிகளுக்குப் புகட்டுவதில் இந்தப் பொருளை நான் எப்படி உபயோகிக்கலாம் என்னும் கேள்வியை மனதில் வைத்துக்கொண்டு சகலத்தையும் பார்க்கத் தன்னைக் கட்டாயப்படுத்திக் கொள்ளுகிற பிரசங்கி, திருஷ்டாந்தங்களை அவசியம்போல் உபயோகிக்கச் சீக்கிரம் பழகிக் கொள்வான். அது அவனுக்கு இயல்பாய்ப் போகும். தொழிற்சாலைகளுக்கோ, கல்விஸ்தாபனங்களுக்கோ, கடைவீதிகளுக்கோ எங்கே போனலும் அவன் புதுப்புது திருஷ்டாந்தங்களாகிய பொக்கிஷத்தைச் சம்பாதித்துக் கொண்டு திரும்புவான். அவன் தன் சிறு பிராயத்தில் கேட்ட கதைகளும், வாலிபத்தில் கண்ட காட்சிகளும் தனக்கு அறிமுகமான ஆள்களும் நல்ல திருஷ்டாந்தங்கள் என்று கண்டு கொள்வான். வோர்ட்ஸ்வர்த் என்னும் புலவன், காணும் பொருள்கள் எல்லாவற்றின் பேரிலும் கவி கட்டுவானும். அதுபோல நமது பரம சற்குருவின் போதனையை அடைகிறவன் எவனே அவன் கண்ணுக்குச் சகல இடங்களிலும் தகுந்த உவமானங்கள் தென்படும். நமது ஆண்டவரும் போதகருமான அவர் உலகப் பொருள்களிலும் சம்பவங்களிலும் மனித ஜீவியத்தின் பற்பல நிலைமைகளிலுமிருந்து ஆவிக்குரிய சத்தியங்களை விளக்கத்தக்க குறிப்படையாளங்களை எடுத்தார். கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழ் கூட்டிச் சேர்த்துக் கொள்ளுதல், வீட்டின் மேலிருந்து கத்தும் அடைக்கலான், பாலிலும் வெள்ளையெனத்தகும் லீலி புஷ்பம், சிறிய விதையிலிருந்து முளைத்து வளரும் கடுகு,

மாப்பிசைதல், ஒரு ஸ்திரீ காணமற்போன வெள்ளிக் காசைக் கண்டுபிடிக்குமட்டும் விளக்கை கொளுத்தி வீட்டைப் பெருக்கி அதைத் தேடுதல், உழவன் விதை விதைத்தல், திராட்சத்தோட்டக்காரன் கிளை நறுக்குதல் முதலிய பல விஷயங்களும் அவருடைய பிரசங்கங்களில் உவமானங்களாய் வந்தன. அவைகளைக் கேட்டவர்கள் இப்படிப்பட்டவைகளைக் காணும்போதெல்லாம் அவைகளால் குறிக்கப்பட்ட பரம போதனைகளை ஞாபகப்படுத்தக்கூடியதாயிருந்தது. சாதாரண ஜனங்கள் நமது இரட்சகரின் போதனைகளுக்கு ஆவலாய் செவி கொடுத்ததின் முக்கிய காரணம் இதுவே.

உவமானப் பிரயோகத்தில் அனுசரிக்கவேண்டிய சில எச்சரிப்புகளும் உண்டு. முதலாவதாக. ஏற்கெனவே தெளிவாய் இருக்கிற ஒரு விஷயத்தை உவமானத்தைக் கொண்டு விஸ்தரிக்கப் பிரயத்தனிக்கவேண்டாம். சூரியனைக் காட்டுவதற்கு விளக்கு கொளுத்த வேண்டுமோ? அப்பிரம்மாண்ட ஜோதி தன் சுய ஒளியால் பிரகாசிக்கக் கூடுமே! அதன் மகிமையைக்காண நமது மின்மினுக்கு வெளிச்சம் வேண்டியதில்லை. உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாய் இருக்கிறவைகளுக்கு ஒப்பனை சொல்லி நேரத்தைப் போக்கிக் கொண்டு நிற்கிற சாதுரிய வேஷதாரியின் பேச்சு நகைப்புக்கு ஏதுவாய் இருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. இந்த வீண் பிரயாசத்தினால் தெளிவாய் இருக்கிற சங்கதிகள் முதலாய் எல்லாமே குழப்பமும் மங்கலுமாய்ப் போகும். பளிங்குப் பாத்திரத்தைத் தொட்டால் கையில் படிந்த அழுக்கு அதில் ஒட்டி அதன் பிரகாசத்தை மங்கச் செய்யும். ஆகையால், தன்னில்தானே தெளிவாய் இருக்கிற சத்தியத்தை இன்னும் தெளிவாக்கத் தலைப்படாமல் அதை விட்டுவிட வேண்டும்.

இரண்டாவது, ஒரே காரியத்தை விளக்க அநேக உவமானங்களை அடுக்க வேண்டியதில்லை. வான வேடிக்கையில் பிந்தி காண்பிக்கப்படுகிற பலவர்ணத் தீப்பொறிகள்

முன்போன எல்லாவற்றையும் மறக்கச்செய்கிறது. அப்படியே அதுவும் மறந்துவிடப்படும். எல்லாம் தீர்ந்தபின் வேடிக்கை நன்ருய் இருந்தது என்ற பயனற்ற நினைவுமாத்திரம் பார்த்தவர்கள் மனதில் இருக்கும். அதுபோல ஒன்றன்பின் ஒன்ருய் உவமானங்களை அடுக்கும்போது ஒன்று மற்றென்றை ஞாபகத்திலிருந்து நெருக்கி வெளியே தள்ளிவிட, பிரசங்கி எவ்வளவோ அறிவாளி என்று ஜனங்கள் அதிசயப்பட்டுவிட்டுப் போகிருர்களேயன்றி, கருதப்பட்ட சத்தியம் அவர்கள் மனதில் பதிகிறதில்லை. பூதக்கண்ணுடி பிரியனுகிய ஒருவனுடைய வீட்டுக்கு ஒருநாள் ஒரு சிநேகிதன் போனபொழுது அவன் அந்தக் கண்ணுடியினுல் பற்பல பொருள்களை இவனுக்குக் காண்பித்தான். ஒவ்வொரு வஸ்துவையும் காண்பிக்குமுன் அவன் செய்ததென்னவென்ருல், கிரணங்களை ஒருமைப்படுத்திக்காட்டும் ஒரு கண்ணுடி சில்லையை அந்த வஸ்துவுக்கு நேராய் திருப்பி, அதன்மேல் ஒளிவீசும்படி செய்தான். அப்படிச் செய்ததினுல் சிறிய வஸ்துக்கள் பெரியதாய்த் தோன்றினதுமல்லாமல் அவைகள் மிகவும் பிரகாசமாயும் இலங்கின. அப்படியே, நாம் விஸ்தரிக்க எடுத்துக்கொண்ட விஷயத்தின்மேல் தெளிவு என்னும் கிரணங்களை வீசும் ஒரே உவமானம் அற்ப மினுக்குள்ள இருபது உவமானங்களைவிட அதிகப் பிரயோஜனமாய் இருக்கும். பிரகாசமான ஒரு விளக்கு இலட்சம் மின்மினிப்பூச்சிகளைப் பார்க்கிலும் அதிக உபயோகமானது.

மூன்ருவது, கருகலும், மலைவுமான விஷயங்களை உவமானமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. உவமானங்கள் எவ்வளவுக்குத் தெளிவும், யாவரும் நன்ருய் அறிந்தவைகளுமாய் இருக்கிறதோ, அவ்வளவுக்கு நல்லது. நாம் திருஷடாந்தத்திற்காக எடுத்துக்கொண்ட பொருளையே முதல்முதல் விஸ்தரிக்க வேண்டியதாயிருந்தால், அவைகள் நம் காரியத்துக்கு உதவாது. ஆவிக்குரிய சத்தியங்களை விளக்கிகாட்ட நாம் கொண்டுவருகிற விஷயங்களை ஜனங்கள் நன்ருய் அறிந்து கொள்ளும்படியாகத் தாவர சாஸ்

திரம். இரசாயனம், மின்சாரம், ஒளி சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களை நாம் விஸ்தரித்துக்கொண்டு நின்றால், நாம் தேவாலயத்தை கல்லூரியாக்குகிறவர்களாய் இருப்போம். ஆகையால், யாவரும் அறிந்த விஷயங்களிலிருந்து உவமானங்களை எடுத்துக்கொள்ள வேண்டும். மற்றபடி கல்விமான்கள் இதுதானா என்று கவனியாதிருக்க, கல்லாதவர்கள் ஒன்றும் விளங்குகிறதில்லையே என்று சும்மாயிருப்பார்கள். ஆகிலும் மேற்சொன்ன சாஸ்திரங்களில் யாவரும் இலகுவில் அறிந்துகொள்ளக்கூடிய சிறந்த விசேஷங்கள் உண்டு. அவைகளை அவசியம்போல் உபயோகிப்பது குற்றமல்ல.

கடைசியாக, உவமானமாக எடுத்துக்கொண்ட விஷயம் நமது பொருளை விஸ்தரிக்க மாத்திரம் உபயோகிக்க வேண்டும். ஜனங்களின் கவனம் அந்த உவமானத்தின் மேல் செலவிடாமல், அதன் மூலமாய்ப் பிரசங்கப் பொருளுக்கு நேராக இழுக்கப்படதக்கதாக அதைச் சொல்ல வேண்டும். ஒரு நல்ல உவமானம் கிடைக்கும்பொழுது அதை அதிகமாய் வர்ணிக்க மனதுவரும். ஆயினும், அப்படிச் செய்தால் கேட்போரின் சிந்தை முழுவதும் அதன் பேரில் செலுத்தப்படுமேயல்லாது அதன் பிரகாசத்தினால் பிரசங்கத்தின் பொருள் அதிகத் தெளிவும் சிறப்புமாய்த் தோன்றமாட்டாது. தீபஸ்தம்பத்தின்மேல் ஏற்றப்பட்டிருக்கும் விளக்கின் கிரணங்கள் வீணாய்ச் சிதறிப் போகாதபடி அதன் பக்கங்களில் முகக்கண்ணாடிபோல் அழுத்தமான பித்தளைத் தகடுகளைப் பதித்து ஒளிக்கதிர்களை எல்லாம் மடக்கி ஒரே திறப்பின் வழியாய்ச் சமுத்திரத்தில் வீசப்பண்ணி கடலோடிகளுக்கு வழிகாட்டுவது போல் நமது உவமானத்தின் உதவியால் ஜனங்கள் சத்தியத்தின் சாரத்தை அதிகத் துலாம்பாரமாய்க் கண்டு கொள்வதற்காக அவைகளைக் கையாடவேண்டும். அவைகளின் ஒளி நமது முகங்களிலேயே மாறி வீச இடங் கொடாதிருப்போமாக, பிரசங்கி எத்தனையோ அறிவும் சாதுரியமுமாய்ப் பேசினாரென்று எல்லாரும் வியக்கத்தக்க

தாய் பேசவேண்டுமென்று கருதாதிருப்போமாக. இயேசு வைப்பற்றிய சத்தியமே நமது பிரசங்கத்தின் நடுநாயக மாயும், நாம் மிகுந்த மனமகிழ்ச்சியோடும் உற்சாகத் தோடும் விளம்பும் மாட்சிமையான விஷயமாயும் இருப்ப தாக. இரண்டாம் சார்லஸ் என்னும் அரசன் தன் சாயலில் படம் எழுதுவிக்கும்படி பேர்போன புஷ்பச் சித்திரிகன் ஒருவனுக்கு முன்பாக உட்கார்ந்தான். அந்த ஓவியன் அரசனின் படத்தை நடுவில் வரைந்து அதைச் சுற்றிச் சூரியக் காந்தி, ரோஜா முதலிய புஷ்பங்களை வர்ணித்து, கடைசியாக வேலையெல்லாம் முடித்துப்பார்க்கும்போது அரசன் புஷ்பச்சோலைக்குள் இருக்கிறதாகத் தோன்றின துமல்லாமல், புஷ்பங்களின் சிறப்பு அரசனின் படத்தை விழுங்கி விட்டதால் அதைபார்த்தவர்கள் எல்லாரும் அதை அழகான ஒரு புஷ்பப் படம் என்று நினைத்தார்கள். இதில் நாம் படிக்கத்தக்க ஒரு நல்ல போதனை அடங்கி யிருக்கிறது. நமது பிரசங்கங்களில் இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சொல்லாமல் விடுகிறது எவ்வளவு பாவமோ அவ்வளவாய் நமது அலங்கார வர்ணங்களான உவமான ஒப்பனைகளால் அவர் மகிமையை மறைக்கிறதும் பாவம் என்று அறிந்து கொள்வோமாக. அவரையே நாம் சகல ருக்கும் சகலத்துக்கும் மேல் உயர்ந்தவராகத் தோன்றப் பண்ண வேண்டும். அவருக்கு முன்பாக நாம் நமது முகங் களை மூடிக்கொள்வது நமது கடமை. அப்படியிருக்க நாம் அவருடைய கருணை தங்கிய முகத்தை எவ்வித அலங்கார மான போர்வையாலும் அல்லது திரையினாலும் மறைப்போ மானால், அது குற்றமாய் இருக்கும் என்று உணர்ந்து கொள்வோமாக.

14

அபிநயம்

பிரசங்கிக்கும்பொழுது பிரசங்கியானவன் நிற்கவேண்டிய நிலையையும் பாவிக்க வேண்டிய அபிநயத்தையும் குறித்து இந்த அதிகாரத்தில் எழுதுவோம். இவைகள் ஒருவாறு அற்பக் காரியங்கள்தான். ஆகிலும், தேவபணிவிடையில் மிகவும் சிறிய காரியங்களைக் குறித்தும் கரிசனையாய் இருப்பது தகுதி. மனித ஜீவியம் சிறு சிறு கிரியைகளும் சம்பவங்களும் நிறைந்ததாயிருக்கிறது. அதில் நமக்கு உண்டாகும் அனுகூலமானது சின்னச் சின்னக்காரியங்களில் நாம் எடுத்துக் கொள்ளுகிற கவலைக்குத்தக்கதாய் இருக்கும். சிறிய ஈக்கள் தைலக்காரனின் தைலத்தை நாறப்பண்ணிப் போடுகின்றன. சிறு நரிகள் திராட்சைச் செடிகளைக் கெடுத்துப்போடும். அப்படியே நமது நிலை, தலை அசைப்பு, கையாட்டம் முதலியவை அற்பக்காரியங்களாய் இருந்தாலும் அவை கூடிய மட்டும் செம்மையும் மனோகரமுமானவைகளாய் இருக்கப்பார்க்காவிட்டால், அவைகள் நமது பிரசங்கங்களை ஜனங்களுக்கு வெறுப்பாக்கி மிகவும் காரசாரமான போதனைகளையும் பயன்படாமல் போகப் பண்ணும். ஆகையால், பிரசங்க சமயத்தில் நாம் நிற்கிற நிலை, நமது ஜாடை, இவற்றைக்குறித்து எச்சரிக்கையாய் இருப்பது அவசியம்.

இவ்விஷயத்தில் சரியான அப்பியாசங்களை அடைந்து கொள்வதைவிட, தகாத பழக்கங்களினின்று விடுதலையாவதே முக்கியமான காரியம். ஒருவன் விபரீத ஜாடைகளோடு பிரசங்கம் செய்தாலும் பிரசங்கம் நன்ருய் இருக்-

கலாம். என்ருலும் நல்ல வஸ்திரம் சம்பாதிக்கக் கூடியதாய் இருக்கும்பொழுது பிச்சைக்காரனின் உடை தரிக்க நமக்கு விருப்பம் இராததுபோல் ,சத்தியத்தை ராஜகுமாரி போல் அலங்கரித்துக் காண்பிக்க நமக்குத் திராணி இருக்க, பிச்சைக்காரியின் கோலமிட்டு அனுப்புவது அவலட்சணம் அல்லவா?

பிரசங்கியின் உடை : இது அபிநயத்தோடு சேர்ந்ததல்ல. என்ருலும் இங்கே அதைச் சற்று யோசிப்பது நலம். முதலாவது பிரசங்க உடுப்பில் சுத்தமுள்ளவனுயிருப்பது அவசியம். அவன் அதிகத் தரித்திரத்தினுல் அநேக மாற்று வஸ்திரமில்லாதவனுயிருந்தும் அசுத்தமான உடையோடு பரிசுத்த கடவுளுடைய வார்த்தைகளைப் பிரசங்கிப்பது குற்றமே. இரண்டாவது, பிரசங்கி தன் தேசத்துக்குத் தகுந்ததும் பழக்கமுமான உடையை உடுத்தினுல் தான் ஜனங்களின் வசனம் அதனுல் சிதைந்துபோகாது. வேறு தேசத்து உடையையாவது விபரீதமான உடையையாவது உடுத்தினுல் ஜனங்கள் பிரசங்கத்தையல்ல, பிரசங்கியின் உடையையே கவனித்து அதை எப்படிக் கட்டுகிறது, எங்கிருந்து வந்தது என்று யோசிப்பார்கள். பிரசங்கிமார்களுக்கு விசேஷித்த ஓர் உடையை நியமிப்பதற்கு முகாந்தரங்கள் உண்டு. ஆயினும் சுத்தமும், தகுதியும், சாதாரணமுமான உடையே பிரசங்கிக்கு நல்லது என்று அழுத்திச் சொன்னுல் போதும்.

சில மனுஷர் இயல்பாகவே தங்கள் உடை நடை பாவனைகள் விஷயமாய் அறிவில்லாதிருக்கிருர்கள். நல்லவளர்ப்பின்மை அதற்கு ஒரு காரணமாய் இருக்கலாம். நமது பள்ளிக் கூடங்களில் பிள்ளைகளில் கல்வி விருத்தியைப் பற்றி மாத்திரம் அல்ல, அவர்கள் உடை நடை பாவனைகளைப்பற்றியும் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும். சிறந்த மனத்திராணியுடைய சில மனிதர் அச்சமுள்ளவர்களாய் இருக்கிறபடியால், அவர்கள் பேச்சு உறுதியற்றதாயும், ஜாடைகள் ஒழுங்கீனமாயும் போகிறதுண்டு.

ஆகையால், நாம் திறமையுள்ள ஒரு பிரசங்கியின் ஜாடையில் தவிர்க்கக் கூடாத குற்றங்கள் இருக்கக் காணும்பொழுது அவைகளை ஒரு பொருட்டாய் எண்ணுமல், அவர்கள் அவைகளையெல்லாம் தங்கள் சிறந்த யோசனைகளினாலும் தகுந்த வார்த்தைகளினாலும் மூடிப்போடக்கூடிய சமர்த்தர் என்று அவர்களை மதிக்க வேண்டும். ஆகிலும், அப்படிப்பட்ட குற்றங்கள் நமக்கும் வழக்கமாய் இருக்குமானால் அவைகளை அகற்ற சிரத்தையாயிருக்க வேண்டும். ஏனெனில் அவைகள் அநேகமாய் நிவர்த்தி பண்ணக்கூடியவையே.

சில பிரசங்களின் ஜாடையை விகாரப்படுத்தும் காரணம் அச்சமே. சபைக்கு முன்பாக நிற்பதும்கூடச் சிலருக்கு அதிக பிரயாசம், பேசுவதோ மிகச்சிரமம். ஆகையால், அவர்கள் தாராளமற்றுப் பதாதிகேச பரியந்தம் வேர்த்துச் சடைத்து, நடுங்கி, ஒடுங்கி நிற்பது அச்சரியமல்ல. அவர்கள் நரம்பெல்லாம் விரைக்கிறது. அவர்கள் தேக முழுவதும் கட்டுவிட்டாற்போல் குலுங்குகிறது. முக்கியமாய் அவர்கள் தங்கள் கைகளை என்ன செய்கிறதென்று அறியாதவர்கள்போல் அவைகளைக் குறிப்பற்ற விதமாய் அங்கும் இங்கும் அசைத்து அவைகளைத் தங்கள் முதுகுக்குப்பின் கட்டிவிட்டால் நலமாய் இருக்குமே என்று நினைத்தாற்போல் காணப்படுகிறார்கள். எழுதிப் பிரசங்கிக்கும் வழக்கம் நல்லதென்று சாதிக்கிற ஒருவர் அதற்குச் சொல்லியிருக்கிற ஒரு முகாந்தரம் என்னவென்றால், பதற்றமுள்ள ஒரு பிரசங்கியின்முன் அவனுடைய எழுத்துப் புத்தகம் இருக்குமானால் அவன் அதன் கடுதாசிகளை ஒவ்வொன்றாய்த் திருப்பிக் கொண்டு நிற்பதினால் அவன் கைகளுக்கு வேலை இருக்கும். அப்படி ஒரு புத்தகம் இல்லையானால் அவன் தன் கைகளைக் கொண்டு என்ன செய்யலாம் என்று முட்டுப்படுவான் என்பதே. இது ஒரு நல்ல முறையே. ஆயினும், தேக நடுக்கத்திற்கு மருந்து இதல்ல! அதற்கு வேறு பரிகாரம் உண்டு,

பிரசங்கி இந்தப் பெலவீனத்தை மறைக்கிறதற்கு வகை தேடாமல் அதை முற்றும் அகற்றப் பார்க்கவேண்டும். பழகப்பழக இது நின்றுபோம். கடவுள் பேரில் நாம் வைக்கும் விசுவாசமே அதற்குச் சரியான பரிகாரம். பிர சங்கி ஜனங்களோடு பழகினபின் அவன் நிலை தாராளமும் இயல்புமாகும். அவன் தன் கைக்கால்களையும் தேக நிலையையும் குறித்து நினைக்காமல், தன் சிந்தை முழுவதை யும் தன் பிரசங்கப் பொருளின்மேல் செலுத்துவான். அப் பொழுது அவன் நிலை தாற்பரியமுள்ள ஒரு மனிதனின் இயல்பான நிலையாகிச் செம்மையாகும். ஒருவனுக்கு அவனது இயல்பான சாடையே உசிதமான சாடை. சுபாவத்துக்கு விரோதாரான போலி சாடைகளை அகற்றி, மலைகளில் துள்ளித்திரியும் மானைப்போல் ஒருவனை இயல் பான நிலைக்குக் கொண்டுவரும் பயிற்சியே பயிற்சி.

பேசிக்கொண்டிருக்கும்போது தகுந்த வார்த்தை வாய்க்கு வாரமையினலும் நிலையும் சாடையும் விகாரப்படும். ஒருவன் இப்படி தவிக்கும்பொழுது செய்வதை நாம் மன்னிக்க வேண்டியதுதான். ஆகிலும், அதற்குட்படாமல் ஒருவன் தன்னைக் காத்துக்கொள்வது அதிக நலம். நெடுநாள் பழக்கங்களும் விகற்பமான சாடைகளுக்கு ஏதுவாக்கலாம். பேசும்பொழுது ஒருகாலை அசைப்பதும், மாறி மாறி ஒற்றைக் காலில் நிற்பதும், தலையைச் சாய்ப்ப தும், ஒரு கண்ணை மூடுவதும், சுவைப்பதும், சிலரைப் பிடித்த தீயவழக்கங்கள். இங்கிலாந்து தேசத்தில் ஒரு வக்கீல் இருந்தான். அவன் வழக்குப் பேசும் போதெல் லாம் தனது கையில் ஒரு நூல் உருண்டையை வைத்துக் கொண்டு அந்நூலைத் தன் விரலில் சுற்றிச் சுற்றிப் பேசுவான். இது அந்த வக்கீலின் விவகாரக் கோர்வை நூல் என்று அக்காலத்தோர் பரிகாசமாய்ச் சொல்லுவார் கள். ஏனெனில் அந்த நூல் உருண்டையைப் பறித்துக் கொண்டால் அவனுக்குப் பேச்சு ஓடாது. அப்படியிருக் கையில் ஒரு நாள் அவன் நியாயாதிபதிமுன் வாதாடிக்

கொண்டு நிற்கையில், அவனுடைய கட்சிக்காரன் ஒருவனே நூல் உருண்டையைத் தந்திரமாய்த் திருடி ஒளித்து வைத்தான். அப்பொழுது வக்கீல் பேச இயலாமல் நின்ருன். அப்படிக் கேலிக்கு இடம் கொடுத்தது அதிக தப்பிதம். ஏனெனில் வக்கீல் பேச்சை நிறுத்திவிட்டதினுல் தோற்றுப் போனுன். இப்படிப்பட்ட அனுவசியமான பழக்கங்களுக்கு உட்படாதபடி நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

பிரசங்கியின் நிலே நல்ல பயிற்சியடைந்த இயல்புக்கு இசைந்ததாய் இருக்கவேண்டும். பேச்சுக்குத் தடையும் சுவாசப்பையைச் சுருக்கத்தக்கதுமான நிலேகள் முற்றும் ஆகாதவை. வேதாகமத்தின்மேலாவது பிரசங்கப் பீடத்தின் மேலாவது அதிகமாய்ச் சாய்ந்து கொள்ளக்கூடாது. சமீபத்தில் இருக்கிறவர்களிடத்தில் அடக்கமாய்ப் பேசினுற்போல் வேளா வேளேகளில் முன்னுக்குக் குனிந்து நிற்பது குற்றமல்ல. ஆகிலும், இது வழக்கமாய் இருந்தால் இலட்சணப் பிழையாய் இருக்கும். ஒருவன் தன் நெஞ்சை மேசையோடு நெருக்கிக்கொண்டு சம்பாஷிக்க நேரிடுமானுல், எவ்வளவோ வருத்தமாயிருக்கும். ஆகையால் தைரியமாய் நிமிர்ந்து நின்று பேசுவோமாக. சிலர் பிரசங்கிக்கும்பொழுது தேவ தூதர்களேப் பார்த்துப் பேசினுற்போல், அல்லது ஆலய முகட்டில் வரைந்திருக்கிற ஏதோ ஒரு கையெழுத்தை வாசிக்கிறவர்கள்போல் தலேயை மிகுதியாகப் பின்னுக்கு சாய்க்கிறதுண்டு. இதுவும் வழக்கமாகும்பொழுது மிகவும் குற்றமானது. பிரசங்கிக்கும் பொழுது தலேயை வைத்துக் கொள்ளவேண்டிய விதத்தைக் குறித்து வெஸ்லி போதகர் சொல்லியிருக்கிறதாவது : தலேயை அதிகமாய் உயர்த்துவதும், முன்னுக்கு நீட்டுவதும், மார்பின்மேல் சாய விடுவதும், அல்லது எப்பொழுதும் பக்கத்துக்குப் பக்கம் சரித்துக்கொள்வதும் நல்லதல்ல. அதை இயல்பாய் நிமிர்த்திக்கொள்ள வேண்டும். மேலும், கற்சிலேபோல் தலேயை ஒருக்

காலும் அசையாமல் வைத்துக்கொள்வதும் அல்லது ஓயாமல் அசைந்துகொண்டே நிற்பதும் சரியல்ல. சமயா சமயங்களில் அவசியம்போல் அதை ஒருபுறம் சற்றே சரித்து மற்ற வேளைகளில் சபையாரை நேரே நோக்குகிறதாய் வைத்துக்கொள்ளவேண்டும் என்பதே.

இனி கை அசைவுகள் முதலிய அபிநயங்களைக் குறித்துச் சில காரியங்களைக் கவனிப்போம். **முதலாவது அபிநயங்கள் வரம்பு கடந்துபோகக்கூடாது.** எவ்வித அபிநயங்கள் கிரமத்திற்குப் பேதமானவைகள் என்று தீர்மானிக்கிறது லேசான காரியம் அல்ல. ஏனெனில் ஒரு பிரசங்கியினிடத்தில் கிரமக்கேடாகத் தோன்றுகிறவைகள் வேறொரு பிரசங்கிக்குத் தகுதியானவைகளாய் இருக்கும். ஆனாலும், எந்தச் சாடையும் கிரமக்கேட்டினால் கேலிக்கு இடமாகக் கூடும். ஆதலால், அதற்கு இடங்கொடாதபடி எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். நாத்தான் தீர்க்கதரிசி தாவீதைக் கடிந்துக்கொள்ளப் போனபொழுது, தான் எடுத்துக் கொண்ட உவமையை மிகவும் சாந்தமாய்ப் பேசியிருப்பான் என்றும், ''நீரே அந்த மனுஷன்'' என்ற வார்த்தைகளைச் சொல்ல வந்தபொழுது இராஜாவின் முகத்தை ஆழ்ந்த கருத்தோடு பார்த்தான் என்றும் நினைக்கலாம். என்றாலும், இந்தச் சரித்திரத்தைச் சொல்லும்பொழுது, சில பிரசங்கிகள் தீர்க்கதரிசி கொலுமண்டபத்தின் மத்தியில் சாடி, வலது காலை முன்னே வைத்து, இராஜாவின் முகத்துக்கு நேரே தன் விரலை ஈட்டிபோல் நீட்டி, தன் காலால் திமீர் என்று தளத்தில் மிதித்துக்கொண்டு, ''நீயே அந்த மனுஷன்'', என்று சொல்லி இடித்து முழங்கினதாகப் பாவிக்கிறதுண்டு. தீர்க்கதரிசி அப்படிச் செய்திருந்தால் அரசன் கோபமூண்டு அவனைத் தன் சமுகத்தினின்று துரத்தும்படி சேவகனுக்குக் கட்டளையிட்டிருப்பான். தீர்க்கதரிசி தற்சமயம் சொல்ல வந்த சங்கதி மிகுந்த பயபக்தியோடும் ஆழ்ந்த சிந்தையோடும் சொல்லத்தக்கதாய் இருந்ததால், அவன் மரியாதை கடந்து அசட்டைதனமாய்ப் பேசியிருக்க

மாட்டான். ஒருவனுக்கு ஆழ்ந்த சிந்தை உண்டாயிருக்கும் பொழுது அவனுடைய பேச்சும் சாடைகளும் வழக்கம்போல் படபடப்பும் உரப்புமாய் இராமல், அமைதலும் சாதுவுமா யிருக்கும் என்பது முக்கியமான ஒரு குறிப்பு. கூவி, முழங்கி, அலப்பி, குலுக்கித், தரையில் மிதித்துக் கைவீசி, கால் உதறி, ''ஆகாயத்தை அடித்துச் சிலம்பம் பண்ணுகிற'' கோமாளியுடைய இருதயத்தில் என்ன பயபக்தியான சிந்தை இருக்குமோ தெரியாது. பிரசங்கி தான் சொல்லு கிறவைகளைப்பற்றித் தாற்பரியமுள்ளவனாய் இருப் பானாகில், இப்பேர்ப்பட்ட வேடிக்கைகள் அவனிடத்தில் காணப்படாது. சில வேளைகளில் பேச்சோடு கூடப் பாவனை களும் காண்பிக்க வேண்டியதாய் இருக்கும். இந்தப் பாவனைகளும் அதிகப் படாதபடி பார்க்கவேண்டும். நமக்குத் தெரியாமலே இவைகள் அதிகப்படுவது இயல்பு. வாலிபப் பிரசங்கி ஒருவன் தனது பிரசங்கமுடிவில் குணப் படாதவர்களுக்குப் புத்தி சொல்லும் தருணத்தில் ஜனங்களை நோக்கி: நீங்கள் வெளிச்சத்தைப் பார்க்காதபடி கண்ணை மூடிக்கொள்ளுகிறீர்கள் என்று சொல்லித் தனது கண்களை மூடினதாகவும், நீங்கள் சத்தியத்தைக் கேளாதபடி உங்கள் செவிகளை அடைத்துக்கொள்ளுகிறீர்கள் என்று சொல்லித் தனது காது இரண்டையும் விரல்களால் அடைத்ததாகவும், நீங்கள் இரட்சிப்புக்கு முதுகைத் திருப்புகிறீர்கள் என்று சொல்லி ஜனங்களுக்குத் தனது முதுகைக் காட்டினதாகவும் சொல்லி இருக்கிறது. பிரசங்கி தன் காதுகளில் விரலை இட்டுக்கொண்டு முதுகைத் திருப்பிக்கொண்டு நிற்கிறதைக் கண்ட ஜனங்கள் நகையாமல் இருப்பது கூடாத காரியமே. பாவனை நல்லது. ஆனாலும், அது அதிகப்பட்டுப் போன தினால் காரியத்தைக் கெடுத்துப் போட்டது. பாவனைகள் பிரசங்கத்திற்கு அலாதியான ஒரு பொருளாகக் கவனிக்கத் தக்கதாய் இராமல், பொருளும் சாடையும் பூவும் மணமும் போல் பிரிக்கப்படாதபடி ஒன்றுக்கொன்று இசைவாய் இருக்குமானால் அதுவே உத்தமம்.

இரண்டாவது, அபிநயங்கள் கருத்தை விளக்கத் தக்கவைகளாகவும் கருத்துக்கு இசைவானவைகளாயும் இருக்கவேண்டும். வார்த்தையால் வெளிப்படுத்தக் கூடியதை எல்லாம் சாடைகளினுல் வெளிபடுத்த முடியாது. என்ருலும், சில காரியங்களைச் சாடைகளினுல் அதிக பலமாய்க் காண்பிக்கலாம். கோபத்தோடு கதவைத் திறந்து கொண்டு உள்ளே போய் அங்கிருக்கிறவர்களை நோக்கி: வெளியே போங்கள் என்று சொல்லுவது போலவே அதற்குரிய அபிநயமும் பலத்ததே. ஒருவன் நமக்குக் கைகொடுக்க வரும்பொழுது முகத்தைத் திருப்பிக் கொள்வது விசனத்தைக் காட்டத்தக்க பலத்த குறிப்பாய் இருக்கிறது. சில வேளைகளில் அதனுல் விளையும் பகை மூர்க்கமான வார்த்தைகளினுல் உண்டாகிறதில்லை. பேசுகிற ஒருவனை மௌனமாய் இருக்கவேண்டும் என்று சொல்ல விரும்பினுல் அதற்கு விரலை உதடுகளின்மேல் வைத்தால்போதும். தலையைக்குலுக்குவதினுல் வெறுப்பை விளங்கச் செய்யலாம். புருவங்களை நிமிர்த்துவதும் அதிசயத்தைப் பலமாய்க் காட்டும். அப்படியே முகத்தின் ஒவ்வொரு உறுப்பும் சந்தோஷத்தை அல்லது துக்கத்தைக் காண்பிக்கத்தக்க சாதுரியமுடையவைகளாய் இருக்கின்றன. தோளை ஒரு தரம் குலுக்குவதினுல் எத்தனையோ கருத்துக்களை அமைக்கலாம்; அதனுல் செய்யப்பட்ட தீமைகளும் எத்தனையோ மிகுதி. இவ்வாறு, சாடையினுலும் நிலையினுலும் பலமாய்ப் பேசக்கூடியதாயிருப்பதினுல் அவைகளைச் சரியாய்ப் பிரயோகிக்கப் பார்க்கவேண்டும். ''வானமே'' என்று வாய் சொல்ல, விரல் கொண்டு பூமியைச் சுட்டிக்காட்டின கிரேக்கக் கோமாளியை நாம் பின்பற்றலாகாது. நமது கைகளை நாம் நன்ருய்ப் பயிற்றுவிப்போமாளுல், அவைகள் நமது பேச்சுக்கு நல்ல உதவியாய் இருக்கும். பேச்சில் அவைகள் உதவுகிறதைக் குறித்து ஒருவர் சொல்லியிருக்கிறதாவது:— ''நமது கைகளால் நாம் வேண்டிக் கொளளுகிருேம், வாக்குப் பண்ணுகிருேம் மன்ருடுகிருேம், அனுப்பிவிடுகிருேம், பயமுறுத்துகிருேம், கெஞ்சுகிருேம், இரக்கிருேம் அல்லது பலமாய் எதிர்க்

றோம். கைசாடையினால் சந்தோஷம், துக்கம், பயம், சந்தேகம், சம்மதம், மனஸ்தாபம், மிதம், மிச்சம், வருமை, தொகை முதலிய பல விஷயங்களையும் குறிப்பிடுகிறோம்'' என்பதே.

முகமும், விசேஷமாய் கண்களும், நமது கருத்தை விளக்குவதில் மிகவும் உதவியாயிருக்கின்றன : பிரசங்கிகள் ஜனங்களின் முகத்தைப் பார்த்து பேசக்கூடாமலிருப்பது மிகப் பெரிய குறை. அவர்கள் மனிதர்களோடு பேசி வாதாடும் விதத்தைப் பார்த்தால் மெத்த விகடமாய் இருக்கும். இயேசுவைச் சிலுவையில் அறையுண்டவராக நோக்கிப் பார்க்கும்படி அவர்கள் பாவிகளை மன்றாடுகிறார்கள். அந்தப் பாவிகள் எங்கே இருக்கிறார்கள்? பிரசங்கி யாரைப்பார்த்து பேசுகிறார் என்று விசாரித்தால் அவருடைய கண்கள் புத்தகத்தை அல்லது ஆலயத்துக் கூரையை அல்லது அந்தரவெளியை நோக்குகின்றன. இது விபரீதமான காரியம். ஆகையால், முக்கியமாய்ப் புத்திசொல்லத் தொடங்கும்போது பிரசங்கியின் கண்கள் ஜனங்கள்மேல் நோக்கமாயிருக்கவேண்டும். பிரசங்கத்தில் மகத்துவமான உபதேசங்களைக் கூறும்போது ஒருவேளை அண்ணாந்த பார்வை அவசியமாயிருக்கலாம். வேறு சில விஷயங்களைச் சொல்லும்போது ஒன்றையும் கூர்ந்து பார்க்கத் தேவையில்லை. புத்திமதிசொல்லத் தொடங்கும் பொழுது ஜனங்களின் முகங்களையே பார்க்கவேண்டுமேயொழிய வேறொன்றையும் நோக்கலாகாது. ஜனங்கள் முகத்தைப்பார்த்து புத்திசொல்லப் பழகாத பிரசங்கிகள் தங்கள் பிரசங்கம் பயன்தர அனுகூலமான ஒரு சத்துவத்தை இழந்தவர்கள் என்று சொல்லவேண்டும். சுருக்கிச் சொன்னால், நமது அபிநயங்களும் ஜாடைகளும் நமது வார்த்தைகளுக்கு இசைவாயும், நமது பிரசங்கத்தை எடுத்துக்காட்டி விளக்குவதாகவும் இருக்கவேண்டும்; இது சற்று பிரயாசமாயினும் இதில் பழகும்படியாக நாம் எடுத்து கொள்ளும் பிரயாசம் பயனற்றுப்போகாது.

மூன்றுவது, அபிநயங்களும் சாடைகளும் அலங்கோலமும் வெறுக்கத்தக்கதுமாயிருக்ககூடாது. சிலர் தூண்போல் அசையாமல் நின்று பேசுவார்கள். அவர்கள் சாடையைப் பார்த்தால் அவர்கள் தேகத்தில் கணுக்களில்லையோவென்று நினைக்கத்தக்கதாய் இருக்கும். வேறு சிலர் ஒருவித பாவைச் சூத்திரம்போல் கைகளை உயர்த்தவும் தாழ்த்தவும் வழக்கப் பட்டிருக்கிறார்கள். குற்றஞ் சொல்லக்கூடாத சாடையும் திரும்பத்திரும்ப ஒரே மாதிரியாய் காண்பிக்கப்படும்பொழுது வெறுப்பாகிப்போம். சிலர் கொட்டாப்புளி கொண்டு அடித்தாற்போல் ஓயாமல் மேசையின்மேல் அல்லது வேத புத்தகத்தின்மேல் அறைந்து கொண்டு நிற்கிறது வழக்கம். அவர்கள் சொல்லுகிற பொருள் சந்தோஷமானதாய் அல்லது பரிதாபமானதாய் இருக்கட்டும். அவர்களுக்கு அது காரியமல்ல. எல்லாவற்றிற்கும் ஒரேவித அடிதான். தாற்பரியத்தோடு பேசி வருகையில் பொருளுக்கு இசையப் புத்தகத்தில் அல்லது மேசையில் இரண்டொரு அடி அடித்தால் அது தப்பிதமல்ல. எங்கள் போதகர் அடித்தடித்து ஒரு வேத புத்தகத்தைத் தாள்தாளாய்க் கிழித்தபின், வேறொரு வேதாகமத்தையும் முக்கால்வாசி தொலைத்து விட்டார் என்று முறையிடத்தக்கதாகச் செய்த குருவானவரைப் பின்பற்றுவது பலத்த பிரசங்கி என்று பெயரெடுக்க வழியல்ல. பிரசங்கி, தான் சொல்லுகிறவைகளைக் குறித்து உண்மையான உணர்வும் தாற்பரியமும் உள்ளவனாயிருந்தால், அவன் சாடைகள் குறிப்பற்றதும் வழக்கத்தில் உற்பத்தியானதுமாயிராமல், ஜீவனையும் ஊக்கத்தையும் ஆழ்ந்த சிந்தையையும் அளவான வைராக்கியத்தையும் விளக்குகிறதாயிருக்கும்.

சிலருடைய சாடையைக் கவனிக்கையில் நல்ல பிரசங்கம் பண்ணுவதற்கு தேகத்தை நன்றாய்க் கஷ்டப்படுத்துவது அவசியம் என்று நினைக்கிறார்போல் தோன்றுகிறது. அவர்கள் பிரசங்க பீடத்தில் ஏறி கொஞ்ச நேரத்திற்குள்ளாக உத்தம வேலைக்காரர்போல் தேகத்தைக் குலுக்கி,

முறித்து, மூச்செறிந்து, வேர்த்து விறுவிறுத்துப் போவார்கள். ஒரு நாள் ஒரு போதகர் போப்பு மார்க்கத்துக்கு விரோதமாய்ப் பிரசங்கித்துக் கொண்டு நிற்கையில் நாற்காலியை உதைத்து அறைந்து முறித்தார். மேசையில் அடித்த அடியால் அதுவும் உடைய சற்றே தப்பிற்று. இவ்வகுப்பைச் சேர்ந்த பிரசங்கிகளோடு ஓயாமலே ஆடிக் கொண்டேயிருக்கிற பிரசங்கிகளைச் சேர்க்கலாம். இவர்கள் பிரசங்கிக்கும்பொழுது ஒரு நிமிஷமாகிலும் அமைதியாய் நிற்கமாட்டார்கள். ஒன்று, விரலை உயர்த்துவார்கள், அல்லது கையை வீசுவார்கள், அல்லது புத்தகத்தில் அடிப்பார்கள். இது மிகவும் எழுப்புதலான செய்கை என்று அவர்கள் நினைக்கலாம். இப்படிச் செய்வதினால் பிரசங்கியின் நோக்கம் வீணாய்ப்போகிறது. ஏனெனில் ஒவ்வொரு வார்த்தையும் மனதில் பதிக்கத் துணியும் பட்சத்தில் ஒன்றும் உறைக்காது என்பது நிச்சயம். மேலும் கேள்விப்புலனைப் பார்க்கிலும் காட்சிப்புலன் மனதை அதிகமாய்ச் சேர்க்கக் கூடியதாகையால், ஓயாத கை அசைவுகளைக் காணும்போது, ஜனங்களின் சிந்தை பிரசங்கப்பொருளை விட்டு சாடைகளிலேயே செல்லும். இப்படிபட்ட இருவிதமான பிரசங்கம் பயன்படாமல் போகும்.

சிலர் பிரசங்கிக்கையில் யுத்த வீரரைப் பார்த்தாற் போல் இருக்கிறது. சத்துரு உட்புகாதபடி காவல்காக்கிற சேவகன் எப்படி நிற்பானோ, அல்லது சத்துருவோடு வீர தீரமாய்ப் போராடுகிற படைவீரன் எப்படி நிற்பானோ அப்படி இவர்கள் நிற்கிறார்கள். ஒரு யுத்தகளத்தில் குதிரைப் பட்டாளத்தை நடத்தும் சேனைவீரர் இவர்களை விட அதிக மூர்க்க தோற்றமுடையவர்களாய் இருக்க மாட்டார்கள். பிரசங்கத்தின் ஒவ்வொரு பாகமும் முடிந்தவுடன் நான் அந்தச் சத்துருவை மடங்கடித்தாயிற்று, இனி அவன் தலையெடுக்கவேமாட்டான் என்று சொல்லி வெற்றி கொண்டாடினாற்போல் அவர்கள் தோற்றம் இருக்கிறது.

தோள் குலுக்கல் சில பிரசங்கிகளைப் பிடித்த அலங்கோலமான சாடை. அதைப்பற்றி ஒருவர் சொல்லியிருக்கிறதாவது : சிலர் பேசும்பொழுது தங்கள் தோள்களை உயர்த்துவதுண்டு; இது தகாத வழக்கம். தெமொஸ்தேனீஸ் என்னும் பேச்சாளன் தனக்கிருந்த இக்குற்றத்தைத் திருத்திக் கொள்ளும்படி ஒடுக்கமான ஒரு பிரசங்கத்தொட்டிக்குள் தன் தோளுக்குமேல் ஒரு ஈட்டியைக் கட்டிவைத்திருந்தான். வைராக்கியத்தினுல் தோள் உயரும் பட்சத்தில் ஈட்டிமுனை தட்டினதால் திரும்பவும் மோதாதபடி எச்சரிக்கையடைந்து, அவ்விதமான அந்தக் கெட்ட பழக்கத்தை மேற்கொண்டானும்.

சாடைக்குச் சம்பந்தமான வேறு சில குற்றங்கள் உண்டு. அவைகள் அத்தனையும் சகஜமானவையல்ல, ஆயினும் இவ்விஷயத்துக்கு அடுத்த சகல தப்பிதங்களையும் ஒழித்து விடுவது நலமாதலால் அவை இன்னின்னதென்று சொல்லி விட்டுவிடுவோம். ஒரு போதகன் பிரசங்கிக்கும் பொழுது வேளைக்கு வேளை தமது இடது கையைப்பார்த்து அங்கிருந்து யோசனைகளை வலது கை கொண்டு பிடுங்கியெடுக்கிற பாவனையாய்க் காணப்பட்டான். பாகங்களும் உவமானங்களும், முக்கியமான சங்கதிகளும், பூக்கள் போல் அவனுடைய உள்ளங்கையில் இருந்து புறப்பட்டதாகவும், இவைகளை அவன் ஒவ்வொன்ருய் வேரோடு பிடுங்கி ஜனங்களுக்குக் காண்பித்ததாகவும் தோன்றிற்று. அவனுடைய கருத்துக்களின் மேன்மையைக் குறித்துக் குற்றம் சொல்லக் கூடியதாய் இருக்கவில்லை; என்ருலும் அவனுடைய சாடை அத்தனை சிறப்பானதல்ல. பின்னெரு பிரசங்கி யோசனை உண்டாக்க மனிதன் கதவை தட்டுவது அவசியம் என்ருற்போல், அடிக்கடி தனது கையை உயர்த்தித் தனது நெற்றியில் தடவுவான். இதுவும் நல்லதல்ல. வலது கையின் முதல் விரல் கொண்டு இடது கையில் சிறு சிறு துவாரங்களை இடுகிருற்போல அதைச் சுற்றுவதும்

அல்லது அந்த விரலைக்கொண்டு ஆகாயத்தில் குத்துகிறுற் போல் நீட்டுவதும் கோமாளித்தனமான சாடையேயன்றி வேறல்ல.

யோசனை சற்றே ஆழமாயும் தகுந்த வார்த்தை திடீரென ஓடிவராமலும் இருக்கும்பொழுது கை கொண்டு நெற்றியைத் தடவுதல் இயல்புதான். தலையைச் சொறிதலும் அதைப்போலவே இயல்பாயினும் அது விரும்பப் படத்தக்கதல்ல. தப்பிதமான சகலவித சாடைகளிலும் வெறுக்கத்தக்கது பாசாங்கு செய்வதே. தற்பெருமைக்காரனுக்கும் சாமானிய ஜனங்களுக்கும் இடையில் பிரிவினையாகிய ஒரு நடுச்சுவர் இருக்கிறது எனலாம். பிரசங்கிகள் புத்தியுள்ள மற்ற ஜனங்களைப்போல் பேசி சாடை காண்பிக்க வேண்டும். மற்றப்படி அவர்கள் பேச்சு சாமானிய ஜனங்களுக்குச் சுவைக்காது. தற்பெருமையாளனுடைய உடையையும் பேச்சையும் பார்க்கிலும் கந்தை உடுப்பும் கொச்சைப்பேச்சும் இயல்பும் யதார்த்தமுமான பாவனையுமே உத்தமம். பிரசங்கப் பீடத்தில் வைதீக கோலம் புனைந்த வஞ்சகக் கூத்தாடியாய் இருப்பதிலும், சாதுரியப் பிரசங்க விதிகள் ஒவ்வொன்றையும் மீறுவதே நலம்.

மேற்சொல்லியவைகளைத் தொகுத்துச் சொல்வோம். சாடைகள் இயல்பானவைகளாய் இருக்க வேண்டும். போதகர் தனக்கு இயல்பல்லாத சாடைகளைப் போர்த்துக் கொள்ளாதபடி மிகவும் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். இயற்கை அனலாயும், கொள்கையோ குளிருமாய் இருக்கிறது. ஆகையால், நாம் எந்த இடத்திலும் எந்த பாவனையிலும் மாயத்தைக் களைந்துவிடும்படி அருள்பெற வேண்டும் நமது சாடையும் பேச்சும் திருத்தமற்றது என்று குறை கூறப்பட்டாலும், அது வஞ்சகமானதென்று சொல்லப் படாதபடி எச்சரிக்கையாய் இருப்போமாக. இயல்பான சாடைகளிலுங்கூட பலர் திருத்தமடைய வேண்டுமே. ஆகிலும், வேவெருருவனுக்கிருக்கிற இயல்பான பாவனைகளை நாம் பின்பற்றுவது அவசியமல்ல. அதிகமாய் இலைகள்

தழைத்து நிற்கிற செடிகளையும், மரங்களையும் கிளை நறுக்கு வதும் அவசியம்; என்றாலும், அவைகளை ஏதோ ஒருவித மாய் வெட்டுவது கெடுதியாய் இருக்கும்.

தேவ வசனத்தைப் போதிக்கிறவர்கள், மனுஷர் வியப்பையும் புன்னகையையும் அடைந்து கொள்ளச் செய்கிற தற்கு அல்ல, ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறதற்கே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். நாடகக்காரன் அல்ல, பரிசுத்தாவியானவரே அவர்களுடைய ஆசிரியர். ஆகையால் பிரசங்க சாடைகள் அவர்கள் எப்படியாவது சம்பாதிக்க வேண்டிய முக்கியமானவை அல்ல. நமது முழுச்சிந்தையும் பிரசங்கப் பொருள் மேலேயே செலுத்தப்பட வேண்டும். என்றாலும், சாடைகள் விஷயமாய் நாம் முற்றும் கவனியாமலிருக்கக் கூடாது. ஏனெனில், அலங்கோலமான சாடைகளைக் காணும்போது ஜனங்கள் பிரசங்கப் பொருளை மறந்து விட்டு அந்தச்சாடைகளைப் பகடிபண்ணவும், அதனால் பிரசங்கத்தை முற்றும் வீணாக்கவும் ஏதுவாகும். ஆகையால், நாம் பிரசங்கிக்கும்பொழுது நமது சாடைகள் அமைதலும், யோக்கியமும், இயல்புமாய் இருக்க வேண்டும். அப்பொழுது ஜனங்கள் அவைகளைக் கவனியாமல், பேசப்படும் பொருளை மாத்திரம் கவனிப்பார்கள். கடவுளுக்கு மகிமையையும் மனுஷருக்கு நன்மையையும் வருவிக்கவேண்டும் என்பதே பிரசங்கத்தின் நோக்கம். ஆகையால் சகலமும் அந்த ஒரே நோக்கத்திற்கு ஏற்றதாய் இருக்கவேண்டும். யோசனையும், தாற்பரியமும், பேச்சும், தொனியும், பாவனையும் எல்லாம் இந்த நோக்கத்தை நிறைவேற்றத்தக்கதாய் இருத்தல் வேண்டும். இந்த நோக்கம் நம்மில் பலத்ததாய் இருக்குமானால் சகலமும் அதற்கு இசைவாய் வரும். இந்த நோக்கத்தையே பிரதானமாய்க்கொண்டு நடக்கும்பொழுது நாம் ஒரு குற்றத்தில் அகப்படக்கூடும். அதென்னவெனில், நாம் முக்கியமாய் மதிக்கும் ஒரு பிரசங்கியின் சாடைகளைப் பின்பற்றுவதே. இந்தக் குற்றஞ்செய்யாதபடி எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். அவனவன் சாடை அவனவன் நன்மைக்கு

இசைவாய் இருப்பதே உத்தமம். ஆறுமுழ உயரமுள்ள கோலியாத்தைப் போன்ற சாஸ்திரியின் பாவனைகள் குள்ளனாகிய சகேயுவைப்போன்ற பிரசங்கியாருக்கு ஏற்காது. அல்லது முதுமையும் கனிசமும் பொருந்திய ஒரு போதகரின் போக்கை இருபது வயது வாலிபன் பின்பற்றினுல் இசையாது. காரண காரியப் பகுத்தறிவு இல்லாமல் ஒன்றைப்பின்பற்றுவது குரங்கின் தன்மை; சரியான விஷயங்களில் மாத்திரம் ஒருவருடைய மாதிரியைக் கைக்கொள்வதே ஞானம். வேருெருவனுடைய பட்டு நூல் சட்டையைப்பார்க்கிலும் நம்முடைய பருத்தி நூல் சட்டையே நமக்கு அதிக உசிதமாய் இருக்கும். ஒருவன் தன் குருவின் உடையைப்போல உடுக்கலாம்; ஆயினும், அவனுடைய உடைனே இரவலாக வாங்கத் தேவையில்லே. ஒவ்வொருவனுக்கும் அவனவன் சட்டை போதும். எல்லாவற்றிற்கும் மேலாக பிரசங்கப்பொருள் மாட்சிமையும் பூரண அனலும் அருளும் உள்ளதாய் இருக்குமாளுல், ஜனங்கள் அது என்ன சாடையாய் சொல்லப்படுகிறதென்று கவனிக்க மாட்டார்கள். ஏனெனில் அது பரத்திலிருந்து புதிதாய் இறங்கினதென்றும், ஆத்துமாவுக்கு இனிமையும் பரிபூரணமாய் இருக்கிறதென்றும், அவர்கள் காணும்பொழுது, அந்தப்பரமபோஜனம் எவ்விதக்கூடையில் கொண்டுவரப்பட்டதென்று அவர்கள் கவனிக்க மாட்டார்கள். அவர்களுக்கு மனதாளுல் அவர்கள் நம்மைக்குறித்து, அவனுடைய தேகதோற்றம் பெலவீனமானதென்று சொன்னுலும், அவனுடைய சாட்சியோ சாரமும் வல்லமையுமானதென்று அறிக்கையிடுவார்கள்.

15

கவனத்தைக் கவர்ந்து கொள்ளல்

பிரசங்கியானவன் தன் பிரசங்கத்தைக் கேட்போர் கவனத்தோடு அதைக் கேட்கத்தக்கதாகப் பிரயத்தனம் பண்ணவேண்டும். ஏனெனில் அவன் எவ்வளவாய்ப் பேசினுலும் அவர்கள் கவனிக்கவில்லையானல் பலன் இல்லை. ஆங்கில இராணுவ விளம்பரங்களின் தலைப்பில் ''கவனம்'' என்னும் வார்த்தையை பெரிய எழுத்தில் எழுதுவது வழக்கம். நமது பிரசங்கங்களுக்கும் இதுவே மேல் விலாசமாய் இருந்தால் நல்லது. ஆலயத்தில் கூடி வந்திருக்கும் எல்லாருடைய வாஞ்சையையும், உண்மையும், விழிப்புமுள்ள தொடர்ந்த கவனம் நமக்கு வேண்டும். ஜனங்கள் வேறு சிந்தையாய் இருந்தால், அல்லது ஒன்றையும் கவனியாமல் அசமந்தமாய் இருந்தால், அவர்கள் சத்தியத்தை ஏற்றுக் கொள்வது முடியாத காரியம். ஆதாம் அயர்ந்த நித்திரை செய்தபோது ஏவாள் அவன் விலாவில் இருந்து எடுக்கப் பட்டதுபோல், மனிதர்கள் தூக்கமயக்கமாய் இருக்கும் போது பாவத்தை அவர்கள் உள்ளத்திலிருந்து பிடுங்கிப் போடுவது அசாத்தியம். நாம் சொல்லுகிறதை அவர்கள் அறிந்து அதன் கருத்தை உணருகிறவர்களாய் இருக்க வேண்டும். அதற்கு ஏது இல்லாவிட்டால் நாமும் அவர்களைப்போல் நித்திரை செய்தால் நலமாய் இருக்கும். தாங்கள் பிரசங்கிக்கிறதை ஜனங்கள் கவனிக்கிறர்களோ இல்லையோ என்று கவலைப்படாத பிரசங்கிகளும் உண்டு. குறிக்கப்பட்ட நேரம்வரை எதையாவது புலம்பிக் கொண்டு நிற்கக்கூடுமானல் அதுவே அவர்களுக்குப் போதும். ஜனங்களுக்கு அதனல் நித்திய பிரயோஜனம் உண்டாக்கத்தக்க

தாக அவர்கள் செவிகொடுக்கிருர்களோ அல்லது அதைப் பற்றி நிர்விசாரமாய் இருக்கிருர்களோ என்பது அவர்களுக்குக் கவலையில்லை. அப்படிப்பட்ட பிரசங்கிகள் சீக்கிரம் மரித்து தங்கள் கல்லறையின்மேல் எழுதப்படும் வேத வாக்கியத்தின் மூலமாய்ப் பிரசங்கிப்பது நல்லது. சில சகோதரர் தேவதூதரின் கவனத்தை இழுக்க விரும்புகிறவர்கள்போல் அண்ணாந்துப் பார்த்துப் பேசுகிறவர்களாய் இருக்கிறார்கள்; வேறு சிலரோ யோசனையில் மூழ்கினவர்களபோலும், அல்லது தாங்களே பிரசங்கத்துக்குச் செவிகொடுக்கிறவர்கள்போலவும், அது தங்களுக்கு மெத்த கண்ணியம் என்ருற்போலும் தங்கள் புத்தகத்தைப் பார்த்துக் கொண்டே பேசுகிருர்கள். பிரசங்கம் ஜனங்களுக்கல்ல என்ருற்போல் பேசுகிற இவர்கள், மைதானத்தில் போய் நட்சத்திரங்களுக்கு எழுப்புதல் உண்டாக்கப் பிரயத்தனித்தல் தகுதியானது. பிரசங்கமானது, ஒருவன் தன்னேடே செய்கிற தனிச்சம்பாஷணையாய் இருந்தால், அதைச் செய்கிறவன் எவ்வளவுக்குத் தனிமையாய் இருக்கிருனே, அவ்வளவுக்கு நல்லது. புத்தியுள்ள பிரசங்கி, கூடிவந்திருக்கும் முதியோர் முதல் இளைஞர் மட்டுமுள்ள எல்லாரையும் உணர்த்தி எழுப்புவான். பிள்ளைகளை முதலாவது கவனமற்றவர்களாக்கிப் போடலாகாது. ''கவனமற்றவர்களாகிப் போடவா? அப்படிச் செய்கிறவர்கள் உண்டா?'' என்று கேட்பீர்கள். ஆம், அப்படிச் செய்கிற பிரசங்கிகள் அநேகர் உண்டு. பிரசங்கம் நடக்கும்போது பிள்ளைகள் அமைதலும் கவனமுமாயும் இல்லாவிட்டால் அதன் காரணம் அவர்களிடத்தில் மாத்திரமல்ல, பிரசங்கியினிடத்தில் இருக்கிறது. பிள்ளைகளின் கவனத்தை கவர்ந்து கொள்ளத்தக்கதாக ஒரு சின்னக் கதையாவது உவமானத்தையாவது இடையிலே சொல்லக் கூடாதா? அதோ அங்கே விளையாட அல்லது தொந்தரவு செய்யத்தொடங்கின சிறுவன் அல்லது சிறுமியின் கவனத்தைக் கவர்ந்துக்கொண்டு நமது புன்னகையுள்ள பார்வையினல் அவர்களை அமைதலாய் இருக்கச் செய்யக்கூடாதா?

என்னுடைய பிரசங்கபீடத்தின் அருகே உட்கார்ந்திருக்கிற பிள்ளைகளுக்கு நான் என் கண்களினால் பேசுகிறதுண்டு. எல்லா கண்களும் என்மேல் நோக்கமாயிருக்க வேண்டும். எல்லாக் காதுகளும் என் வார்த்தைகளைக் கேட்கத் திறந்த வைகளாய் இருக்க வேண்டும். ஒரு குருடனும் தன் முகத்தை எனக்கு நேராய்த் திருப்பாதிருந்தால் எனக்கு விசனமா யிருக்கும். யாராவது அங்குமிங்கும் பார்க்கிறதை, அல்லது தனக்குச்சமீபத்தில் இருக்கிறவர்களோடு பேசிக்கொண்டு இருக்கிறதை, அல்லது தலை அசைக்கிறதை, அல்லது கடி காரத்தை பார்க்கிறதை நான் கண்டால், அது என் பேச்சின் குற்றத்தினாலுண்டானது என்றும், அவர்களை எவ்விதமும் கவனிக்கப்பண்ண முயற்சிப்பது அவசியம் என்றும் உணர்ந்து கொள்வேன். நான் பிரசங்கிக்கும்போது கவனம் இல்லாதிருக்கிறார்களே என்று குறை சொல்ல நேரிடுவது அபூர்வம். அப்படி நேரிடும்போது நான் என்னையே குற்றப்படுத்தி மற்றவர்களுடைய கவனத்தைக் கவர்ந்துக் கொள்ளத்தக்க சத்துவம் எனக்கு இல்லா விட்டால், அந்தக் கவனத்தின் பேரில், எனக்கு உரிமை இல்லை என்று உணர்ந்து அமர்ந்திருப்பேன்.

சில சபையாருடைய கவனத்தைக் கவர்ந்து கொள்வது இலேசான காரியமல்ல. பிரசங்கத்தைக் கவனித்து எழுப்பு தலடைய அவர்கள் சற்றுமே கவலைப்படமாட்டார்கள் அவர்களைக் கடிந்துகொள்ளுவதினால் பிரயோஜனம் இல்லை. அவர்களைக் கடிந்துகொள்வது குருவிபிடிக்க அதை எறிவது போல் இருக்கும். கண்டனம் பண்ணப்பட வேண்டிய ஓர் ஆள் உண்டு, அவன் யாரென்றால் பிரசங்கிதான். பிரசங் கத்தைக் கவனமாய்க் கேட்பது அவர்கள் கடமை என்பதற் குச் சந்தேகம் இல்லை. அவர்களைக் கவனிக்கப் பண்ணு வதோ நமது கடமை. மீனைத் தூண்டில் நேருக்கு வரப் பண்ணுவது மீன் பிடிப்போனின் கடமை. மீன் வரவில்லை யென்றால் மீனை அல்ல. மீன்பிடிப்போனையே குற்றப் படுத்தவேண்டும், ஆண்டவராகிய கடவுள் மனிதருடைய

ஆத்துமாக்களுக்குச் சொல்ல விரும்புகிறதை அவர்கள் சிறிதுநேரம் அமைதலாயிருந்து கேட்கும்படி நாம் பலவந்தம் செய்யவேண்டும். ஒரு நாள் ஒரு போதகர் விருத்தாப்பியமுள்ள ஒரு மாதுவை நோக்கி, ''அம்மா! பிரசங்கம் கேட்கும்போது தூக்கம் வராதபடிக்குக் கொஞ்சம் பொடி போட்டுக்கொண்டால் நன்ருய் இருக்கும்'' என்று சொன்னதற்கு, அவள்: நீர் உமது பிரசங்கத்தில் சற்று அதிகப் பொடி போடுவீராஞல் நான் விழிப்பாய் இருப்பேன்'' என்ருள். இது அவனுக்குத் தகுந்த கண்டிப்பு என்பதற்குச் சந்தேகம் இல்லே. நாம் நமது பிரசங்கத்தில் நாசிப்பொடி அல்லது அதைப்பார்க்கிலும் அதிகமாய் விழிப்பைக் கொடுக்கத்தக்க ஒரு வஸ்து சம்பூரணமாய் இருக்கும்படி பார்க்கவேண்டும். கவனமாய் இருப்பது நம்முடைய ஜனங்களில் பலருக்கு லேசான காரியம் அல்ல என்பதை நாம் மறக்கக் கூடாது. அநேகருக்கு தெய்வீகக் காரியங்களின் மேல் கரிசனே இல்லே. சுவிசேஷம் எவ்வளவோ அருமையானது என்று அறிக்கையிடதக்கதாக அவர்கள் தேவ ஆவியின் அருள்கிரியையைத் தங்கள் இருதயங்களில் உணர்ந்தவர்கள் அல்ல. நாம் பிரசங்கிக்கிற இரட்சகரைக் குறித்து ஜனங்களே, வழி நடந்து செல்வோரே, உங்களுக்கு இதைப் பற்றிக் கவலேயில்லேயோ, இயேசு மரித்தது உங்களுக்கு காரியம் இல்லேயோ, என்று நாம் அவர்களில் அநேகரை நோக்கிச் சொன்ஞல் தகுதியாய் இருக்கும். நமது சபையாரில் அநேகர் வாரம் முழுவதும் பல வேலேகளின் பாரத்தால் குன்றி போய் இருக்கிருர்கள். அவர்கள் தங்கள் சுமையை உருட்டிக் கர்த்தர்மேல் வைக்கவேண்டும். நாமாவது எப்பொழுதும் அப்படியே செய்கிருேமா? சகல விசாரங்களினின்றும் தப்பித்துக் கொள்வது நமக்காவது லேசாய் இருக்கிறதா? வீட்டில் வியாதியாய் இருக்கிற மனேவி பிள்ளேகளே மறந்துவிடுவது நமக்குக் கூடியதாய் இருக்கிறதா? கடவுளுடைய ஆலயத்திற்கு வருகிறவர்களில் அநேகர் தங்கள் அலுவல்களேப்பற்றிய கொடிய பாரம் சுமக்கிறவர்களாய் அங்கு வந்திருக்கிறார்கள் என்பதற்கு

ஐயம் இல்லை. விவசாயி உழ அல்லது விதைக்கப் பக்குவமாய் இருக்கிற தன் நிலத்தை நினைக்கிறான். அல்லது தண்ணீருக்குள் அகப்பட்டிருக்கிற பயிர் அவன் மனதைக் குழப்புகிறது. வியாபாரியின் கண்ணுக்குமுன் செலுத்தித் தீராத கடன் துன்புறுத்திக் கொண்டே நிற்கிறது; அவனுடைய கடன்கள் ஒவ்வொன்றாய் ஞாபகத்தில் வருகின்றன. நோய் கொண்ட கண்ணை ஈ அரித்தால் போல் வேறு அநேகரின் கவனம் அற்ப சொற்பக்காரியங்களால் சிதைவுறுகிறது. சுவிசேஷ விருந்து எங்கே இருக்கிறதோ அங்கெல்லாம் விருந்தாளிகள் அற்பச் சொற்பத்தொந்தரவுகளால் இடைஞ்சல் அடையத்தக்கதாக ஈக்களின் தேவனாகிய பெயல்செபூல் காரியத்தைக் கெடுக்கப்பார்க்கிறான். நாம் கூடியமட்டும் அந்த ஈக்களைத் துரத்தப் பிரயாசப்பட வேண்டும். நமது சபையாரின் சிந்தனைகளை வாரத்தின் ஆறுநாளும் ஓடிக் கொண்டிருந்த கால்வாய்களினின்று ஓய்வுநாளுக்கு ஏற்ற புதிய கால்வாயில் திருப்பவேண்டும்.

சிலவேளைகளில் நமது ஜனங்களின் ஒழுங்கீனம் கவனத்திற்குப் பிரதிகூலமாய் இருக்கிறது. அவர்களுக்குக் கவனிக்கும் பழக்கம் இல்லை. சிலவேளை அவர்கள் ஆலயத்துக்கு வருகிறதில் ஒழுங்குதான்; ஆனால் சொல்லப்படும் சத்தியத்தைக் கவனிக்கிற விஷயத்தில் ஒழுங்கில்லை. ஆலயத்திற்குள் வருகிற ஒவ்வொரு ஆளையும் திரும்பி பார்க்கிற வழக்கம் ஏறக்குறைய எல்லாச் சபைகளிலும் உண்டு. ஜனங்களும் ஆராதனை தொடங்குமுன் வந்து சேராமல் ஆராதனை நெடுக ஒவ்வொருவராய் வந்து, தரை குலுங்க ஆபரணங்கள் ஒலிக்க, மிகுத்த சந்தடியோடு நடந்து தங்கள் இடங்களில் உட்காருகிறார்கள். சிலர் மூக்கை சிந்தவும், காறித் துப்பவும், சிறுநீர் கழிக்கவும் தங்களிடங்களை விட்டு எழுந்து போகிறார்கள். சிறு பிள்ளைகளை ஒழுங்காய் உட்காரவைக்காமல் அவர்களின் விருப்பப்படியே அங்குமிங்கும் ஓடவிடுகிற பெற்றோர் இருக்கிறார்கள். கவனத்திற்கு இடையூறான இந்தப் பழக்கங்கள் முற்றும் தவிர்க்கப்பட வேண்டும்.

இவ்வித இடையூறுகள் ஒரு சபையிலிருந்து நீக்கப்பட்டனவென்று வைத்துக்கொள்வோம். நமது போதனையைக் கேட்போரின் கவனத்தை வசப்படுத்திக்கொள்வதற்கு ஏதுவாய் நாம் அனுசரிக்க வேண்டிய தங்கமான சூத்திரம் என்னவென்ருல் **கேட்கிறதற்கு ஏற்ற விஷயங்களை எப்பொழுதும்சொல்ல வேண்டும்** என்பதே. ஒரு நல்ல காரியத்தைக் கேட்க வேண்டும் என்கிற ஆசை அநேகருக்கு இயற்கையாகவே இருக்கிறது. வார்த்தைகளை மாத்திரம் கவனமாய்க் கேட்க வேண்டும் என்று ஒருவரும் கரிசனைப்படுகிறதில்லை. சில பிரசங்கிகளுடைய வார்த்தைகள் திரட்சியாயும், பொருளோ சொற்பமாயும் இருக்கிறது. பேச்சு பனையளவு, பொருளோ தினையளவு. சொற்பமான பொருளும் வார்த்தைகளின் கூட்டத்தில் மறைந்து போகிறது. அவர்கள் பதரைப் பெட்டி பெட்டியாய் எடுத்துக் கொட்டுகிருர்கள். அதில் ஒருவேளை இரண்டொரு மணிகள் இருக்கலாம். அவைகள் இருக்கிற இடத்தை கண்டு கொள்வதோ மெத்தப் பிரயாசம்: சாரம் இல்லாத வார்த்தைகளுக்கு சபையார் நெடுநேரம் காது கொடுக்க மாட்டார்கள். பிதற்ருதிருப்பாயாக என்பது கற்பனைகளில் ஒன்றல்ல. என்ருலும் களவு செய்யாதிருப்பாயாக என்றும் பிரமாணத்தில் அது அடங்கியிருக்கிறது என்றும் சொல்லலாம். எப்படியெனில் சபையாருக்கு ஆவிக்குரிய ஆகாரத்தைக் கொடாமல் வார்த்தை குவியல்களால் அவர்களைத் திருப்தியாக்கப் பார்ப்பது வஞ்சிப்பதேயாம். ''சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற்போகாது'' (நீதி. 10:19). பெரிய பிரசங்கிகளிடத்திலும் இவ்வாக்கியத்தில் குறிக்கப்பட்ட குற்றம் உண்டு. ஆகையால், கேட்போர் தங்கள் மனதில் பத்திரம் பண்ணி அடிக்கடி நினைத்துக்கொள்ளக் கூடியதும், அவர்களுக்குப் பிரயோஜனமாய் இருக்கக்கூடியதுமான சிறந்தப் பொருள்களையும் கருத்தான போதனைகளையும் வேத வசனத்திலிருந்து எடுத்து அவர்கள் முன் வைக்கவேண்டும். அவைகளையும் வருடம் முந்நூற்றறுபது நாளும் ஒரே விதமாய்ச்

சமைத்துப் பரிமாறப்படும் போஜனத்தைப்போல் வாந்தி பண்ணச் செய்கிறவிதமாயல்ல, வானத்திலிருந்து புதியதாய் இறங்கின மன்னாவைப்போல் சுவை பொருந்தியதாய் அவர்களுக்கு பகிருவோமாக. நாம் பிரசங்கிக்கும் பொருள்கள் சபையார் மனதில்படத்தக்கவைகளாயும், ஒருவன் நடு இரவிலும் எழுந்து கேட்கிறதற்கு ஏற்றவைகளாயும், பத்து இருபது மைல் தூரம் நடந்து வந்தது தனக்கு நஷ்டம் அல்ல என்று எண்ணத்தக்கவைகளாயும் இருக்க வேண்டும். நாம் பிரயாசப்பட்டால் அப்படி பிரசங்கிக்க நமக்கு சத்துவம் உண்டாகும். அப்படி பிரசங்கிக்கப் பழகுவோமாக. அப்பொழுது ஜனங்கள் ஆவலோடும் கவனத்தோடும் நமது பிரசங்கங்களைக் கேட்பார்கள் என்பது நிச்சயம்.

மேலும், நாம் பிரசங்கிக்கிற பொருள் ஜனங்களுக்கு நன்றாய் விளங்கத்தக்கதாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். இதுவும் மகா முக்கியமான காரியம்; முதல் தரமான விஷயங்களையும் கூட்டக்குழப்பமாய்ச் சொல்லும் வழக்கத்தையும் முற்றும் தவிர்க்க வேண்டும். ஒருநாள் ஒரு சிறுவன் கடைக்குப்போய் கொஞ்சம் தேயிலையும், சர்க்கரையும், சீமைக் கடுகும் வாங்கிக்கொண்டு வரும்படி அனுப்பப்பட்டான். அப்படியே அவன்போய் அந்தச் சாமான்களையெல்லாம் வாங்கி ஒரு பெட்டியிலே போட்டுத் தாமதம் இல்லாமல் திரும்பி ஓடிப்போனான். வீட்டிற்குள் வந்துப் பார்க்கையில் சர்க்கரையும் கடுகும் கலந்து போயிருந்தது. தேநீர் செய்து குடிக்கப் போன போது கடுகு உரைத்து குடிக்க முடியாதிருந்தது. பையன் சரமான்களைத் தனித்தனியே பொட்டலம் கட்டிக்கொண்டு வந்திருப்பானானால், அது எவ்வளவோ பிரயோஜனமாய் இருந்திருக்கும். கடுகு, உறைக்கிற தேநீர் பானத்துக்கு உதவாததாய் இருக்கிறதுபோல, குழப்பமாய் வசனிக்கப்படுகிற உபதேசமும் கேட்போருக்கு பயன் படாது. அப்படியிருக்க சங்கதிகளை முதலாவது, இரண்டாவது, மூன்ருவது என்று வகுத்து விளக்கம் என்னும் கயிற்றி

ளுல் கட்டி, அவர்களுக்கு முன்வைப்போமாளுல் அது அவர்களால் அங்கீகரிக்கப்படும்.

பொருள்பட பேசுவதும் அவசியம். ஏனெனில், நாம் பேசும் விஷயங்கள் எவ்வளவு உசிதமாய் இருந்தாலும், கேட்கிறவனுக்கு அவைகள் விளங்காவிட்டால் அவைகளால் அவனுக்கு யாதொரு பயனும் இல்லை. நாம் நமது பிரசங்கத்தில் உபயோகிக்கும் தொடர்மொழிகளும் வாசகநடைகளும் அவனுடைய அறிவுக்கு மிஞ்சினதாய் இருக்குமாளுல், அப்படிப் பேசுகிறதை விட அந்நியமொழியில் பேசுவது அதிகநலம் என்று சொல்லாம். கல்வியற்றவர்களுக்கு விளங்கத்தக்கதாகப் பேசுதல் கல்வி கற்றவர்களுக்கு விளங்கத்தக்கதாகப் பேசுவதிலும் அதிகப்பிரயாசமாயும், ஏற்றம் ஏறுவதுபோல் வருத்தமாயும், நமது இரட்சகருடைய பேச்சுசாடைக்கு அதிக் அடுத்ததாயும் இருக்கிறது என்று நிச்சயமாய் சொல்லலாம். கல்வித் திறனைக் காட்டத்தக்க சாஸ்திரப் பிரசங்கமாகிய உயரமான குதிரையின்மேல் ஏறி ஜனங்களின் தலைக்குமேலே சவாரிபோதல் அல்ல, போதனையை கேட்போர் நம்மோடு கூடதொடர்ந்து வரத்தக்க செம்மையான பாதையில் நடந்துபோவதே விவேகம். நமது ஆண்டவரும் போதகருமாகிய இயேசுநாதர் பிரசங்கிகளின் இராஜனாய் இருந்தார். அவருடைய போதனைகளின் சாரம் சில வேலைகளில் மனிதன் எளிதில் புரிந்துக்கொள்ளமுடியாத உன்னத மாட்சிமை பொருந்தியதாய் இருந்த போதிலும் அவருடைய பேச்சு ஒருவருக்கும் கருகலாயிருக்கவில்லை. அவருடைய வார்த்தைகளும் வாசகங்களும் பேதைகளுக்கும் தெளிவாய் இருக்கிறபடியால் அவருடைய பிரசங்கத்தை இயேசு என்னும் 'பரிசுத்தப்பிள்ளைப் பேச்சு' என்று சந்தேகமில்லாமல் சொல்லலாம். நாம் முழு இருதயத்தோடும் நல்ல விசேஷயத்தை ஆயத்தமாக்கி அதை தகுதியாய் ஒழுங்குபடுத்தி தெளிவான வார்த்தைகளிளுல் மொழிவோமாளுல் நமது சபையாரின் காதுகளையும் அவைகளின் மூலமாய் அவர்கள் இருதயங்களையும் கவர்ந்து கொள்வோம்.

பிரசங்கியின் சுயஅனுபவம் ஜனங்களின் கவனத்திற்கு அனுகூலமாயிருக்க வேண்டும். பிரசங்கத்தை எழுதி வாசிக்கும் வழக்கம் நல்லதல்ல. புத்தகங்களின் உதவி யின்றி மனதில் வந்தபடி எழுதப்பட்ட பிரசங்கம் வாய் மொழியான பிரசங்கத்தைப்போல் ஒருவேளை பயன் படும். ஆயத்தமில்லாமல் வாயில் வந்ததைப்போல் பேசும் வழக்கம் முற்றிலும் கேடானது. மேடையில் ஏறி நமக்குத் தென்பட்ட முதலாம் யோசனையைச் சொல்லத் துணியா திருப்போமாக. ஏனெனில் அநேகருடைய பிரசங்கங்களில் வருகிறதெல்லாம் வெறும் நுரையே. நமது ஜனங்களுக்கு மிகுந்த ஜெபத்துடன் ஆயத்தம் செய்யப்பட்ட பிரசங்கங் களே தேவை. பந்தியமர்ந்திருக்கிறவர்களுக்கு நன்றாய் சமைத்து பாகம்பண்ணப்பட்ட போஜனம் தேவை. அவ் வண்ணமே பிரசங்கிக்கப்போகும் காரியங்களை எழுதி ஆயத்தம் செய்வதற்கு எவ்வளவு முயற்சி தேவையோ, அவ்வளவு முயற்சியோடு, நமக்கு இயல்பாய் வரும் வார்த் தைகளினால் நமது இருதயத்திலிருந்து எடுத்து விளம்ப வேண்டும். நாம் எவ்வளவுக்கதிகமாய் முயற்சி செய் வோமோ அவ்வளவுக்கு நமது பேச்சு அதிகத்தாராளமாய் வரும். ஆகையால், பிரசங்கப்பொருளை முன்கூட்டி ஆராய்ந்து மனதில் பதித்து, வார்த்தைகளையோ அச்சமயம் இயற்கையாய் வருகிறபடியும் பேசுவதே பிரசங்கத்திற்கு உத்தமவழியாகும். இந்த விதமாய்ப் பிரசங்கிக்கிறவனே தான் அறிந்திருக்கிறதைச் சொல்லி தான் கண்டதைக் குறித்துச் சாட்சி கொடுக்கிற தேறின போதகனைப் போலிப் பான்.

கவனத்தைக் கவர்ந்து கொள்ளத்தக்க நமது பிரசங்கத் தொனியும் கூடியமட்டும் காதுக்கு இனிமையாய் இருக்க வேண்டும். உதாரணமாக எப்பொழுதும் ஒரே தொனி யாய்ப் பேசுவது ஏற்றதல்ல; தொனியைப் பொருளுக்கு இசைய மாற்ற வேண்டும். பேச்சின் துரிதமும் எப்பொழு தும் ஒன்றுபோல் இருக்கக்கூடாது. சிலவேளைகளில் மின்

வெட்டுப்போல் வேகமாயும் சிலவேளைகளில் அமர்ந்த நடையாயும் பேசவேண்டும். நாம் பிரசங்கிக்கும்போது சத்தத்தின் ஓசையை வேளைக்குவேளை மாற்றி, இழுத்துஇழுத்துப் பேசும் இயல்பையும் அகற்றி, உச்சம், மத்தியம், மந்தம் ஆகிய பலவித ஓசைகளையும் அவசியம்போல் உபயோகித்து, மறைவில் முழங்கும் இடிபோல் சில வேளையில் தொண்டையைக் கொண்டும் அடிக்கடி சம்பாஷணைப் பாங்காய் உதடுகளைக்கொண்டும் பேசி, இப்படியே தொனி வேறுபாடுண்டாக்கப் பார்ப்போமாக. மனிதசுபாவம் மாறுதலை ஆசிக்கிறது. கடவுள் அதை உலகத்திலும், அருள் கிரியைகளிலும் கட்டளையிடுகிறுர். அது பிரசங்கத்திலும் இருக்கும்படி நாம் பிரயாசப்படவேண்டும். பிரசங்கத்தில் தொனியும் சாடையுந்தான் எல்லாம் என்றுற்போல் இதைக்குறித்து அதிகம் சொல்ல வேண்டியதில்லை. ஏனெனில், பேச்சிலும் சாடையிலும் தொனியிலும் உண்டாயிருக்கும் குறைகள் பொருள் மாட்சிமையால் பெரும்பாலும் நிவர்த்தியாக்கப்படும். ஆகிலும் நமக்கு நல்ல பொருள் கிடைத்திருக்கும்போது அதைக் கேவலமான விதமாய் வெளிப்படுத்துவது விசனமான காரியம். அரசன் ஒரே சக்கரவண்டியில் சவாரி செய்வதுபோல, இரட்சண்யக் கிருபையைக் குறித்த மகத்துவ உபதேசங்கள் அலங்கோலமான சாடையாய்ப் பிரசங்கிக்கப்படுவது தகுதி அல்ல. இராஜரீக மகத்துவ சத்தியங்கள் தங்கரதத்தில் ஏறிப்போக வேண்டும். சத்தியம் என்னும் அரசன் வீதிகளில் பவனி போகும்போது, நமது வெள்ளைக் குதிரைகள் கொண்டுவரப்பட்டு, வெள்ளி எக்காளங்களின் கீதநாதம் இங்கிதமாய்த் தொனிப்பதாக. ஜனங்கள் கவனிக்கவில்லை என்றுல், அதற்குக் காரணம் நம்முடைய பேச்சுக்குறைவு என்று சொல்லுகிறதற்கு இடம் பண்ணுதிருப்போமாக. ஆகிலும் இவற்றில் திருந்த முடியாமல் இருந்தால், நமது பொருள் சாரத்தினுலும் மாட்சிமையினுலும் அந்தக் குறையை நிவர்த்திசெய்ய எப்பொழுதும் நமது திராணிக்குத் தக்கபடி ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

மேலும் முகவுரை அதிகம் நீண்டு போகக்கூடாது. ஒரு சின்ன வீட்டுக்குப் பெரிய முகப்புக் கட்டுவது இசையாதே. தேவபக்தியுள்ள ஓர் அம்மாள் ஜாண் ஹவுஸ் என்னும் போதகரின் பிரசங்கத்தைக் கேட்கப்போயிருந்தாள். முகவுரை சொல்லிமுடிக்க ஒருமணிநேரம் பிடித்தது. அதைக் கேட்டு அலுப்புற்ற அம்மாள் ''அந்தப் பெரியவர் மேசையில் துப்பட்டி விரிப்பதில் மிகுந்தநேரம் எடுத்துக் கொண்டபடியால், என் பசி அமர்ந்து போயிற்று. அப்பால் சாப்பிடத் தேவை இல்லை'' என்ருளாம். மேசையில் துப்பட்டி விரித்தலும், கோப்பை கத்திகளை வைத்தலும் சீக்கிரம் ஆகவேண்டியது. அதுபோல, முகவுரை சுருக்கமாயும், கவனத்தை இழுக்கத்தக்கதாயும் இருக்கவேண்டும்.

பிரசங்கிக்கும்போது சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லவேண்டாம். ஒரு பிரசங்கி பத்துப் பன்னிரண்டு வாக்கியங்களைச் சொன்னதின்பின், நான் முன் சொன்னதுபோல், சொல்லுகிறேன் என்ருவது, நான்முன் சொன்னதைத் திரும்பவும் சொல்லுகிறேன் என்ருவது சொல்லத் தொடங்குவார். அவர் முன் சொன்னதிலே விசேஷம் ஒன்றும் இல்லாததினுல் அதை மறுபடியும் சொன்னபோது பேச்சு சாரமற்றதென்பது தெளிவாய் விளங்கிற்று. அவர் மறுபடியும் சொன்ன விஷயம் சிரேஷ்டமாயும் முதல் விசை தானே மனதில் அழுந்தச் சொல்லப்பட்டதாயும் இருந்தால் அதைத் திரும்பத் திரும்பச் சொல்லுவதேன்? அது சாதாரண காரியமாஞல் அதைத் திரும்பவும் எடுத்துச் சொல்ல வேண்டியதென்ன? வேளா வேலைகளில் சில வாக்கியங்களைத் திரும்பச் சொல்லுதல் கவனத்தை கவர்ந்துக் கொள்ளத்தக்கதாயிருக்கும். அது ஒரு வழக்கமாகும் போதோ கெடுதியாய்த் தீரும். இப்பொழுது சொல்லுகிறதெல்லாம் திரும்பச் சொல்லப்படும் என்று ஜனங்கள் நினைக்கிறதற்கு நாம் இடங்கொடுத்தால், அவர்கள் துவக்கத்திலேயே கவனஞ் செலுத்தாமல்

இருப்பார்கள். ஒரே யோசனையை வேறு வார்த்தைகளால் அடிக்கடிச் சொல்வதும் நல்லதல்ல. ஒவ்வொரு வாசகத்திலும் புதுபுது விஷயங்கள் இருக்கவேண்டும். ஒரே ஆணியை ஓயாமல் அடித்துக் கொண்டேயிருக்க வேண்டாம். நமது வேதாகமம் மிகவும் விஸ்தாரமானது. ஜனங்கள் அதன் நீளத்திலும் அகலத்திலும் உலாவி, அதன் இன்பங்களை அனுபவிக்கும்படி இடமுண்டாக்க வேண்டும். நமது பிரசங்கங்கள் எப்போதும் ஒரு வேத சாஸ்திரச் சுருக்கம்போல இருக்கவேண்டாம். அப்படியிருந்தால் பசித்தவனுக்கு எலும்பைக் கொடுத்ததுபோல் இருக்கும். எலும்பு அல்ல, சுவையுள்ள உணவே நமது ஜனங்களுக்கு வேண்டியது.

ஜனங்கள் கவனிக்கத்தக்கதாக பிரசங்கம் நீண்டு போகாதிருக்கப் பார்க்கவேண்டும். ஒருமணி நேரம் பிரசங்கத்தை நீட்டும் வழக்கமுடையவராய் இருந்த ஒரு வாலிபப் பிரசங்கிக்கு முதிர்ந்த அனுபவசாலியான ஒரு போதகர் சொன்ன புத்திமதி என்னவென்ருல்:—என் பிரியமான சிநேகிதனே, நீர் எவ்வளவு பிரசங்கித்தாலும் முப்பது நிமிஷத்திற்குமேல் பிரசங்கிக்கக்கூடாது என்பதே. நமது பிரசங்கம் அரைமணிநேரம் மிஞ்சிப் போனுல் நாற்பது நிமிடத்துக்கு அதிகம் நீண்டு போகாதபடி பார்க்கவேண்டும். ஒருவர் தாம் சொல்லவேண்டியதை இவ்வளவு நேரத்திற்குள் சொல்லி முடிக்கக் கூடாதவராயிருந்தால், அவர் அதை எப்பொழுதுதான் சொல்லித்தீர்ப்பார்? எடுத்த பொருளை அரை குறையாய் விட்டு, அதற்கு அநீதி செய்யலாமா என்று ஒருவர் கேட்கலாம். ஆனுல் நாம் ஜனங்களுக்கும் நீதி செய்ய வேண்டும் என்பதை மறத்தல் கூடாது. அல்லவெனருல் அவர்களுக்கு இரங்கியாவது பிரசங்கத்தை மித மிஞ்சி நீட்டாதிருப்போமாக. பேசப்படும் விஷயம் நமக்கு விரோதமாய் முறையிடாது; ஜனங்களோ முறையிடுவார்கள். குறித்த நேரத்திற்கு அதிகமாய்ப் பிரசங்கம் நீண்டு போகும்போது, ஒரு தாயானவள் தன் வீட்டில்

விட்டு வந்த பிள்ளை அழும் என்ற நினைவால் உபத்திரவப் படுவாள். ஆகையால் அவள் பிரசங்கத்தைக் கவனிக்க மாட்டாள். சுருக்கமாய்ப் பிரசங்கிப்பது எல்லாருக்கும் கூடிய காரியத்தான். 'சுருக்கபிரசங்கி' என்னும் நற்கீர்த்தியை நாம் அடைய விரும்ப வேண்டும் பிரசங்கத்தை எப்படிச் சுருக்கலாம் என்று கேட்டால். அதைக் கருத்தாய் ஆயத்தஞ்செய்வதினுலேதான். கொஞ்ச நேரத்தில் பிரசங்கத்தை முடிக்கும்படியாக ஆயத்த அறையில் அதிக நேரம் செலவிட வேண்டும். சொல்வதற்கு விஷயங்கள் எவ்வளவு குறைவாய் இருக்குமோ அவ்வளவாய்ப் பிரசங்கத்தை நீட்டுவது பிரசங்கிகளுக்கு வழக்கம். நன்ருய் ஆயத்தஞ் செய்திருக்கிற பிரசங்கி முப்பது நிமிடத்துக்கு அதிகம் பிரசங்கிக்க மாட்டான். பொருள் கொஞ்சமாயிருந்தால் நாற்பது நிமிடம் மட்டும் நீட்டுவான். சொல்வதற்கு ஒன்றும் இல்லாதிருக்கும்போது ஒருமணிநேரம் கூட நீட்டிக்கொண்டே நிற்பான். நாம் இவ்விதக் குற்றங்கள் நேரிடாதபடி பார்ப்போமாகில் நாம் ஜனங்களின் கவனத்தைக் கவர்ந்துக் கொள்ளலாம்.

சபையார் நமது பிரசங்கத்திற்கு இடைவிடாமல் முழுக் கவனமும் செலுத்த வேண்டும் என்று விரும்புவோமாகில், பரிசுத்த அவியானவர் அவர்களை உணர்வுள்ளவர்காளாக்குவது அவசியம். நமது ஜனங்கள் போதனையை ஏற்றுக் கொள்ளத்தக்கவர்களாயும், ஜெபவாஞ்சையும், சுறுசுறுப்பும், தாற்பரியமும், பயபக்தியும் உள்ளவர்களாயுமிருந்தால், அவர்கள் நன்மை அடையவேண்டும் என்ற கருத்தோடு ஆலயத்திற்கு வந்து பிரசங்கியின் மூலமாய்க் கடவுள் தங்களோடு பேசவேண்டும் என்று விண்ணப்பஞ் செய்துகொண்டு, தங்கள் இருப்பிடங்களில் உட்கார்ந்து ஒவ்வொரு வார்த்தைக்கும் விழிப்பாய்ச் சோர்பின்றிச் செவிகொடுப்பார்கள். சுவிசேஷத்தின் பேரில் அவர்களுக்குப் பசி இருப்பதால் அந்தப் பரம மன்ன அவர்

களுக்கு அதிகச் சுவையாய் இருக்கும். அதனால் அவர்கள் தங்கள் தங்கள் படியைச் சேகரிக்கக் கருத்தாய் இருப்பார்கள்.

ஜனங்களின் கவனத்தைக் கவர்ந்து கொள்வதற்கு அவசியமான இன்னொரு ஆலோசனை என்னவென்றால், பிரசங்கி தானே தான் சொல்லும் விஷயத்தை குறித்து தாற்பரியமுள்ளவராய் இருக்கவேண்டும். அப்பொழுது மற்றவர்களும் தாற்பரியம் கொள்ளுவார்கள். பிரசங்கப் பொருளை நாம் தக்கபடி உணர்ந்துக்கொண்டால் அதைப் பிரசங்கிப்பதில் நமது மனவலிமையைச் செலுத்தாதிருக்க மாட்டோம். பிரசங்கப் பொருள் நமது கவனம் முழுவதையும் கவர்ந்துக் கொண்டதென்று அவர்கள் காணும்போது, அவர்களும் கவனிக்கத் தொடங்குவார்கள். பேசுகிறதற்கு முக்கியமான விஷயம் தனக்கு உண்டென்று உணராதவனுடைய பேச்சுக்கு ஜனங்கள் செவி கொடாமல் இருப்பது ஆச்சரியம் அல்லவே. ஒருவன் தன் முழு உள்ளத்தோடும் பேசாவிடில் ஜனங்கள் அவன் பிரசங்கத்தைக் கேட்கத் தங்கள் காதுகளைத் திருப்பாதிருப்பது அதிசயமா? பிரசங்கியின் சாடை ஏதோ ஒரு கட்டுக்கதை சொல்வதுபோல் இருந்தால், அவர்கள் தங்களுக்கு உண்மையாய்த் தோன்றுகிற வேறு காரியங்களில் சிந்தையைச் சிதறவிடுவது ஆச்சரியம் அல்லவே.

பிரசங்கத்தை நமது ஜனங்களெல்லாரும் கவனிக்க வேண்டுமானால், நாம் தகுதியான திருஷ்டாந்தங்களை உபயோகிக்க வேண்டும். அது விஷயமாய் நமது ஆண்டவர் நமக்கு முன் மாதிரி வைத்திருக்கிறார். பிரசங்க வல்லவர்கள் அநேகர் உவமை ஒப்பனைகளையும் சரித்திரங்களையும் மிகுதியாய் உபயோகித்திருக்கிறார்கள்; என்றாலும் இது மிஞ்சிப் போகாதபடி எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். சிறுசிறு கதைகள் நல்லதுதான். ஆகிலும் எழுப்புதலுக்கு இவைகளை முக்கிய கருவிகள் என்று எண்ணிக்கொள்ள வேண்டாம். இந்தக்கதைகளில் சிலவற்றைக் குறித்து

எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். இவைகளின் காலம் கடந்து போயிற்று. நாம் சொல்லுகிற கதைகள்கூடிய மட்டும் புதியவைகளாய் இருக்கவேண்டும். நாம் நமது கண்களைத் திறந்து பார்ப்போமானல் கதைகளும் திருஷ் டாந்தகளுமாகிய புதுப்புது புஷ்பங்கள் நமக்கு தென் படும். மற்றவர்கள் பறித்த பூக்கள் ஒரு காலத்தில் எத்தனை அழகாயிருந்தும் இப்பொழுது உலர்ந்து போன படியால், அவைகளைப் பார்க்கிலும் நாம் பறிக்கிற புது ஷ்பங்களே அதிக அங்கீகாரமாய் இருக்கும்.

மேற்சொல்லிய காரியங்களோடுகூட ஜனங்களின் வியப்பை எழுப்பும் சமர்த்து பிரசங்கி அப்பியாசிக்க தக்கது. கவனத்தை வசப்படுத்துவதற்கு இது மிகவும் ஏற்ற உபகரணம். இந்த வாக்கியத்தின் பேரில் இன்னதைத்தான் சொல்லுவார் என்று எல்லாரும் எண்ணக் கூடியதையே எப்பொழுதும் சொல்ல வேண்டாம். வாசகங்களும் பழையபாடம் படித்தாற்போல் இருக்கக்கூடாது. ஒரு நாள் ஒரு பிரசங்கி சுகத்துக்காக கடற்கரையில் உட் கார்ந்திருக்கும்போது காற்று அமர்ந்து அலைகள் மெத்த அமைதலாய் அடித்துக் கொண்டிருந்தன. அப்படி இருக் கையில், திடீரென்று சமுத்திரம் கோபம் கொண்டாற்போல ஒரு பெரிய அலை வந்து கரையில் அசதியாய் உட்கார்ந் திருந்த அந்த போதகரை முழுவதும் நனைத்து போட்டது. இளங்காற்று வீசி அமர்ந்த அலை அடித்த காட்சியின்மேல் தியானமாய் உட்கார்ந்திருந்த அவர் உடனே எழுந்து தமக்குச் சமீபத்தில் நின்ற வேறொரு போதகரைப் பார்த்து, ''பிரசங்கிகளுக்கு இது ஒரு நல்ல பாடம். அசமந்தமாய் இருக்கிற ஜனங்களை விழிக்கப் பண்ணுவதற்கு அவர்கள் நினைத்திராத ஒரு சங்கதியினுல் அவர்களுடைய ஆச்சரி யத்தை எழுப்பி விடுதல் மிக நல்ல வழி'' என்றார். மெய் தான்; ஜனங்கள் அசதியாய் இருக்கும்போது நாம் அவர் களைச் சடிதியிலே பிடிக்க வேண்டும். மந்தாரம் இல்லாத வானத்திலிருந்து தோன்றும் மின்னல்கள்போல் நமது அதிசயப்பொருளும் வெளிப்படுவதாக. எல்லாம் அமை

தலும் பிரகாசமுமாய் இருக்கும்போது புசல் எழும்புமானல் அதன் பயங்கரம் அதிகம் அல்லவா? பிரசங்கிக்கும்போது நாமே தூக்க மயக்கம் உள்ளவர்களாயிருந்தால் ஜனங்களை எழுப்புவதற்கு நாம் செய்யும் எந்த முயற்சியும் கூனுகூலப் படாது; பிரசங்கிக்கு தூக்க மயக்கம் இருக்கக் கூடியதா? ஆம், ஒய்வு நாள்தோறும் இது வழக்கந்தான். அநேக பிரசங்கிகள் தாங்கள் பிரசங்கிக்கும் போதெல்லாம் அதிக தூக்க மயக்கமுள்ளவர்களாய் இருக்கிருர்கள். உள்ளபடி சொன்னல் அவர்கள் ஒருபோதும் சரியாக விழிக்கிறதில்லை. காதுக்குச் சமீபத்தில் ஒரு பீரங்கி வெடித்தாலன்றி அவர்களுக்கு விழிப்பு உண்டாகாது. அவர்கள் பிரசங்கங்கள் எல்லாம் வழக்கமான வசனிப்புகளும், அநேகந்தரம் சொன்ன பழைய வாசகங்களும், உற்சாகமற்ற சமஞ்சைகளும் நிறைந்தவைகளாய் இருக்கின்றன. இப்படிப்பட்ட பிரசங்கிகளும்கூட ஜனங்கள் இவ்வளவு தூக்கமுள்ளவர்களாய் இருக்கிருர்களே என்று ஆச்சரியப்படுகிருர்கள். அவர்கள் ஆச்சரியப்பட நியாயம் இல்லை.

கவனத்திற்கு உபயோகமான வேருெரு உபாயம் சிறிது நேரம் பிரசங்கத்தை நிறுத்துவதே. பிரசங்கித்துக் கொண்டு வரும்போது ஜனங்கள் தூங்குகிருர்கள் என்று கண்டால், கொஞ்சநேரம் பேசாமல் நிற்கவேண்டும். நமது பிரசங்கமாகிய வண்டியில் சவாரி போகும் பிரயாணிகள் கண்ணைத் திறந்து பார்ப்பார்கள். இயந்திரத்தின் உருளைகள் அசைந்துக் கொண்டிருக்கும்போது வேலைக்காரன் தூங்குகிருன். ஏதாவது காரணத்தினுல் இயந்திரம் நிற்கும் போதோ, அவன் திடுக்கிட்டு எழுந்து. என்னவென்று விழித்துப் பார்க்கிருன். உஷ்ணமான சமயங்களில் எந்தப் பிரயத்தனத்தினுலாவது நித்திரை நீங்காதென்று கண்டால் பிரசங்கத்தைச் சுருக்கி, ஒரு பாட்டுப்பாடி, இரண்டொரு சகோதரரை ஜெபம் பண்ணச் சொல்வது நன்மையாயிருக்கும். ஜனங்கள் தூக்கமயக்கத்தோடு இருக்கிறதைக்கண்ட ஒரு போதகர். "தமது ஆசனத்தில் உட்கார்ந்து நீங்கள் எல்லாரும் இளைப்பாறுகிறதைக் கண்டேன், அதனுல்

நானும் இளைப்பாறினுல் நல்லது என்று எனக்குத் தோன்றிற்று'' என்ருர். அந்திரேயா புல்லர் என்னும் போதகர் ஒரு நாள் பிரசங்கம் தொடங்கிச் சிறிது நேரத்துக் குள் ஜனங்கள் தூங்குகிறதைக் கண்டு: சிநேகிதரே, சிநேகிதரே, சிநேகிதரே, இது சரியல்ல; சிலவேளைகளில் நீங்கள் தூங்கும்போது அது என் குற்றமாய் இருக்கு மென்று நினைத்தேன், இப்பொழுதோ நான் தொடங்கு முன் நீங்கள் உறங்கிவிட்டீர்களே. ஆகையால், அது உங்கள் குற்றந்தான்; தயவு செய்து விழித்து நான் உங் களுக்குக் கொஞ்சம் நன்மை செய்யும்படி இடந்தாருங்கள் என்று சொன்னுர். மேற்சொல்லிய திருஷ்டாந்தங்களில் காண்கிறபடி நிறுத்தவேண்டிய சமயம் இன்னதென்று நன்ருய்க் கவனித்து, சிறிதுநேரம் அமைதலாய் நிற்க வேண்டும். ஜனங்கள் பிரசங்கத்தைக் கவனியாமல் இருக்கிறபோது பேசுவதை வெள்ளிக்கு ஒப்பிட்டால், மௌனமாய் இருப்பதையோ தங்கத்துக்கு ஒப்பிடலாம். சாதாரண செய்திகளை மந்தத்தொனியோடு சொல்லிக் கொண்டுபோனுல் தொட்டிலில் இட்டு ஆட்டினுற்போல் இருக்கும்; இது அதிக நித்திரையை உண்டாக்கும். தொட்டிலைச் சற்று குலுக்கவே நித்திரை பறந்துவிடும்.

பிரசங்கம் முழுவதும் கவனம் நிலையாய் இருக்கும்படி யாக நாம் பேசுகிற செய்தி ஜனங்களுக்கு உபகாரமானது என்று அவர்களை உணரச் செய்யவேண்டும். இது மிகவும் முக்கிய விஷயம். தனக்கு இயல்பான ஒரு காரியம் சொல் லப்படப்போகிறது என்று எதிர்பார்க்கிற எவன்தான் தூங்குவான்? பத்திரம் வாசிக்கப்படும்பொழுது அதில் தனக்கும் ஒரு பாகம் எழுதியிருக்கிறதென்று அறிந் திருக்கிற எவன் உறங்குவான்? அல்லது மரண தண்டனைக்கு ஏதுவான குற்றத்தில் அகப்பட்ட எந்தக் கைதி நியாயதிபதி தீர்ப்புச் சொல்லும்போது நித்திரை செய்வான்? சுயலாபம் கரிசனையை உயிர்ப்பிக்கிறது. ஆகையால் பிரயோஜனமும், ஒவ்வொருவருக்கும் அவசரத் தேவையுமான பொருள்களைக்குறித்தும் பிரசங்கிப்போமாக .

அப்படிச் செய்தால் பிரசங்கத்தைக் கவனிப்பார்கள் என்பது நிச்சயம்.

'ஜனங்களின் கவனத்தைக் கவர்ந்துக்கொள்வதற்குக் கேட்பதற்குப் பத்திரமானதொன்றைச் சொல்லவேண்டும்; என்ற தங்க சூத்திரத்தை இந்த அதிகாரத்தின் துவக்கத்தில் சொன்னேமே! இனி ஓர் இரத்தினச் சூத்திரத்தைச் சொல்லி இந்த அதிகாரத்தை முடிப்போம். அதென்னவென்றல் **பிரசங்கிகளாகிய நாம் தேவாவி நிரம்பினவர்களாய் இருக்கவேண்டும்.** அப்படியானல் கவனமின்மையைப்பற்றிப்பேச இடம் இராது. பிரசங்க ஆயத்த அறையிலிருந்து கடவுளோடு சம்பாஷணை செய்துகொண்டு நாம் போய் அவருடைய பிரதிநிதிகளாய் மனிதர்களிடத்தில் நமது முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் பேசுவோமாக. அப்பொழுது நமது பேச்சு அவர்கள் ஆத்துமாக்களில் பலன் செய்யத்தக்க சத்துவமுள்ளதாய் இருக்கும். கடவுள் பேசும்போது மனிதர் செவிகொடாமல் இருப்பதெப்படி? அவர் அவர்களைப்போன்ற ஒரு பெலவீன மனிதனைக் கொண்டு பேசினலும், பேசப்படும் சத்தியத்தின் வல்லமை அவருடைய சத்தத்தைக் கேட்கும்படி அவர்களை நெருக்கி ஏவும்.

சகோதரரே! நாம் கடவுளுடைய நாமத்தினல் போய், ''கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்'' என்று கூறும்போது அவர்தாமே நம்மோடு இருப்பாராக.

16

பிரசங்கத் தொனி

பிரசங்கியின் சத்தத்தைக்குறித்து நாம் சொல்லக்கூடிய முதலாம் விதி என்னவெனில், **உன் சத்தத்தைக் குறித்து அதிகமாய் நினையாதே** என்பதே. ஏனென்றால் பிரசங்கியின் குரலோசை எவ்வளவு இங்கிதமாய் இருந்தாலும் அவன் அதன் மூலமாய் முக்கியமும் சமயோசிதமுமான சத்தியங்களை வெளிப்படுத்தவில்லையானால், அது நன்றாய் ஓடுகிற வெற்று வண்டியைப்போல இருக்கும். அதுபோல, ஒரு பிரசங்கி பேசத்தக்க சாரமான காரியம் ஒன்றும் தெரியாதவனாயிருந்தால் அவன் ஓசையிடுகிற கைத்தாளம்போல் இருப்பானேயன்றி, உபயோகமுள்ள போதகன் ஆகமாட்டான்.

காரியம் இப்படி இருந்தாலும் ஒரு பிரசங்கி தன் சத்தத்தைக்குறித்து கொஞ்சமாகிலும் கவனஞ்செலுத்தாதிருப்பது சரியல்ல. ஏனெனில் பிரசங்கத்தொனி பிரசங்கப் பயனுக்கு மிகவும் அனுகூலமான கருவியாகும். மிகவும் அருமையான சத்தியங்கள் மாறுததொனியான பிரசங்கத்தால் பெரும்பாலும் பயன்படாமல் போகலாம். பெருமதிப்புக்குப் பாத்திரரான ஒரு போதகர் இருந்தார். அவருடைய பிரசங்கமோ குடத்துக்குள் அகப்பட்ட வண்டு இறைவதுபோல் இருந்தது. மிகப் பயனுள்ள போதனைகளைத் தமது இருதயத்திலிருந்து மிகவும் தகுதியான வார்த்தைகளினால் பிரசங்கித்த அந்தப் பெரியார், கடவுள் தமக்கு அநேக நரம்புள்ள சுரமண்டலத்தைக் கொடுத்திருந்தும், அதில் ஒரே நரம்பில் மாத்திரம் வாசித்துக் கொண்டு வந்தது தற்கொலையேயன்றி வேறென்ன?

தற்காலத்தில் அநேகருக்கு வழக்கமாயிருக்கிற **மாய்மாலப் பாசாங்குத் தொனிகளில் பழகாதபடி எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.** பிரசங்கப்பீடத்தில் நிற்கும் பத்துப்பேரில் ஒருவன்கூட ஒரு மனிதனுக்கு ஏற்றவிதமாய்ப் பேசுவது அபூர்வம். மற்றெல்லா இடங்களிலும் மனிதர் இயற்கையாகப் பேசுகிறார்கள். நியாயஸ்தலத்திலும், ஆலோசனைச் சங்கத்திலும் அவர்கள் பேசுகிறதைக் கேட்கலாம். பிரசங்கப்பீடத்தில் பேசப்படுகிறதோ சுய பேச்சல்ல; அங்கே ஒருவித செயற்கை மொழியையும் போலித்தொனியையுமே கேட்கிறோம். இவ்விதப்பேச்சு ஆலயங்களில் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. வேறெந்த இடத்திலும் மனிதர் அதைச் சகிக்கமாட்டார்கள். நாலுபேர் கூடியிருக்கிற ஒரு கூட்டத்தில் ஒருவன் இவ்விதமாய்ப் பேசத் துணிந்தால், அவனைப்பற்றி எல்லாரும் சிரித்து கேலி செய்வார்கள் அல்லவா? நமது பிரசங்கிமாரில் பெரும்பாலோர் ஓய்வு நாளுக்கென்று ஒரு பரிசுத்த தொனியைச் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள்; வீட்டுக்கும் சம்பாஷணைக்கும் ஒரு தொனி, பிரசங்கப் பீடத்துக்கு வேறொரு தொனி; இது சரி அல்ல. பிரசங்கிமார் தங்களுக்கு இயல்பான தொனியோடு பிரசங்கிக்க வேண்டும்.

பிரசங்கிமார் தங்கள் பேச்சு சாடையில் ஏதாவது குற்றங்கள் இருக்கக் கண்டால், அவைகளைக் கவனித்துத் திருத்திக் கொள்ள கூடிய மட்டும் பிரயாசப்பட வேண்டும்.

வார்த்தைகளைச் சரியாய் உச்சரிக்க வேண்டும். கனம் பவர் ஐயர் 'பிரசங்க ரத்னவளி' என்னும் புத்தகத்தில் இதைக்குறித்துச் சொல்லியிருக்கிறதாவது:- "சொற்களை அவற்றிற்குரிய ஓசையின்படி உச்சரிக்கவேண்டும். சிலர் வசனத்தை வஜனம் என்றும், ஜெபத்தை செபம் என்றும், சுவிசேஷத்தை சுவிசேஷ்ம் என்றும், ஸ்தோத்திரத்தை தோத்திரம் என்றும் உச்சரிக்கிறார்கள். அப்படி உச்சரிப்பது சரியல்ல."

பேசும்போது வாயை நன்ருய்த் திறக்க வேண்டும். வாயைச் சரியானபடி திறவாமலிருப்பதே சில நுடைய தெளிவற்ற பேச்சின் காரணம். ''அவர் தமது வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசித்தார்'' என்று நமது இரட்ச கரைக் குறித்துச் சுவிசேஷகர்கள் எழுதியிருப்பது வீணல்ல. மேன்மையான சத்தியங்கள் அணிவகுத்துப் புறப்பட வேண்டிய வாசலில் கதவுகளை விரிவாய்த் திறப்பது அவசியம். மேலும் மூக்கைப் பேச்சுக் கருவியாய் உபயோகிக்கும் வழக்கத்தைத் தவிர்க்கவேண்டும். சுபாவ மானது ஒருவனுக்கு எப்படிப் போதிக்கிறதோ அப்படி பேசுவது உத்தமம். ஆகிலும் அந்தச் சுபாவம் கரடு முரடும் கொச்சைத்தனமுமாய் இராமல் சீர் பொருந்திய தாய் இருக்கவேண்டும்.

பேசும்போதெல்லாம் ஜனங்கள் கேட்கத்தக்கதாகப் பேச வேண்டும். அரை மைல் தூரம் கேட்கத்தக்கதாகப் பேசக் கூடிய சிலர், முதல் வரிசையில் இருப்பவர்களுக்கே நன்ருய் விளங்காதபடி முணங்குவதுண்டு. இப்படிப்பட்ட பிரசங்கி மாரால் என்ன பயன்? வேறு சிலர் பெருஞ்சத்தமாய்ப் பேசி ஞலும் சொற்களை தெளிவுறச் சொல்லாமல் அவைகளை ஒன்ருேடொன்று குழப்பி விடுகிருர்கள்; இதுவும் குற்றமே. ''மொழிவதற மொழி''— சொல்லுகிறதைத் தெளிவாய் சொல்லவேண்டும். நன்ருய்க் கேட்பதற்கு முழக்கமல்ல, தெளிவாய் வார்த்தைகளை உச்சரிப்பதே அவசியம். ஒவ் வொரு வார்த்தையாய் இழுத்திழுத்து சொல்லவேண்டும் என்பது இதன் கருத்தல்ல. சுறுசுறுப்பான மனமுள்ளவர் களுக்கு இது மிக்க வேதனையாக இருக்கும். ஒருமணி நேரத்துக்கு ஒரு மைல் வீதம் நகருகிற பேச்சைக் கவனித் துக் கொண்டிருப்பது கூடாத காரியம். மிதமிஞ்சித் துரித மாய் அதட்டிஉதறி வெடித்தலும் அடாது. வேர்த்துச் சடைதல் ஆவியின் எழுப்புதல் என்று எண்ணவேண்டாம். பிரசங்கத்தில் இடையிடையே, காதுக்குள் குளவி புகுந்த காட்டுக் குதிரை ஓடுவது போல் மூச்சுவிடாமல் வார்த்தை களைப் பொழிந்துவிட்டு கொஞ்ச நேரம் நின்று சுவாசப்பை

நிரப்பியபின், திரும்பவும் அப்படியே செய்கிறவனுடைய பிரசங்கம், கேட்போர் சகிக்கக்கூடாத கொடிய வாதை யாகும். மூச்சு விடாமல் பேசிக் கொண்டு நிற்கும் தவித்துப் போன வாய்ச்சாலகன் பேசும் பொருளில் அர்த்தம் பிறக்கிறதில்லே. பிரசங்கி சுவாசிக்கிறது சபையாருக்கும் தெரியக்கூடாத சுவாச இயக்கமாய், இரத்தம், நரம்பில் ஓடுவதுபோல் வெளிக்குத் தோன்ருமலே இருக்கவேண்டும். மூச்சுவாங்குவதால் நமது பிரசங்கம் அடிக்கடி நிறுத்தப்பட நாம் இடங்கொடாதிருப்போமாக.

பிரசங்கிக்கையில் சாதாரணமாய் உரத்த சத்தமாய்ப் பேச வேண்டாம். சத்தமிட்டுக் கூப்பிட்டு அடக்கிக் கொள்ளாமல் எக்காளத்தைப்போல் உன் சந்தத்தை உயர்த்துவது நல்லதுதான். என்ருலும், ''நீ உனக்குக் கெடுதி ஒன்றும் செய்துக் கொள்ளாதே'' என்று அப்போஸ் தலன் சொன்ன எச்சரிப்பு மறக்கத்தக்கதல்ல. சிறிது சத்த மிட்டாலும் அது ஜனங்களுக்குத் தெளிவாய் கேட்குமானல் மீதியான சத்தத்தைத் தேவையான சமயங்களுக்காகப் பத்திரப்படுத்துவது விவேகம். ''அதிகச் செலவு அர்த்த நாசம்'' என்ற பழமொழி திரவிய சம்பந்தமாய் மாத்திர மல்ல, சத்தசம்பந்தமாயும் சத்தியமாகும். ஒருவன் தனக்கு உண்டாயிருக்கிற பெரிய குரல் சத்தத்தை மாட்டாய்ச் செலவிடவேண்டும். பிரசங்கத்தால் சபையார் இருதயத் தில் குத்தப்படவேண்டும் என்பது நமது கருத்தாயிருக்க, அவர்களுக்குத் தலேக்குத்து வருவிப்பது அநீதியாகும். ஜனங்கள் தூங்காதபடி செய்ய அவர்கள் செவிபறைகளே உடைக்கவேண்டியதில்லே. ''கர்த்தர் பெருங்காற்றில் இருந்ததில்லே.'' இடிமுழக்கம் மின் முழக்கமல்ல; சத்தத் தின் முழக்கத்துக்குத்தக்கதாக ஜனங்கள் கேட்கிறதில்லே. அதிக சத்தம் போடுதல் செவியை விரைக்கச் செய்து எதிரொலியால் ஆலயத்தை நிரப்பி பிரசங்கத்தின் பலனே முற்றும் கெடுத்துபோகிறது. சத்தத்தை ஜனத்தொகைக்குத் தக்கதாக மட்டுப்படுத்தவேண்டும். இருபதினுயிரம் பேர் கூடியிருக்கும் சபையில் வார்த்தைகளே முழக்கமாய்

உச்சரித்துப் பேசுகிறதுபோல் இருபது முப்பதுபேர் கூடியிருக்கிற இடத்தில் பேசவேண்டியதில்லை. ஆலயத்தில் பேசும்போதும் தெருவிலும் கேட்கத்தக்கதாக முழங்குவதால் பயனென்ன? அங்கே யாராவது பிரசங்கத்துக்குச் செவி கொடுத்துக்கொண்டு நிற்கிருர்களா?

சத்தத்தைச் சமயத்துக்கு சமயம் மாற்ற கருத்தாய் இருக்கவேண்டும். மெதுவாய் ஆரம்பித்து கிரமமாய் உயர்த்தி இரத்ததொனியால் முடிக்கவேண்டும் என்பது பழைய சூத்திரம். இவ்விதச்சட்டம் பீரங்கிவாயில் வைத்துக்கொளுத்திவிடப்படத்தக்கதே. நமது இருதயத்தின் உணர்வுக்குத் தக்கதாக மெதுவாய் அல்லது உரத்துப் பேசவேண்டும். சேர்க்கையும் கோராணியுமான சட்டதிட்டங்களையும் பிரமாணங்களையும் அனுசரிக்கவேண்டாம். இவ்விதச் சட்டங்கள் அருவருப்பானவைகள். பிரசங்க சமர்தன் என யாவராலும் நன்கு மதிக்கப்பட்ட ஒரு போதகரின் முன்மாதிரியைப் பின்பற்ற விரும்பின ஒரு புதிய பிரசங்கி, ஒருவரும் கேட்கக்கூடாத மெல்லோசையாய் பிரசங்கத்தைத் தொடங்குவார். ஜனங்கள் ஏதோ ஒரு சாரமான பொருள், காற்றில் வீணய் போய் விடுகிறதே என்று கவலையுற்று முன்னுக்குச் சாய்வார்கள். ஒரு சிறு முணக்கமேயல்லாமல் வேருென்றும் கேட்காது. ஆனல் சிறிது நேரத்தில் பிரசங்கி ஆலயம் முழுவதையும் பெருதொனியாய் நிரப்பி தமது மூச்சுப்பையின் பெலத்தை வெளிப்படுத்துவார். இந்த வழக்கம் மிகவும் குற்றமானது. அவருடைய பிரசங்கத்தின் முற்பாகம் பிரயோஜனம் இல்லையானல் அதை விட்டுவிடலாமே, அது பிரயோஜனமென்ருல் அதைத் தெளிவுரச் சொல்லத் தடையென்ன? நமது பிரசங்க முகவுரைகள் ஏகவெளிக்கு மாத்திரம் முழங்கிவிடத்தக்கதாக அவ்வளவு கேவலமானவைகள் அல்லவே; அவைகளைத் தைரியமாய் சொல்லி பிரசங்க ஆரம்பத்திலேயே ஜனங்களின் கவனத்தை இழுத்துக் கொள்ளவேண்டும். ஆகிலும் ஆரம்பத்தில் அதிக சத்தத்தோடு பேசவேண்டாம். நாம் பேசும் பொருளால் இரு-

தயம் அனல்கொள்ளும்போது சத்தத்தையும் அதற்கு இசைவாக உயர்த்துவது கூடாத காரியமாயிருக்கும். எனினும் துவக்கமுதலே ஜனங்கள் எல்லாரும் கேட்கத்தக்கதாய் பேசவேண்டும்.

ஏற்ற சமயங்களில் சத்தத்தை மிகவும் அடக்கிக் குறைக்கலாம். மிருதுவும், தெளிவும், பயபக்தியுமான தொனிகள் காதுக்கு ஆறுதலாய் இருப்பதுமின்றி, இதயத்தை வசப்படுத்துவதற்கேற்ற தகைமையாய் இருக்கின்றன; தாழ்ந்த தொனிகளைக் குறித்துப் பயப்படவேண்டாம். அவைகளை பெலனோடு அனுப்பும்போது அவைகள் பேரொலிகளைப் போலவே தெளிவாய் கேட்கும். நன்றாய் கேட்க எப்போதும் கனத்த சத்தமாகப் பேசவேண்டியதில்லை. அதிக தூரம் பாயும் வெடி அதிகமாய் முழங்குகிறதில்லை; கரிகுழல் துப்பாக்கியின் சத்தம் மிகவும் கொஞ்சம்; ஆகிலும் குண்டு எவ்வளவோ தூரம் பாய்கிறது! அப்படியே சத்தத்தின் முழக்கமல்ல, அதில் நாம் செலுத்தும் பெலனே அதைத்தகுந்தபடி கேட்கப்பண்ணுகிறது. சில்லாங்குருவி சத்தம் போன்ற சிறுசத்தம் அதிக தூரம் செல்லும். ஒரு பாறையின் சத்தத்தைப்பார்க்கிலும் ஒரு மணியின் சத்தம் அதிகதொலை கேட்கிறது. தொனியின் இங்கிதத்துக்குத் தக்கதாக அதன் கதியும் இருக்கிறது. ஆகையால் நாம் தொனிகளில் செலுத்தும் பெலனைக் காரியத்துக்கு இசைவாக மாற்றி நல்லறிவுள்ள ஒருவன் எப்படி இயல்பாய் சம்பாஷித்து வேகமாய் வாதாடி, அன்பாய் காதுக்குள் பேசி, உருக்கமாய் மன்றாடி, தெளிவாய் விளம்புகிறானோ அப்படி நாமும் பிரசங்கத்தில் பேசவேண்டும். இப்படி தொனிக்கருவிகளில் செலுத்தும் பெலனை மாத்திரமல்ல: தொனிகளையும் ஒன்றுக்கொன்று பேதப்படுத்தவேண்டும்.

ஒரு கீதத்தில் மந்தமும் உச்சமும் மத்தியமுமான பற்பல சுரங்கள் மாறி மாறி வருகிறதுபோல பேச்சாலும் தொனிகள் மாறி மாறி வரவேண்டும். இப்படிச் செய்தல் பேசுகிறவனுக்கும் கேட்கிறவர்களுக்கும் மெத்த அனுகூலமாயிருக்

கும். கடவுள் நம்மேல் இரங்கி இயல்பாய் நமக்கு உண்டாயிருக்கிற விகற்ப பிரியத்தைத் திருப்தியாக்கும் பொருட்டு சகல நன்மைகளும் மாறி மாறி வந்துக்கொண்டிருக்கும்படி திட்டம் செய்திருக்கிறுர். அப்படியிருக்க நாம் நமது ஜனங்களைச் செயலற்றிருக்கச் செய்வதினுல் வேதனைப்படுத்தாதபடி எச்சரிக்கையாய் இருப்போமாக. அரைமணி நேரம் ஒரே தொனியான வார்த்தைகளால் ஓர் ஆளின் காதை அறைந்துகொண்டு நிற்பது மகா குரூரம். நமது காதில் ஒரு வண்டு ஓயாமல் இரைந்து கொண்டேயிருக்குமானுல் அது நமக்கு எவ்வளவோ தொந்தரவாயிருக்கும்; நம்மைப் பயித்தியக்காரராக்கிவிட அதுவே போதும். அப்படியே ஒருவனுடைய ஏகத்தாளப் பிரசங்கம் காதுக்கும் மனதுக்கும் பெரிய அலுப்பு என்பதற்கு ஐயமில்லை. அந்த அலுப்பினுல் நித்திரை வந்துவிடுகிறது. ஜனங்களுக்கு நித்திரை மயக்கம் உண்டாக்குவது பிரசங்கியின் நோக்கமல்லவே. அப்படியானுல் வெவ்வேறு தொனிகளில் பேசி ஜனங்களை விழிப்போடு இருக்கபண்ணவேண்டியதல்லவா? எத்தனையோ பிரசங்கிகள் ஏகத்தொனியானது நித்திரைக்குங் காரணம் என்பதை நினையாமலிருக்கிறுர்கள்! பிரசங்கி முரசடிக்கிறவன் போலிருக்கிறுன். மேளமடிக்கிறவன் மேளத்தின் ஒரே பாகத்தில் மாத்திரம் எப்பொழுதும் அடிந்துக் கொண்டு நின்றுல் அது சீக்கிரம் தேய்ந்து அதில் துவாரமுண்டாகும். தோலின் எப்பாகமும் அடிப்படத் தக்கதாக மாற்றிமாற்றிக் கொட்டினுலோ தோல் அதிக காலம் கெடாமல் இருக்கும். ஒருவனுடைய குரலும் இப்படியே. அவன் எப்பொழுதும் ஒரே தொனியாய்ப் பேசினுல் அந்தத் தொனியைப் பிறப்பிக்கும்படி உபயோகிக்கப்படுகிற தொண்டையின் பகுதி சீக்கிரம் தேய்ந்து போகும்; அதனுல் அவனுக்கு எலும்புருக்கி முதலிய வியாதிகள் உண்டாகும்.

சத்தம் பொருளுக்கு ஏற்றதாய் இருக்கும்படி பார்க்க வேண்டும். இது மிகவும் அவசியமான ஒரு சூத்திரம். துயரமான ஒரு காரியத்தைக் கெம்பீரசத்தமாகச் சொல்வதும்

பரலோகத்தின் தேவதூதர்களின் கீதத்துக்கிசைய ஆடினுற்போல் உற்சாகமாய்த் தொனிகள் எழும்பவேண்டிய வேளையில் மந்தமாய் இழுத்துக்கொண்டு நிற்பதும் முற்றும் தவருகும். இதைக்குறித்து அதிக விளக்கமாய்ப் பேச வேண்டியதில்லை. ஆகிலும் இது முக்கியமான ஆலோசனை. இதைக் கருத்தாய்க் கைக்கொண்டு வந்தால் ஜனங்களின் கவனத்தை வசப்படுத்திக்கொள்ள இது ஒரு நல்ல எத்தனமாயிருக்கும். நமது சத்தம் காரியத்துக்கு தக்கதாய் மாத்திரமல்ல; இயல்பானதாயும் இருக்கவேண்டும். ஒரு நாள் ஒருவன் ஜாண்சன் என்னும் கல்விமானை நோக்கி: பர்க் என்னும் சாதுரிய பிரசங்கி, ஜூலியுஸ் சிசரோவைப் போல் பேசுகிருர் அல்லவா என்று கேட்டதற்கு, ஜாண்சன் என்பவர், ''இல்லை ஐயா, அவர் பர்க் என்பவரைப் போல் பேசுகிருர்'' என்ருராம். சந்தத்தின் விஷயத்தில் சட்டங்களையும் மாதிரிகளையும் அடிமைபோல் பின்பற்றும் வழக்கத்தை முழுப்பகையோடு பகைக்க வேண்டும். ''சிலர் கொஞ்சம் ஆங்கிலம் படித்து ஆங்கிலேயரிடத்தில் பழகி அவர்களைப்போல தாங்களும் ஒருவிதமான ஒய்யாரத்தோடே பேசுகிறதுண்டு. இது மூடத்தனம்'' என்று கனம் பவர் ஐயர் சொல்லியிருக்கிருர். மற்றவர்களுடைய தொனிகளையும் சாடைகளையும் பின்பற்றும் இயல்பு ஒருவனுக்கு உண்டாயிருக்குமானுல் ஒவ்வொரு சாதுரியப் பிரசங்கியிலும் காணப்படும் சிறந்த வழக்கங்களையும் பின்பற்றப் பிரயாசப்படவேண்டும். அப்பொழுது அதிக குற்றம் ஏற்படாது. நமது இயல்பான சத்தமே நமக்குப் போதும். நாம் குரங்குகளல்ல, மனிதர்; நாம் கீரிப்பிள்ளைகளாயிராமல் நாம் எல்லாவற்றிலும் இயல்பாய் நடக்கிறவர்களாயிருக்கவேண்டும். ஒருவன் தன் தாடியை வளர்க்க வேண்டிய உத்தமவிதம் அது இயல்பாய் வளருகிறவிதமே என்று சொல்வார்கள். ஏனெனில் அது நிறத்திலும் வடிவிலும் அவனுடைய முகத்திற்கு ஏற்றதாய் இருக்கும். அவ்வண்ணமே நமது பேச்சும், நமது யோசனைப் போங்குக்கும் சுபாவத்துக்கும் அதிக இசைவாய் இருக்கும். பிறருடைய சாடைகளைக் காண்பிக்கும் போலிக்காரன்

நாடகசாலைக்கு ஏற்றவன். பரிசுத்தமாக்கப்பட்ட சுபாவத்தோடு நல்ல பயிற்சி பெற்ற மனிதனே பரிசுத்த ஸ்தலத்துக்கு ஏற்றவன்.

இன்னொரு நல்ல ஆலோசனை என்னவென்றால், **சத்தத்தைத் திருத்திக் கொள்ள அப்பியாசித்து வர வேண்டும்.** நமது குரல் சத்தத்தைச் சீர்படுத்த என்னென்ன பிரயாசம் எடுக்கக் கூடுமோ அதையெல்லாம் எடுக்க வேண்டும். கடவுளின் மகிமையான சுவிசேஷத்தைக் கூறும் சத்தத்தைப் பூரணப்படுவதற்குச் செய்யப்படுகிற எந்தப் பிரயத்தனமும் பயனுள்ளதே. சரியான தொனியோடு பேசுவதற்கு விரிந்த மார்பு தேவை. அதற்காகப் பிரசங்கிக்கும்பொழுது சுவாசப்பை சுருங்காவண்ணம் பாடகர்களைப்போல் நிமிர்ந்து புயங்களைப் பின்னுக்கு இழுத்து கொள்ளவேண்டாம். மேசையில் சாய்ந்துக் கொள்ளுதலும் தவறு. சரீரம் முன்னுக்கு வளைவதைப் பார்க்கிலும் பின்னோக்கி நெளிவது நலம். நிலையிலும் சாடையிலும் காணப்படும் பிழைகளை எடுத்துச் சொல்ல நமது நண்பரில் ஒருவரைக் கேட்டுக் கொள்வது நலம். அதைவிட நமது குறைகளைக் கூர்மையாய்க் கவனித்து இரக்கமின்றிப் பரியாசம் பண்ணுகிற ஒரு சத்துருவின் குறைகூறலை அங்கீகரித்துக் கொள்ளுதல் உத்தமம். இதில் விழிப்பு மிகத்தேவை. அசதியாயிருக்கிறவன் அடிக்கடித் தப்பிதங்களுக்குள் விழுவான்; அவனுக்கு இயல்பல்லாத தொனிகள் வரும்; அலங்கோலமான பழக்கங்கள் உற்பத்தியாகும். அப்படியாகாதபடிக்கு விழிப்பாயிருந்து, பிழைகள் நேரிடும்பொழுது அவைகளைத் திருத்தவேண்டும். நம்மை இப்பொழுது இருக்கிறதிலும் சற்று அதிகப் பிரயோஜனமுள்ளவர்களாக்கத்தக்க ஏது எதுவோ அதை அற்பமாய் எண்ணுதிருப்போமாக.

கடைசியாக நமது தொண்டைகளைப் பத்திரம் பண்ண வேண்டும். பேசத்தொடங்குமுன் அவைகளைச் சுத்தம் பண்ணுவது அவசியம். பேசத்தொடங்கியதும் ஓயாமல்

இருமிக்கொண்டு நிற்கும் வழக்கம் வெறுக்கத்தக்கது. சிலர் இரண்டொரு வார்த்தைகளுக்கு ஒருதரம் இருமி இருமிச் செறுமிக்கொண்டு நிற்பார்கள். இந்த அலங்கோலமான வழக்கத்தை அகற்றவேண்டும். சிலர் பேசுமுன் தொண்டையைச் சுத்தம் பண்ணிக் கொள்ளாததனால் காறி உமிழப்போகிறதுபோல் காணப்படுகிறதுண்டு. இப்படி அடிக்கடி செய்தி கேட்போருக்கு அருவருப்பு உண்டாக்குகிறதைவிட ஒரே தரம் அப்படிச் செய்து கொள்ளுதல் நலம். மூக்கு உறிஞ்சுதலும், சிந்துதலும் மிகவும் வெறுக்கத்தக்கவை. ஒருவனுக்கு ஜலதோஷம் உண்டாயிருக்கும் போது காரியம் வேறு. ஆகிலும் இப்படிச்செய்வது ஒருவனுக்கு வழக்கமாயிருந்தால் அது சகிக்கக்கூடாத தொல்லைதான். இவைகள் அற்பகாரியங்கள்போல் தோன்றலாம். என்றாலும், இவைகளைக் குறித்து எச்சரிக்கையாய் இராமல் போவதனால் வரும் நிந்தையும் நஷ்டமும் மிகுதி. சத்தம் சம்பந்தமாய் நமது ஊழியத்தின் ஆரம்பத்தில் உண்டாயிருக்கும் வருத்தங்களும் இடையூறுகளும் நீண்ட பயிற்சியால் நீங்கிப்போம். இதிலும் விடாமுயற்சி தேவைப் ஊழியத்தில் மெய்யான வாஞ்சையுள்ளவர்களுக்கு இதிலும் அனுகூலம் கிடைக்கும். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை அக்கினியைப்போல் அனலாய் உணரும்போது' திக்குவாய் முதலாய் அசையும்; பயமானது தன் பெலவீனங்களோடு அகன்றுபோம், எனவே பயிற்சியில்லாத வாலிப பிரசங்கிகள் தைரியங்கொண்டு ஊக்கமாய் பிரயாசப்படலாம். அப்பொழுது தேவ உதவியோடு கூட சுபாவமும் பயிற்சியும் அவர்களுக்கு ஒத்தாசை செய்யும்.

17

பிரசங்கிக்கு நேரிடும் சோர்வு

யுத்தம் மும்மரமாய் நடக்கையில் தாவீது விடாய்த்துப் போனுன் என்று எழுதியிருக்கிறபடியே தேவதாசர் எல்லாரைக் குறித்தும் எழுதலாம். சோர்வு நம்மெல்லாருக்கும் அப்போதைக்கப்போது உண்டாகும். நாம் சாதாரணமாக உற்சாகமுள்ள புருஷராய் இருந்தாலும், நமக்கு இப்படிப்பட்ட சஞ்சலமான சமயங்கள் வராமலிராது. பெலசாலிகள் எப்பொழுதும் ஊக்கமாயும், அறிவாளிகள் எப்பொழுதும் ஆயத்தமாயும், வீரர்கள் எப்பொழுதும் தைரியமாயும், உற்சாகமுள்ளவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாயும் இருக்கிறதில்லை. எதுவும் அசைக்க முடியாத சில மகா பலசாலிகள் அங்கங்கே இருக்கிருர்கள். வேலை அவர்களுக்கு ஒரு கஷ்டமுமில்லை. அவர்களும்கூட வேளா வேளைகளில் மிகவும் சோர்ந்து போகிறதுண்டு. அப்படியிருக்க, சாதாரணமான ஆள்கள் தாங்கள் வெறும் தூசியும், சாம்பலுமாயிருப்பதை உணர்ந்து கொள்ளத்தக்கதாக அடிக்கடி சலித்தும் சோர்ந்தும் போகிருர்கள்.

சிறந்த போதகர்களுக்குகூட மிகவும் பயங்கரமான சோர்வு நேரிட்டதுண்டு என்று காட்ட அவர்களுடைய ஜீவிய சரித்திரங்களிலிருந்து திருஷ்டாந்தங்களை எடுத்துச் சொல்ல அவசியம் இல்லை. மகாதைரியசாலியாகிய லுத்தருடைய ஜீவியத்திலிருந்து ஆயிரம் திருஷ்டாந்தங்களை எடுத்துக்காட்டலாம். அவர் சில வேளைகளில் ஆனந்தக்

களிப்பாகிய ஏழாம் வானம்வரைக்கும் எழும்பியும், வேறு சில வேளைகளில் அவநம்பிக்கை என்ற உளையில் அமிழ்ந்தும் இருக்கிறார். அவருடைய மரணப் படுக்கைகூட கொந்தளிப்பற்றதாய் இல்லை. ஆகையால் அவர் சோர்வுற்ற ஒரு பிள்ளையைப்போல் மூச்செறிந்து, தமது கடைசி நெடு நித்திரையை அடைந்தார். ஒளியின் பிள்ளைகளாகிய தேவதாசர்கள் வேளாவேளைகளில் காரிருளில் நடமாடுகிறதற்கும், அருணோதயத்தின் முன்தூதர்களாகிய அவர்கள் அமாவாசை இருட்டில் அகப்படுகிறதற்கும் காரணம் யாதென்று சற்று யோசிப்போம்.

போதகர்கள் சோர்வடைவதற்கு ஒரு காரணம் அவர்கள் மனிதராயிருப்பதேயாம். அவர்கள் மனிதராயிருப்பதனால் பெலவீனரும், சஞ்சலத்தின் புத்திரருமாய் இருக்கிறார்கள். இம்மையில் நல்லவர் யாவருக்கும் உபத்திரவமு நேரிடும் என்று எச்சரிப்படைந்திருக்கிறோம். மேலும் போதகர்களுக்கு அதிக உபத்திரவம் உண்டாகுமென்று நாம் அறிய வேண்டும். அப்பொழுதுதான் தாம் தேவனுடைய ஜனங்களால் துன்பப்படுவோர்க்கு இரங்கவும், நோய்வாய்ப்பட்ட மந்தையைத் தகுதியாய் மேய்க்கவும் கூடும். தேகத்தைவிட்டு நீங்கின ஆவிகள் தேவ வசனத்தைக்கூறும்படி திரும்பவும் இவ்வுலகில் அனுப்பப்படலாம். ஆனால், இந்த ஜீவியத்தில் பாரஞ்சுமந்து தவிக்கிறவர்களுடைய சஞ்சலம் அவர்களுக்குத் தெரியாது. தேவன் தமது தூதர்களைச் சுவிசேஷகராய் நியமித்து அனுப்பியிருக்கலாம். அந்தப் பரம புருஷர்களோ அறிவில்லாதவர்களுக்கும், நெறி தப்பிப் போனவர்களுக்கும் இரங்கக் கூடியவர்களல்ல. ஆகையால் சர்வ ஞானமுள்ள தேவன் தமது கிருபா பாத்திரங்களாய் இருக்கும்படி, பல குறைகளுடையவர்களாகிய மனிதரையே தெரிந்து கொண்டார். அப்படியிருக்க, கர்த்தருடைய தாசரான போதகர்களுக்குக் கண்ணீர், திகைப்பு, சோர்வு ஆகிய இவைகள் நேரிடுவது ஆச்சரியமல்லவே.

மேலும், தேவ ஊழியக்காரர் அநேகர் பல காரணங்களினால் தேக சௌக்கியம் இழந்தவர்களாய் இருக்கிறார்கள். ஒரு நாளாகிலும் நோய் கொண்டு படுத்துக் கொண்டதாகத் தனக்கு ஞாபகம் இல்லை என்று சொல்லக் கூடிய வயோதிபர் சிலர் இருக்கலாம். மிகுதியானவர்களோ தேக சம்பந்தமாய் அல்லது மனச்சம்பந்தமாய்ப் பலவித பெலவீனம் உள்ளவர்களாய் இருக்கிறார்கள். இரைப்பை, ஈரல் முதலிய உறுப்புகளையும் பீடிக்கும் சில நோய்கள் சஞ்சலத்திற்கும் சோர்வுக்கும் காரணமாயிருக்கின்றன. அவைகளை மேற்கொள்ள எவ்வளவாய்ப் பிரயாசப்பட்டாலும், வேளாவேளைகளில் அவைகள் தம் தீயபலனைக் காண்பிக்கும். மனோ சம்பந்தமான நோய்கள் என்றால், அவைகள் இல்லாதவர்கள் யார்? ஏறக்குறைய நம்மெல்லாருக்கும் மன நோய்கள் உண்டு. துக்க குணம் சிலருக்குப் பிறவிப்பிணியாய் இருக்கிறது. சில மரங்களின் வேர்களுக்கு உண்டாயிருக்கிற ஔஷதச்சத்து அவைகள் வளரும் சேற்று நிலத்திலோ, சோலை மண்ணிலோ உண்டாயிருக்கும். சூரிய வெளிச்சத்தினால் மாத்திரமல்ல, சந்திரோதயத்தினாலும் விளையும் பயிர்கள் உண்டு. படகுகளுக்குப் பாய்மாத்திரம் போதாது, அடிப்பாரமும் வேண்டும். பாதை இறக்கமாய் இருக்கும்பொழுது சக்கரங்களுக்குச் சறுக்குப் போடுதல் வண்டியின் ஓட்டத்திற்குத்தடை என்று நினைக்கக்கூடாது. சறுக்கு போடவில்லையானால் வண்டி கவிழ்ந்து நாசமாய் போகுமே. சிலருடைய சரித்திரங்களைப் பார்க்கையில், மனச்சஞ்சலம் அவர்களில் மறைந்திருந்த மனோதத்துவங்களை வெளிப்படுத்தினதென்று காண்கிறோம். ஆத்தும சத்துவங்களைத் தொடர்ந்து கொண்டேயிராவிட்டால் அவை கெபியில் இருக்கும் சிங்கம்போல் நித்திரை செய்யும். காரியம் இப்படி இருந்தாலும் இவ்வித இயல்புடையவர்கள் சமயாசமயங்களில் மிகுந்த மனச்சோர்வுக்கும் உள்ளம் உடைவுக்கும் ஆளாவார்கள். ஆகிலும் நாம் அவர்களை அசட்டையாய் நினைக்கத் தேவை இல்லை. முடவரை அற்பமாய் எண்ண வேண்டாம். ஏனெனில் வேட்டை அவர்

கள் கையில் அகப்படும் என்று எழுதியிருக்கிறது. விடாய்த் திருநதும் பின் தொடருபவர்களையே நாம் அதிக கனமாய் மதிக்க வேண்டும். ரூபவதியான ராகேலைப் பார்க்கிலும் கூச்சப் பார்வையுள்ள லேயாள் அதிக புத்திர பாக்கியம் உள்ளவளாய் இருந்தாளே. அன்னாளின் கண்ணீர்கள் பெனின்னாளின் வீராப்பைப் பார்க்கிலும் அதிக திவ்விய பலனைப் பிறப்பித்தது. ''துயரப்படுகிறவர்கள் பாக்கிய வான்கள்'' என்று துக்கம் நிறைந்தவராகிய நமது இரட் சகர் சொன்னார். ஆகையால் அவர்கள் கண்ணீர் கிருபைக் குரியதாய் இருக்கும்பொழுது அவர்களை நிர்ப்பாக்கியர் என்று நாம் நினையாதிருப்போமாக. சுவிசேஷமாகிய பொக் கிஷத்தை மண்பாண்டங்களில பெற்றிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறது. ஆகையால் இந்தப் பாத்திரங்களில் அற்ப சொற்பக் குறைவுகள் இருந்தாலும் அதைக் கண்டு ஆச்சரியப்படத் தேவை இல்லை.

மேலும் போதக வேலையானது முழுவாஞ்சையோடு நடப்பிக்கப்படும்போது சோர்வு உண்டாவது நிச்சயம். ஆத்துமாக்களின் பாரத்தைச் சுமக்கிறவன் சிலவேளைகளில் தலைவணங்கித் தரை மட்டும் குனியாமல் இருப்பது கூடிய தல்ல. மனிதர்களின் குணப்படுதலைப்பற்றி நமக்கு உண் டாகும் வைராக்கியமான ஆசைகள் முற்றும் திருப்தியாக வில்லையானால் அவைகள் விசாரத்தினால் மாத்திரமல்ல, சில வேளைகளில் வஞ்சனையினாலும் ஆத்துமாவை துக்கப்படுத்து கின்றன. நாம் நம்பிக்கையாய் இருந்தவர்கள் வழுவிப் போகிறதையும், திருச்சபையார் தங்கள் சிலாக்கியங்களை அவமதிக்கிறதையும், துன்மார்க்கர் அக்கிரமத்தில் துணிகரங் கொள்ளுகிறதையும் காணும்போது மனம் உடையாதிருப்பதெப்படி? நாம் விரும்புகிறபடியே தேவ னுடைய இராஜ்யம் வருகிறதில்லை. பரம பிதாவின் நாமம் நாம் ஆசிக்கிறபடியே பரிசுத்தப்படுகிறதில்லை. ஆதலால் நாம் அழத்தான் வேண்டும். நமது மூலமாய்க் கேள்விப்பட்டதை மனிதர் விசுவாசியாத பொழுதும்

கர்த்தருடைய புயம் வெளிப்படாத பொழுதும் நாம் துக்கம் நிறைந்தவர்களாயல்லாமல், வேறெப்படி இருக்க முடியும்? மேலும், மனோ முயற்சியான வேலையெல்லாம் சோர்வுக்கும் ஆயாசத்திற்கும் ஏதுவானதே. ஏனெனில் அதிகப் படிப்பு உடலுக்கு இளைப்பு. நமது வேலையோ மூளைக்கு மாத்திரமல்ல, இருதயத்துக்குமுரியது. அடிக்கடி கர்த்தருடைய நாளின் சாயங்காலங்களில் நமது ஜீவன் முற்றும் போய் விட்டாற்போல் இருக்கிறதல்லவா? நமது ஆத்துமா முழுவதையும் நமது சபையார்மேல் ஊற்றிப் போட்டபின், நாம், ஒரு சிறு பிள்ளையுங்கூட தூக்கிப் போடக்கூடிய மண்குடம்போல் இருக்கிறோம். நாம் பவுல் அப்போஸ்தலனைப்போல் ஆத்துமாக்களின் ஈடேற்றத்தைக் குறித்து அதிக பலமான தாபந்தம் உடையவர்களாயிருப் போமாகில், கர்த்தருடைய சபையைக் குறித்த விசாரத்தி னால் பட்சிக்கப்படுகிறது இன்னதென்றறிவோம். இயேசு வுக்காக நமது ஜீவனைச் செலவிடுதல் நமது கடமையும் சிலாக்கியமுமாய் இருக்கிறது. நாம் நல்ல பாதுகாப்புப் பெற்று வாழும் சுகஜீவிகளாக இராமல், அனுதினமும் தகனிக்கப்படுகிற பலிகளாய் இருக்க வேண்டியவர்கள். நாம் நமது மாம்சத்தை நன்றாய்ப் போஷித்துப் பேணிக் காப்பாற்றிக் கொண்டிராமல் கர்த்தருக்காகச் செலவு பண்ணவும், செலவு பண்ணப்படவும் வேண்டியவர்கள். இப்படியாக உண்மையுள்ள போதகன் அடையும் ஆத்தும வருத்தம் மிகுந்த ஆயாசத்தைப் பிறப்பிக்கும்பொழுது அவன் இருதயமும் ஆவியும் சோர்ந்துபோம். இஸ்ர வேலருக்காக விண்ணப்பம் செய்த சமயத்தில் ஏறெடுக்கப் பட்ட வண்ணமாயிருந்த மோசேயின் கைகள் பாரமாயின. கிறிஸ்தவபோதகனுடைய கடமையின் பாரத்தை உணர்ந்த பவுல் அப்போஸ்தலன் இவைகளுக்குப் பாத்திரவான் யாரென்று கதறினான். மகாதைரிய புருஷனான யோவான் ஸ்நானகனும் தள்ளாடின காரியமுண்டு. அப்போஸ்தலர் கள் முதலாய் ஒரு காலத்தில் திகிலடைந்து தத்தளித் தார்கள்.

நமது உத்தியோக ஸ்தானமும் சோர்வுக்கு இடமாகும். தன் ஊழியத்திற்கேற்ற வண்ணம் ஆயத்தப்பட்டிருக்கிற ஒரு போதகன், தான் தனித்தவனும் மற்றவர்கள் நிற்கும் நிலேக்கு உயர்ந்தவனும் அவர்களே விட்டுப் பிரிந்தவனுமாயிருக்கிறதை உணர்ந்து கொள்வான். அவனுடைய ஜனங்களில் மிகவும் அன்பானவர்களுங்கூட அவனுக்கு விசேஷமாய் உண்டாயிருக்கிற யோசனைகளேயும், கவலேகளேயும, சோதனைகளேயும் அறிந்துக் கொள்ளமாட்டார்கள். ஒருவன் பட்டாளத்தில் சாதாரண சேவகனுய் இருக்கும்பொழுது அவனுக்கு அநேக தோழர்களுண்டு. அவன் உயர்ந்த உத்தியோகத்தில் சேர்ந்த பின்போ அவனுக்குச் சமமானவர்கள் கொஞ்சமாவார்கள். ஒரு சேனேயில் சேவகர் அநேகர், தலேவர்கள் சிலர், சேனுபதியோ ஒருவன் மாத்திரம். அப்படியே நமது சபைகளிலும் கர்த்தர் எவனேத் தலேவனுக உயர்த்துகிருரோ அவன் மற்றவர்களேவிட எவ்வளவு சிறந்து விளங்குகிருனே அவ்வளவு தனித்தவனுமாயிருக்கிருன். மலேயின் உச்சிகள் மலேக்கு மேலாக எழும்பி மேக மண்டலத்தை அளாவி நிற்குமாப்போல் பரம சிந்தையாகிய குன்றில் ஏறி அளாவி தேவதாசர்கள் சாமானிய ஜனங்களுக்குமேல் உயர்ந்தவர்களாய் இருப்பார்கள். என்ருலும் அவர்களுக்கு ஆயாசம் நேரிடும் காலங்களில் மற்ற மனிதரிடத்தில் அனுதாபத்தைத் தேடினுலும் அது கிடைக்கிறதில்லே. கெத்செமனே தோட்டத்தில் நமது இரட்சகர் தமது சீஷர்களே தம்மோடு விழித்திருந்து ஜெபம் பண்ணச் சொல்லியும், அவர்கள் அயர்ந்து நித்திரை செய்வதைக் கண்டு ஆயாசப்பட்டவராய், தமது ஆத்தும பாடுகளின் அகோரத்தைத் தன்னந்தனியே சுமக்கத் திரும்பினதுண்டு. அதுபோல இவர்களும் தங்கள் உத்தம சிநேகிதரிடத்தில் போதுமான அனுதாபம் காணுமல், தங்கள் வருத்தத்தைத் தாங்களே அனுபவிக்க வேண்டியதாகிறது. போதகர் பலர் இந்த வியாகுலத்தை அனுபவிக்கின்றனர் என்பதற்கு சந்தேகமில்லே. இவ்வித வியாகுலம் மனச்சோர்வுக்கு ஒரு முக்கிய

ஏதுவாயிருக்கிறது. இதற்கு நிவிர்த்தியாக தேவ தொண்டர்கள் இப்பேர்ப்பட்ட காலங்களில் ஒன்று கூடி பரம சம்பாஷணை செய்து தேவகிருபையைத் தேடினல் புதிய உற்சாகத்தையும் பெலனையும் அடைவார்கள்.

போதுமான தேகாப்பியாசம் இல்லாமல் ஓரிடத்தில் உட்கார்ந்து அலுவல் பார்க்கும் தேகங்களில் சோர்வு லேசாய் உண்டாகும். நெடு நேரம் ஒரே நிலையில் உட்கார்ந்து வாசித்துக் கொண்டிருப்பதும், எழுதுவதும் கூட உடலுக்கு மிக்க சிரமம். இஃதுடன் உட்காருமிடம் நல்ல காற்றோட்டம் இல்லாதிருந்தால் சோர்வு மேலும் அதிகமாகும்.

மனச்சோர்வுக்கு அனுகூலமான காலங்கள் இன்னதென்று சுருக்கமாய்ச் சொல்லலாம். அவைகளில் முக்கியமானது நாம் வெகுகாலம் ஆசித்துத் காத்திருந்த ஒரு காரியம் நிறைவேறியபின், அல்லது தேவன் நமது மூலமாய் மிகவும் மகிமைப்பட்டு நமக்கோர் சிறந்த ஜெயம் கிடைத்தபின் நமக்கு சோர்வு உண்டாவது இயல்புதான். விசேஷித்த தேவ அனுக்கிரகம் கிடைக்கும்பொழுது நமது ஆத்துமா ஆனந்த பரவசமடைந்து சொல்ல முடியாத சந்தோஷத்தால் களிகூருமென்று சிலர் நினைப்பார்கள். ஆனல் உண்மையில் தேவன் தமது போர் வீரர்களை ஜெய கெம்பீரத்தால் நேரிடும் மோசத்திற்குள் விழ இடம் கொடுக்கிறதில்லை. சிலர் மாத்திரமே அந்தச்சோதனைக்கு நிற்கத் தக்கவர்கள் என்று அவருக்கு தெரியும். ஆகையால் அவர்களது சந்தோஷ பாத்திரத்தில் கசப்பை கலக்கிறர். எலியாவைப் பார்ப்போம். வானத்திலிருந்து அக்கினி இறங்கி பலியைத் தகனிக்க, பாகாலின் தீர்க்கதரிசிகள் சங்கரிக்கப்பட்டு தேசத்தின்மேல் பெருமழை சொரிந்த பின் அவர் எப்படி இருக்கிறர்? தற்புகழின் இனிய ஓசை அவர் காதில் விழவில்லை. கெம்பீர வஸ்திரம் தவித்து ஜெயகோலமாய் உலாவும் சிலாக்கியம் அவருக்குக் கிடைக்கவில்லை. யேசபேல் என்னும் ஒரு ஸ்திரீக்குப் பயந்து ஒளிந்து

ஓடுகிறார்: தமக்கு உண்டாயிருந்த உள்ளக் கிளர்ச்சி குன்றி, இனி நான் உயிரோடிருந்தது போதும் என்கிறார். இரவு முழுவதும் யாக்கோபு சர்வவல்லவரோடு போராடினாலும் அவன் மட்டுக்குமிஞ்சி வீம்பு பாராட்டாதபடிக்கு பொழுது விடிந்து போர் முடிகையில் அவன் நொண்டி நொண்டி நடக்கவேண்டியதாயிற்று. பவுல் மூன்றும் வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனிதச் சொல்லுக்கு அடங்காத காரியங்களைக் கேட்டும், சிலாக்கியமடைந்தும், அவனைக் குட்டும் சாத்தானுடைய தூதனாகிய முள் அவன் மாம்சத்தில் உறுத்திக் கொண்டேயிருந்தது. கலப்பில்லாத களிப்பை மனிதர் தாங்கிக் கொள்ள மாட்டார்கள். ஒரு விசேஷித்த ஆவிக்குரிய எழுப்புதலால் அசைக்கப்பட்டு புகழால் நிறைந்து ஆத்துமாக்களை குணப்படுத்தும் வேலை வெற்றிக் யடைந்தால், நாம் கெம்பீரித்து மகிழ்ந்து கொண்டிருக்கும் சமயத்தில் தேவன் நமக்கு இரங்கி நமது வீம்புக் கப்பலை உடைத்து நம்மை நிர்வாணிகளாகவும் சோர்ந்தவர் களாகவும் கிறிஸ்து என்ற நித்திய கற்பாறையில் விழப் பண்ணவில்லையானால், நாம் காற்றுப் பறக்கடிக்கும் பதரிலும் நிர்ப்பந்தர்களாவோம் என்பதற்குச் சந்தேக மில்லை. ஒரு பெருங்காரியத்தை நடப்பிக்கும் முன்பும் சோர்வு உண்டாவது இயற்கை. நமக்கு முன்பாக நிற்கும் மலைபோன்ற இடையூறுகளைப் பார்க்கையில் நமது ஆத்துமா நமக்குள்ளே கலங்குகிறது. இராட்சதரின் புத்திரர் நமக்கு முன்பாக மிக உல்லாசமாய் உலாவுகிறார்கள். அவர்கள் முன் நாம் நமது பார்வையில் வெட்டுக் கிளிகள்போல் காணப்படுகிறோம். கானானின் பட்டணங்கள் வானத்தை அளாவும் மதில்கள் உள்ளவைகளாகத் தோன்றுகின்றன. அவைகளைப்பிடிக்க நாம் எம்மாத்திரம் என்று எண்ணி நமது ஆயுதங்களைப்போட்டு விட்டு ஓட்டம் பிடிக்க எண்ணு கிறோம். நினிவே மிகப்பெரிய பட்டணம். அமளியான அதன் கும்புகளுக்கு விரோதமாய் போவதிலும், தர்ஷீசுக்கு ஓடிப்போக நமது மனம் சொல்லுகிறது. கொந்தளிப்பு வந்தால் என்ன செய்யலாம் என்னும் யோசனை மாத்திரம்

நமது கோழை நெஞ்சைத்தடுக்கிறது. எனினும், யோவான் ஸ்நானகன் முரட்டு உடை தரித்தவனாய்த்தோன்றி ஆண்டவர் வருகிறார் என்று உரைத்ததுபோல, மனச்சோர் வானது 'ஆண்டவர் என்னுடைய ஊழியத்தின் பேரில் பெரிய ஆசீர்வாதத்தை வருஷிக்கப் போகிறார்' என்று உணர்த்துகிறதாயிருக்கிறது. படகு கரையை அடுத் திருந்தபோது அது பரமகுருவின் பிரசங்க பீடமாயிற்று. உபத்திரவ முழுக்கு பரிசுத்தாவியின் ஸ்நானத்திற்கு ஆயத்தம், பசியுள்ளவனுக்கே உணவு சுவைக்கும். தனி வனத்தில் மந்தை காத்திருந்த மேய்ப்பர்களுக்குக் கர்த்தர் காட்சி கொடுத்தார். பாழ் வனாந்திரம் பாலும் தேனும் ஓடும் நாட்டுக்குப் பாதை. மலைச்சிகரத்திற்கு வழி பள்ளத் தாக்கில் கிடக்கிறது. ஜெயத்திற்கு முன் அபஜெயம். புறாவுக்குமுன் காகம் அனுப்பப்படுகிறது. விடியற்கால வெளுப்புக்கு முன் இரவின் கொடிய அந்தகாரம். கட லோடிகள் ஆழத்தில் இறங்கினபின் அடுத்த திரை அவர் களை வான மட்டாக உயர்த்துகிறது. அவர்கள் நாடிய துறை சேருமுன் அவர்கள் ஆத்துமா வருத்தத்தால் உருகிப் போகிறது.

அநேக நாளின் இடைவிடா உழைப்பு சோர்வுக்குக் காரணம். ஓயாமல் நாணேற்றிய வில் சீக்கிரம் முறியும். நித்திரை தேகத்துக்கு அவசியமாய் இருப்பதுபோல், இளைப்பாறல் மனதுக்கும் அவசியம்தான். நமது ஓய்வு நாள்கள் நமக்கு உழைப்பு நாள்கள்; ஆகையால் வாரத்தின் ஒரு நாளில் நாம் இளைப்பாறவில்லையானால், நாம் சீக்கிரம் தளர்ந்துபோவோம். பூமியையுங்கூட தரிசு போட்டு, அது தன் ஓய்வு வருடங்களை அனுபவிக்கவிட் வேண்டியதாயிருக்க, நமக்கு இளைப்பாறுதல் அவசியம் அல்லவா? அதனால்தான் நமது இரட்சகர் சீஷர்களை நோக்கி, ''நாம் வனாந்திரத்திற்குப் போய் சற்று இளைப் பாறுவோம்'' என்று சொன்னார். இதில் அவருடைய ஞானமும், தயாளமும் மிகுதியாய் விளங்குகிறது. அதெப்படி? ஜனங்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகள்போல்

இருக்கும் சமயத்திலா இரட்சகர் இளைப்பாறுதலைப்பற்றி பேச வேண்டியது? வேதபாரகரும் பரிசேயரும் குரூர ஓநாய் கள்போல் பீறிச் சின்னபின்னப்படுத்தும் பொழுதோ இயேசு தமது சீஷர்களை கூட்டிக்கொண்டு தனித்திருக்கப் போகிறார்? ஆம், தற்சமயம் நிவிர்த்திக்க வேண்டிய குறைவுகளை நீக்காமல் இளைப்பாற போகிறது சரியல்ல என்று வைராக்கிய வெறியர்கள் சொல்லலாம். ஆகிலும் பரம எஜமான் அவர்களைவிட காரியம் அறிந்தவர். தமது ஊழியர்களை மிதமிஞ்சி ஆயாசப்படுத்தினால் இஸ்ர வேலின் தீபம் அணைந்துபோம் என்று அவர் அறிவார். முசிப்பாறும் நேரம் வீணேபோகும் நேரமல்ல. புதுப் பெலன் அடைவது லாபம்தானே. இடைக்கிடையே சற்று இளைப்பாறிக் கொள்வது அதிகமான வேலை செய்வதற்கு மனதைப் பக்குவப்படுத்துகிறது, செம்படவர் தங்கள் வலைகளை வேளைக்கு வேளை பழுதுபார்த்துக்கொள்ளுவார் கள். அப்படியே இளைப்பாறுதலால் நமது மனச்சோர்வை மாற்றி இன்னும் நல்ல ஊழியம் செய்கிறதற்கு நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்வதாம்.

சபையில் காணப்படுகிற துன்மார்க்கங்களும் போதக னின் மனச்சோர்வுக்கு ஒரு காரணம்தான். மற்றவர்களைப் பார்க்கிலும் அதிகமாய் நம்பப்பட்ட சகோதரன் துரோகி யானான். யூதாஸ் தன் உபகாரிக்கு விரோதமாய்க் குதி காலைத் தூக்குகிறான்; அப்போது பிரசங்கியின் உள்ளம் தள்ளாடுகிறது. மாம்சமான புயத்தின்மேல் நம்பிக்கை வைக்கும் இயல்பு நம்மெல்லாருக்கும் இருக்கிறது. அந்த இயல்பே நமது சஞ்சலங்கள் அநேகத்திற்குக் காரணம். முக்கியமானவனும் நேசிக்கப்பட்டவனுமான ஒரு சபையான் சோதனைக்கு இடங்கொடுத்து, தான் எடுத்துக் கொண்ட பரிசுத்த நாமத்திற்கு அவகீர்த்தி வருவிக்கும்பொழுது போதகனுக்குண்டாகும் அடி தாங்கக்கூடாத வேதனையை உண்டாக்குகிறது. பத்து வருட உழைப்பினால் உண்டாகும் ஆயாசம் சில மணி நேரத்தில் சதிகாரனான அதித்தோப்பேல் அல்லது லோகப்பிரியனான ஒரு தேமாவினால் நேரிடும்

வியாகுலத்திற்கு நிகராகாது. இதுவுமல்லாமல் சண்டைகளும், பிரிவினைகளும், அவதூறுகளும், குற்றஞ்சாட்டல்களும் பரிசுத்த மனிதர் அநேகரைத் தரையிலே தள்ளி, பட்டயத்தை அவர்கள் எலும்புருவப் பாய்ச்சுகின்றன. அனுபவ சித்தியால்நமது ஆத்துமா பெலன்கொள்ளுமாயின் நமது போராட்டத்தில் கிடைக்கும் இவ்வித இடிகளை எல்லாம் ஒரு பொருட்டாகவே எண்ணேம். ஆயினும் பரீட்சைக்கு நில்லாதவர்களை இது மிகுதியும் தள்ளாடப்பண்ணி, கொடியமந்தாரத்திஞல் மூடிப்போடுகிறது. உண்மையுள்ள போதகனின் வருத்தங்கள் அநேகம்; அவைகளில் வெளியரங்கமான சத்துருக்களின் கொடிய விரோதத்தைப் பார்க்கிலும் வேஷதாரிகளால் உண்டாகும் துரோகமே மகாபாரமானது. ஆடம்பரபான ஜீவியத்யையும் மன ஆறுதலையும் விரும்புகிறவன் போதக ஊழியத்தில் பிரவேசியாதிருப்பாஞக. பிரவேசித்தால், மிகுந்த வெறுப்போடே அவன் அதை விட்டுவிட வேண்டியது வரும்.

உபத்திரவங்கள் பெருகி, யோபுக்கு வந்ததுபோல் நஷ்டங்கள் ஒன்றன்பின் ஒன்ருய் வந்துகொண்டிருக்கும் பொழுது, மனச்சோர்வு உண்டாகி சமாதானம் குலைந்து போம். மெல்லவே பாயும் தண்ணீர் கல்லையும் கரையச் செய்யும். மகாவீரமான மனதும் மாறி மாறி வரும் உபத்திரவங்களினல் விறைத்து போகும். தரித்திரத்தோடு வியாதியும், வியாதியோடு நமது அருமையானவர்களின் மரணமும், சபையாரின் அன்பற்ற வார்த்தைகளும், செயலாளர்களின் விரோதமும், ஜனங்களின் அநுதாபக் குறைவும் தொடர்ந்து வரும்போது எந்த வீரநெஞ்சனும் தொய்ந்து போவான்.

சில வேளைகளில் யாதொரு காரணமும் தோன்ருமல் மனச்சோர்வு நம்மைப் பிடிக்கும்; இதை நிவிர்த்தி பண்ணுவது மிகவும் வருத்தம். இந்த மெலிந்த ஆவியைத் துரத்த தாவீதின் இனியச் சுரமண்டல ஓசையாலும் கூடாது.

இயேசு மகாராஜாவின் தாசர்கள் மரண நிழலின் பள்ளத்தாக்கில் நடக்க நேரிடுவதின் காரணம் தேவனுடைய கிரியையின் முறைமைக்கு இதெல்லாம் அனுகூலமாயிருப்பதே. அவருடைய கிரியையின் ஒழுங்கென்ன? ''பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும்'' என்ற வாக்கியத்தில் அதை தொகுத்துச் சொல்லியிருக்கிறது. உபகரணங்கள் உபயோகிக்கப்படும்; ஆகிலும் அவைகள் தம்மில்தாமே பெலனற்றவைகள் என்பதும் காண்பிக்கப்படும். அவைகளைக் கொண்டு கிரியை செய்கிற மகத்துவ கர்த்தருடைய மகிமை பாதிக்கப்பட்டாலும் குறைக்கப்பட்டாலும் முழுமையும் அவருக்கே செல்ல வேண்டும். நமது இருதயமாகிய பாத்திரத்திலிருந்து தற்புகழ் என்னும் சிந்தை அகற்றிவிடப்பட்டு, அது பரிசுத்தாவியினால் நிரப்பப்பட வேண்டும். நாம் நம்மைத் துரும்பென்று எண்ணினால், அவர் நம்மை இரும்புத்தூணும், வெண்கல அலங்கமும் ஆக்குவார். நமக்கு உண்டாகிற ஆயாசங்களாலும் தயக்கங்களாலும் தேவன் மகிமைப்படுகிறார். ஏனெனில் அவர் சோர்ந்து கிடக்கிற அவர்களை தூக்கியெடுத்து ஸ்திரமாய் நிற்கப் பண்ணும்பொழுது, அவர்கள் களிகூர்ந்து அவரைப் போற்றுகிறார்கள். சிலவேளை புழுதியில் கிடக்கும் பொழுதுங்கூட அவரைத் துதிக்கும்படி அவர்கள் ஏவப்படுகிறார்கள்.

அவர்களும் தேற்றப்பட்டபின் அவருடைய அன்பில் அதிகமாய் வேரூன்றி, அவருடைய உண்மையைக் குறித்து அதிக இன்பமாய் பேசக்கூடியவர்கள் ஆகிறார்கள். முதிர்ந்த அனுபவமும், தேறின பத்தியும், மிகுந்த அனுகூலமுள்ள பிரசங்கிகள் இப்படி அலசடிப்படாதிருந்தால், தாங்கள் அடைந்திருக்கும் சிறப்பைப் பெற்றிருக்க மாட்டார்கள். ஆகையால், பலவித துன்பமாகிய சூளையையும் கஷ்டங்களையும் தந்து நம்மைச் சீர்திருத்தப் பண்ணுகிற தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

கடைசியாக, மனச்சோர்வு உண்டாகும் காலங்களில் கலங்காதிருப்போமாக. இது நமக்கு மாத்திரம் நேரிட்ட ஒரு புதிய துன்பம் என்றெண்ணக்கூடாது. போதகராய் இருக்கிற அனைவருக்கும் சகஜமாயுள்ள ஒரு காரியம் என்றறிந்து கர்த்தர் பேரில் நமது கவலை விசாரம் எல்லாம் சுமத்திவிட்டு, நமது தேவனுடைய முகப்பிரகாசம் நமக்கு மறைந்துபோனாலும் அவருடைய செட்டையின் நிழலில் ஒதுங்கிக் கொள்வோமாக.

18

போதகன் கவனிக்க அவசியமில்லாத விஷயங்கள்

‘‘போதகன் ஒரு கண்ணைக் குருடும், ஒரு காதை செவிடுமாய் வைத்துக்கொள்ள வேண்டும்’’ என்பது அனுபவசாலியான ஒரு போதகர் தமது மாணவர்களுக்குச் சொன்ன புத்திமதி. இது சற்று விபரீதமாய்த் தோன்றுகிறபடியால் இதன் கருத்து என்னவென்று கவனிப்போம்.

‘‘சொல்லப்படும் எல்லா வார்த்தைகளையும் கவனியாதே; கவனித்தால் உன் வேலைக்காரன் உன்னை நிந்திப்பதைக் கேள்விப்பட வேண்டியதாகும்’’ என்று (பிர. 7:21) சாலொமோன் சொன்ன வாக்கியம் மேற்படி புத்திமதிக்கு ஒருவாறு வியாக்கினமாய் இருக்கிறது. மனிதர் நமக்கு விரோதமாய்ச் சொல்லுகிறவைகளை எல்லாம் கேட்டு மனதில் வைத்து அவைகளைக் கவனித்தவர்கள் போல் நடக்கக் கூடாது. ஊர்வாயைமூட உலைமூடி இல்லை. ஜனங்கள் நம்மைக்குறித்து எதையும் பேசுவார்கள். அவர்களைத்தடுக்க நம்மால் முடியாது. அவர்கள் நாவுகளை அடக்கப் பார்ப்பதைவிட நமது காதுகளை அடைத்துக் கொள்வது நலம். எங்கே பார்த்தாலும் வீண் அலப்பல் அதிகம். அதை எல்லாம் கவனித்துக்கொண்டிருந்தால் வேறே வேலை பார்க்கவேண்டியதில்லை. நமது பிராண நண்பர்களும் நம்மை எப்பொழுதும் மெச்சிப் புகழ்ந்து கொண்டாடமாட்டார்கள்; உத்தம ஊழியர்களும் வேளா வேளைகளில் மூர்க்கமாய்ப் பேசுவார்கள். சொல்லும் போது

வெடுவெடுப்பாய் பேசிவிட்டு பின்பு அதைக்குறித்துச் சங்கடப்படுவர் அநேகர். ஒருவன் கோபமாய் இருக்கும் போது அவனைத் தன்மட்டில் இருக்க விட்டுவிடுவது உத்தமம்; அப்படி செய்தால் சண்டை தொடங்குமுன் முடிந்து விடும். யாராவது நம்மோடு கோபமாய் பேச நேரிட்டாலும் ''நானோ செவிடனைப்போல் கேளாதவனாய் இருக்கிறேன்; காது கேளாதிருக்கிற மனிதனைப்போலா னேன்'' என்று தாவீது சொன்னதுபோல், தன்னைத் தூஷிக்கிறவனைப் பார்த்து சொல்லிவிட்டு, அந்தக் கோப வார்த்தைகளை மறந்துவிடவேண்டும். ''நீ உன் நாவுக்கு எஜமான், நான் என் காதுக்கு எஜமான், நீ உனக்கு விருப்பமானதைச் சொல்லு, நான் எனக்கு விருப்பமானதை மாத்திரம் கேட்பேன்'' என்பது புத்திசாலியின் நிர்ணயம். கண்ணிமை கொண்டு கண்களை மூடிக் கொள்ளலாம். காது களை மூட காதிமையில்லையே என்றாலும், இரத்தம் சிந்து வதற்கான யோசனைகளைக் கேளாதபடிக்குத் தன் செவியை அடைத்துக் கொள்கிறவனைப்போல் தகாத வார்த்தைகள் ஒன்றும் உட்பிரவேசியாதபடி நமது காதுகளைக் காக்க வேண்டும். சாரமற்ற ஊர் அலப்புகளுக்கும் கோபம் கொண்ட சிநேகிதரின் விசன வார்த்தைகளுக்கும் காது கொடுக்க வேண்டாம். அவைகளைக் கேட்க நேரிட்டாலும் அவைகளை மனதில் வைக்கக்கூடாது; ஏனெனில் நாமும் ஒரு காலத்தில் வீணாய் அலப்பினோம். நாம் நமது உத்தம சிநேகிதரைக் குறித்தும் சமயாசமயங்களில் பேசியிருக்கிற வார்த்தைகளுக்காகக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியது வந் தால் குறுவிழி விழிக்க நேரிடுமே. அப்படியே சாலொமோ னும் ''அநேகந்தரம் நீயும் பிறரை நிந்தித்தாய் என்று உன் மனதுக்குத் தெரியுமே'' என்று நியாயம் சொல்கிறார். நாம் **காணாதவர்களும் கேளாதவர்களும்போல் இருக்க வேண்டிய காரியங்களாவன :**

1. சபையில் நெடுங்காலமாய் இருக்கும் பிரிவினை களையும் விரோதங்களையும் குறித்து எப்படி இருக்க

வேண்டும். ஒரு போதகன் ஏதாவது ஒரு சபையில் வேலை தொடங்கும்பொழுது யாரைக் குறித்தாகிலும் தன் இருதயத்தில் விரோதம் வைக்கக் கூடாது. நாம் புதிதாய் ஒரு சபைக்குப் போதகனுகும்பொழுது ஒரு குடும்ப வழக்கில் அல்லது சபைத் தர்க்கத்தில் ஏதாவது ஒரு கட்சிக்கு சார்பாய் இருக்கும்படி நம்மிடத்தில் சிபாரிசுக்காகப் பலர் வருவார்கள். இப்படிப்பட்டவர்களைப் பார்த்து, ''கடந்து போனது போக வேண்டியது, பழைய கிணற்றை தூர் வாங்குவது நமது காரியம் அல்ல'' என்று சொல்லிவிட்டு அவ்விஷயங்களைக் குறித்துக் குருடரைப்போலும், செவிடரைப்போலும் இருந்துவிட வேண்டும். எந்த விஷயத்திலாவது பிரத்தியட்சமான கொடிய அநியாயங்கள் நடந்திருக்குமாகில் அதை நிவிர்த்திபண்ண ஜாக்கிரதையாய் இருக்க வேண்டுமேயொழிய வெறும் வாக்குவாதத்திலோ சண்டையிலோ தலையிடாமல் இருந்து விடுவது விவேகம் சண்டைக்காரரைச் சமாதானமாய் இருக்கப் புத்தி சொல்லலாம்; மற்றபடி வழக்கு முழுவதையும் ஆதியோடந்தமாய் விவாதித்துக் கொண்டிருப்பது வீண் சமய செலவாய் முடியும். ''யூதர்களே, இது ஒரு அநியாயமாய் அல்லது பொல்லாத நடக்கையாய் இருக்குமேயாகுல், நான் உங்களுக்குப் பொறுமையாய்ச் செவிகொடுப்பது நியாயமாயிருக்கும். இது சொற்களுக்கும், நாமங்களுக்கும், உங்கள் வேதத்துக்கும் அடுத்த தர்க்கமானபடியினுலே, இப்படிப்பட்டவைகளைக் குறித்து விசாரணை செய்ய எனக்கு மனது இல்லை, நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்'' (அப். 18:14, 15) என்று கல்லியோன் என்பவன் சொன்ன மறுமொழி இப்படிப்பட்டவர்களுக்கு ஏற்ற மறுமொழிதான். போதகன் ஏதாவது ஒரு கட்சியைச் சேராமல், மந்தை முழுவதுக்கும் மேய்ப்பனுயிருந்து எல்லாருக்காகவும் ஒன்றுபோல கவலையும் கரிசனையும் உள்ளவனுய் இருக்கவேண்டும். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அதற்கு ஒரு வழி என்னவென்றுல் சண்டையாகிய நெருப்பை அதன் மட்டுக்கு விட்டு விடுதல்தான். நாம் அதை மூட்டவோ

கிண்டவோ அதில் விறகு வாரிப் போடவோ தலையிடாமல், அது தன்னாலே அணைந்துபோக விட்டுவிட வேண்டும்.

2. போதகன் தன் சம்பள விஷயத்தைப்பற்றியும் குருடனைப்போலும் செவிடனைப்போலும் இருக்க வேண்டும். சிற்சில சமயங்களில் ஒரு புது கோயில் கட்டும்பொழுது திறமை வாய்ந்த உதவிக்காரர் இல்லையானால், நாமே பொருள் சேர்ப்பதைப்பற்றி அக்கறைப்பட வேண்டியது வரும். பல தருணங்களில் போதகனே பொருள் சேகரிப்பு விஷயத்தைக் குறித்துப் பிரயாசம் எடுக்கவில்லையானால், பசயின் காரியங்கள் முற்றும் முடங்கிப்போகும். பொருள் சேகரிப்பில் போதகன் தலையிடுதல் திவ்வியப்பணிவிடைக்குத் தடைதான். ஆயினும், வேறு வழி இல்லாவிடில் சகிக்க வேண்டியதே. பூரணமாய் ஒழுங்குபட்டுப் போந்த வருமானமுடையவைகளாய் இருக்கும் சபைகளிலோ வெனில், பொதுவான விஷயங்களையெல்லாம் போதகன் மேற் பார்வையிட்டுக்கொண்டு ஒன்றிலும் தலையிடா திருப்பது உத்தமம். உதவிக்காரரின் உண்மையின்மை யினால் அல்லது நிர்விசாரத்தினால் குழப்பம் நேரிடுமாகில், நடந்தது நடக்கட்டும் என்று நாம் அசட்டையாய் இருக்கக் கூடாது. ஆகிலும், அவர்கள் சகலத்தையும் சரியாய் நடத்திக் கொண்டு வரும்பொழுது நாமும் அவர்கள் கடமை களுக்குள் தலையிட்டுக்கொள்வது நல்லதல்ல. பணப்பை வெறுமையும், மனைவி வியாதியாயும், பிள்ளைகள் பெருக்கமு மாகும்பொழுதும் சபையாருக்கு வசதியாயிருந்தும் போத கனின் அவசியத்திற்குத் தக்கதாகச் சம்பளம் கொடாதிருந் தால் போதகர் முதலாவது உதவிக்காரருக்கும், அவர்கள் அதை கவனியாவிட்டால் சபையாருக்கும், தர்ம சகா யத்தை யாசிக்கும் பாவனையாக அல்ல, ''வேலையாள் கூலிக்கு பாத்திரன்''என்பதை அவர்கள் உணரும் படியாக அவர்களிடம் அன்போடும் தைரியத்தோடும் பேசலாம். அது வெட்கம் அல்ல; கடன்படுகிறதே வெட்கம். மற்ற

படி நமது அன்றாட அவசியத்திற்குப் போதுமான உணவும் உடையும் இருக்கும்பொழுது நமது சம்பளத்தையும் வருமானத்தையும் குறித்துக் கேளாதவன், காணுதவன்போல இருந்துவிட வேண்டும்.

3. ஊர்பேச்சுகளுக்கு நேராகவும் நாம் நமது குருட்டுக்கண்ணேயும், செவிட்டுக் காதையும் திருப்பி வைத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஊரிலும் சபையிலும் குடும்பத்திலும் வீட்டுக்கு வீடு திரிந்தும் அலப்பிக்கொண்டிருக்கிற ஆண்களும் பெண்களும் உண்டு. அவர்கள் ஒருபோதும் சும்மா இருக்க மாட்டார்கள். பக்தியும் பிரயோஜனமும் உள்ளவர்களாய் இருக்கிற நல்லோருக்கு விசனமும் நோவும் உண்டாக்கத்தக்கதாக சுற்றிச் சுற்றி வண்டு இரைவதுபோல் ஓயாமல் அலப்புவதே அவர்களுக்குப் பிடித்தமான பொழுதுபோக்கு. எப்பொழுது பார்த்தாலும் அவர்கள் நாவு ஓயாமல் ஆடிக்கொண்டிருப்பதைக் காணலாம். மற்றவர்களுடைய குற்றங்களை எடுத்துப் பேசுவதில் அவர்களுக்கு உண்டாயிருக்கிற இன்பம் இவ்வளவு என்று சொல்ல முடியாது. போதகருடைய பழக்க வழக்கங்கள், போதகர் மனைவி பிள்ளைகளின் உடை நடைகள், அவர்கள் அணியும் ஆபரணங்கள் இவைகள் ஒன்றும் அவர்கள் நாவின் கூர்மைக்குத் தப்பாது.

வேறு சிலர் காகம் வேப்பம்பழத்தைக் கொத்திக் கொண்டு போவதுபோல, மற்றவர்களைக் குறித்து இல்லாததும் பொல்லாததுமான காரியங்களை நம்மிடத்தில் பொறுக்கிக்கொண்டு வருவார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு நாம் ஒருபோதும் செவி கொடுக்கக்கூடாது. நெல்சன் என்னும் போர்க்கப்பல் தலைவன் யுத்தம் நடத்திக் கொண்டு நிற்கும் போது சத்துருவின் பக்கத்தார் யுத்தத்தை சற்று நிறுத்த விரும்பி குறிப்பு காண்பித்தார்கள். நெல்சன் அதைக்கண்டும் தொலைநோக்கிக் கண்ணாடியை எடுத்துத் தன் குருட்டுக் கண்ணில் வைத்து, சமாதானக்கொடியை நான் காண்கிறதில்லை, யுத்தத்தை விடாமல் நடத்துங்கள் என்முன்.

மேற்சொல்லிய கோள்காரருக்கும் அப்படியே நாம் நமது செவிட்டுக் காதை திருப்பவேண்டும். இந்த மக்கள் சும்மா இரையட்டும்; அதைக் கேட்கவேண்டாம். ஆகிலும் யாரைக் குறித்தாவது இரைச்சல் அதிகப்படுமானல், அப்படிப்பட்ட சங்கடக்காரரைக் கூப்பிட்டு அவர்களுடைய சங்கடத்தை எழுதச் சொல்லி, முறைப்போல் விசாரிப்பது உத்தமம். அப்படிச்செய்ய அவர்களுக்குச் சம்மதமிராது. ஏனெனில் எந்த விஷயத்தைக் குறித்தும் திட்டமான வாக்குமூலம் கொடுப்பது அவர்களால் கூடாத காரியம். வீண் பேச்சை அமர்த்திப்போட ஓர் உபாயம் உண்டானல், அதைக் கண்டு பிடித்துக் கொள்வது நலமாய் இருக்கும். ஆகிலும் மனித ஜாதியின் இயல்பான சுபாவம் இருக்கிறபடியே இருக்கட்டும். அது அசாத்தியமான காரியம். அதைக் குறித்து யாக்கோபு ''சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனித சுபாவத்தால் அடக்கப்படும். அடக்கப்பட்டதும் உண்டு. நாவையடக்க ஒரு மனிதனலும் கூடாது. அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாய் இருக்கிறது'' என்று சொல்லியிருக்கிருர். திருத்திக் கொள்ளக் கூடாததைச் சகித்துக்கொள்ள வேண்டும்; அதற்கு உத்தம வழி நமது செவியை அடைத்துக்கொள்வதுதான். ஒரு கோட்டையின் தலைவாசலில் ''அவர்கள் பேசிக்கொள்கிருர்கள்; அவர்கள் என்ன பேசிக்கொள்கிருர்கள்; அவர்கள் சும்மா பேசிக்கொள்ளட்டும்'' என்னும் வாசகம் எழுதியிருந்தது. பிறர் வார்த்தைகளால் இலேசாக சோர்வுற்று வருந்துகிற யாவரும் இந்த வாசகத்தை மனப்பாடம் பண்ணிக் கொண்டால் நலமாயிருக்கும்.

மற்றவர்களைப்பற்றி தீது பேசி சந்தோஷிக்கிறவன் ஓர் இறகுக்காக வேண்டி தன் அயலான் கோழியைக் கொல்லுகிறவனைப் போலிருக்கிருன். கோள் சொல்வதனல் உண்டாகும் சந்தோஷம் ஓர் இறகு விலையும் பெருது; அதனல் வரும் நோவோ கோழியைக் கொல்வதனல் உண்டாகும் நஷ்டத்

திலும் அதிகமாய் இருக்குமென்று மேயோ என்பவர் சொல்லுகிறார். யாதொரு காரியத்தை அல்லது ஆளைக் குறித்து விசேஷமான பேச்சு ஊரில் நடமாடாத சமயம் பார்த்துக்கொண்டு கோள் சொல்லுதலைக் கண்டிக்கத்தக்க வார்த்தையைப் பிரசங்கத்தில் நுழைக்கலாம். உணர்வுள்ளவர்களானால் உபகாரம் அடைவார்கள்; மற்றவர்களைக் குறித்தோ நம்பிக்கையில்லை.

எல்லாவற்றிலும் முக்கியமான ஆலோசனை என்னவெனில் போதகன் கோள் சொல்லுதலில் தலையிடக்கூடாது. அவன் மனைவியும் அப்படிச் செய்யக்கூடாது. சிலர் சும்மா பேசுவார்கள். ஒரு தடவை ஒரு மாணாக்கன் சாதுரியவித்தை கற்கும்படிக்கு சாக்ரடீஸ் என்ற ஞானியிடத்தில் போனான். அவருக்கு முன்பாக வந்தபொழுது அவன் ஓயாமல் பேசினபடியால் அவர் அவனைப் பார்த்து நீ எனக்கு இரட்டைச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்றார். மாணாக்கன் ஆச்சரியப்பட்டு, ''அது ஏன் ஐயா, இரட்டைச் சம்பளம்?'' என்று கேட்க, ஞானி சொன்னார்: நான் உனக்கு இரண்டு சாஸ்திரங்களைக் கற்றுத்தர வேண்டியதாயிருக்கிறது; பேசும் வித்தை மாத்திரமல்ல, பேசாதிருக்கும் வித்தையும் படிப்பிக்க வேண்டும் என்றார். இந்த இரண்டிலும் பேசாதிருக்கும் வித்தையே அதிகம் பிரயாசமானது. அதில் நிபுணத்துவம் அடையப் பார்க்க வேண்டும்; இல்லாவிட்டால் அதனால் விளையும் துன்பத்துக்கு முடிவில்லை.

அன்பற்ற அபிப்பிராயங்களுக்கு ஏதுவான சகல காரியங்களையும் காணாதவர்களும் கேளாதவர்களும்போல் இருக்கவேண்டும். ஐயம் கொள்ளத் தொடங்கும்பொழுது நாமே நமக்கு வாதையும் பிறருக்கு வேவுகாரரும் ஆகிறோம். ஒரு தரம் ஐயத்திற்கு இடம் கொடுப்போமாகில் அதற்கு முடிவு இராது. அவைகளில் மிகுதியானவைகள் நமது ஐயத்தினாலேயே உற்பத்தியானவைகளாயும் இருக்கும். சந்தேகப்படுவதினால் அநேக சிநேகிதர் சத்துருக்களாய் மாறிப்போகிறார்கள். ஆகையால் நாம் சந்தேகக்கண்களோடு சுற்று முற்றும் பார்க்கவும், ஒற்றுக் கேட்பவன்

போல் எதற்கும் கூர்மையாய் செவி கொடுக்கவும் வேண்டாம். வேட்டைக்காரன் முயலைத் தேடித்திரிவதுபோல், சபையில் எங்கெல்லாம் பகைஞரும் விரோதிகளும் இருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கப் போதகன் தலைப்படுவது மிகவும் இழிவான தொழில். அதன் பலன் மிகவும் வெட்கமானதாய் இருக்கும். விசாரணையினால் தென்படும் விஷயம் வெறுக்கத்தக்கதாய் இருக்குமானால் விசாரணையை நிறுத்தி விடுவது விவேகம் என்று ஸார்ட் பேக்கன் என்னும் சாஸ்திரியார் சொல்லியிருக்கிறார். இது நல்ல ஆலோசனை. ஏனெனில், இவ்வித தகாத விசாரணையினால் வெளிக்கு வரும் காரியங்கள் நெடுங்காலச் சண்டைக்குக் காரணமாய் இருக்கும். சிட்சைக்குரிய குற்றங்களையும் இப்படியே விட்டுவிட வேண்டும் என்பது கருத்தல்ல; அவைகளைத் திட்டமாய் விசாரித்துத் தகுதியான தண்டனை செய்ய வேண்டும். தனது விஷயங்களிலோவெனில், சிநேகிதர்களாவது சத்துருக்களாவது நம்மைக் குறித்துச் சொல்லும் புகழ்ச்சியை அறியாமல் இருப்பதும், அறிய விரும்பாமல் இருப்பதும் நலம். ஒருவேளை நம்மைப் புகழ்கிறவர்கள் நம்மை இகழ்கிறவர்களைப்போலவே தங்கள் அபிப்பிராயத்தில் தப்பிதமுள்ளவர்களாய் இருக்கலாம். மனுஷர் செய்யும் தீர்ப்பை ஒரு பொருட்டாக எண்ணக் கூடாது. நமது தேவனின் பிரியம் நம்மேல் இருக்கிறதென்று நமது உத்தம மனச்சாட்சி சொல்லுமானால், மற்றவர்கள் நம்மைப் புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும் காரியமல்ல என்று சும்மா இருக்கலாம். இந்த மேலான மனோநிதிக்கு நாம் வராவிட்டால், நாம் புருஷர் அல்ல, குழந்தைகளே.

சிலர் தங்களைக்குறித்துத் தங்கள் சிநேகிதரின் அபிப்பிராயம் என்ன என்றறிய விரும்புகிறதும், அவர்கள் சொல்லுகிற அபிப்பிராயம் தங்கள் மனதுக்கு வெறுப்பாய் இருக்குமானால், உடனே அவர்களைச் சத்துருக்கள் என்று நினைப்பதும் உண்டு. இப்படிச் செய்வது மதியீனம். போப்புகள் தங்களைத் தவறாமையுள்ளவர்கள் என்று சாதிக்கிறார்கள்.

நாம் தவருமையுள்ளவர்களல்லவே. இப்படிச் சொல்லப் படும் அபிப்பிராயங்கள் சிலவேளே சுத்தநியாயமாயும், கபட மற்ற, சிநேகத்திஞல் வெளியிடப்படுகிறவைகளுமா யிருக்கும். ஆகிலும் குற்றம் கண்டு பிடிக்க வேண்டுமென்ற ஆசையிஞலும் இது சொல்லப்படுகிறதென்று நாம் பாவிப் பதால், இரு பட்சத்தாருக்குமிடையில் கோபமும் வாக்கு வாதமும் பிறக்கிறதுண்டு. சந்தோஷத்தோடே அதைப் பொறுத்துக் கொள்வோமாஞல் இப்படி யாதொரு தீமையும் நேரிடாது, நாம் மற்றவர்களுடைய குற்றப்படுத்தல்களேச் சகிக்கத்தக்க பலவான்களாய் இருக்கவேண்டும். அவ்வளவு பலமில்லாதவன் ஒரு சபைக்குத் தலேவஞய் இருக்க யோக்கியன் அல்ல. நம்மைக் குற்றப்படுத்தினவனே நமது கொடிய சத்துரு என்று நினேக்கவேண்டாம். சுத்த நெஞ்சோடு நம்மைக் குற்றப்படுத்திஞல் அவன் நமது இரட்டிப்பு பான நட்புக்குப் பாத்திரன். அப்படிப்பட்டவன் நம்மைப் பற்றி மேலான எண்ணங்கொள்ளத்தக்கதாக நாம் நடந்து கொள்ளவேண்டும். நமது ஊழியத்தின் ஆரம்பத்தில் நம்மைப் போதக வேலேக்கு அபாத்திரஞக நினேத்தவன், நாம் தேவ பக்தியிலும் மற்றும் இலட்சணங்களிலும் தேறு கிறதைக் காணும்பொழுது நமக்கு அனுசாரியாகவும் கூடும். ஆகையால், அவன் தன் அபிப்பிராயத்தை உண் மையாய் வெளியிட்டதின் நிமித்தம் அவனேச் சத்துரு என்று நினேக்க வேண்டாம். அவனுடைய கடினமான குற்றச் சாட்டுதலுக்கு நேரே நமது செவிட்டுக் காதைத் திருப்பிக் கொண்டு அதிக செம்மையாய் நமது கடமைகளே நிறை வற்றப் பார்ப்பது நலம்.

புதியவைகளின் பிரியம், வன்மம், கல்வித்தேர்ச்சி முதலிய காரணங்களின் நிமித்தம் நமது பிரசங்கம் சிலருக்கு வெறுப்பாக இருக்கலாம். அதைக்குறித்து நாம் அறியா மல் இருப்பது உத்தமம். அதற்கேற்ற குறிப்புகளே நாம் கண்டாலும் அதை வெளிக்குக் காட்டாமல் நமது பிரசங்கங் கள் அதிக சாரமானவைகளாய் இருக்கும்படி வகை பார்க்க

வேண்டும். வெறுப்படைந்தவர்கள் அருள் பெற்ற ஆத்துமாக்களாகி அவர்கள் மனக்குறை சீக்கிரம் நீங்கிப்போகும்.

எனக்கு விரோதமாய் சற்றே திருப்திக்கேடு தோன்றியிருக்கிறதென்று அறியும்பொழுது, அது வெளியரங்கமாய் காணப்பட்டாலன்றி நான் அதைக் கவனிக்கிறதில்லை. பின்பு என்ன செய்வேன் என்றால், என் விரோதிக்கு நேராக அதிக மரியாதையோடும் அன்போடும் நடந்து கொள்வேன். அதன்பின்பு அவனுடைய விரோதத்தைக் குறித்து ஒரு பேச்சும் இராது. அவனை எதிரியைப்போல் பாவித்து இருப்பேனேயாகில் அவன் மெய்யாக எதிரியாய் போயிருப்பான் என்பதற்குச் சந்தேகமில்லை. நான் அவனைச்சத்துரு என்று பாவியாமல் அவனும் ஒரு கிறிஸ்தவன் என்றும், என்னை வெறுக்க அவனுக்கு விருப்பம் இருக்குமானால் அப்படிச்செய்ய அவனுக்கு அதிகாரம் உண்டென்றும், அவன் என்னை வெறுத்ததின் நிமித்தம் நான் அவனைப்பகைக்கிறது தப்பிதம் என்றும் உணர்ந்து, அவன் எனக்கு சிநேகிதன் என்று மதித்து, என் மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் அடையாளமாக ஏதாவது ஒரு வேலையை அவனிடத்தில் ஒப்புவித்து அவனைச் சாந்தப்படுத்துவதினால் நாளடைவில் அவன் எனக்கு நல்ல சிநேகிதனாவான். நல்ல மனிதர்களுங்கூட வேளாவேளைகளில் ஒருவருக்கொருவர் விரோதமாகி அன்பற்ற வார்த்தைகளைச் சொல்வது வழக்கந்தான். நமக்குக் கோபம் மூளுகையில் நமது சிநேகிதருக்கு விரோதமாய்ச் சொல்லும் வார்த்தைகளை எல்லாம் அவர்கள் முற்றும் மறந்துபோக வேண்டும் என்று நமக்கு விருப்பமிருக்கிறது. அப்படியே அவர்கள் கோபத்திலே சொல்லும் வார்த்தைகளை நாமும் மறந்துபோக வேண்டியதே. அது கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றுகிறதாம். ஒரு சகோதரன் நமக்கு விரோதமாய் பேசின வார்த்தையை ஒருபோதும் அவனுக்கு நினைப்பூட்ட வேண்டாம். அவன் நற்குணமுள்ளவனாய் இருப்பானாகில், தன்னை இவ்வளவு தயவாய் நடத்தின போதகரைத் திரும்பவும் விசனப்படுத்தாதபடி எச்சரிக்

..ந்தேகப்பித்தங் கொண்டவனும் இருக்கிருன். எப்படி யெனில் அவன் எதற்கும் யாரிடத்திலும் சீறிச்சினந்து தன் பைத்தியத்தின் நுரையைக் கக்குகிருன். இந்த மதியீனத் துக்கு உட்பட்டவனிடத்தில் நியாயம் பேசுவதெல்லாம் வீண். இப்படிப்பட்டவனுக்குப் பேசுதல் மாத்திரமல்ல, பேசாமையும் தீமையாய்த்தென்படும். சகோதரரே, தற் சினேகத்தைக் கொல்லுகிறதினுல் இந்தப் பொல்லாங்கை அகற்றுவோமாக, மனுஷனுடைய பேச்சை அற்பமாய் விட்டுவிட்டு, அவர்கள் நமது ஆண்டவருக்கு முன்பாக நடந்து கொள்ளுகிற மாதிரியை மாத்திரம் கவனிப் போமாக. புகழ்ச்சியினுலும் இகழ்ச்சியினுலும் அதிகமாய்ப் பாதிக்கப்படும் பெலவீனம், நமக்கு இயல்பாய் இருந்தால், அதை மேற் கொள்ளப்பார்ப்பதேயன்றி, மற்றவர்கள் அதன் மூலமாய் நம்மை மேற்கொள்ள இடங்கொடாதிருப் போமாக. ஜனங்கள் நம்மைக் குறித்துப் பேசுபவைகளை யெல்லாம் கேட்டு நம்மிடத்தில் வந்து அறிவிக்கும் ஆள் களுக்கு இடங்கொடுப்போமாகில் அது நமது உத்தியோகத் திற்குப் பொருந்தாதா கரியமாய் இருக்கும்! ஊரலப்புக் காரருக்குச் செவிக்கொடுப்பது வேவுகாரருக்குச் சம்பளம் கொடுத்து வேலை வாங்குவது போலிருக்கும்.

ஆதலால் கோள்காரரை நம்மைவிட்டுத் துரத்தி விட வேண்டும். தீவினையை விளைவிக்கிறவர்களும் சண்டை யின் அடிமைப் பெண்களுமாகிய இந்தக் குறளைகள் நமது ஆத்துமாவுக்கு முற்றும் அரோசிகமாய் இருப்பார்களாக. நம்மிடத்தில் கோள் கொண்டு வருகிறவர்கள், கோள் கொண்டு போகிறவர்களுமாய் இருக்கிருர்கள். திருட்டுப் பொருளை வாங்கி அடுக்குகிறவன் திருடனைப்போலவே குற்றவாளியாய் இருக்கிருன். அதுபோல, கோள் சொல்லு கிறவன் மாத்திரமல்ல, கோள்கேட்கிறவனும் குற்ற வாளியாய் இருக்கிருன். கோள் கேட்கும் காதுகள் இல்லா திருக்குமானுல், கோள் சொல்லும் நாவுகளும் ஒழியும். அவதூறு என்னும் உடைந்த பாண்டங்கள் விலை போகும் மட்டும் அவைகளை வனையும் பொய்க் குயவனின் கை

ஓயாது. பொய்யை சிருஷ்டிக்க ஒருவருக்கும் விருப்ப மில்லை. ஆயினும் ஒருவன் அவதூறான பேச்சை ஆசையோடே கேட்கும்போது அவதூறை உண்டாக்குகிறவர்கள் லேசாய் முளைக்கிறார்கள். ''கோள் சொல்லுகிறவன் பிராண சிநேகிதரையும் பிரித்து விடுகிறான்'' (நீதி. 16:28) என்று சாலொமோன் சொல்லுகிறார். கோள்பேச்சுக்குச் செவிகொடுத்த சிநேகிதர் இடையில் சாடைகள் விழுகிறது: சந்தேகங்கள் பிறக்கிறது; இருபக்கத்திலும் அன்பு குளிர்கிறது; காரணமோ ஒருவருக்கும் தெரியவில்லை. இதனால் மிக உறுதியும் அனலும் மகா இன்பமுமானநட்பு அற்றுப் போய், ஒருவேளை மரணபரியந்தம் பகை ஏற்பட்டு விடுகிறது. இது எவ்வளவோ சங்கடமான காரியம்! இதைக் குறித்துக் காம்பெல் என்பவர்''சிதைந்துபோன சிநேகத்தின் காட்சி பாழாய்க் கிடக்கிற ஓர் அரண்மனையின் காட்சியைப் பார்க்கிலும் அதிக சஞ்சலத்தை எனக்குத் தருகிறது. ஒரு காலத்தில் சந்தோஷத்தால் இலங்கிக் கொண்டிருந்த இருதயம் துக்கப்பட்சிகளுக்கு உறைவிடமாய் இருக்கிறதை நான் அங்கே காண்கிறேன்'' என்று மகா சாதுரியமாய் மொழிந்திருக்கிறார். ஐயோ! சந்தேகப்பேயே! நீ எத்தனையோ பாழ்க்கடிப்புகளைப் பூமியில் வருவித்துவிட்டாய்! அவதூறு பேசுவோருக்கு இடம் கொடாதிருப்போமானால் அவர்கள் ஓட்டம் அடங்கும். ஊர்பேச்சுகளில் பெரும்பாலானவைகளைச் சோதித்துப்பார்க்குபோது முற்றும்பொய் என்று காணப்படுகிறது. அவைகளில் இருபதில் ஒன்று உண்மையாய் இருப்பது அரிது.

நமக்கு அவசியமில்லாத விஷயங்களைக் கேட்கும்படி செவி சாய்க்காமல் இருப்பதே ஞானம். ஒற்றுக்கேட்போன் மகா ஈனமான மனிதன். நான் தற்செயலாய்க் கேட்டுக் கொண்டேன் என்கிறவன், தான் செய்யத்தகாததைச் செய்தவன் என்பதற்குச் சந்தேகமில்லை. ஜெரிமி டெய்லர் என்பவர் இதைக்குறித்துச் சொல்லியிருக்கிற ஞான வாக்கியமாவது:—''வாசலிலாவது ஜன்னலிலாவது ஒதுங்கி

நின்று ஒற்றுக்கேளாதே; ஏனெனில் அது மோசமும் கண்ணியுமாயிருப்பதுமன்றி, அது நமது அயலான் மறைவுக்காக தன்னைச் சுற்றிலும் வளைந்திருக்கிற வளைவுக்குள் பலாத்காரப் பிரவேசம் செய்ததாயுமிருக்கிறது'' என்பதே. ஒற்றுக்கேட்டல் ஒருவிதக் களவு. ஆகிலும், இந்தக் களவில் திருடப்பட்ட பொருள்கள் திருடனுக்குச் சந்தோஷத்தை வருவிப்பதில்லை. பொதுவாக அந்தரங்கமாய்ச் சம்பாதிக்கப்பட்ட விஷயமானது, ஒரு காரியத்திற்கு அதிக கெடுதியை அன்றி நன்மையை வருவியாது. விசாரணைக்காகப் போலீஸ் உத்தியோகஸ்தன் இரகசியமான பிரயத்தனங்களைக் கையாடலாம்; ஒரு போதகன் அப்படிச் செய்ய அவசியமில்லை. நமது உத்தியோகம் கிருபையும் சமாதானமும் பொருந்தியது. நாம் மற்றவர்களைக் குற்றப்படுத்த வேண்டிய வாதிகளாய் இராமல், அன்பினால் திரளான பாவங்களை மூடும் சிநேகிதர்களாய் இருக்கிறோம். காமின் கண்களைப்போல் நமது கண்களை உபயோகிக்கக் கூடாது. தீமையின் புத்திரன் சந்தோஷத்தோடே வெளிப்படுத்தின அவமானத்தைத் தங்கள் கண்ணால் பார்க்க மாட்டாமல் பின்னிட்டு வந்து அதை மூடின சேம் யாப்பேத்து என்பவர்களின் பயபக்தியான கண்களே நாம் ஆசிக்கத்தக்கவைகள்.

மற்றவர்களுடைய அநீதியான தீர்ப்புகளுக்கு நாம் செவிகொடாமல், அவர்கள் நம்மைக்குறித்துச் சொல்லும் காரியங்கள் நீதியும் உண்மையுமாய் இருக்குமானால், நாம் அவைகளுக்குத் தகுதியான கவனம் செலுத்த வேண்டும். குருட்டுப்பக்தியுள்ளோருடைய குரோத மொழிகளுக்கும், தற்பெருமையாளர்களின் சாரமற்ற நிந்தனைகளுக்கும், பேதைகளின் மூடவார்த்தைகளுக்கும், விரோதிகளின் மூர்க்கச் சொற்களுக்குமோ நமது செவிட்டுக்காதைத் திருப்புவது உத்தமமுமாய் இருக்கும். ஜனங்களின் பாவங்களை நாம் கண்டிக்கும்பொழுது அவர்கள் நம்மை மெச்சிக்கொள்ளமாட்டார்கள். அவர்கள் நம்மை வியந்துகொள்ளாதபோது அதைரியமும் கோபமும் ஏற்படலாம்.

இவர்கள் வியப்பும் நமக்குக் கண்ணி என்று அறிந்து கொள்வோமாக. நான் இலண்டன் பட்டணத்தில் ஒரு சபைக்குப் போதகராகப் புறப்பட்ட காலத்தில் நடந்த ஜெபக்கூட்டத்தில் ஒருவர் ''ஆண்டவரே! இவரை ஆடுகளின் கத்துதலினின்று காத்துக்கொள்ளும்'' என்று விண்ணப்பம்பண்ணினர். அந்த வேளை அதன் கருத்து எனக்கு நன்ருய்த் தென்படவில்லை. அது மிகவும் ஞானமான ஜெபம் என்று பிற்காலத்தில் நன்ருய் விளங்கிற்று. ''ஆடுகளின் பித்தான மேய்ப்பரோடு'' நாம் வாசம் பண்ணுகிறவர்களாய் இருந்தால் நம்மைச் சுற்றிலும் கேட்கும் கூட்டக்குழப்பமான சந்தடியைக் கவனிக்கமாட்டோம். நாம் மாம்ச சிந்தையுள்ளவர்களாய் மனிதருக்கேற்றபடி நடந்தால் நம்மைச் சுற்றிலும் எழும்புகிற சத்தங்களால் ஓயாத உபத்திரமடைவோம். ஆனல் இது நமக்கு அடுத்ததல்ல, நாம் புருஷராய் இருக்கவேண்டும். புதுச்சட்டை கிடைத்ததும் என் சட்டையைப்பார் என்று எல்லாரிடமும் காட்டும் சிறு பிள்ளைப்போல் வேடம் போடலாகாது. புகழ்ச்சி நமக்கு இன்பமாய் இருந்தாலும் அது மிக மோசமானது. புகழ்ச்சியால் நமது மனது மிருதுவாகிப் போகிறபடியால் பின்பு குறைகூறலையும் இகழ்ச்சியையும் சகிக்க அதற்குப் பெலன் இராது. புகழ்ச்சி இன்பத்தையும் இகழ்ச்சி நோவையும் தரும். மேலும் அற்பர்களாகிய நமக்காகப் புகழைத் தேடுவதினல் நமது பரம எஜமானை மகிமைப்படுத்தும் முக்கியமான நோக்கத்தினின்று நமது கருத்தும் பிரயாசமும் விலகிப்போகும். அப்படி நேரிடுவது மிகவும் மோசமான காரியமே.

நமக்கு விரோதமாய் வழங்கப்படுகிற பொய்ப் பேச்சுகளைப்பற்றியும் நாம் செவிடரைப்போல் இருக்கவேண்டும். பொய்யர் உலகில் இன்னும் நிர்மூலமாகவில்லை. ஒரு வேளை நமது ஆத்துமா அரோசிக்கிற பாவங்கள் நமதுமேல் சாட்டப்படலாம்; ஆகிலும் நாம் சோர்ந்து போக வேண்டியதில்லை. ஏனெனில், இந்தத் துன்பம் உத்தம பக்தர்களுக்கும் நேரிட்டதுண்டு. நமது ஆண்டவர் முதலாய்ப் பொய்

யரின் விடநாவுக்குத் தப்பினதில்லை. இப்படிப்பட்டவைகளைக் கவனியாதிருந்தால் தானே மங்கிப்போம். நாம் எதிர் பேசாமல் விட்டுவிடுகிற பொய், தண்ணீருக்கு வெளியே பிடித்து விடப்பட்ட ஒரு பெரிய மீனைப்போல் சிறிது நேரம் அங்கும் இங்கும் சாடி மோதியடித்துக் கொஞ்ச நேரத்துக்குள்ளாகச் செத்துப்போம். அதை மறுத்துச்சொல்லப் பிரயத்தனிப்பது அந்த மீனைத் தண்ணீரில் தூக்கிப்போட்டு அதன் ஜீவனை நீடிக்கப்பண்ணுகிறது போலிருக்கும். பெரும்பாலும் பொய்கள் தங்கள் முத்திரையைத் தங்களோடேகூடக் கொண்டு திரிகின்றன. அவைகள் தங்கள் கொடுக்கினால் தங்களையே கொட்டிக்கொண்டு செத்துப்போம். சில பொய்கள் பார்த்தவுடனே அவைகள் பொய் என்று நேர்மையுள்ள எல்லாக் கண்களுக்கும் தென்படும். நாம் அவைகளால் விசனப்படும்பொழுது அவைகளை எடுத்துக்காட்டினவர்களின் நோக்கம் ஒருவாறு நிறைவேறிப்போம். நமது பொறுமையோவெனில் அவர்களுடைய குரோதத்தை அடக்கி நமக்கு ஒருவித ஜெயமுண்டாக்குகிறது. தேவன் ஏற்ற காலத்தில் இவற்றினின்று பூரண விடுதலையை அளிப்பார். சில போதகர்கள் தெருப் பேச்சுக்களைக் கவனித்ததினால் ஆவியிலே முறிவடைந்து தங்கள் நற்கீர்த்தியையும் கெடுத்துக் கொண்டார்கள்.

கடைசியாக, குருட்டுக்கண்ணும் செவிட்டுக் காதும் மற்றச் சபைகளுக்கும் போதகர்களுக்கும் நேராகத் திரும்பியிருத்தல் வேண்டும், மற்றவனுடைய வீட்டுவிளக்கைத் தூண்டப்போன இடத்தில் விரலைச் சுட்டுக்கொண்டவனைக் கண்டால் சிரியாதவர்களும் சிரிப்பார்களே. அவன் தன் வீட்டு விளக்கைத் தூண்டிக்கொண்டிருந்தால் போதும். தன்வேலை தலைநிறைய இருக்கும்போது, ஊர் வேலையில் தலையிடுவது மதியீனம் அல்லவா? மற்ற சபையாருடைய வழக்குகளைத் தீர்ப்பதிலும் நாம் அதிகமாகத் தலையிடக் கூடாது. நாம் அயல் சபைகளுக்குக் கண்காணிகள் அல்ல. நமக்கு ஒப்புவிக்கப்பட்ட சபைகளைப் பார்த்துக் கொண்டு

மற்ற சபைகளை அவைகளின் போதகன்மார் பார்த்துக் கொள்ளும்படி விட்டுவிட வேண்டும். மனக்குறையுள்ளவர்கள் தங்கள் போதகரைப்பற்றிக் குற்றம் சொல்வதைக் காது குளிரக் கேட்கவோ அந்நிய சபைகளில் இருந்து தீமையான செய்திகளைக் கொண்டுவரத் தைரியம் கொடுக்கவோ கூடாது; நமது உடன் சகோதரரான போதகர்களைக் காணும்பொழுது அவர்களுக்கு புத்திசொல்ல ஆத்திரப்பட வேண்டாம்; அவர்கள் நடபடியைக் குறித்து நாம் கேள்விப்படும் விஷயங்களில் பல தீமையானவைகளாய் இருக்கும்; ஆதலால் நாம் இவர்களைப்பற்றி கொள்ளும் எண்ணங்களும் சரியாய் இராது. மற்றவர்களை யாதொன்றிலும் விசனப்படுத்தக்கூடாது. நமக்கு இடாத வழக்குகளில் சிக்கிக் கொள்ளாமல் விலகிக்கொள்வது ஞானம். வேண்டுமென்று சண்டையில் தலையிடுகிறவன் நாயின் காதைப் பிடித்திழுக்கிறவனைப்போல் இருக்கிறான். அவன் கடிபடுவான்; அவனுக்காக ஒருவரும் பரிதபிக்க மாட்டார்கள்.

19

சங்கப் பிரசங்கங்கள்

ஓய்வு நாள்களிலும் மற்ற நாள்களிலும் தேவாராதனைச் சம்பந்தமாய்ச் செய்யப்படுகிற தேவாக்கியப் பிரசங்கம் அல்லாமல், பற்பல நன் முயற்சிகளுக்கு ஆலோசனை சொல்லி எழுப்பிவிடத்தக்க வேறுவிதமான பிரசங்கங்களும் சபையாருக்கு அவசியமாய் இருக்கின்றன. நன் முயற்சிகளை நிறைவேற்றும்படிக்குக் கிறிஸ்தவர்கள் பல சங்கங்களாகச் சேர்ந்து கொள்ளுகிறபடியால், அந்தச் சமயங்களில் செய்யப்படுகிற பிரசங்கங்களுக்குச் சங்கப்பிரசங்கம் எனப் பெயர் வகுத்தோம். ரோமன் சபையாருக்குள் அர்ச்சிய சிஷ்டர்களுடைய திருவிழாக்களில் வேதவாக்கியப் பிரசங்கத்தை விட்டு, அந்தந்தப் புண்ணியவான்களுடைய சரித்திரங்களைச் சொல்லி, அவர்கள் புகழைப் பிரஸ்தாபிக்கும் வழக்கம் உண்டு. நல் முயற்சிகளுக்கடுத்த இந்தப் பிரசங்கங்களோ புரோட்டஸ்டான்ட் சபையிலேயன்றி வேறொரு சபையிலும் வழக்கமல்ல. சென்ற நூற்ருண்டில் புரோட்டஸ்டான்ட் சபையாரான கிறிஸ்தவர்கள் பலவிதமான திவ்விய முயற்சிகளில் தலையிடவே, இவ்விதப் பிரசங்கங்களும் ஆரம்பமாயின. சுத்தாங்க சுவிசேஷமார்க்கம் பலமாய் ஸ்தம்பிக்கப்பட்டிருக்கிற தேசங்களில் புறமதத்தாருக்குள் சுவிசேஷத்தைப் பிரபலப் படுத்துவதற்கான மிஷன் சங்கங்களும், அதற்கு அனுகூலமாக வேதபுத்தகங்களையும் மற்ற நல்ல புத்தகங்களையும் இலவசமாயும் சொற்ப விலைக்கும் கொடுத்து உதவ வேதாகம சங்கங்களும் சன்மார்க்கப் புத்தகங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இவைகள் நன்ருய் நடந்தேறுவதற்கு மிகுதியான பொருள் அவசியமாய் இருக்கிறபடியால், சபையார் உதாரமாயும் உற்சாக

மாயும் காணிக்கை கொடுக்கும்படி, காலத்துக்குக் காலம் அவர்களை ஏவி எழுப்புவது மிகவும் முக்கியமான காரியம். தேவாராதனைக்கடுத்த பிரசங்கங்களைப் பார்க்கிலும் அதிக தாராளமும் உற்சாகமுமான பேச்சுகள் இதற்கு அவசியம். மேற்சொல்லிய சங்கங்கள் சம்பந்தமாக மாத்திரமல்ல, மதுவிலக்கு, விதவை விசாரணை, அனாதைப் பிள்ளைகளின் ஆத்ரவு, அகதிகளுக்குச் சகாயம் முதலிய தர்ம விஷயங்களுக்கு ஜனங்களை எழுப்பிக்கொள்வதிலும் இவ்வித உற்சாகமான பேச்சுகள் அதிக அனுகூலமாய்க் காணப்படுகின்றன. மெய்க் கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் தனித் தனியாகவும், சபையாக சேர்ந்தும் இந்நற்கிரியைகளை மனோ உற்சாகத்தோடு நடத்துவது கடமை. இதற்காக ஜனங்களை எழுப்பிவிடுதல் போதகனுடைய வேலையாதலால் தேவ பணிவிடைக்காரன் இவ்வித பிரசங்கம் செய்யவும் தேர்ந்தவனாய் இருக்கவேண்டும். மேலும், தேவ ஊழியக்காரன் தேசவாழ்வுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற சபைகளிலும் பொது நன்மைக்கு அனுகூலமான சங்கக் கூட்டங்களிலும் தைரியமாய்ப் பேசி, தேவ பக்திக்கும் சன்மார்க்கத்துக்கும் அடுத்த நற்பயன்களைப் பிறப்பிக்க ஆயத்தமாய் இருக்க வேண்டும்.

இவ்வாறு சங்கப்பிரசங்கமானது வேதவாக்கியப் பிரசங்கத்திற்குத் துணைக்கருவியாயிருக்கிறது. வேதவாக்கியப் பிரசங்கங்களுக்கு இருக்கவேண்டிய தெளிவான நடை, நியாயபெலன் முதலிய முக்கியமான இலட்சணங்கள் இவைகளுக்கும் இருக்கவேண்டியதுதான்; என்றாலும், இவைகளிலும் சுவிசேஷ சத்தியங்களையே பிரசங்கிக்க வேண்டும் என்றில்லை. சொல்லப்படும் பொருள் பற்பல விஷயங்களைச் சம்பந்தப்படுத்துவதாய் இருப்பதோடு பேச்சு சாரமும் காரியத்துக்கு இசைவும் உற்சாகமுமாய் இருந்தால் பிரசங்கம் பயனற்றதாய் இராது. சங்கங்களில் பிரசங்கிக்கிறவன் சபையாரின் நிலைமைக்கும் அவசியத்திற்கும் பொருந்தப் பேசும்படி விவேகமாய் இருக்க வேண்டும். யோசனைகள் எவ்வளவு சிறப்பும், பேச்சு எவ்

வளவு சித்திரமுமாய் இருந்தாலும், கருதிய நோக்கத்திற்கு பொருந்தாதிருக்குமானல் அந்தப் பேச்சினல் பிரயோஜன மில்லை. பெரும்பாலும் நியாயவாதிகள் தேசாபிமானிகள் முதலியோரின் பேச்சுகள் இச்சமயம் அனுகூலப்பட வேண்டியவைகள். இல்லாவிட்டால் அவைகள் வீண். கிறிஸ்தவப் பேச்சாளரின் பிரசங்கமோ தற்சமயத்திற்கு மாத்திரமல்ல, பிற்காலத்துக்கும் உதவத்தக்க நிலைவரமான பலனைப் பிறப்பிக்கக் கூடியதாய் இருக்கிறது. சங்கக் கூட்டங்களில் நன்ருய்ப் பிரசங்கிப்பதற்குத் தைரியமும், நான விஷயங்களைக் குறித்து சாரமான அறிவும், விஷயங் களைப் பொருளுக்கு ஏற்ருற்போல் இசைத்தும், தகுந்த உவமானங்களால் திருஷ்டாந்தப்படுத்தியும், அவசியம் போல் சுருக்கியும் சொல்லுந்திறனும் அவசியம். வார்த் தைத் திரட்சியும் நீளமுமான பிரசங்கங்கள் சங்கக் கூட்டங் களுக்கு முற்றும் அடாது. பேச்சுகள் சுருக்கமும் பலவகையு மாய் இருக்கவேண்டும். இதற்காகவே ஒன்றுக்கு அதிக மான பிரசங்கிகளை நியமிக்கிற வழக்கம் உண்டாயிருக் கிறது. மற்றவர்கள் சொல்லப்போகிற காரியம் ஏதென்று அறிவதும், அறிந்தாலும் அவர்கள் யோசனைக்கு வேற்று மையான யோசனைகளை எடுப்பதும் எப்பொழுதும் கூடிய காரியமல்ல. ஆகையால் பிரசங்கி பற்பல விஷயங்களைக் குறித்தும் மிகுதியான அறிவுள்ளவனுயும், திடீரென்று நேரிட்ட சந்தர்ப்பத்தில் தைரியம் கைவிடாதவனுயும், ஜனங்களின் கவனத்தைக் கவர்ந்து கொள்ளத்தக்கதாகக் காரியங்களை இசைத்து உவமானங்களால் விளக்கிக் காட்டத்தக்கத் திறமையுடையவனுயும் இருப்பது மிக முக்கியம். இன்னெரு முக்கியமான காரியம் என்ன வென்ருல் பிரசங்கிகள் குறித்தநேரத்திற்குள் பேசி முடிக்கப் படிக்க வேண்டும். அடிக்கடி சிலர் வரம்பு கடந்து விடு வதால் நமது சமயம் சுருங்கிப்போகும். உடனே நாம், அடடா! வருத்தப்பட்டு ஆயத்தம்பண்ணின விஷயங்களைச் சொல்லச் சந்தர்ப்பமில்லையே என்று விசனப்படாமல்,

ஜனங்கள் சலித்துப்போனூர்கள் என்று கண்டால், சார மான இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லிவிட்டு உட் கார வேண்டும். அப்படிச் செய்யாவிடில் பிரசங்கி ஜனங் களின் முறுமுறுப்புக்குள்ளாவதுமன்றி ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுகிறவனுயும் இருப்பான்.

இத்தேசத்தில் சங்கப் பிரசங்கங்கள் பெரும்பாலும் மந்தத்தன்மையும் உற்சாகமற்றவைகளுமாய் இருக் கின்றன. அநேகர் சங்கப்பிரசங்கத்தை வேதவாக்கியப் பிரசங்கம்போல் செய்கிறூர்கள். அது அவசியமில்லை. சங்கப்பேச்சு அதிக உற்சாகமாய் இருக்க வேண்டும். உற் சாகத்திற்கென்று கதைகள் சொல்லி நளினம் பேசுவது எவ்விதத்திலும் அடாது. ஆயினும் ஒருவாறு விகடமாய்ப் பேசுதல் குற்றமல்ல. மேலும், பழமொழிகள் நல்ல சத்தி யங்களைச் சுருக்கமான வார்த்தைகளில் தெளிவும் பெலமு மாய்க் காட்டுகிறபடியால், பிரசங்கிகள் அவைகளைத் தெரிந்து கற்றுப் பிரசங்கத்தில் பிரயோகித்தால் ஜனங்கள் உற்சாகத்தோடு கேட்பார்கள்.

20

சபை சந்திப்பு

சபை சந்திப்புச் சம்பந்தமாய் ஒரு போதகன் கைக் கொள்ளவேண்டிய முதலாம் விதி என்னவென்ருல், போத கன் தன் ஊழிய ஆரம்பத்தில் அதிகமான நல்முயற்சிகளைத் தொடங்கி, திராணிக்கு மிஞ்சின வேலையினுல் தன்னைச் சங் கடப்படுத்திக் கொள்ளலாகாது என்பதே. ''மெல்ல மெல்ல துரிதம் பண்ணு'' என்று ஒரு பழமொழி உண்டு. பிரசங்கம் ஆயத்தம் செய்வதில் ஏராளமான அப்பியாசமடைவதே போதகன் முதலாவது செய்ய வேண்டிய காரியம். வாரந் தோறும் இரண்டு பிரசங்கம் ஆயத்தம் பண்ணுவது வருத்தம் ஆயினும் ஒழுங்கான முயற்சியினுல் இது நிறை வேறக்கூடிய காரியந்தான். இதில் தேர்ச்சி பெறுமுன் வேறே வேலைகளை ஏற்றுக்கொள்வது நல்லதல்ல. அதிக பாரம் பிடரியை முறிக்கும். போதக ஊழியத்தைத் தொடங்குகிற ஒருவன் உண்மையாய் அந்த வேலையைச் செய்யத் தீர்மானித்திருக்கிறதைக் காணும்போது, பிசாசு அவன் முதுகின்மேல் ஏறிச்சவாரிசெய்து அவனைச் சீக்கிரம் கொன்று போடுகிருன் என்று ராபர்ட் ஹால் என்னும் போதகர் சொல்லுவார். அது மெய்தான். தேக அப்பி யாசம் செய்கிறவன் ஆரம்பத்தில்தானே ஆயிரம் ராத்தல் பாரத்தைக் தூக்குகிறதற்குத் தலைபட்டால் எலும்பு முறிந்து போம். முதலாவது இலேசான பாரத்தைத் தூக்கிப் பின்பு படிப்படியாய் அதிக பாரத்தைத் தூக்கி வருவாஞனுல் சில காலத்துக்குள் பெரிய பாரச்சுமையையும் தாராளமாய்த் தூக்கப் பெலன் அடைவான். போதக வேலையிலும் காரியம் அப்படியே. முதலாவதாக பிரசங்கம் ஆயத்தம் பண்ணு வதில் தேர்ச்சியடையப் பார்க்க வேண்டும். அதன்பின்

இன்னொரு நல்முயற்சியைக் கூட்டிக் கொள்ளலாம்; அப்படியே அதிக நன்மை செய்யப் பெலனுண்டாகும். எல்லாவற்றையும் ஒருமிக்கத் தொடங்கினால் சீக்கிரம் சுகவீனமும், மனச்சோர்வும், காரிய சித்தியின்மையும் நிச்சயமாய் உண்டாகும். ஆகையால் இவ்வூழியத்தின் ஆரம்பத்தில் நமக்கு உண்டாயிருக்கும் பக்தி வைராக்கியத்தை விவேகத்தினால் பயன்படுத்த வேண்டும்.

மேலும் சபையின் எல்லாக் கடமைகளையும் போதகன் தன் மேலேயே சுமத்திக் கொள்ளலாகாது. மோசேயின் மாமன் அவனை நோக்கி, ''இது உமக்கு மிகவும் பாரமான காரியம்; நீர் ஒருவராய் அதைச் செய்ய உம்மாலே கூடாது'' என்று சொல்லி வேலையைப் பகிர்ந்து கொடுக்கும்படி அவனுக்கு ஆலோசனை சொன்னானே. இது நமக்கு ஏற்ற ஆலோசனைதான். சகலத்தையும் நாமே செய்யும்படி பார்க்கக்கூடாது; மற்றவர்களையும் வேலைக்கு ஆயத்தப்படுத்த வேண்டும். நம்மைச் சுற்றிலும் இருக்கிற சகோதரர்களின் தன்மை திராணிகளை அறிந்து அவர்களுக்கு ஏற்ற வேலைகளை அவர்களுக்கு ஒப்புவிப்பது நலம். யுத்த நாளில் தளகர்த்தன் முறிந்த ஒரு வண்டியின் உருளையைச் செப்பனிட்டுக் கொண்டிருப்பது புத்தியல்ல; அதைப் பார்க்கிலும் அதிக முக்கியமான வேலை அவனுக்கு உண்டு சொற்ப வேலைகளை அதற்குச் சமர்த்தரான தொழிலாளிகளிடத்தில் ஒப்புவிக்கலாமே. யுத்த முறையை யோசித்து நடப்பிப்பது சேனாபதியின் சிலாக்கியம். அவன் எல்லாவற்றையும் தானாய்ச் செய்யத் தொடங்குவானானால் ஒன்றும் நடவாது; அவைகளைச் செய்வது சேவகரின் காரியம். யுத்தகளத்தில் சேனாபதியின் கடமை எதுவோ அதுவே தேவனுடைய சபையில் போதகனுக்கும் கடமையாம். அவன் தன் உடன் வேலையாள்கள் அனுசரிக்கவேண்டிய ஆலோசனைகளையும் சட்ட திட்டங்களையும் ஓய்வு நாளில் எல்லாருக்கும் எடுத்துச் சொல்லுவதுமல்லாமல் தேவ ஆவியின் திவ்விய வைராக்கிய அனலை அவர்களில் மூட்டி விடவும் வேண்டும். ஆனால் எல்லா காரியங்களிலும் தானே இருந்து.

காரியங்களை நிறைவேற்ற வேண்டுமென்று பார்க்கத் தேவையில்லை. போதகன் தன் சபையின் காரியங்களை அவசியம்போல் ஒழுங்கு பண்ணும் திறமையை அடைந்து கொள்ளவேண்டும். தகுதியாய் ஒழுங்குப்படுத்தப்பட்ட சபையானது பற்பல உறுப்புக்களும் ஒன்றேடொன்று இசைவாய் இணைக்கப்பட்ட நேர்த்தியான நீராவி இயந்திரம் போலிருக்கிறது. இயந்திரம் இயங்க வேண்டுமானால் தண்ணீரைக் கொதிக்கக் காய்ச்சிப் போதுமான நீராவியைப் பிறப்பித்துக் கொண்டிருக்க வேண்டும் அப்படியே போதகன் தன் சபையின் வேலையைத் தகுதியாய்ப் பகுத்து தக்கவர்களிடத்தில் ஒப்புவித்தபின், அவர்கள் அக்கடமைகளை உண்மையாய் நிறைவேற்றத்தக்க ஆவியின் அருளை அவர்களில் பிறப்பிக்கும்படி விழிப்பான விசாரணையினாலும் போதகத்தினாலும் பயிற்றுவிக்க வேண்டும். ஆனால் எல்லாரும் தம் தம் கடமைகளைத் தன் சொற்படிச் செய்யவேண்டும் என்று நினைக்கக்கூடாது. போதகனைச் சேனைபதிக்கு ஒப்பிட்டோம். அதனால் ஒரு சேனையில் கையாடப்படும் சிட்சையைக் கிறிஸ்து சபைக்குள் புகட்ட வேண்டும் என்பது கருத்தல்ல; கிறிஸ்தவர்களுக்குப் போதகரின் கற்பனைகள் அல்ல, கிறிஸ்துவின் கற்பனைகளே பிரமாணம். ஆதலால் போதகன் சகலமும் தன் யோசனையின்படியே செய்யப்பட வேண்டும் என்று விரும்பலாகாது. சபையாரைத் தன் அதிகாரத்தினால் அல்ல, தன் முன்மாதிரியினால் கீழ்ப்படியப் பண்ண வேண்டும். போதகன் விவேகியாய் இருந்தால் சபையார் சீக்கிரம் அவனுடைய விவேகத்தை அறிந்து அவனை மதிப்பார்கள். போதகனும் சபையாரும் ஒன்றாய் ஆலோசித்து நன்மையான விஷயங்களை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். சபையாரின் யோசனைக்கு இடங்கொடுக்கலாமேயொழிய தனது மனச்சாட்சிக்கு விரோதமான காரியங்களில் அவர்கள் மனதுக்கு இணங்கவே கூடாது.

கிறிஸ்துவின் உண்மையான சீஷர்கள் அவருடைய சித்தத்திற்கு விரோதமாகக் காணப்படுகிற காரியங்களை நடத்தித் தீர்க்கவேண்டும் என்று விரும்பமாட்டார்கள்;

அவர்கள் அப்படிச் செய்தால் நாம் எதிர்த்து நிற்க வேண்டும். அந்த முகாந்திரத்தினுல் எதிர்த்து நிற்கும் பொழுது நம்மை ஜெயிக்கக்கூடியவர்கள் ஒருவருமில்லே. இப்படிப்பட்ட தருணங்கள் மிகவும் ஆபூர்வமாய் மாத்திரம் நேரிடும். முக்கியமில்லாத காரியங்களில் நமது யோசனே சபையாருக்குப் பிடிக்கவில்லேயானுல், நம்மை விட அதிக விவேகமுள்ளவர்கள் சபையில் இருக்கிறதின் நிமித்தம் நாம் சந்தோஷப்பட்டுப் பொறுமையாய் இருக்க வேண்டும் போதகர்கள் 'தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்' என்று சொல்லுமாப்போல் இருக்கக் கூடாது. சபையாருடைய ஆலோசனே சில சமயங்களில் அபத்தமாய் முடிந்தாலும், ''பார்த்தீர்களா? நான் சொன்னேனே?'' என்று அவர்களே பகடி பண்ணுமல் அவர்களேயே உணர்ந்துகொள்ள விட்டு விட வேண்டும். என்ன வந்தாலும் தன் நோக்கத்தையே நிறைவேற்றப் பார்க்கிறவன் தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகை செய்கிறவனுய் இருக்கிருன். அதனுல் அவனுக்குச் சகோதரக் கூட்டத்தின் வெறுப்பும் விசனமும் கிடைக்கிறதும் அல்லாமல் அவன் பிரசங்கமும் சாரமற்றதாய்ப் போகும்.

இனி ஜனங்களே வீடுவீடாய்ச் சந்திக்கும் விஷயத்தைக் கவனிப்போம். ஒரு போதகன் தன் சபையில் முக்கியமாய் விருதாப்பியரையும், வியாதிஸ்தரையும், சாகக் கொடுத்தவர்களேயும், துன்பப்படுகிறவர்களேயும் சந்திக்க வேண்டும். ''மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்'' என்று இரட்சகர் சொன்ன வார்த்தைகளேப் போதகர் நினேவு கூர்ந்து, துன்பப்படும் ஜனங்களிடத்தில்போய், அன்போடும் உருக்கத்தோடும் பேசி, புத்தி சொல்ல வேண்டும். நாம் அதை இழிவாக எண்ணுமல் ஒரு பெரும் சிலாக்கியம் என்று எண்ண வேண்டும். நமது உள்ளத்திலிருந்து வரும் உண்மையான பரிதாபத்தைக் காண்பிக்க வேண்டும். துக்கசாகரத்தில் அமிழ்ந்திருக்கிற நமது சகோதரர்களே ஒரு கையால் தூக்கி

எடுக்கும்போது, மறுகையால் இரட்சகரைப் பிடித்துக் கொண்டு, பெத்தானியாவில் புலம்பிக் கொண்டிருந்த சகோதரிகளைச் சந்தித்து ஆறுதல்படுத்தின அவருடைய உருக்கமான சிந்தையைத் தரித்துக் கொள்ள வேண்டும்.

ஆறுதல் சொல்வதற்கு வேத வாக்கியங்கள் மிகவும் ஏற்றவை. துன்பகாலத்தில் இயேசுவும் அவருடைய ஆவியைப் பெற்ற தாசர்களும் சொல்லிய வார்த்தைகளைப் போல் ஆத்துமாவுக்கு ஆறுதலான வார்த்தைகள் வேறில்லை. அப்படிப்பட்ட வாக்கியங்களை மனனம் பண்ணி வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் சமயோசிதமாய் கையாடக் கூடியவர்களாயிருப்போம். நாம் நமது பரம எஜமானைப்போல் அமைதலாய் நோயாளியின் அறையில் சென்று உருக்கமாய்ப் பேசவேண்டும். நோயாளியின் இருதயம் கிறிஸ்துவினிடத்திற்குச்செல்லத் தக்கதாக அவனோடு ஜெபிக்கவேண்டும். நமது பேச்சும் ஜெபமும் துக்ககரமாய் இல்லாமல் திவ்விய உற்சாகமுடையதாய் வியாதிக்காரனைச் சந்தோஷிக்கத் தக்கதாய் இருக்கவேண்டும். அவர்களுக்குச் சலிப்புண்டாக்கத்தக்கதாக அவர்களோடு நெடுநேரம் இருக்கவேண்டாம். இவ்வாறு செய்யும்போது போதகர் இன்னும் எப்போது திரும்பி வருவார் என்று அந்த வீட்டார் ஆவலோடு காத்திருப்பார்கள்.

நோய் அதிகமாய் இருக்குமானால், நாம் நமது கடமையின் முக்கியத்தை உணர்ந்து, அதிக சாவதானத்தோடும் உருக்கத்தோடும் பிணியாளிக்கு அவன் நிலைமையைப் பற்றிப் பேசவேண்டும். அவன் குணப்படாதவனானால் தேவனிடத்திற்கு மனந்திரும்பும்படி ஏவவேண்டும். இது மிகவும் பாரதூரமான வேலை என்றாலும் நாம் பரிசுத்தாவியின் சகாயத்தில் சார்ந்து கொள்ளுவோமாகில் தப்பிப் போன பாவியைப் பதினோராம் மணிவேளையிலுங்கூடத் திருப்பிக் கொண்டு வரக்கூடியவர்களாய் இருப்போம். நாம் பாவியின் முன்பும், இரட்சகரின் முன்பும், உண்மை

யோடும் வஞ்சம் இல்லாமலும் அவ்வேலையைச் செய்து வந்தால் அதன் பலனை இழந்துபோகமாட்டோம். துக்க முற்றோருக்கும், வியாதிஸ்தருக்குமாத்திரமல்ல, அவர்கள் வீட்டாருக்கும் இந்நல் முயற்சி உபகாரப்படும். அவர்கள் நம்மையும் நமது வேலையையும் நேசிக்கத் தொடங்கு வார்கள். அப்பொழுது நாம் விவேகமாய் இருப்போமானால் அவர்கள் எல்லாரையும் நமது மந்தைக்குள் பிரவேசிக்கப்பண்ணலாம், அத்தருணங்களில் சொல்லும் புத்திமதிகளும் பிரசங்கங்களும் அவர்களுக்கு மெத்த உணர்வாய் இருக்கும். துன்பம் என்னும் கலப்பையால் தேவன் அவர்கள் இருதயங்களில் உழுத உழவுசால்களில் நமது புத்திமதிகளாக ஜீவவிதைகள் விழுந்து முளைத்துப் பலன் தரும். அத்தருணத்தில் நாம் காண்பிக்கும் அன்பு ஒரு போதும் மறைந்துபோகாது. பெரும்பாலும் உபத்திரவ காலத்தில் நாம் சந்தித்து ஆறுதல் சொல்லி தேற்றினவர்களே நமக்கு உத்தம சிநேகிதர்களும் நமது பிரசங்கங்களினால் பலன் அடைகிறவர்களுமாய் இருப்பார்கள். ஒரு போதகன் எவ்வளவு கூடுதல் காலம் ஒரு சபையில் இருப்பானோ அவ்வளவு அதிகமானபேர்களை உபத்திரவத்தில் கண்டு உதவிசெய்ய நேரிடும். அத்தருணங்களில் அவன் தன் கடமையை உண்மையாய்ச் செய்து வருவானானால், கொடியானது மரத்தைச் சுற்றியிருப்பதுபோல அவர்கள் இருதயங்கள் அவனைப் பற்றிக்கொள்ளும். காலஞ் செல்லச்செல்ல அவனைத் தங்கள் இனத்தான்போல் நேசிப்பார்கள். அவன் அவர்களைவிட்டுப் பிரிய நேரிடும் போது, அவர்கள் எவ்வளவு நேசித்திருந்தார்கள் என்பது தெரியவரும். ஆதலால் துன்பமும் துக்கமும் நிறைந்த வீடுகளில் அடிக்கடி போய் ஆறுதல் சொல்வோமானால் அது அதிக பலனைத் தரும்.

சுகவீனர்களை மாத்திரமல்ல, மற்றவர்களையும் நாம் சந்திக்க வேண்டும். அவர்களைக் கண்டு பேசும்போது உத்தியோகச் செருக்கைக் களைந்துபோட்டு நமது இரட்சகரைப் போல அன்பும் மனத்தாழ்மையும் உள்ளவர்களாய்க்

காணப்படவேண்டும். நமது இரட்சகர் பிள்ளைகளை நேசித்தார். நாமும் பிள்ளைகளை அன்போடும் உருக்கத்தோடும் நடத்த வேண்டும். பயந்து ஓடத்தக்க ஆடம்பரமும் பயங்கரமுமான தோற்றமும் காணப்படக்கூடாது. ஆட்டுக்குட்டிகளைப் பேணினால் மந்தை நன்றாயிருக்கும். பிள்ளைகளின் மூலமாய் அவர்கள் பெற்றோரின் உள்ளத்தையும் வசப்படுத்திக்கொள்ளலாம். ஜனங்கள் முன்பாக நமது நடக்கை இயல்பும் தேசத்திற்குப் பொருத்தினதுமாய் இருக்கவேண்டும். கர்வத் தோற்றமும் கற்சிலை போன்ற மௌனமும் ஒவ்வாது. அவர்களோடு தாராளமாய்ப் பேசவேண்டும். நாம் கர்த்தருடைய காரியமாய் அவர்களிடத்தில் போயிருக்கிறது நிச்சயந்தான் என்றாலும், வேத காரியத்தை வெறுப்புக்கு ஏற்றவிதமாய்த் திடீரென்று அவர்கள் மேல் செலுத்துவது புத்தி அல்ல. இசைவு கண்டு ஆத்தும விஷயங்களைச் சம்பாஷணையில் கொண்டுவரும் யூகம் நமக்கு அவசியம். சாதாரணச் சம்பாஷணையில் நாம் ஆத்தும காரியங்களை இயல்பாய்க் கொண்டுவந்தால் மற்றவர்களும் அந்தச்சம்பாஷணையில் ஆசையோடுகலந்துபேசி எழுப்புதல் அடைவார்கள். அதிகத் தாற்பரியமுள்ள விஷயங்கள் ஏதென்று கவனித்து அவர்கள் அறிந்துக்கொள்ளக்கூடிய விதமாய் பேசவேண்டும். அப்பொழுது படிப்படியாய் நாம் அவர்களை மேலான காரியங்களுக்கு உயர்த்திக் கொண்டு போகலாம். ஓர் உதாரணம்—பாகவதர் ஒருவர் ஒருநாள் ஒரு சிறுவனுக்கு இராகங்களை ஆலாபிக்கப் படிப்பித்தார். சிறுவன் கரங்களைச் சரியானபடி உயர்த்தப் பிரயாசப்பட்டும் சரிப்படவில்லை. ஆசிரியர் வேளைக்கு வேளை, ''போதாது; உயர்த்து இன்னும் உயர்த்து'' என்று சொல்லியும் பையனால் கூடவில்லை. அப்பொழுது அவர் அவனோடு ஆடிப்பாடி அவன் தொனியைச் சரியான உச்சத்துக்குக் கொண்டு வந்துவிட்டார். பின்பு அவன் தனியே இலேசாய்ப்பாடினான். ஜனங்களுடைய நிலைமைக்கு ஏற்றதாய்ப் பேசும்படி நாம் அவர்களுடைய வேலைகளையும் அவர்கள் படும்பாடுகளையும் அவர்கள் இன்ப துன்பங்களையும் நன்றாய்

அறியவேண்டும். மேலும் நமது சம்பாஷணை நாம் சந்திக்கும் எல்லாருக்கும் எழுப்புதலாய் இருக்கத்தக்கதாக பல விஷயங்களைக் குறித்தும் அறிவுள்ளவர்களாயும், பல விஷயங்களையும் உவமானங்களையும் எடுத்துச்சொல்லக் கூடியவர்களுமாயுமிருக்க வேண்டும். அப்பொழுது நமது பேச்சு மிகுந்த பிரயோஜனமுள்ளதாயுமிருக்கும். இவற்றிலெல்லாம் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது என்னவென்றால் இந்தச் சந்தர்ப்பங்களில் நமது சிந்தை கிறிஸ்துவோடு ஐக்கியமாய் இருக்கவேண்டும். நாம் இந்த வேலையை கடமைக்கென்று செய்யாமல் கிறிஸ்துவின் மேலுள்ள அன்பினால் அவர் நாமத்தினிமித்தம் அதைச் செய்துவந்தால் நமக்கு மிகுந்த சந்தோஷமும் ஜனங்களுக்கு மிகுந்த பிரயோஜனமும் உண்டாகும்.

வீடுவீடாய் ஜனங்களைக் கண்டு பேசுவதினால் ஜனங்கள் அதிக ஆவலோடு ஆலயத்திற்கு வந்து, பிரசங்கத்திற்கு அதிகக் கருத்தாய்ச் செவிகொடுப்பார்கள்; அவர்கள் நம்மைத் தங்களுக்குத் தூரமானவராக நினைக்கிறதில்லை. அவர்கள் நமக்குச் சமீபமாய் வந்து நமது பேச்சைக் கேட்டு ஆத்துமாக்களின் குணப்படுதலைப்பற்றி நமக்கு உண்டாயிருக்கிற வாஞ்சையை அறிந்திருக்கிறபடியால், நமது வார்த்தைகள் அவர்கள் இருதயத்தில் அதிகமாய்ப் பலன் செய்கிறது.

மீண்டும், நமது பிரசங்கம் அவர்கள் இருதயங்களில் பலன் செய்கிறதா என்று அறிவதற்கு, நாம் அவர்களைத் தனித்தனியே கண்டு பேசுவது அவசியம். துப்பாக்கி கொண்டு சுடுகிறவன் தான் குறித்த இலக்கு பட்டதோ அல்லவோ என்று பார்ப்பதுபோல, பிரசங்கியும் தன் பிரசங்கத்தினால் பலன் உண்டாயிற்றோ அல்லவோ என்று அறியவேண்டியதே. ஆதலால் ஜனங்களைச் சந்தித்தலாகிய இந்தக் கடமையை அற்பமாய் நினையாதிருப்போமாக.

போதகனின் சிங்காசனம் பிரசங்கப் பீடந்தான்; சிங்காசனத்தின் உறுதி என்ன? ஜனங்களின் அன்பல்லவா? இந்த அன்பைச் சம்பாதிக்கும் வழி, நாம் அவர்களை வீடுகளில் சந்திப்பதுதான். இதனால் நமது சற்குணம் வளர்ந்து பலத்துக் கனியும்; ஆலய ஆராதனையில் நாம் ஜெபிக்க வேண்டிய விஷயங்கள் ஏதென்று தெரியவரும்; பிரசங்கிக்க அவசியமான பொருள்கள் தென்படும்; நமது பாரமான கடமைகளைச் செய்வதற்கு உற்சாகம் உண்டாகும்; ஜனங்கள் நம்மைத் தங்கள் தாய் தகப்பனைபோலும், உற்ற சகோதரன்போலும் மதித்து நேசிக்கத் தலைப்படுவார்கள். அதனால் நமது பிரசங்கமும் உழைப்பும் நாளுக்கு நாள் சித்தி பெற்றோங்கும்.

21

பிரசங்கியின் நடத்தை

கிறிஸ்தவ போதகன் ஜனங்களிடையில் உலரயாடும் பொழுது நடந்து கொள்ள வேண்டிய விதம் இன்னதென்று இப்பொழுது கவனிப்போம். இதில் முக்கிய காரியம் போதகன் தன் வகுப்பினர்க்குரிய எந்த ஒரு விசேஷித்த சாடையும் பாவிக்க வேண்டியதில்லை. மேம்பாடும் உத்தி யோக மேடையின் படபடப்பும் மாய்மாலமுமான சகல பாவனைகளையும் அகற்றவேண்டும். ''மனுபுத்திரன்'' என்னும் பெயர் மகத்துவமானது. வேத புத்தகத்தில் அப் பெயர் எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கும், அவனிலும் பெரிய வராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் இடப்பட்டிருக்கிறது. தேவனுடைய ஸ்தானபதி ஒவ்வொருவனும் மனுபுத்திர னாய் இருந்தால்போதும். அவன் எவ்வளவு இயல்பான விதமாயும் ஆடம்பரம் இல்லாமலும் நடந்துக் கொள் கிறானோ, அவ்வளவுக்கு அவன் தேவனுடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் முன் மாதிரியைப் பின்பற்றுகிற வனாய் இருப்பான். சாதாரணமாய்ப் போதகர்களும் ஆசிரியர்களும் ஒரு விசேஷித்த கௌரவத் தோற்றம் தரித்துக் கொள்ளுகிறதுண்டு. தாங்கள் மற்ற மனுஷர் களைப் போன்றவர்களல்ல என்று அவர்கள் நினைப்பதாக அந்தத் தோற்றம் சொல்லுகிறது. மற்றவர்கள் மத்தியில் இருக்கும்பொழுது அவர்கள் அத்தனை சுதந்திரமாய் இல்லை. அடிக்கடி அவர்கள் பாவனைகளைப் பார்க்கும் பொழுது அவர்கள் தங்களை நவவருணப் பட்சிகள் போல் சற்றே மேம்பாடாய் எண்ணிக் கொள்ளுகிறதாகத் தோன்றுகிறது.

ஒரு நாள் மிகுந்த ஆடம்பரமாய் நிலையங்கி தரித்து மகா கர்வத்தோடு வீதிவழியாய் உலாவிக்கொண்டுபோன ஒரு குருவை ஒருவன் கவனித்து, அவரிடத்தில் போய்: ஐயா, தாங்கள் யார்? தங்களைப் பார்க்கும்போது மெத்த கண்ணிய புருஷனாய்த் தோன்றுகிறதே என்றானாம். போதக வகுப்பைச் சேர்ந்த வேறு சிலருடைய நடக்கையைப் பார்க்கும்போதும் இந்தக் கேள்வியையே கேட்கத் தோன்றும். அவர்களில் சிலர் நிலையங்கி தரித்தில்லாமல் வெளியே செல்லமாட்டார்கள். ஹைச் சர்ச் எனப்படும் சபையைச் சேர்ந்த ஒரு குரு, சுவிட்சர்லாந்திலும், இத்தாலி யிலும் தான் யாத்திரை செய்த இடங்களிலெல்லாம் அங்கி தரித்தவராகவே திரிந்தாக மிகுந்த சந்தோஷத்தோடு பத்திரிகைகளில் பிரசித்தப்படுத்தியிருக்கிறார். உடை சம் பந்தமாய் ஒருவேளை நாம் அவ்வளவு மதியீனத்தைக் காட்டமாட்டோம். எனினும் நமது நடக்கையே அதற் கேற்றதாய் இருக்கும். சிலர் பாவிக்கிற மேன்மையான தோற்றம் உண்மையில் அயோக்கியமாயும், மனத்தாழ்மை யுள்ள இயேசுவின் அடியாருக்கு முற்றும் அடாததாயும் இருக்கிறது. ஸமர் ஸெற்று பிரபு தமது ஏவலாட்களோடு பேசுவது தமது அந்தஸ்துக்கு சரிவராது என்றாற்போல, தமது கற்பனைகளைச் சமிக்கையினால் அவர்களுக்கு வெளிப் படுத்துவார். தமது பிள்ளைகளைத் தமக்கு முன்பாக ஒரு போதும் உட்காரச் சம்மதியார்; மத்தியானம் நித்திரை செய்கையில் தமது குமாரத்திகளில் ஒருத்தி ஒரு பக்கத்தி லும் வேறொருத்தி மறுபக்கத்திலும் நிற்கும்படி கட்டளை யிட்டிருந்தார். இவ்வாறே பெருமைக்காரரான ஸமர் ஸெற்றுகள் போதக வகுப்பிற்குள் பிரவேசித்தபின் மேற் சொல்லியதுபோல் மதியீனமான வீம்புகள் பாராட்டுகிற துண்டு. ''என் சமீபத்தில் வராதே; உன்னைப் பார்க்கிலும் நான் பரிசுத்தன்'' என்ற வாசகம் அவர்கள் நெற்றிகளிம் எழுதப்பட்டிருக்கிறது. போதகர்களில் காணப்படுகிற இயல்புக்கு விரோதமான சாடைளால்தான் சாதாரண ஜனங்கள் அவர்களை அதிகம் நாடாமல் இருக்கிறார்கள்.

எவ்விடத்திலும் உண்மையுள்ள நல்ல மனுஷரைப்போல் இயல்பாகப் பேசி நடந்து வருவோமானால் அவர்கள் ஆவலோடு நம்மிடத்தில் வருவார்கள்.

சாதாரணமாய் நமது பிரசங்கங்களில் ஜனங்களுக்குப் பழக்கமான சாடையும் பேச்சும் இல்லாதது ஒரு பெருங் குற்றம். அதைத் திருத்துவதற்கு நாம் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று பாக்ஸ்டர் என்னும் போதகர் சொல்லியிருப்பது போதகர்கள் கவனிக்க வேண்டியதே. சாதாரண ஜனங்களை வசப்படுத்த வேண்டும் என்ற வாஞ்சை நமக்கு இருக்குமானால் நமது ஆவியின் அன்போடு மனித அனுதாபமும் இருக்க வேண்டும். வேஷப் போர்வைகளால் ஜனங்களை வஞ்சியாமல், பொய்கால்களை உடனே எறிந்து விட்டு, நமது சொந்த கால்களில் ஊன்றி நடப்பது புத்தி. மாய குருக்களின் கேலிக்கிடமான போர்வைகளை உடனே உறிந்துவிட்டு சத்தியத்தின் ஆடையை அணிந்துக் கொள்வோமாக.

ஆயினும், ஒரு போதகன் எவ்விடத்தில் இருந்தாலும் தான் போதகன் என்பதையும், தன் ஊழியத்தை நிறைவேற்றக் கடமைப்பட்டவன் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு போலீஸ் சேவகனாவது, போர்ச் சேவகனாவது இளைப்பாறக்கூடிய சமயங்கள் உண்டு. போதகனுக்கோ அப்படியில்லை. நாம் நமது ஜீவியத்தின் முக்கியமான நோக்கத்தை நிறைவேற்றுகிறவர்களாய் இருக்க வேண்டும். ஏனெனில் சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் நாம் ஜாக்கிரதையாயிருக்கக் கற்பிக்கப்பட்டிருக்கிறோம். ''எலியாவே, நீ இங்கே என்ன செய்கிறாய்?'' என்று தேவன் கேட்கக் கூடாத ஒரு நிலைமை ஒரு போதகனுக்கும் இல்லை. தேவன் நம்மிடத்தில் அந்தக் கேள்வியைக் கேட்டால், ''கர்த்தாவே, இவ்விடத்திலும் உமக்காக செய்ய எனக்கு காரியம் இருக்கிறது; அதைச் செய்ய நான் பிரயாசப்

படுகிறேன்'' என்று மாறுத்தரம் சொல்லக்கூடியவர்களாய் இருக்க வேண்டும். வில்லை நாணிறக்க வேண்டிய சமயங்கள் உண்டு. இல்லாவிட்டால் அது விசை குறைந்து போம். ஒருபோதும் நாணை அறுக்க வேண்டியதில்லை. அப்படியே போதகனும் இளைப்பாறத்தக்க நேரங்களிலும் தேவனுடைய ஸ்தானுபதிபோல் இருந்து நன்மை செய்ய ஜாக்கிரதையாய் இருத்தல் வேண்டும். அப்படி செய்வது அவனுடைய ஓய்வைக் குலைத்துப்போடாமல் அதைப் பரிசுத்தப்படுத்தும். இலண்டன் பட்டணத்துச் சுமைதாங்கிகளில், ''இளைப்பாறு, ஆனுல் சுணங்காதே'' என்று எழுதியிருக்கும். இந்த வாசகத்தில் கவனிக்கத்தக்க புத்தி அடங்கிருக்கிறது. ஒன்றும் செய்யாமல் பூரண அமைதலாய் இருப்பது சோர்வுற்ற மனதுக்கு நல்ல ஔஷதம். மனது அலுப்புற்றுத் தடுமாறி நிற்கும்போது அதைச் சும்மா இருக்க விடுதல் சோம்பல் அல்ல. தகுந்த சமயம் நித்திரை செய்கிறவனைச் சோம்பேறி என்று சொல்வாருண்டா? சோம்பலான விழிப்பைப் பார்க்கிலும் ஜாக்கிரதையுள்ள நித்திரை மேன்மை. ஆகிலும் ஆயாசமான காலங்களிலும் நாம் நன்மை செய்ய ஆயத்தமாய் இருக்க வேண்டும்; அப்படியானுல் நாம் சபையின் போதகர்களாய் இருப்போம். அப்பொழுது நான் போதகர் என்று வாயினுல் பிரசித்தப்படுத்த அவசியம் இராது.

கிறிஸ்தவப்போதகன் பிரசங்கப் பீடத்திற்கு வெளியே இருக்கும்பொழுது யாவரோடும் இணக்கமுள்ளவனுய் இருக்க வேண்டும். அவன் இவ்வுலகில் ஒரு சந்நியாசியாய் இருக்கும்படி அனுப்பப்பட்டவனல்ல. முற்காலத்திலிருந்த ஸ்தம்ப சந்நியாசிகள்போல் முழுநாளும் ஒரு தூணின்மேல் எல்லாருக்கும் மேலாக நின்று தவம் செய்வது அவன் கடமை அல்ல. கண்ணுக்கு மறைந்து கொள்ளும் இராப்பாடிக்குருவிபோல் ஒரு மரத்தின் உச்சியிலிருந்து நாம் பாடிக்கொண்டிருப்பது போதாது. நாம் மனிதருக்குள் நடமாடி அவர்களோடு சகதாபமுள்ளவர்கள்

என்று காண்பிக்கவேண்டும். உப்பு பானைக்குள் இருக்கும் பொழுது பிரயோஜனமில்லை; அது போஜனத்தில் சேர்க்கப் பட வேண்டும். அப்படியே நமது நன்மாதிரி ஜனங்களுக் குள் பரவிச் சாரம் ஏற வேண்டும். நமது பரம எஜமானுகிய இயேசு இவ்வுலகில் சஞ்சரிக்கையில் கலியாண வீட்டுக்கும் போனுர். ஆயக்காரரோடும் பாவிகளோடும் சாப்பிட்டார். என்ருலும், பரிசுத்தராயிருந்தார். தங்களை மகாபரிசுத்த வான் என்று பாராட்டி மற்ற ஜனங்களினின்று பிரிந்திருந்த பரிசேயர் அவருடைய பரிசுத்தத்திற்கு முன் நிற்கப்படாமற் போனுர்களல்லவா? சில போதகர்களுடைய நடபடிகளைப் பார்க்கும்போது அவ்வாறே நினைக்க வேண்டியதாகிறது.

அன்பும், நற்குணமுள்ளவர் இன்னுர் என்று சிறு பிள்ளைகள் சீக்கிரம் அறிந்து கொள்ளும். ஈக்கள், தேன் குடத்தில் மொய்க்குமாப்போல், பிள்ளைகள் ஒருவனிடத்தில் தாராளமாய் வருவார்களானுல் அவன் இன்குணன் என்று நிதானிக்கலாம். சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனின் ஞானத்தைச் சோதிக்கும்படி வந்திருந்தபொழுது சில இயற்கை பூக்களையும், அது போன்று செய்து வைத்த செயற்கைப் பூக்களையும் கொண்டு வந்தாள். அவைகளில் இயற்கைப் பூக்கள் எவை செயற்கைப் பூக்கள் எவை என்று சொல்லும்படி அரசனைக் கேட்டபொழுது, அவர் ஜன்னலைத் திறக்க தேனீக்கள் வந்து இயற்கைப் பூக்களில் மொய்த்த தாகவும் மற்றவைகளையோ தொட்டுத்தானும் பார்க்க வில்லை என்பதாகவும் ரபிமார் சொல்லியிருக்கிருர்கள். அப் படியே பிள்ளைகளும் தங்கள் சிநேகிதர் இன்னுர் என்று இயல்பாய் அறிந்து கொள்வார்கள். பிள்ளைகளின் நேசன் யார் என்று அறிவது அவசியமான காரியந்தான். நாம் சந்திக்கும் குடும்பத்தின் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் வாலிபர், கன்னிகைகள், சிறு பிள்ளைகள், அனைவருக்கும் ஓர் இனிய வார்த்தை சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட இன்சொல் பெரிய நன்மையைப் பிறப்பிக்கும்.

மனிதர் மத்தியில் வேலை செய்ய வேண்டிய மனிதன் அவர்களை மெய்யாய் நேசிக்கிறவனையும், அவர்களோடு தாராளமும், பழக்கமும் உள்ளவனையுமிருக்க வேண்டும்ா ஜனங்களோடு அன்பில்லாமல் கோபாவேசமாய் இருக்க விரும்புகிறவன் மரித்தோரை எடுத்துப் புதைக்கும் உத்தி யோகத்தில் அமர்ந்து கொண்டால் நலமாயிருக்கும். ஏனெனில், அவன் உயிரோடிருக்கிறவர்களை இருக்கும் வேலையில் சித்தியடையவிடமாட்டான். பெரிய சபையி லுள்ள போதகன் விசாலமான இருதயமுள்ளவனையிருக்க வேண்டும்.

கிறிஸ்தவ போதகன் முகமலர்ச்சி உள்ளவனையுமிருக்க வேண்டும். ரோமப்பட்டணத்தில் சில சந்நியாசிகள் தங்கள் வகுப்பைச் சேர்ந்த சந்நியாசிகளைக் காணும்போது மிகுந்த துக்கக்குரலோடு, சகோதரனே நாம் சாக வேண்டும். என்பான்; அதற்கு மற்றவன், ஆம், சகோதரனே நாம்' சாக வேண்டும் என்று மறுமொழி சொல்வான். ஆம் நாம் சாவது நிச்சயந்தான்; ஆகிலும், அது மட்டும் நாம் சந்தோஷமாய் இருக்கலாமே. போதகர்களின் பயபக்தி யான தோற்றத்தால் ஆழ்ந்த சிந்தை அடைகிறவர்களும் உண்டு. ஒரு கத்தோலிக்க குருவின் வதங்கியொடுங்கிய ரூபத்தைக் கவனித்த ஒருவன் தன் சிநேகிதனை நோக்கி, இந்தக் குரு தமது அன்ருட உபவாசங்களினுலும், இரவின் கண்விழிப்புகளினுலும் எவ்வளவோ மெலிந்து போயிருக் கிருர்; அவர் தமது மாம்சத்தை எவ்வளவாய் ஒடுக்கி யிருக்கிருர்; மெய்யாகவே ரோமன் மார்க்கத்தில் ஒரு விசேஷம் இ நக்கும் என்ருனும். அந்தக் குருவின் மெலிவுக் குக் காரணம் ஒரு மறைவான நோயாய் இருந்தாலும் இருக்கும். அப்படியானுல் அவர் தமது போஜனப் பிரியத்தை அடக்கினதாலல்ல, ஜீரண சக்தியை இழந்து விட்டதே அந்த மெலிவுக்கு காரணம். அல்லாவிடில் அது மனவேதனையால் உண்டாயிருக்கலாம். எதுவாயினும் எலும்புக்கூடு கிருபைப் பீடம் என்பதாக வேதம் நமக்குப்

போதிக்கிறதில்லை. அப்படி போதிக்குமானால், ஜீவனுள்ள மனிதர்களை விநோதப் பொருள்களாக மாத்திரமல்ல, சன்மார்க்க நிறைகோல்களாகவும் எடுத்துக்காட்டலாமே. மகா கொடிய சண்டாளருங்கூட வெட்டுக்கிளியும், காட்டு தேனும் மாத்திரம் சாப்பிடும் முனிவர்கள்போல் மெலிவுற்றவர்களாய்க் காணப்படுகிறதுண்டு. துக்கத்தைப் பக்திக்குரிய குறிப்பு என்று நினைப்பது தவறு. ஆத்துமாக்களை வசப்படுத்தும்படி விரும்புகிற ஒவ்வொருவனுக்கும் இருக்கவேண்டிய முக்கியமான இலட்சணம் முக மலர்ச்சி. ஈக்களைப் பிடிக்க தேன் வேண்டும். அப்படியே தன் முகத்தில் நரக மந்தாரமல்ல, பரம ஒளியின் பிரகாசம் அறிந்திருக்கிறவனே ஆத்துமாக்களை மோட்சத்திற்கு வழி நடத்தக்கூடியவனாய் இருப்பான்.

சம்பாஷணை செய்யும்போது, குறிப்பாக வாலிபப் போதகர்கள் தாங்களே பேசவேண்டுமென்று விரும்பலாகாது. மற்றவர்களுக்குப் புகட்ட போதுமான அறிவும் தாராளமாய் பேசத்தக்க திறமையும் அவர்களுக்கு உண்டு; ஆயினும் கூட்டத்தில் இருக்கிற மற்றச் சிநேகிதர்களுக்கும் இடங்கொடாமலிருப்பது தவறு. குழுவினரின் சந்தோஷத்திற்கும் எழுப்புதலுக்கும் ஏதுவாயிருக்கும் சம்பாஷணையில் மற்றவர்களுக்கும் இடங்கொடுக்கவேண்டும். அதே நேரத்தில் தான் சற்றும் வாய்திறவாமல் மௌன சாதனையாய் இருக்க வேண்டுமென்பதல்ல. ஏனெனில் ஜனங்கள் நாம் செய்யும் பிரசங்கங்களைக்கொண்டு மாத்திரமல்ல, ஆலயத்திற்குப் புறம்பேயுள்ள நமது வாழ்க்கையைக் கொண்டும், நம்மையும் நமது ஊழியத்தையும் மதிப்பிடுவார்கள்.

சம்பாஷணையினால் ஒரு நற்பயன் பிறக்கத்தக்கதாக அதை நடத்துவது போதகனின் கடமையே. ஜனங்களோடு முகமலர்ச்சியும் இணக்கமுமாய் இருத்தல் நல்லதுதான். ஆனால் இவை மட்டும் நன்மையைப்பிறப்பிக்காது. கற்பாறையை உழுது, காற்றை விதைப்பதால் பயன் என்ன? நாம் இருக்கிற இடத்தில் நடக்கும் சம்பாஷணைக்குப்

பெரும்பாலும் நாமே உத்திரவாதிகள் என்று அறிவோமாக. ஏனெனில், ஒரு போதகன் இருக்கிற கூட்டத்தில் அவருக்கு அதிகக் கண்ணியம் இருப்பதால் சம்பாஷணையில் பெரும் பகுதியும் அவருக்கே கிடைக்கும். ஆகவே, தக்க விஷயங்களுக்கு அதைத்திருப்புவது அவர் கடமை. ஆயினும் இக்கடமையையை முரட்டுத் தனமாயும் கட்டாயமாயுமல்ல; சாந்தமும் இதமுமாய்ச் செய்ய வேண்டும். அதற்கான தருணத்தை நோக்கியிருந்து தகுந்த வழியில் சம்பாஷணைத் தொடரைச் செலுத்த வேண்டும். நமது இருதயம் எப்பொழுதும் நமது பரமகடமையின்மேல் கண்ணோக்கமாயும், நமது புத்தி விழிப்பாயும் இருந்தால் இது பிரயாசமல்ல. மேலும் தேவ ஆலோசனைக்காக நாம் ஜெபிக்க மறவாதிருப்போமாக. நாம் சிலரையாகிலும் இரட்சிக்க விரும்பினுல், நாமும் நமது பரம எஜமானைப் போல போஜன வேளையிலும், கிணற்றங்கரையிலும், வழிப்போக்கிலும், கடற்கரையிலும், வீட்டிலும், வெளியிலும் பரம காரியங்களைக் குறித்துப் பேசுவோம். இயேசுவுக்காகப் பரிசுத்த சம்பாஷணை செய்யும் வேளை உத்தம பிரசங்கியின் ஊழியத்திற்கு ஒருவிதத்தில் பயன்படுகிறதாய் இருக்கும். அதற்காகத் தேவாவியின் சகாயத்தைத் தேடுவோமாகில் நமது இருதயத்தின் ஆசை நிறைவேறும்.

ஐசுவரியவான்களுடைய தயவைப் பெற்றுக் கொள்ளும்படிக்கு அவர்களுடைய வீடுகளுக்கும் விருந்து முதலிய உல்லாசக் கூட்டங்களுக்கும் அடிக்கடி போகும் வழக்கம் முற்றும் தகாது. ஏழைகளையும் வியாதியஸ்தரையும், வழி தப்பின ஆடுகளையும் சந்தித்து கர்த்தரிடத்தில் திருப்பவேண்டியவன், அதைவிட்டு ஐசுவரியவான்களிடத்தில் சென்று முகங்காட்டிக் கொண்டு திரிவது எவ்வளவோ தப்பிதம்!

அறிவு நிறைந்த சம்பாஷணையினுல் தர்க்கமுண்டாவது இயல்பு. அப்படித் தர்க்கமுண்டாகும்பொழுது நமது விவகாரங்கள் கூடிய மட்டும் சாந்தமாய் இருக்கவேண்டும். நியாயம் பேசும்பொழுது கோபமும் மூர்க்கமும் ஆகாது.

வழக்கின்பெலன் கோபத்தில் அல்ல, நியாயத்தில் இருக்கிறது. கல்கத்தாவில் ஒரு போதகரும், ஒரு பிராமணரும் தர்க்கமாடும்பொழுது கேட்டுக் கொண்டு நின்ற ஒரு இந்து இவ்வாறு சொன்னர்: இவர்கள் இருவரில் உண்மைக்காக வாதாடுகிறது இன்னர் என்று எனக்குத் தெரியும்? முதலாவது யாருக்குக் கோபம் வந்ததோ அவருடைய விவகாரமே பெலன் அற்றது என்பதே. பெரும்பாலும் நியாயப்பெலனே அறிய இது ஒரு நல்ல குறிப்பு. ஜனங்களோடு பேசுகையில் தர்க்கத்திற்கு இடங்கொடாதபடி பார்க்கவேண்டும். ஒரு காரியத்தைக் குறித்து நாம் அறிந்ததை சொல்லிவிட்டு மற்றவர்களும் தங்கள் அபிப்பிராயங்களேச் சொல்ல இடங்கொடுக்க வேண்டும். கோணலான ஒரு தடி கோணலாய்தான் இருக்கிறது என்பதைக் காட்ட அதன் பக்கத்தில் நேரான ஒரு தடியையும் வைக்கவேண்டும். அப்பொழுது அது தெளிவாக விளங்கும். தஞ்சாவூரில் இருந்த சுவாட்ஸ் ஐயர் திப்பு சுல்தானிடத்தில் அரசாங்க வேலேயாய்ப் போயிருந்தபோது, திப்புசுல்தான் தன்னுடைய மௌலிமார்களேயும் வித்துவான்களேயும் சுவாட்ஸ் ஐயரையும் கோயிலில் வரவழைத்து அவரை நோக்கி: எங்கள் முகம்மது நபி பெரியவரோ, உங்கள் ஈசா நபி பெரியவரோ என்று கேட்டான். அவர் விவேகமுள்ள வேதியராகையால், இன்னர் பெரியவர் என்று பதறித்துடித்துச் சொல்லாமல், இருவருடைய சரித்திரத்தையும் எல்லாரும் ஒத்துக்கொள்ளத்தக்க விதமாய் எடுத்துரைத்து, இன்னர் பெரியவர் என்று பகுத்தறிவுள்ள விவேகிகள் நிதானித்து அறிந்து கொள்ளுங்கள் என்ருர். கேட்ட யாவரும் அவருடைய ஞானத்தையும் விவேகத்தையும் புகழ்ந்து அவருக்கு மரியாதை செய்தார்கள். தர்க்கத்துக்குள் அகப்பட்டுக் கொண்டால் நியாயங்கள் பெலமாயும், வார்த்தைளோ சாந்தமாயுமிருக்க வேண்டும். சாதாரணமாய் நாம் கடினசொற்களேச் சொல்லி ஒருவனுடைய மண்டையில் அடிப்பதால் அல்ல. அன்பினுல் கவர்ந்து கொள்வதால் அவனுக்குப்போதிக்க முடியும்,

மேற்சொல்லிய நற்குணங்களை உடையவனாய் இருப்பதுமன்றி போதகன் தான் விசுவாசிக்கும் பரம சத்தியங்களில் உறுதியாயும், அவைகளை மற்றவர்களுக்கு முன்பாகச் சொல்லி நிலைநிறுத்துவதில் தைரியம் காண்பிக்கிறவனாயுமிருக்கவேண்டும். சமயம் வாய்க்கும்பொழுது, அல்லது தன் பிரயாசத்தினால் ஒரு நற்சவகாசத்தைச் சம்பாதித்துக் கொண்டால் அதைப்பிரயோகிக்க விழிப்பாய் இருக்க வேண்டும். விசுவாசத்தில் பெலமும் சாடைகளில் தாற்பரியமும் இருதயத்தில் அன்பும் பொருந்தியவர்களாய நாம் கர்த்தருக்காகத் தைரியமும் தாராளமுமாய்ப் பேசக் கடவோம். விவேகமாய்ப் பிரயோகிக்கப்படும்போது நமது பேச்சும் நடக்கையும நன்மைக்குப் பலத்த எத்தனமாய் இருக்கும் சமயங்களில் சொல்லப்படுகிற நல்ல வார்த்தை பிரசங்கங்களினால்; உணர்த்தப்படாவர்களையும்கூட் உணர்த்திக் குணப்படுத்துவதற்கு ஏதுவாய் இருக்கும். ஆத்தும இரட்சிப்பைக் குறித்து அவசியம்போல் ஆள் ஆளாய்க் கண்டு பேசுதல் மிகவும் அனுகூலமான பிரயத்தனம்.

நமது பிரசங்கங்களினாலும் சாதாரண சம்பாஷணைகளினாலும் நாம் நம்மைச் சுற்றிலும் இருக்கிறவர்களோடு ஒப்புரவானவர்கள் என்றும், அவர்களுடைய நடக்கை எவ்வளவு தாறுமாறும் அவபக்தியுமாய் இருந்தாலும் அதைக் கண்டித்து விசனமுறுத்த மாட்டாத நல்ல சாதுக்கள் என்றும் சொல்லப்படாதபடி எச்சரிக்கையாய் இருப்போமாக. இப்படிப்பட்டவாகள் தங்கள் சபையாரின் நிலைமையைக் குறித்துப் புலம்பவேண்டியதாய் இருக்கும்பொழுது அவர்களோடு தாராளமாய்கூடி அவர்களோடு விருந்து உண்டு உல்லாசமாய்ப் பொழுது போக்குகிறார்கள். வருங் கோபத்திற்குத் தப்பி ஓடும்படி அவர்களை எச்சரிக்க அவசியமாய் இருக்கும்பொழுது, இவர்கள் அவர்களோடு உட்கார்ந்து நேரங்கழிக்கிறார்கள். நாம் அப்படிப்பட்டவர்களாய இராமல், சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் நல்ல நிலத்தில் மாத்திரமல்ல, கற்பாறையிலும் வழியோரத்திலும் திருவசமாகிய ஜீவவிதையை விதைக்கிறவர்களாய் இருப்போமாக. அப்படிச் செய்தால் கடைசியில் சந்தோஷமான அறுப்பை அறுப்போம். நாம் தண்ணீர் மேல் போகவிடும் ஆகாரம் அநேக நாளுக்குப்பின் கண்டு பிடிக்கப்படும்.

22

போதுமான உபகரணங்கள் இல்லாத போதகர்களுக்கு ஆலோசனை

ஒரு போதகன் தனக்கு அவசியமான புத்தகங்களும் அவைகளைச் சம்பாதிக்கப் பொருளும் இல்லாத சமயத்தில் அவன் செய்யவேண்டியதென்ன? இவ்விதக் குறைச்சல் ஒரு சபையிலும் இருக்கத்தக்கதல்ல. சபையார் தங்கள் போதகருடைய சரீர ஜீவனைப் பாதுகாப்பதற்குத் தேவையான போஜனத்தைச் சம்பாதித்துக்கொடுப்பது அவர்களது கடமையாய் இருப்பதுபோல, அவரது ஆத்துமாவுக்கு வேண்டிய ஞான உணவைக் கொடுக்கத்தக்க நல்லபுத்தகங்களைச் சம்பாதித்துக் கொடுப்பதும் அவர்கள் கடமையாய் இருக்கிறது. முக்கியமான ஞான நூல்கள் அடங்கிய ஒரு நூல் நிலையம் ஒரு கோயிலுக்கு இன்றியமையாத தளவாடங்களில் ஒன்று. ஆகவே பந்தி விசாரணைக் கர்த்தாக்களாகிய டீக்கன்மார் கர்த்தருடைய மேசையும் ஏழைகளின் மேசையும் தங்கள் போதகரின் போஜன மேசையும் குறைவுபடாமல் இருக்கிறதோ என்று விசாரித்து, அந்த மேசைக்கு வேண்டியவைகளைச் சம்பாதிக்க முயற்சிப்பதோடுகூட, தங்கள் போதகரின் வாசிப்பு மேசைமேலும் கண்ணூன்றி அதில் இருக்கவேண்டிய புதுப்புத்தகங்களும் முதல்தரமான சுவடிகளும் போதுமானமட்டும் இருக்கிறதா என்று பார்ப்பார்களாகில் அவர்கள் விவேகிகள். அதற்கென்று அவர்கள்

செலவிடும் பணம் அவர்கள் நம்பிக்கைக்கு மேலான இலாபம் தரும். உரம் போடாவிட்டால் பயிர் பலன் தருமா? விறகில்லாமல் அடுப்பு எரியுமா? தீனியில்லாமல் காளை வண்டிக்கு வருமா? அப்படியே அறிவின் களஞ்சியத்தைத் திறந்து பார்க்கப் பொருள் இல்லாதபோதகர் வாயிலிருந்து அறிவாகாரமான பிரசங்கத்தை ஆசிப்பது நியாயமா? நியாயமல்ல. ஆகையால் சபையார் தங்கள் போதகரின் வயிற்றுக்கு மாத்திரம் அல்ல. அவருடைய மூளைக்கும் அவசியமான உணவைச் சம்பாதிக்கும்படி உதவி செய்ய வேண்டும்.

தகுந்த புத்தகங்களாவது அவைகளை வாங்கிகொள்ளப் பொருளுதவியாவது சபையிலிருந்து கிடையாவிடில் போதகர் பொறுமையோடும் நம்பிக்கையோடும் உழைக்க வேண்டும். தகுந்த உபகரணமில்லாமல் அரிய காரியங்களைச் செய்கிறவர்கள் அதிக கனத்திற்குப் பாத்திரவான்கள். அவர்களுக்கு உதவி கிடைத்திருக்குமாளுல், அவர்கள் பாரம் அதிகக் குறைவாயிருக்கும். கொடிய வருத்தங்களின் மத்தியிலும் கர்த்தருக்காக ஊக்கத்தோடு உழைத்து வந்தவர்களையே ஆண்டவர் பார்த்து, ,,உத்தமமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே, நன்ருய்ச் செய்தாய்'' என்று சொல்வதைக் கேட்கும்போது அவர்கள் சந்தோஷம் அளவிடக்கூடாததாய் இருக்கும்.

கொஞ்சம் புத்தகங்களை மாத்திரம் வாங்கக் கூடியவகள் கைக்கொள்ளவேண்டிய முக்கியமான ஆலோசனை என்னவென்ருல், முதல்தரமான புத்தகங்களை வாங்க வேண்டும். அதிகப்பணம் செலவிடத் திராணி இல்லாவிடில் செலவிடுவதை உபயோகமாய்ச் செலவிடவேண்டும். நமக்கிருக்கிற கொஞ்சம் பணத்தைக்கொண்டு புத்தகரத்தினம் என்று சொல்லத்தக்கதும், சங்கதிகளைச் சுருக்கமும் துல்லியமுமாய்ச் சொல்லுகிறதுமான முதல்தரமான நூல்களைத் தெரிந்து வாங்க வேண்டும்.

கைவசத்திலுள்ள புத்தகங்களை நன்றாய் கற்கவேண்டும். அவைகளைத் திரும்பத் திரும்ப வாசித்து அவற்றின் சாரத்தை மனதில் பதியவைக்க வேண்டும். திரும்பத் திரும்ப ஆலோசிக்க வேண்டும். நமது சிந்தையும் தியானமும் அதனால் தோய்விக்கதக்கதாக நாம் அதில் நீராட வேண்டும். ஒரு நல்ல புத்தகத்தை அநேகந்தரம் வாசித்து அதன் பொருளைப் பகுத்து குறிப்பு எழுத வேண்டும். வெள்ளாடு இந்தச் செடியில் ஒரு வாய், அந்தச் செடியில் ஒரு வாய் கடிக்கிறதுபோல், இந்தப் புத்தகத்தில் கொஞ்சம் அந்தப் புத்தகத்தில் கொஞ்சமாய் இருபது புத்தகங்களை வாசிப்பதைப் பார்க்கிலும், சாரமான ஒரே புத்தகத்தைக் கருத்தாய் வாசித்து யோசிப்பது மனதுக்கு அதிக அறிவும் பெலனும் உற்சாகமும் உண்டாகுமென்பது அனுபவசாலிகளுக்குத் தெரியும். பரந்த வாசிப்பால் சொற்ப அறிவும் அதிக இறுமாப்பும் உண்டாகும். சில மனிதர் அதிகம் வாசிக்கவேண்டும் என்ற ஆசையில், சிந்திக்கும் அப்பியசத்தைப் புறக்கணிக்கிறபடியால், சீக்கிரத்தில் சிந்திக்கும் திறனை இழந்து போகிறார்கள். அவர்கள் புத்தகங்களில் காணும் சங்கதிகளால் தங்கள் மூளையை நிரப்பிக் கொள்ளுகிறபடியால் அவர்களுடைய மனதுக்கு அஜீரணம் உண்டாகிறது.

சிலருக்குப் பெரிய நூல் நிலையங்கள் உண்டு; என்றாலும், அவர்கள் அந்தப் புத்தகங்களை ஒருபோதும் வாசித்து உபகாரம் அடைகிறதில்லை. புத்தகம் இருந்தும் வாசியாதவன் கப்பலோட்டும் வித்தை கல்லாத மாலுமிக்கும், அழகிய செருப்பு தரித்தும் நடக்கமாட்டாத சப்பாணிக்கும் சமானம். அப்படியிருக்க வாசியாதவர்கள் மிகுதியான புத்தகங்களை வாங்கி என்ன பலன்? இதோ ஒரு குருடன், அவன் முகம் பார்க்கக் கண்ணாடி வாங்க வேண்டுமென்று நிற்கிறான்; இதோ, ஒரு செவிடன், அவன் தனக்கு எப்படியும் ஒரு வீணை வாங்கித் தீரவேண்டும் என்று அடம் பிடிக்கிறான். ஒருவனுக்குத் தலையில் ஒரு ரோமமும் இல்லை. அவன்

சிப்பு வேண்டுமென்று ஆசிக்கிறான். மேற்கூறியவர்களுக்கு அச்சாமான்கள் பயன்படாததுபோல், புத்தகம் வாசியாதவர்களுக்கும் அவைகளால் யாதொரு பயனும் உண்டாக மாட்டாது. நாம் வாசிக்கும் புத்தகங்களின் தொகைக்குத் தக்கதாய் அல்ல. அவைகளிலிருந்து நாம் தெரிந்து மனதில் பதிக்கும் காரியங்களுக்குத் தக்கதாக நமது அறிவு வளரும். வாசிப்புக்குதக்க யோசிப்பும் உடைய ஒருவனுக்குச் சில புத்தகங்கள் மட்டும் இருந்தாலும் அதிக லாபமுண்டு.

அநேகப் புத்தகங்களை வாசிக்க வேண்டுமென்று ஆசிக்கிறவன் விவேகமாய் இரவல் வாங்கி வாசிக்கலாம். ஒருவனுக்குப் புத்தகங்களை வாங்கத் திராணியில்லாவிட்டால் புத்தகங்களையுடைய சிநேகிதரிடத்தில் வாங்கிக் வாசித்துவிட்டு சீக்கிரம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். மரம் வெட்ட இரவல் வாங்கின கோடாரி ஆற்றில் விழுந்த போது, ஆண்டவனே, அது இரவல் வாங்கியதல்லவோ என்று அங்கலாய்த்தவனுடைய உணர்வு நமக்கிருந்தால் தாராளமாய் இரவல் வாங்கவும், அதனால் ஏராளமான புத்தகங்களை வாசிக்கவும் ஏது உண்டாகும், ''துன்மார்க்கன் இரவல் வாங்கியும் திரும்ப செலுத்தாதே போகிறான்''. அப்படி வாங்காதேயுங்கள்.

புத்தகப் பஞ்சம் தேசத்தில் அகோரமாகிப் போனாலும் நம் எல்லாரிடத்திலும் இருக்கிற ஒரு புத்தகம் உண்டு. அந்தப் புத்தகம் வேதப் புத்தகமே. வேதப் புத்தகத்தையுடைய ஒரு போதகன் கவண் கல்லைக் கையில் பிடித்த தாவீதைப்போல் ஆயுதம் அணிந்தவனாய் இருக்கிறான். வேதாகமம் அவனிடத்தில் இருக்குமட்டும் அவனுக்கு இறைக்கக் கிணறில்லை என்று ஒருவனும் சொல்லத் துணியான். வேத புத்தகம் நமக்கு ஒரு பெரிய நூல்நிலையம் போல் இருக்கிறது. தையற்காரி தன் ஊசியிலும், வியாபாரி தன் கணக்கிலும், மாலுமி தன் கப்பலிலும் பழகினவனாய் இருப்பதுபோல நாம் நமது வேத புத்தகத்தை

நன்ருய் அறிந்திருக்க வேண்டும். நாம் அதன் பொதுவான நடையையும், ஒவ்வொரு புத்தகத்தின் பொருளேயும் அதிலடங்கிய சரித்திரங்களேயும், உபதேசங்களேயும் போதனைகளேயும் நன்ருய் அறியவேண்டும்.

ஒருவன் எந்தக் காரியத்தில் குறையுள்ளனுய் இருந்தாலும் அவன் வேத புத்தகத்திலுள்ள வாக்கியங்களே மாத்திரமல்ல, அதன் சாரத்தையும் உட்கொண்டவனுய் இருந்தால் அவன் அற்பமாய்ப் பாவிக்கப்படான். ஒற்றைப் புத்தகத்தானேக்குறித்து எச்சரிக்கையாயிரு என்று ஒரு பழமொழி உண்டு. அவனே எதிர்த்து மடக்குவது எளிதல்ல, வேதப் புத்தகத்தைத் தன் இருதயத்திலும் நாவிலும் உடைய மனிதன் இஸ்ரவேலின் மகா வீரனே; அவனேடு எதிர்த்து நிற்க முடியாது. எதிரி மிகுந்த கல்லமானுயிருந்தாலும் வேத அறிவினுல் நாம் அவனே வெல்லலாம். வேதப்புத்தகத்திற்கு நிகரான பட்டயமில்லே. அருள் பெற்ற பிரசங்கியாகிய வில்லியம் ரொமேன் என்பவர் தமது ஜீவியத்தின் பிற்பாகத்தில் மற்றப்புத்தகங்களேயெல்லாம் தூரவைத்துவிட்டு வேதபுத்தகத்தை மாத்திரமே வாசித்தார். அவர் மகா கல்விமான் என்ருலும் வேதபுத்தகமே அவருடைய ஆற்றல்களேயெல்லாம் ஆட்கொண்டு அவரைப் பலத்தவனுக்கிற்று. வேறு புத்தகம் வாங்கத்திராணி இல்லாமையால் வேத புத்தகத்தை நமது ஏகச்சாவடியாக்கிக் கொள்ள நேர்ந்தாலும் நாம் மனந்தளரக்கூடாது. ஏனெனில் திராணியுள்ள பெரியோர்களும் வேதத்தையே தங்களுக்கு பிரதான புத்தகமாகத் தெரிந்துள்ளார்கள். ஏனெனில் வேத வசனம் தமக்குத் தேனேப் பார்க்கிலும் தித்திப்பாயும், நம் முன்னேர்களேப் பார்க்கிலும் அதிக ஞானிகளாக்கக் கூடியதாயும் இருக்கிறது.

நாம் ஓயாமல் வேதபுத்தகத்தைப் படித்துக் கொண்டிருப்போமாகில், பரிசுத்த போதனைகளே எடுத்து பகருவது நமக்கு எளிதாயிருக்கும். போதனைகளுக்கு மாத்திரமல்ல,

திருட்டாந்தங்களுக்கும் நமக்குக் குறைவு வராது. ஏனெனில், வேதபுத்தகமே அதன் விஸ்தரிப்பாயுமிருக்கிறது. நமக்குச் சங்கதியோ, ஒப்பனையோ, உவமையோ எது வேண்டுமோ அதெல்லாம் வேதபுத்தகத்தில் கண்டு கொள்ளலாம். வேதசத்தியமானது வேதாகமம் என்னும் நூல்நிலையத்திலுள்ள ஆபரணங்களைக் கொண்டு அலங்கரிக்கும்பொழுதுதான் அதிகச் சிறப்பாய் விளங்குகிறது. ஒரு வேளை நாம் ஒரு சிற்றூரில் வாசம் பண்ணவும்; அங்கே நம்மோடு சம்பாஷிக்க நமக்கு மேற்பட்ட அறிவாளிகளும் வாசிக்கத்தக்க புத்தகங்களும் இல்லாதிருக்கவும் நேரிடும். அப்பொழுது கர்த்தருடைய பிரமாணத்தையே இரவும் பகலும் நாம் வாசித்து தியானித்து வரவேண்டும். அப்படிச் செய்வோமாகில் நாம் நீர்க்கால்கள் ஓரமாய் நடப்பட்ட விருட்சம் போலிருப்போம். ஆகையால் வேதபுத்தகத்தை நமது பக்க துணைவனாகவும் எப்பொழுதும் நமது தோழனாகவும் வைத்துக்கொள்வோமாக, அப்படிச் செய்தால் நமக்கு மற்ற புத்தகங்கள் இல்லாத குறையினால் சலிப்புண்டாகாது.

புத்தகம் இல்லாத குறையை அதிகமான தியானத்தினால் நிறைவாக்கலாம். தியானம் ஆத்துமாவின் தத்துவங்களை வெளியாக்கிப் பெலப்படுத்துகிறது. வெறும் வாசிப்பினால் மனதுக்கு அதிக பிரயோஜனம் வரமாட்டாது. புத்தகங்கள் சில நக்குச் சொரூபங்கள் போலிருக்கிறது. கிறிஸ்துவை நினைப்பூட்டுவதற்காக கத்தோலிக்கர் சொரூபங்களை வைத்திருந்தும் அவைகள் அவரை நினையாதபடி செய்திருக்கிறதுபோல், மனிதனுடைய மூளையில் யோசனைப் பிறப்பிக்கிறதற்காகச் செய்யப்பட்டிருக்கிற புத்தகங்களும் யோசனைக்குத் தடையாய் முடிகின்றன. தியானம் கல்விக்கு முதுகெலும்பாய் இருக்கிறது. பிரசங்கிகளில் யோசிப்போரின் தொகை அதிகப்படுமானால் அது எவ்வளவோ பெரிய ஆசீர்வாதமாய் இருக்கும். மனிதனுடைய கற்பனைகளான வீண் காரியங்களைக் குறித்தல்ல, தேவனால் வெளிப்படுத்தப்

பட்டச[illegible]த்தியங்களை குறித்து தியானிப்பவர்களின் தொகை அதிகப்பட வேண்டும். சிலர் தங்களை அளவுகடந்த யோக்னைக்காரர் என்று பெருமை பாராட்டுவார்கள்; ஆகிலும் அவர்களுடைய பிரசங்கத்தைக் கேட்போரின் தொகை வர வரக் குறையும். அப்பொழுது அவர்கள் நாங்கள் அறிவாளிகளுக்குப் பேசத்தக்கவர்கள் சாதாரண ஜனங்கள் எங்கள் யோசனையை அறிந்து கொள்ள மாட்டார்கள் என்று சொல்வார்கள், இது வீண் பெருமை. இரட்சண்ய விசேஷங்களைக் குறித்த வாஞ்சையே நாம் அப்பியாசிக்க வேண்டிய காரியம். நமது சபையார் நமக்கு ஒரு நூல் நிலையத்தைச் சம்பாதித்துக் கொடுக்கக் கூடாதபடிக்குச் சொற்பப்பேராய் இருப்பார்களாகில் அவர்கள் நிமித்தம் நமக்கு அதிக நேரம் செலவாகமாட்டாது. அப்போது தனித்தியானத்திற்கு நமக்கு அதிகநேரம் கிடைக்கும். நாம் அந்த ஓய்வு நேரங்களைச் சரியானபடி கையாடி வருவோமாகில் அநேக புத்தகங்களும் சொற்ப சமயமும் உள்ள நமது சகோதர்களைப் பார்க்கிலும் ஒரு வேளை அதிக திராணியுள்ளவர்கள் ஆகலாம்.

புத்தகம் இல்லாவிட்டாலும் நாம் நமது கண்களைச் சரியானபடி உபயோகிப்போமாகில் மிகுதியான அறிவைச் சம்பாதிக்கக்கூடும். தற்கால உலகசரித்திரம், நம் கண் முன்னால் நடக்கிற சங்கதிகள் முதலியவைகளினின்றுஅநேக காரியங்களைக்கற்றுக்கொள்ளலாம். புத்தகம் இல்லையானால் கண்ணுக்கு வருத்தம் இல்லை; ஆகையால் நாம் போகுமிடமெல்லாம் நமது கண்ணைத்திறந்து முக்கியமான காரியங்களைப் பார்க்க வேண்டும். நம்மைச் சுற்றிலும் இருக்கிற பிரபஞ்சப்பொருள்கள் நமக்கு அநேக விஷயங்களைக் கற்றுத் தரும். ஒவ்வொரு புஷ்பமும் நமக்கு ஒரு சத்தியத்தைக் கற்றுக் கொடுக்கக்கூடும். லீலிப் புஷ்பத்தைக் கவனித்து ரோஜாச் செடியை உற்றுப் பாருங்கள். எறும்புகள் மாத்திரமல்ல, ஜீவனுள்ள ஒவ்வொரு பிராணியும் உனக்குக் கற்றுக் கொடுப்பேன் என்று அழைக்கிறது. நம்மைச் சுற்றிலும்

வீசுகிற காற்று நம்மைக் கூப்பிடுகிறது. அதோடு வருகிற ஒவ்வொரு தூசிமும் நம்மிடத்தில் பேசுகிறது. பிரசங்கங்கள் புல் இதழினின்று மினுங்கி, உதிர்ந்துவிழும் ஒவ்வொரு இலையினின்றும் பறந்து வருகின்றன. மரச்சோலை ஒரு நூல் நிலையமும், வயல் நிலம் ஓர் அறிவியல் சுவடியும், பெரியமலை ஒரு சரித்திரப் புத்தகமும், அதிலிருந்து உற்பத்தியாகிற நீர்கால்கள் ஒரு செய்யுளுமாய் இருக்கிறது. கண் திறக்கப்பட்ட மனிதன் போகுமிடமெல்லாம் மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் ஞானத்தைக் கற்றுக் கொள்வான். புத்தகங்கள் இவைகளோடு ஒப்பிடப் பாத்திரமானவைகளல்ல.

மேலும் நமது நூல்நிலையம் மிகவும் சிறியதாய் இருந்தாலும் நாம் நம்மைப் படிக்கலாம். மனித இருதயம் மிகவும் ஆச்சரியமான புத்தகம். அதை நன்றாய்க் கற்றவர்கள் வெகு சொற்பம். தன்னை நன்றாய் அறிந்து கொண்டேன் என்று சொல்லுகிறவன் தன்னை வஞ்சிக்கிறான், இது மிகவும் கடினமான புத்தகம். ஒவ்வொருவரும் தன் தன் இருதயத்தின் திருக்குகளையும் அதன் பற்பல உணர்வுகளையும் கவனித்துப் பார்க்கவேண்டும். நமது இருதயத்தின் சீர்கேட்டையும், அதில் தேவகிருபை செய்கிற கிரியையும், நம்மில் இருக்கிற பாவத்திற்கிசைவான தன்மையையும், பரிசுத்தமாய் நடக்க நமக்கு உண்டாயிருக்கிற திராணியையும் கண்டுபிடிக்க வேண்டும். நமது இருதயம் சில வேளை பிசாசுக்குச் சொந்தமாயும், சில வேளைகளிலோ தேவனோடு ஐக்கியப்பட்டதாயுமிருக்கிறது. தேவனால் நடத்தப்படும் பொழுது நாம் எவ்வளவோ ஞானமும் விவேகமுமாய் நடந்து கொள்ளுகிறோம். நம் விருப்பம்போல் விடப்படும் பொழுதோ எவ்வளவோ தாறுமாறாய் நடக்கிறோம். மற்ற வர்களுடைய ஆத்துமாவின் காவலாளிகளாய் இருக்கிற நமக்கு நமது சொந்த இருதயங்களின் நடவடிக்கையைப் பற்றிய அறிவு மிக்க அவசியமே. இவ்விஷயத்தில் நமக்கு உண்டாயிருக்கிற அனுபவத்தைக் கொண்டு நாம் மற்றவர்

களுடைய ஆத்தும நோய்களுக்கு கொடுக்கும் ஔஷதத்தின் பலனைச் சோதிக்க வேண்டும். நமது குற்றங்குறைகளைக் கர்த்தருக்கு முன்பாக கொண்டுவருவோமாகில், அவை நமக்கு நல்ல போதனையைக் கற்றுத் தரும். நம்மிடத்தில் ஒரு பாவமும் இல்லையானால், நாம் பாவிகளான ஆண்கள் பெண்களுக்கு அனுதாபம் காண்பிக்கக்கூடாதவர்களாக இருப்போம். கர்த்தர் நம்முடைய பாவத்தை மன்னித்து நம்முடைய ஆத்துமாவைச் சீர் படுத்தி இருக்கிறதை நாம் நன்றாய் அறிந்திருப்போமானால், அவன் மற்றவர்களின் ஆத்துமாக்களுக்குச் செய்வதையும் அறிவோம்.

மேலும் நாம் மனிதரை உற்றாராய வேண்டும். புத்தக ஆராய்ச்சியினால் மாத்திரம் அல்ல, மனித சுபாவங்களை ஆராயும் ஆராய்ச்சியினாலும் நாம் மிகுதியாய்க் கற்றுக் கொள்ளலாம். வைத்தியத்தை கற்கும்படி ஒருவன் வைத்தியசாலைக்குப் போகிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். வைத்திய புத்தகங்கள் வாங்க அவனுக்குக் காசு இல்லை; அப்படிப்பட்டவன் படித்துக்கொள்வது கூடாத காரியம். ஆகிலும் அவன் அந்த வைத்திய சாலையிலிருந்து பற்பல நோய்களுக்குக் கொடுக்கப்படுகிற மருந்துகளையும், காயங்களைக் கட்டும் விதங்களையும், கை, கால் முதலிய உறுப்புகளைக் கட்டி ஆற்றும் முறைகளையும் நாளுக்கு நாள் கவனித்து மனதில் பதிப்பானாகில், அவன் சீக்கிரத்துக்குள்ளாகச் திறமைசாலி ஆவான் என்பது நிச்சயமே. அப்படியே ஒரு போதகனுக்கு இருக்கவேண்டிய அறிவில் ஒரு பெரும் பாகம் மற்ற மனிதர்களின் குணக்குறிகளை ஆராய்ந்து பார்ப்பதால் வரவேண்டியது. ஞானமுள்ள எல்லாப் போதகன்மாரும் ஆவிக்குரிய பிரகாரம் மருத்துவ மனைகளில் திரிந்து, ஆத்தும நோயாளிகளையும், மாய்மாலக்காரரையும் பின்வாங்கிப் போகிறவர்களையும், சந்தேகித்திருப்போரையும் துணிக்கரக்காரரையும் கேட்டுக் கவனித்துப் பார்க்கிறவர்கள்தான். தெய்வீகக்காரியங்களில் அனுபவ சித்தியும், மற்ற மனிதர்களின் இருதய நடவடிக்

கைகளைக் குறித்த அறிவும் உடைய போதகன், புத்தக அறிவு மாத்திரம் உடையவேருெருவனைவிட அதிக பிரயோஜனமான ஊழியக்காரனுய் இருப்பான். மனிதர்களுடைய தன்மைகளையும், நடவடிக்கைகளையும் அறியாதவனுயும், தான்தலையீட்டு நடத்தவேண்டியசங்கதிகளை கனவிலும்கண்டிராதவனுயும், புத்தகக் கல்வி மாத்திரம் போதுமென்கிற தப்பெண்ணங் கொண்டவனுயுமிருக்கிற ஒருவன் இவ்வூழியத்திற்கு உதவான். அதனுல்தான் அப்போஸ்தலன், ''அவன் புதிய கிறிஸ்தவனுய் இருக்கக்கூடாது'' என்று சொல்லுகிருர். ஒருவன் நேர்ந்த கல்விமானுயும் பல மொழிகளையும், கற்ற மொழிவித்துவானுயும், கணித சாஸ்திரியாயும், வேதசாஸ்திர நிபுணனுயும் இருந்தாலும், புதிய மாணவன் என்ற பேருக்கு மாத்திரம் தகுதியானவனுய் இருக்கலாம். ஆகையால் மனிதருடைய இயல்புகளை நாம் பழக்கத்தினுல் அறிய வேண்டும். இந்த அறிவு ஒருவனுக்கு அதிகம் இருக்குமானுல் புத்தக குறைவைக் குறித்து மன வருத்தமடையத் தேவையில்லை.

நாம் சில பெரியவர்களோடு ஐந்து நிமிடம் நின்ருலும் அவ்வளவு நேரத்துக்குள்ளாக ஒரு விசேஷித்த புத்திமதி அவர்கள் வாயிலிருந்து புறப்படும். இப்படிப்பட்ட பெரியவரிடத்திலிருந்து மாத்திரமல்ல, சாதாரண மனிதரிடத்திலிருந்தும் முக்கியமானவைகளை நாம் படிக்கலாம். விவேகமுள்ளவன் ஒரு ஞானியிடத்திலிருந்து மாத்திரமல்ல, மூடனிடத்திலிருந்தும் படிக்கலாம். மூடன் நாம் வாசிக்கிறதற்கு மிகவும் ஏற்ற புத்தகம். இந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு ஏடும் திறந்திருக்கிறபடியால் அதை எளிதில் வாசிக்கலாம். அதை வாசித்தபின் நாம் பத்திரப்படுத்த விஷயம் ஒன்றும் கிடையாமற்போனுலும், நாமும் நமது மூடத்தனத்தைப் பிரசித்தப்படுத்ததாபடி எச்சரிக்கையாய் இருக்க உணர்த்தப்படுவோம்.

அனுபவத்தில் முதிர்ந்தவர்களான பக்தர்களிடத்திலிருந்தும் படிக்கலாம். அவர்கள் எவ்வளவோ ஆழ்ந்த

யோசனைகளைச் சொல்லக்கூடியவர்களாயிருக்கிறார்கள். கர்த்தருடைய ஜனங்களில் ஏழைகளாயிருக்கிறவர்கள் தங்கள் வாழ்க்கையில் அவர் தங்களுக்காக நடப்பித்த அதிசயத் திருவுளச் செயல்களைக் குறித்து எவ்வளவோ எழுப்புதலான சரிதை சொல்லக்கூடியவர்களாய் இருக்கிறார்கள். அவர்களின் கஷ்டங்களில் அவர்களைத் தாங்கின அவருடைய கிருபையைக் குறித்தும், உடன்படிக்கையைக் காக்கும் அவருடைய உண்மையைக் குறித்தும் அவர்கள் எவ்வளவோ மேன்மை பாராட்டுகிறதை தாம் கவனிக்கலாம். அவர்களோடு செய்யும் சம்பாஷணையினால் தேவவாக்குத்தங்கள் அடிக்கடி நமது கண்ணுக்குத் தோன்றாவிட்டாலும் அவைகள் வேதத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. உபத்திரவமாகிய நெருப்பின்முன் பிடித்தாலன்றி அந்த எழுத்துக்களை வாசிக்க முடியாது. துன்பப்பட்ட தொண்டர்கள் போதகர்களுக்குப் பெரிய ஆசிரியர்களாய் இருக்கிறார்கள்.

ஆத்தும பிணியாளிடத்திலிருந்தும் நாம் படிக்கக்கூடிய காரியங்கள் அநேகம். நாம்அவர்களை இரட்சகரிடத்திற்குக் கொண்டுவரப் பிரயாசப்படும்போது நமது அறிவீனம் நமக்குப் புலப்படும். இரட்சிப்பைத் தேடுகிறவர்களாய் இருந்தும், அவிசுவாசத்துக்கு உட்பட்டு இருக்கிறவர்கள் சொல்லும் விஷயங்கள் எத்தனை ஏராளமாயும், அவர்களுக்கு எதிர் நியாயம் சொல்லுதல் எத்தனை பிரயாசமாயும் இருக்கிறது. தேவகிருபையால் நாம் அவர்களை ஒளிக்குள் கொண்டுவருகிறோம். ஆகிலும், அதற்குமுன் நாம் நமது பெலவீனத்தை உணர்ந்து அவருடைய பெலத்தில் சார வேண்டியதாய் இருக்கிறது. ஆத்தும இரட்சிப்பைத் தேடும் மெய்விசாரிகளின் அவிசுவாச முரட்டாட்டத்தையும், அத்தருணங்களில் வேத உபதேசங்களைச் குறித்து நினைக்கிற நினைவுகளையும் நாம் கவனித்துப் பார்த்தால் அநேக காரியங்களை அறிந்துகொள்ளலாம். போதக ஊழியத்துக்கு ஆயத்தப்படுவோர், அப்பேர்பட்ட ஜனங்களைக் கண்டு பேசுவதினால் உண்டாகும் அனுபவம் மிகவும் முக்கியமானதாயிருக்கும்.

கடைசியாக மரண அவஸ்தைப்படுகிறவர்களை நாம் அதிகமாய்க் கவனிக்கவேண்டும். அவர்கள் அலங்கரிக்கப் பட்ட புத்தகங்கள் போலிருக்கிறார்கள். நமது கிறிஸ்தவத் தின் இனிய இராகங்களையும் அதன் அந்தரங்கங்களையும் இங்கே நாம் காணலாம். மரண நதியின் அலைகள் எத்தனையோ விலையுயர்ந்த இரத்தினங்களை அடித்துக் கரையில் சேர்க்கின்றன. அதன் கரைகளில் எத்தனையோ அழகிய பூஞ்செடிகள் வளருகின்றன. இன்பலோகத்தின் நீரூற்றுகளிலிருந்து எழும்பும் திவலைகள் பனித்துளிபோல் இங்கே பெய்கின்றன. மெய்க் கிறிஸ்தவர்களான ஆண் கள், பெண்கள் இம்மையைப் புறப்படும் தருணத்தில் தேவ ஆவியினால் ஏவப்பட்டவர்கள்போல் பரம மகிமைபொருந் திய அதிசயமான வார்த்தைகளைப் பேசக் கேட்கிறோம். அந்த வார்த்தைகளை அவர்கள் இப்பூலோகத்திலுள்ள ஒரு வரிடத்திலிருந்தும் கேட்டுக் கற்றுக் கொண்டதல்ல. புதிய எருசலேமின் நுழை வாயிலிலிருக்கும்பொழுது அவர்கள் கேட்டத் தொனிகளாயிருக்கும். வேதனையிலும், பெல வீனத்திலும் அவர்கள் இருந்து உழலும்போது, தேவனே அவ்வார்த்தைகளை அவர்கள் காதுகளில் மெல்லோசை யாய்ப் பேசுகிறார். அப்பொழுது ஆவியானவர் அவர்களுக்கு வெளிப்படுத்தினதில் கொஞ்சம் அவர்கள் நமக்குச் சொல்லு கிறார்கள். நமது புத்தகங்கள் எல்லாம் பறிபோனாலும், எலியாவைப்போன்றவர்கள் தங்கள் அக்கினி இரதத்தில் ஏறிப்போகும் காட்சியைக் காணும் சிலாக்கியம் நமக்குக் கிடைக்குமானால் அதுவே போதும்.

23

ஆண்டவராகிய இயேசுவும் அவருடைய அப்போஸ்தலரும் பிரசங்கிகளுக்கு வைத்திருக்கிற முன்மாதிரி

உலக இரட்சகராகிய இயேசுநாதர் பிரசங்கத் தொழிலைத் தமது சபையில் நியமித்து, அத்தொழிலை நடப்பிக்க ஆள்களையும் திட்டம்செய்து, தாமே அவ்வூழியஞ் செய்யாமல் விட்டிருக்கலாமே. சர்வ ஞானமும் அளவில்லாத தயையும் நிறைந்த அவருடைய திருவளத்துக்கோ அப்படிச் செய்வது தகுதியாய்க் காணப்படவில்லை. ''நான் பிரசங்கிக்க வந்தேன்'' என்று அவர் தம்மைக்குறித்துச் சொன்னபடி, அவர்தாமே பிரசங்க வேலையை நடத்தினதுமன்றி உலக முடிவுவரை தமது தாசர்களாகிய பிரசங்கிமார் அனைவருக்கும் உத்தம முன்மாதிரியான மகாபிரசங்கியாயும் விளங்கினர்.

சில விஷயங்களில் அவரைப்பின்பற்றுவது அப்போஸ்தலராலுங்கூட முடியாமற்போயிற்று என்பது பிரத்தியட்சமாய் இருக்கிறது. இயேசு கிறிஸ்துவில் விளங்கிய தெய்வீக மகத்துவங்களை நாம் அதிசயித்துப் போற்றலாமேயன்றி, அவற்றைப் பின்பற்ற முடியாதே. உதாரணமாக அவர் அதிகாரத்தோடே போதித்தார்; மனிதரை மீட்கும்

படியாக அவர் அடிமையின் ரூபமெடுத்தபோதிலும் அதிகாரமுடையவராயிருந்தார். அவருடைய அதிகாரம் அவருக்கே இயல்பாகவே இருந்தது. அப்போஸ்தலருக்கும் மற்ற தேவஊழியக்காரருக்கும் கொடுக்கப்பட்டதேயன்றி அது அவர்களுடையதல்ல. அப்போஸ்தலர்கள் தேவஆவியால் ஏவப்பட்டு போதித்த போதெல்லாம், இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே மாத்திரம் போதித்தார்கள். மேலும் இயேசுநாதர் அற்புதம் செய்தார். இந்த வல்லமையில் கொஞ்சம் அப்போஸ்தலர்களுக்கும் அவர்கள் காலத்தில் வாழ்ந்த வேறு சிலருக்கும் கொடுக்கப்பட்டதேயன்றி, பிற்கால தேவ தாசர்களுக்கு அது கொடுக்கப்படவில்லை. கிறிஸ்துநாதர் செய்த அற்புதங்களைச் சாட்சியாக எடுத்துக் கூறி, அவருடைய சமயநெறியின் மெய்மையை விளக்குவது அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட வேலையாயிருக்கிறது.

இப்படியாக கிறிஸ்துநாதரின் தெய்வீக சுபாவ சம்பந்தமாய் நாமே அவரைப் பின்பற்றுதல் கூடாத காரியமாயினும், நாம் பின்பற்றக் கூடியதும் பின்பற்ற வேண்டியதுமான வேறே காரியங்கள் அவரிடத்தில் விளங்கின. அவைகளில் முக்கியமான ஒன்று பிரசங்க விஷயமே. இதில் அவர் நமக்கு விசேஷித்த முன்மாதிரியிருக்கிறார். எப்படியென்றால் அவருடைய பிரசங்கங்கள் போதனை நிறைந்தவைகளாய் இருந்தன. ''அவர் ஜனங்களுக்குப்போதகம் பண்ணினார்'' என்று சொல்லியிருக்கிறது. அவர் தேவனிடத்திலிருந்து வந்த போதகராயிருந்தார். தமது பிதாவின் காரியமே அவருடைய சதா நோக்க கரிசனையாயிருந்தது. தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக்கொடுக்கிற வீட்டு எஜமானைக் குறித்து அவர் சொன்ன உவமைக்கு அவரே திருஷ்டாந்தம். அவர் பழைய சத்தியங்களைப் புதிய ரூபமாயும், புதிய சத்தியங்களைப் பழைய நியமங்களால் உவமானித்தும், விளக்கிப் போதித்தார். இதிலும் ஒவ்வொரு பிரசங்கியும் நமது பரம

போதகரைப் பின்பற்றவேண்டும். முதலாவது, அவன் போதிக்கும் பொருள் அவன் மனதிலும் இருதயத்திலும் பதிந்ததாயிருக்க வேண்டும். ஒருவன் தான் அறியாததை மற்றவர்களுக்குப் படிப்பிப்பது எப்படி? இரண்டாவது மற்றவர்களுக்கு அறிவைப் புகட்டுவதில் அவன் ஜாக்கிரதையும் ஊக்கமாயும் இருக்கவேண்டும்.

கிறிஸ்து நாதர் வேதவாக்கியங்களைக் கொண்டு போதகம் பண்ணினர். அடிக்கடி பழைய ஏற்பாட்டிலுள்ள வாக்கியங்களை மேற்கோளாக எடுத்துக்கூறி, அவைகளைத் தேவவசனமாக ஒப்புக்கொண்டு வியாக்கியானம் சொல்லி விளக்குவதும் அல்லாமல், ஓய்வுநாளில் ஜெப ஆலயத்திற்குப் போய் நியாயப் பிரமாணத்தையும் தீர்க்கதரிசிகளின் புத்தகங்களையும் சபையாருக்கு வாசித்துப் பிரசங்கிப்பதும் அவருக்கு வழக்கமாய் இருந்ததென்று லூக்கா 4:16-240 இல் அறியலாம்.

தவிரவும், நமது இரட்சகரின் பிரசங்கங்கள் காலத்திற்கும் காரியத்திற்கும் ஏற்றதாயிருந்தது. இரட்சகர் இவ்வுலகில் சஞ்சரித்தக் காலத்தில் யூத ஜாதியர் சமய விஷயத்தில் அநேக வகுப்பாக பிரிந்திருந்தார்கள். சுவிசேஷங்களைக் கருத்தாய் வாசித்துப் பார்க்கிற யாவரும் அவருடைய போதனைகள் அக்காலத்தோர் நம்பியிருந்த தப்பறைகளைக் கண்டித்து சத்தியத்தை விளக்கத்தக்கவையாய் இருந்தன என்று கண்டு கொள்வார்கள். உதாரணமாக: மத்தேயு 5-7; 12:1-8; 15:22-20; 21:23-45; 22:23-33; 23:2-39; 24, 25, அதி.; லூக்கா 14:1-15; 19:2-10 யோவான் 3:1-21; 4:7-42; 5:19-47; 6:25-65; :13-4- காண்க.

இயேசுநாதர் பல இடங்களிலும் பல விஷயங்கள் பேரிலும் பிரசங்கித்தார்; அவருடைய பிரசங்கங்கள் அனைத்திலும் நிறைந்து ததும்பிய மாட்சிமையான பொருளும்,

அவைகளால் கருதப்பட்ட சிறந்த நோக்கமும் ஒன்றேயா யினும், அவைகளால் விவரிக்கப்பட்ட காரியங்கள் அநேக மாய் இருந்தன. மனுக்குலத்தின் நன்மைக்கும் மேன்மைக் கும் ஏற்ற காரியங்களிலும், தேவ காரியங்களிலும் அந்த மகா பிரசங்கி வெளிப்படையாகவோ குறிப்பாகவோ போதிக்காமல் விட்டது ஒன்றும் இல்லை, இதிலும் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் அடங்கியிருக்கிறது. அது ஏதெனில் நாம் எப்பொழுதும் திவ்விய சத்தியங்களை போதித்தாலும், அவைகளை ஒரேவிதமாக ஒரே பொருளில் திரும்பத்திரும்பச் சொல்லி ஜனங்களைச் சலிப்படைந்து போகப்பண்ணுதல் கூடாது என்பதே. நாம் காண்கிற இந்த உலகம் மகா விசாலமும் பற்பல விதமான பொருள்கள் அமைந்ததுமாய் இருக்கிறது. திவ்விய சத்தியமாகிய உலகமோ இதைப்பார்க்கிலும் அதிக விசாலமும், பல்வேறு வகைபட்டதுமாய் இருக்கிறதென்று அறிய வேண்டும்.

கிறிஸ்துவின் பிரசங்கம் உவமானங்கள் அடங்கியதா யிருந்தது. தெய்வீக காரியங்களையோ லௌகீகக் காரியங் களையோ உபதேசித்த பிரசங்க வல்லுநர்களில் ஒருவரும் கிறிஸ்துநாதரைப்போல் உவமானங்களும் ஒப்பனைகளும் சொல்லித் தங்கள் பொருளை விளக்கி வற்புறுத்தினதில்லை. உபதேசங்களைச் சிந்தனைவடிவாய் வெளியிடும் வழக்கத்தை அவர் முற்றும் தவிர்த்தார். பெரிய பெரிய சத்தியங்களை யும் போதனையும் வெறும் எலும்புகூடுபோலல்ல, மாம்சமும் இரத்தமும் ஜீவனுள்ள தேகம்போல் தெளிவாய்த் தோன்றத்தக்க விதமாய்ப் பிரசங்கித்ததுமன்றி, உலகில் உள்ள பல விஷயங்களைக் கொண்டும் தமது உபதேசத்தைத் தெளிவாய் திருஷ்டாந்தப் படுத்தியும் போதித்தார்.

சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், ஆகாயம், தண்ணீர், வெளிச்சம், இருள், புல், லீலிபுஷ்பம், களை, பயிர், விதைக்கிறவன், உழுகிறவன், செம்மறியாடு,

வெள்ளாடு, மேய்ப்பன், திராட்சச்செடி, திராட்சத்தோட்டக்காரன், ஆகாயத்துப் பறவைகள், வனாந்தரத்து நரிகள், அநீதியுள்ள நியாயாதிபதி, ஏழை கைம்பெண், சிறுப்பிள்ளை, தேவதூதன், இறந்தகால சம்பவங்கள், நிகழ்கால சம்பவங்கள், வருங்கால சம்பவங்களாகிய சகல விஷயங்களிலிருந்து இரட்சகர் உவமானம் எடுத்தார். இந்த உவமைகளை அவர் பொழுதுபோக்குக்காகவும், மனிதர் பிரியத்துக்காகவும் பிரசங்க அலங்காரத்துக்காகவும் சொல்லாமல் சத்தியத்தைத் தெளிவும் உறுதியுமாய் மனதில் புகட்டும் படியாக மாத்திரம் அவைகளைச் சொன்னார் (1) ஜனங்களின் கவனமெல்லாம் அவருடைய பிரசங்கத்தின்மேல் செல்லவும், (2) அவர்களில் சிந்தனை எழும்பவும், (3) விஷயங்களை அவர்கள் இலகுவாய் புரிந்துகொள்ளவும், (4) விதைத்த பொருள் ஞாபகத்தில் பதியவும் மிகவும் பிரயோஜனமாயிருந்தன. கிறிஸ்துவின் தாசர்களும் அவருடைய முன்மாதிரியை அதிகமாய்ப் பின்பற்றுவார்களாகில், பிரசங்கங்கள் அலுப்பாயிராமல் ஜனங்கள் பிரியமாய்ச் செவி கொடுத்து பயனடையத்தக்கதாய் இருக்கும்.

இரட்சகருடைய போதனைகள் இலக்குப்பார்த்து எய்த அம்புகள்போல இருதயத்தில் படத்தக்கவைகளாய் இருந்தன. சில சமயங்களில் அவர் தமது உபதேசம் பூரணமாய் ஜனங்களுக்கு விளங்கும்படியாக அல்ல; அவர்களைச் சிந்திக்கவைக்கும்படியாக உவமைகளாய்ப் பேசினார். ஆயினும் அப்படி பேசுவது அவருக்கு வழக்கமல்ல. அவருடைய உவமைகள் ஈரடி பயனுள்ளவைகளாகவும் பொது வசனம் என்று சொல்லத்தக்கவைகளாயிராமல் குறிப்புள்ளவைகளாய் இருந்தன. அவருக்குச் செவி கொடுத்தவர்கள் அவர் பேசியதின் கருத்து இன்னதென்று எளிதில் அறிந்துகொண்டார்கள். தமது சீஷர்களையோ, அதிகாரிகளையோ, வேதபாரகர் பரிசேயரையோ, மாயக்காரரையோ எவர்களைக்குறித்துச் சொன்னாரோ அவர்கள் தங்களைக் குறித்தே

சொன்னார் என்று அறிந்து கொண்டார்கள். அவருடைய போதகம் மிகுந்த உயிருள்ளதாய் இருந்ததற்கு ஆதாரம் இதுவே. அப்போஸ்தலரும் இப்படியே பிரசங்கித்தார்கள். வார்த்தை குவியலான லௌகீகச் சாதுரியமல்ல. இரட்சகர் பிரசங்கித்த மாதிரியே நாம் கைக்கொள்ள வேண்டிய மாதிரி. பிரசங்கமுறை கற்க விரும்பும் ஒவ்வொருவனும் இரட்சகருடைய பிரசங்கத்தின் தன்மையைக் குறித்து சொல்லப்பட்டக் குறிப்புகளையும், சுவிசேஷங்களையும், சுவிசேஷங்களில் காணப்படுகிற வேறு சிறப்பு விதிகளையும் நன்றாகச் சிந்தித்து, அவ்விதமாகவே தானும் செய்ய ஜாக்கிரதையாய் இருப்பானாக.

இரட்சகர் பரத்துக்கு ஏறின பின்பு அப்போஸ்தலர்கள் சிறந்த பிரசங்கிகளாய் விளங்கினார்கள். அவர்கள் இயேசுவோடிருந்த அவர் மாதிரியைக் கண்டு பிடித்துப்பிரசங்கத் தொழிலுக்கு விசேஷித்த தகுதியடைந்த போதிலும் அவர்கள் உன்னதத்திலிருந்து பெலனைப் பெற்றுக்கொள்ள வேண்டியதாய் இருந்தது, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்தாவியானவர் அவர்கள்மேல் இறங்கினபொழுது அந்த மகத்துவமான வரம் அவர்களுக்கு அருளப்பட்டது. அது முதல் அவர்கள் எருசலேம் தொடங்கி பூமியின் கடையாந்திரம்வரை பிரசங்க வேலையை நடத்தினார்கள். இந்த வேலையில் அவர்கள் காட்டிய ஜாக்கிரதை, ஊக்கம், அவர்களது பலவித பண்புகள், அவர்கள் பிரசங்கித்தப் பொருள் இவையெல்லாம் நாம்முக்கியமாய்க்கவனிக்கவேண்டியது. ஜனங்கள் வியப்போடு கேட்கத்தக்கதாக ஓர்அலங்காரமான பிரசங்கம் எழுதிச் சேர்த்து வாசிப்பதற்கு ஏற்ற சவகாசம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவுடனே, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே எல்லாரும் பேசத் தொடங்கினார்கள். அச்சமயத்தில் அவர்கள் பண்ணிய பிரசங்கங்களெல்

லாம்பேதுரு செய்ததாக எழுதப்பட்டிருக்கிற பிரசங்கத்தை போலிருந்தது என்று நிச்சயிக்கலாம். இப்படி அவர்கள் எல்லாரும் பேதுருவோடு கூடி முயற்சி செய்யாதிருந்தால், மூவாயிரம் பேர் அந்த ஒரே நாளில் சுவிசேஷத்தைக் கேட்டு குணப்பட்டு ஞானஸ்தானம் பெற்றிருப்பார்களோ?

அவர்களிடத்தில் காணப்பட்ட விடாமுயற்சியும் ஆச்சரியமானது. உதாரணமாக, தேவாலயத்தில் பிரசங்கித்துக் கொண்டிருந்த பேதுருவையும் யோவானையும் மகா சங்கத்துக்கு கொண்டுபோய் நிறுத்தி, இயேசுவின் நாமத்தைக் குறித்துச் சிறிதளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று சங்கத்தார் அவர்களுக்குக் கட்டளையிட்டுப் பயமுறுத்தினர்கள். அவர்களோ மனுஷனுக்குச் செவிகொடுப்பதைப் பார்க்கிலும் தேவனுக்குச் செவி கொடுப்பதே நியாயம் என்று உணர்ந்து, ஆலோசனை சங்கத்தைவிட்டுப் புறப்பட்டு போய்த் தேவனுடைய வசனத்தைத் தைரியத்தோடு மறுபடியும் பிரசங்கித்தார்கள். பிரதான ஆசாரியனும் அவனைச் சேர்ந்தவர்களும் அதைக் குறித்துக் கேள்விப்பட்டபோது அவர்களைப் பிடித்துப் பொதுவான சிறைச்சாலையில் அடைத்தார்கள். கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து அவர்களை வெளியே கொண்டு வந்து விட்டு "நீங்கள் போய்த் தேவாயத்திலே நின்று இந்த ஜீவ வார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள்" என்றான். அவர்கள் உடனே எழும்பிப் போய், அதிகாலமே தேவாலயத்தில் பிரவேசித்துப் போதகம் பண்ணினர்கள். மறுபடியும் அவர்களைப் பிடித்துக் கொண்டு வந்து ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாக நிறுத்தினர்கள். பிரதான ஆசாரியன் அவர்களை நோக்கி: அந்த நாமத்தைக் குறித்துப் போதகம் பண்ணக் கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாகக் கட்டளையிட்டிருந்தும், எருசலேமை உங்கள் போதகத்தினல்

நிரப்பினீர்கள் என்று அவர்கள்மேல் குற்றஞ் சாட்டினன். சங்கத்தார் அவர்களை அடிப்பித்து இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசக்கூடாதென்று திரும்பவும் மிரட்டி அனுப்பினார்கள். அப்போஸ்தலரோ, அதற்கெல்லாம் பயப்படாமல், சந்தோஷமாய் ஆலோசனை சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப் போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவை கிறிஸ்து என்று பிரசங்கித்துக் கொண்டே வந்தார்கள். (அப். 4, 5 அதி. காண்க.)

பிரதான ஆசிரியருக்கும் மூப்பருக்கும்அப்போஸ்தலரை குறித்து உண்டான விசனம் என்னவென்றால், அவர்கள் ஒன்றுக்கும் அஞ்சாமல் பிரசங்கத்தை நடத்தி வருகிறார்கள் என்பதே. அவர்கள் மௌனமாய் இருந்தார்களாகில் அவர்களைச் சும்மா விட்டிருப்பார்கள். அவர்களுடைய நடக்கையைப்பற்றி அவர்கள் பயப்படவில்லை! அவர்களுடைய ஜெபமும் ஒரு பொருட்டல்ல. அவர்கள் போதகம் பண்ணிப் பிரசங்கித்தபொழுதோ ஆலோசனைச் சங்கத்தார் நடுங்கினார்கள். ஏழை ஸ்தேவான் விசுவாசமும் பரிசுத்தாவியும் நிறைந்தவனாய் எதிரிகளுக்கு மறுஉத்தரவு சொன்னபோது, ''அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் கூடாமற் போயிற்று''.

ஸ்தேவான் கொலையுண்டதோடுகூட எருசேலமிலுள்ள சபைக்கும் மிகுந்த துன்பம் உண்டானதினால் கிறிஸ்தவர்கள் சிதறி போன இடமெங்கும் அவர்கள் சும்மா இராமல் சுவிசேஷத்தைக் கூறிக் கொண்டே திரிந்தார்கள்.

இவ்விதமாய் அப்போஸ்தலரும் ஆதிக் கிறிஸ்தவர்களும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் மிக்க ஆசையும் விடா முயற்சியும் உள்ளவர்களாய் இருந்தார்கள். அப்படியே நாமும் எதிரிகளின் விரோதம் எவ்வளவு கொடியதாய் இருந்தாலும், பேச வேண்டிய அவசியம் திடீரென்று நேரிட்டாலும், பின்னிடாமல் தைரியமாய்ப்

பேச எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க வேண்டும். காலஞ் சென்ற தேவநாசன் ஐயர், ஆயத்தம் இல்லை, என்ற போக்குச் சொல்கிற பிரசங்கிகளைப் பார்த்து: விவசாயிகள் முதலிய லௌகீகத் தொழிலாளர் வேலைசெய்ய அவசியமும் வாய்ப்பும் நேரிடும்பொழுது ஆயத்தம் இல்லையென்று சாக்குப்போக்குச் சொல்வார்களா? மாட்டார்களே. அப்படியே தேவ ஊழியக்காரரும் பிரசிங்கிக்கும்படி எப்பொழுதும் ஆயத்தமாய் இருக்க வேண்டும் என்று புத்தி சொல்லுவார்.

கிறிஸ்துவின் தாசர் எந்தக் காலத்திலும் மாத்திரமின்றி எந்த இடத்திலும் சுவிசேஷத்தை கூற ஆயத்தமாயிருக்கவேண்டும். அப்போஸ்தகர் அப்படியே செய்ததாக மேலே எடுத்துக் காட்டிய வாக்கியங்களால் அறியலாம். அவர்கள் தேவாலயத்திலும், வீடுகளிலும், ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாகவும், தேசாதிபதிகளின் நியாயஸ்தலங்களிலும் பிரசங்கித்தார்கள். பிலிப்பு பிரயாணமாய்ப் போன ஒருவனுக்குச் சுவிசேஷத்தைக் கூறி அவனைக் குணப்படுத்தினன். ஜெப ஆலயங்களில் அப்போஸ்தலர் அதிகமாய்ப் பிரசங்கித்தார்கள். சிறைச்சாலையும் அவர்களுக்குப் பிரசங்க ஸ்தலமாய் இருந்தது. பவுல் அப்போஸ்தலன் அத்தேனே பட்டணத்தில் ஞானிகள் கூட்டத்திலும், எபேசுவில் திறன்னு என்பவனுடைய கல்விச்சாலையிலும், எருசலேம் கோட்டையின் படிகளிலும், கப்பலிலும், கடைசியாக ரோமாபுரியில் தான் வாடகைக்கு எடுத்த வீட்டிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்.

அப்போஸ்தலருடைய பிரசங்கங்களிலெல்லாம் உரைபொருள் இயேசு கிறிஸ்துவே. இயேசுவே கிறிஸ்து என்று அவர்கள் பிரசங்கித்ததுமின்றி அவருக்குரிய உத்தியோகங்கள் எல்லாவற்றையும் விவரித்தார்கள். அவர்கள் கிறிஸ்துவைச் சிலுவையில் அறையப்பட்டவராகவும், உயிர்த்தெழுந்த இரட்சகராகவும் கடைசி நாளில் எல்லாரையும் உயிரோடெழுப்பப் போகிறவராகவும் பிரசங்கித்

தார்கள். அன்றியும் அவர் பாவங்களை மன்னிக்கும்அதிகார முடையவர் என்றும், சகலத்துக்கும் மேலான ஆண்டவர் என்றும், உயிருள்ளோருக்கும் மரித்தோருக்கும் நியாயாதிபதி என்றும் உபதேசித்தார்கள். இந்தப் பிரசங்கமே தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷம். அவர் மூலமாய் சகல ஜாதிகளுக்கும் சமாதானம் கூறப்பட்டது. இரட்சகரைப்பற்றின விஷயங்களும் உபதேசிக்கப்பட்டன. அப்போஸ்தலருடைய பிரசங்கங்கள் கல்விப்பாங்காய் இருந்ததோ என்று கேட்டால், அவைகள் மனித ஞானத்துக்குரிய நய வசனமுள்ளவைகளாயிராமல், ஆவியினாலும் பலத்தினாலும் உறுதிபட்டவைகளாயும், பெலமுள்ள நியாயங்கள் உடையதும், இருதயத்தை அசைக்கத்தக்கவேதனையும், பொருந்தியவைகளாயும் இருந்தன. அவர்களுடைய பிரசங்கங்கள் காலத்துக்கேற்ற புத்தியும் எச்சரிப்பும் நிறைந்தவைகளாயும், தேவனுடைய ஆலோசனை முழுவதையும் தெரியப்படுத்துகிற உண்மையான சாட்சிகளாயும் இருந்தன. அன்றியும், அவைகள் விவகாரங்கள் மாத்திரமல்ல, சரித்திர திருஷ்டாந்தங்களும் அடங்கியவைகளாயும் யூதர், கிரேக்கர், அந்நியர், அடிமைகள், சுயாதீனர்கள் ஆகிய சகலருக்கும் ஏற்றவைகளாயும் இருந்தன. அவர்களுடையபிரசங்கங்களைப்படித்துப் பார்த்தால் மேற்படி இலட்சணங்கள் அவைகளுக்கு உண்டு என்றறியலாம். உதாரணமாக: அப். 2;14-40; 7:20; 13:14-46; 17:22-31; 22:1-22; 26:1-28.

இரட்சகர் தமது சீஷர்களைப் பிரசங்க வேலைக்குப் பயிற்றுவித்தபோது எல்லாரும் ஒரே விதமாய்ப் பிரசங்கிக்க வேண்டுமென்று கருதாமல், மனுஷர்களின் வெவ்வேறு சுபாவங்களுக்குப் பயன்படத்தக்கதாக தங்கள் தங்கள் திராணிகளுக்கு ஏற்றாற்போல் பிரசங்கிக்கும்படி அவர்களுக்கு உத்தரவு கொடுத்தார். பேதுருவின் வைராக்கியமான வாஞ்சையும், ஸ்தேவானின் உருக்கமான சாந்தமும், பிலிப்புவின் அனல் கொண்ட பக்திவைராக்கியமும் பவுலின் பலத்த நியாயத்தோரணையும், அப்பொல்லோவின் மதுர

சாதுரியமும், யாக்கோபின் முதிர்ந்த ஞானமும், யோவானின் அன்புமயமான இன்மொழியும் எல்லாம் ஒரே சுவிசேஷத்தை வலியுறுத்தி அறிவிப்பதில் உபயோகப்பட்டன. அப்படியே எக்காலத்திலும், கிறிஸ்துவின் தொண்டர்கள் தங்கள் திராணிகளையெல்லாம் ஒரே காரியத்திற்கு ஒப்புக்கொடுத்து ஒரே விதமாய் அவைகளைப் பயிற்சி பண்ணினாலும் தங்கள் தங்கள் இயல்பின்படி அவைகளைப் பிரயோகித்து வருவதால் சுவிசேஷ ஊழியம் தழைத்துச் சிறப்படையும்.

இவ்வண்ணமே, அப்போஸ்தலரும் பிரசங்கித்து உழைத்ததினால் யூதர்களிலும், புறஜாதிகளிலும் அநேகர் விசுவாசிகளாகவும், சபைகள் ஸ்தாபனமாகிக் கிறிஸ்துவுக்கேற்ற போதகத்திலும் நடக்கையிலும் தேறவும், விக்கிரக பக்தி நிலை குறையவும் புதிய சுவிசேஷப் பிரசங்கிகள் பக்குவப்படவும் ஏதுவாயிற்று.

அப்போஸ்தலர் வேறு பிரசங்கிமாரை ஆயத்தம் பண்ணின விஷயம் மிகவும் கவனிக்கத்தக்கது. பர்னபா, சீலா, தீமோத்தேயு, தீத்து முதலியவர்கள் பற்பல காலங்களில் பவுல் அப்போஸ்தலனோடுகூட யாத்திரை செய்து அவரால் போதிக்கப்பட்டுப் பக்குவமானபோது சுவிசேஷகர்களாக்கப்பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலனிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத் தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவித்து அவர்களைச் சுவிசேஷ ஊழியத்துக்கு நியமிக்கவும் அதிகாரம் பெற்றார்கள். இவ்விஷயத்திலும் அப்போஸ்தலர் வைத்த முன்மாதிரியைக் கிறிஸ்தவப் போதகர்கள் எக்காலத்திலும் கைக்கொள்ள வேண்டியதாய் இருக்கிறது. பவுல் அப்போஸ்தலன் சுவிசேஷத்தில் தமது உத்தம குமாரனுமாகிய தீமோத்தேயுவுக்கும், தீத்துவுக்கும் எழுதின மூன்று நிருபங்களிலேயும் கிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியக்காரன் ஒவ்வொருவனும் தான் நிறைவேற்ற வேண்டிய கடமைகளைக் குறித்து முக்கியமான ஆலோசனைகளை அறிந்து

கொள்வான். பிரசங்க தொழிலேயே பவுல் தமது ஜீவியத்தின் முக்கியமான வேலையாக மதித்து நடத்தி வந்தார் என்று இந்த நிருபங்களால் விளங்குகிறது. அவர் தீமோத்தேயுவுக்கு எழுதின நிருபஙகளிலோவெனில் அந்த ஊழியத்தை நிறைவேற்ற வேண்டிய விதத்தைக்குறித்து மிகுந்த கரிசனையோடும் பயபக்தியோடும் புத்திச்சொல்லுகிறதைக் காண்கிறோம்.

பிறஜாதிகளின் மகா அப்போஸ்தலனாகிய பவுலின் சரித்திரத்திலும், நிருபங்களிலும், பிரசங்கங்களுக்கு ஏற்ற போதனை நிரம்பி இருக்கிறது. நாம் அவைகளைக் கருத்தாய் படிக்க வேண்டியதுமல்லாமல் (2 தீமோ. 4:1, 2, 5), ''நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும் அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய இராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது: சமயம் வாய்த்தாலும், வாயக்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தை பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு புத்தி சொல்லு. நீயோ எல்லாவற்றிலும் மனந்தெளிவுள்ளவனாயிரு. தீங்கனுபவி. சுவிசேஷகனுடைய வேலையைச் செய். உன் ஊழியத்தை நிறைவேற்று'' என்று தீமோத்தேயுவுக்குக் கொடுத்த கட்டளை இன்று நமக்கும் உரிய கட்டளைதான். இதை உணர்ந்து உண்மையாய்க் கைக்கொண்டு வருவோமாக.

திருவசனத்திற்கு உருகாதார்,
வேறெந்த வசனத்திற்கும் உருகார்.

'பிரசங்கிகளின் பிரபு' என்று சிறப்புர
அழைக்கப்பட்டவர் ஸ்பர்ஜன் ஐயர் அவர்கள்.
பிரசங்கிப்பது கடவுளால் இவருக்குக் கொடுக்கப்பட்ட
ஓர் உன்னத வரமாகும். இவரின் பிரசங்கங்கள்
எழுத்து வடிவில் மாற்றப்பட்டு பல நூல்களாக
வெளிவந்துள்ளன. தமிழ் வடிவம் பெற்ற
இந்நூல் பிரசங்கிமார்களுக்கும், இறையியல்
மாணவர்களுக்கும் அறிவுரையாக செய்யப்பட்ட
பிரசங்கமாகும். கடவுளுடைய பணியை ஆற்ற
விரும்பும் ஒவ்வொருவரும் இந்நூலைப்
படித்தல் அவசியம்.

LECTURES TO MY STUDENTS

C.H. SPURGEON

விலை: ரூ. [redacted]

EVANGELICAL LITERATURE SERVICE
95-A, VEPERY HIGH ROAD, MADRAS-600007